சிவமயம்.

முகவுரை.

ஆன்மாக்களடையும் பிறவிகளுள், மனத்தின் சிறப்புணர்வாகிய பகுத்துணர்விற்குச்சாதனமான மாநுடப்பிறவியே மிக மேலானது. இப்பிறவியானது ஏனையபிறவிகளில் வருந்திய துன்பகதிற்கிரங்கிக் கருணைமேலிட்டால் சிவபெருமானால் தரப்பெற்றது. அவர் தந்ததும், உலகவிடயங்களைப் பகுத்துணர்ந்து அவற்றின் நிலையாமையினையும் அவற்றா லுண்டாகும் இன்பத்தின் நிலையாமையினையும் உணர்ந்து அவ்வுணர்ச்சி காரணமாக தானாகிய ஆன்மாவையும் தலைவனாகிய பரமசிவனையு முள்ளவாறுணர்ந்து அழியாத இன்பம அடைதற்பொருட்டேயாம். இவ்வுணர்ச்சியும் சிவனை வழிபடுதலால் நிகழ்வதாம. ஆதலால் தேவவுலகத்தில் பக்குவப்பட்ட கன்மங்காரணமாக இன்பத்தை யநுபவித்துக்கொண்டிருக்கும் தேவர்கள் பிறவியும் இம்மாநுடப்பிறவிக்கு இணையாகாது. இக்கருத்துப்பற்றியே,

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத்தைந்து மாடு மரன்பணிக் காகவன்றோ
வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலும் ஊமை யொன்றையு முணராரந்தோ.

எனச்சிவஞான சித்தியாரில் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்தனர் எங்க.

இத்துணைப் பெருமைவாய்ந்த மாநுடப்பிறவி கிடைத்திருப்பினும் உயிர்கள் அநாதியே ஆணவமலத்துடன் கூடியிருத்தலால் ஏகவே அறியும் அறிவின்றி அறிவிக்க அறியும் இயல்பினையுடையனவாதலின சிவபெருமானை வழிபடும்முறையை அறிந்து

கொள்ளுதற்பொருட்டுக் காமிகம்முதல் வாதுளமிறுதியான சிவாகமம் இருபத்தெட்டினையும், இவற்றைச்சார்ந்த உபாகமங்களையும் சிவபெருமான் அருளிச்செய்தனர்.

இவ்வாகமங்கள் தனித்தனி சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதமென நான்கு பாதங்களையுடையன. எனவே சிவவழிபாடும் சரியாவழிபாடு, கிரியாவழிபாடு, யோகவழிபாடு, ஞானவழிபாடு என நால்வகைப்படுமென்றவாறாயிற்று இந்த நால்வகை வழிபாட்டினுள்ளுஞ் சிறந்தது ஞானவழிபாடேயாயினும், அதற்குக்காரணமாய் அதன் கருத்தையுந் தன்னுளடக்கி நிற்பது கிரியாவழிபாடேயாகும். இந்தக் கிரியாவழிபாட்டை உள்ளவாறு தெரிந்துகொள்ளுதற்கு ஆகமங்களிலுள்ள கிரியாபாத ஆராய்ச்சி இன்றியமையாது வேண்டப்படும்.

அந்தக் கிரியாபாதம் மிக விரிவாயிருத்தலின் அதிலுள்ள முக்கியமான விஷயங்களைத் தொகுத்துக் காஞ்சிபுரத்தில் வசித்த ஸ்ரீ ஞானசிவாசாரியரின் மாணாக்கராகிய ஸ்ரீபஞ்சாக்கரயோகிகள் சைவபூஷணமென்னும் நூலை வடமொழியில் சுலோகரூபமாக இயற்றி உபகரித்தனர். இந்நூலுக்குத் தமிழ் வியாக்கியானமும் முன்னமே செய்யப்பட்டுள்ளது. வியாக்கியான கருத்தா இன்னாரென நன்கு புலப்படவில்லை. ஒரு விஷயத்தைப்பற்றிய சுலோகத்தில் அவ்விஷயம் முற்றும் அடங்காமலிருந்தால் அடங்காதவிஷயங்களனைத்தும் உரையில் விரிக்கப்பட்டிருக்கின்றன. சில சுலோகங்களுக்குப்பொருள் சுலோகமாத்திரத்தால் விளங்குமென்னுங் கருத்துப்பற்றியோ வேறு எக்காரணம் பற்றியோ உரை கூறப்படவில்லை.

இந்நூல் சைவர்களுக்குப் பூஷணமாயிருத்தலின் கிடைத்த சில பிரதிகளைக்கொண்டு கூடியவாறு பரிசோதித்து உரை எழுதப்படாத சுலோகங்களுக்குச் சங்கத்து வித்துவான் வியாகரண சிரோமணி ஸ்ரீமத் K. M. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் எழுதப்பெற்று உரையுடன் அச்சிட்டிருக்கின்றோம்.

இதுவரை அச்சிற்குவாராத சைவநூல்களை அச்சிட்டு வெளி யிடுவதை மேற்கொண்டிருக்கும் இச்சங்கத்திலிருந்து வெளியா கும் நூல்களைப் பூஷணமாகச் சைவர்களொவ்வொருவரும் பெற் றுக்கொள்வதே சைவர்கள் இச்சங்கத்திற்குச்செய்யும் உபகார மாகும்.

பிரதி உபகரித்தவர்கள் பெயர் வருமாறு:—

I கீழ்வேளூர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியசிவாசாரியரவர்கள்.
II நாகபட்டினம் ஸ்ரீலஸ்ரீ பஞ்சாபகேசசிவாசாரியரவர்கள்.

இவர்களுக்கு இச்சங்கத்தார் நன்றியறிதல் காரணமாக அன்பு செலுத்துகின்றனர்.

இங்ஙனம்

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தார்.

விஷய அட்டவணை.



பக்கம்





உ

ஶிவாஶ்ரயம் நம: ।

ஶ்ரீ ஶைவஜிஷ்ணவே ॥

சிவமயம்.

சைவபூஷணமும் தமிழ்வியாக்கியானமும்.

ஶ்ரீவித்யாகர்ஷிஸம்ப்ராப்த்யை ஸேவே தந்தாவலாநநம் ।
தம்பத்யோராதிமதாம் பித்ரோஶ்ரவணயோரக்ஷ்ணோத்ஸவாயநம் ॥௧॥

1. எல்லாவுலகத்துக்கும் நாயகன் நாயகிகளாயும், முதன்மையான தம்பதிகளாயுமுள்ள பார்வதி பரமேசுவரர்களுடைய க்ண்களுக்குத் திருப்தியைச் செய்பவரும், யானைமுகம் உடையவருமாகிய விநாயகமூர்த்தியைச் சிறப்புப்பொருந்திய கல்வியென்னும் அழகை அடைவதின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன் என்க.

ஸத்யைஶ்வர்ய ஸம்ப்ராப்த்யை ஶப்தார்த்தாவகமாய ச ।
ஸர்வார்த்தஸாதகம் ஸத்யம் ஸம்ஸேவேஹம் கஜாநநம் ॥௨॥

2. உண்மையான ஐசுவரியம் என்னும் மோக்ஷத்தை அடைவதின் பொருட்டும், சொல்லையும் பொருளையும் அறிவதின் பொருட்டும், சகல புருஷார்த்தங்களையும் தரும் விநாயகரை நமஸ்கரிக்கின்றேன் என்க.

ககேந்த்ராந்த்யவர்ண்ணஸம்பிந்நாநேந்த்ராந்த்யாந்திதஸம்பதா ।
ஸத்ஸேவிதாய ஸர்வஜ்ஞஜ்ஞாநஶாகாய ஹரஜ । ॥௩॥

3. ஒருவருக்கொருவர் செய்த புண்ணியங்களின் பலத்தால் உதித்தவர்களும், ஒருவருக்கொருவருடைய சார்பினாலுஞ்

டான சம்பத்தை யுடையவர்களும், சகல உலகத்துக்கும் தாய்தந்தையர்களுமாய் விளங்கும் சர்வமங்களையான பார்வதியையும், சங்கரனை பரமேசுவரனையும் நமஸ்கரிக்கின்றேன் என்க.

ஶ்ரீ காஞ்சீவநவாஸிஜ்ஞாநநாதாங்க்ரிஸேவிநா ।
க்ரியதே க்ருதிரேஷா ஶ்ரீபஞ்சாக்ஷரயோகிநா । ॥௪॥
(பரமாநந்தயோகிநேதி பாட: ।)

4. காஞ்சிபுரத்தில் வசிக்கும் ஞான சிவாசாரியரின் திருவடித்தொண்டு செய்பவராகிய பஞ்சாக்கர யோகியால் இந்நூல் செய்யப்படுகின்றது என்க.

பரமானந்த யோகியென்றும் பாட பேதமுண்டு.

விஷயோஸ்ய க்ரியாகாண்ட: புக்திமுக்தீ ப்ரயோஜநே ।
ஶக்த: காரயிதும் கர்த்துமதிகாரீ ஶிவாக்ரஜ: । ॥௫॥

5. இந்த நூலிற் சொல்லப்படும் விஷயம் சிவாகமங்களின் கிரியாபாதம். இந்நூலின் பயன் போகமோக்ஷங்கள். இந்நூலுக்கு அதிகாரி கிரியைகளைச் செய்விப்பதற்கும், செய்வதற்கும் வல்ல சிவாசாரியர் என்க.

நத்வா ஶங்கரமம்பிகாம் கணபதிம் ஸ்கந்தம் ச நந்தீஶ்வரம்
தத்வஶ்ரேஷ்டயோகவாய நிவஹாந்தேவாயகம் தேஶிகம் ।
நாநாவர்ணவிசித்ரஶப்தரசநாஸௌந்தர்யஸம்ஜ்ஞாநிநாம் ॥
ஶைவாநாம் க்ரியதே ஶிவாகமவராத்ஸாரோத்த்ருதம் பூஷணம் ॥

6. எல்லா மங்களங்களையும் தருகிறவராயிருக்கிற தன்னுடைய இஷ்டதேவதையான ஸ்ரீமத் சாம்பமகாதேவரை நமஸ்கரித்து பின்னர் மகாகணபதி. சுப்பிரமணியர். நந்திகேஸ்வரர் ஆகிய இவர்களையும், திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய சமய குரவர்களையும், நந்திதேவர், சனற்குமாரமுனிவர், சத்தியஞானதர்சனிகள் பரஞ்சோதிமுனிவர், மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாசாரியர் ஆகிய சந்தானகுரவர்களையும், அடியார்

கள் கூட்டமாகிய அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆக எழுபத்திரண்டு திருக்கூட்டத்தார்களையும் தனது ஆசிரியரையும் வணங்கி, பலவித எழுத்துக்களும் சொல்லமைப்புமாகிற தங்கத்தால் வியாபிக்கப்பட்டதாயும் சிவாகம வசனங்களாகிய இரத்தினங்களினாலே அழுத்தப்பட்டுள்ளதாயுமிருக்கும் சைவபூஷணமென்னும் பெயரினையுடைய இந்த நூல் என்னாலே சொல்லப்பெறுகின்றது, 1—6.

(அவதாரிகை) இனி நூலின் முறையைச் சொல்லுகின்றார்.

வக்ஷ்யே ஸ்வாயம்புவே ஸ்வா
திக்ரமோநாயம் நவிவக்ஷிதோ மயா ।
கிஞ்சித்ஸங்க்ஷிப்தரூபோ யோ விசேஷ
ஜ்ஞேயஸ் ததேவாத்ர விஸ்தரேண ॥ எ॥

7. இந்த நூலின் முறையானது, இதற்குப்பின் இது இதற்குப்பின் இது என்னும் முறையில் சொல்லப்படவில்லை. மற்றெவ்வாறெனில், சிவாகமங்களின் கிரியாபாத விஷயமாக யாதொன்று சுருக்கமாக அறியப்படக்கூடியதாக யிருக்கின்றதோ, அதை விரித்துச்சொல்கின்றேன் என்க. 7.

(அ-கை.) பெரியோர்கள் இந்நூலை அங்கீகரிப்பாரென்று கூறுகின்றார்.

ஸம்ப்ரதாயவித்ஸஜ்ஜநகண்டரத்ன
ஸம்ஞாநோத்தம ஸம்பத்தகம் ।
ஸ்ரீதேவஜம்பூவர்ணதிவ்ய பிந்து
ஸ்ப்ருஷ்டம் ஜம்பூநதமேவ ஸம்யக் ॥ அ॥

8. சாந்தரும், பொறாமையில்லாதவரும், வித்வத்தன்மையுடையவருமாயிருக்கின்ற சைவாசாரியர்களுடைய கண்டத்துவாரங்களிலே இந்த நூலானது புகுந்தவுடன், சொல்லினாலும் பொருளினாலும் வரும் குற்றமில்லாமல் நல்லதாகவே ஆகிவிடும். அது எதுபோலுமெனில், ஜம்புநதியின் நீர்த்துளியின் பரிசத்தி

னால் சகலபொருள்களும் நன்மை வாய்ந்த அபராஞ்சிப் (புடம் வைத்த) பொன்னாற்போலும் என்க. (8)

(அ-கை,) பின்னர் * அவையடக்கங் கூறுகின்றார்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।। ௯ ।।

9. அனைவரும் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதில் முற்சென்மங்களில் அவரவர் செய்த கன்மபரிபாகமே காரணமாகும். அவ்வாறாயினும், யான் இந்நூலைச்செய்தற்குக் காரணம் சிவனடியாரனைவருக்கும் அடிமைபூண்டொழுகுவதேயாம் என்க.

(அ-கை.) இனி, சைவர் எழுவிதமென்று கூறுகின்றார்.

[illegible]
[illegible] ।।

[illegible]
[illegible] ।।

10. அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்திர சைவர், பிராவர சைவர், அந்திய சைவர் எனச்சைவர் எழு பிரிவினையுடையவராவர். அவருள், அநாதிசைவர் சிவபெருமான், ஆதிசைவர் சிவப்பிராமணர், மகாசைவர் மகாப்பிராமணர், அநுசைவர் க்ஷத்திரியரும் வைசியரும், அவாந்திர சைவர் சூத்திரர், பிராவர சைவர் சங்கர ஜாதிகள், அதாவது கலப்பாற்பிறந்தவர், அந்திய சைவர் மேற்கூறப்பட்டவரல்லாத ஏனையோர்.

---

* அவையடக்கம் என்பது அவையை அடக்குதல் அவைக்கு அடங்குதல் என விரியும். அவற்றுள் பெரியோர்கள் அங்கீகரிப்பாரென்றது அவையை அடக்குதல். இது அவைக்கு அடங்குதல்.

இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. சில ஆகமங்க ளில் பத்து விதமென்றுங் கூறப்பட்டிருக்கின்றதென்க (10)

(அ-கை.) சுத்தசைவ இலக்கணம் இதுவென்று கூறுகின்றார்.

தத்ர ஶிவாகமோக்தவிதிநா தீக்ஷா விஶிஷ்டாஶ்ச
வேதாசாராபராயணாஶ்ச ஸதாம் வேதாவிரோதிந: ।
ஶிவாசாராநுவர்த்திந: நித்யகர்ம யாதகஸ்வரா
ஸத்ர ஸம்விதபூர்வஜாதி நாமவர்ஜ ஶுத்தஶைவாஸ்து
தா: ॥௧௧॥

11. எவர் சிவபெருமானுக்கு அன்புடையாராயும், சிவ தீக்ஷையினாலே ஒழுக்கமுடையவராயும் வேதநெறிக்கு மாறு படாதவராயும், நல்ல சைவாசாரத்தையுடையவராயும், விலக்கப் பட்ட செய்கைகளில் பராமுகமுடையவராயும், நியமம் உடைய வராயும், நித்திய கர்மலோபம் இல்லாதவராயும், சபைக்குரியவரா யும், தீக்ஷைக்குப்பின் பூர்வஜாதி நாமம் இல்லாதவராயும் இருப் பரோ அவரே சுத்தசைவர் என்க. (11)

(அ-கை.) அதிவர்ணாச்சிரமத்தின் ஆசாரம் இதுவென்று கூறுகின்றார்.

சதுர்வர்ணாஶ்ரமாணாம் ஸர்வேஷாம்
வர்ணாஶ்ரமாசாரவிவர்ஜிதம் ।
காஷாயம் ஸிதம் வாஸோ தாரயேத்
ஶுத்தஶைவா: கிரணாகமோக்தா: ॥௧௨॥

12. பிராமணர் முதலான நாலு வருணங்களின் ஆசாரங் களையும், பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நாலு ஆச்சிரமங்களின் ஆசாரங்களையும் தள்ளிவிட்டு சிவாகமோக்தமான சரியையாதி ஆசாரங்களையுடைய சுத்தசை வரே, அதிவருணாச்சிரமி என்று அறிக. இவர் காஷாய ஆடை வெள்ளை ஆடை ஆகிய இரண்டும் தரித்துக்கொள்ளலாம் என்று கிரணாகமத்திற் சொல்லியிருக்கின்றது. இந்த அதிவரு

ஞாச்சிரமியின் ஆசாரத்திற்கு குடீசக சன்னியாசமே சிரேஷ்ட மென்க. (12)

(அ-கை.) சுத்த சைவர்களுக்குச் சீவனோபாயம் இது வென்று கூறுகின்றார்.

ஶைவாநாஂ ஜீவநஂ கயுக்யோ க்ருஷ்யாஜநஂ விப்ர
நாஞாவத்யுயஂ ஹி ஸஜ்ஜநஜீ ஜ்ஞாக்வாத உத்தாயதிஃ ।
விஜ்யாஜநர்தாயதிஶ்ச ஸந்துஷ்டாயதிர்யதா
வ்யஸ்யா ஶிஷ்யஜநாயதிஃ ஸ்வவிஹிதாஂஷாரவாணிஜ்யஜ ॥

13. பிராமணரைப்போல் கிருஷி செய்வித்துக்கொள்ளுத லும், மடபதியாகயிருத்தலும், இவர் நல்லவரென்று பிறர் தரப்பெ றுதலும், தன்னிடத்தில் படித்தவர்கள் சந்தோஷித்துத் தரப் பெறுதலும், நீதிபதிகளான அரசர் முதலியோரால் ஆதரிக்கப் பெறுதலும், தருமவட்டியில் வருவாய் வருதலும், மாணாக்கர் குருதக்ஷிணையாகத் தரப்பெறுதலும், தனக்குரிய வியாபாரத்தி னாலே வருவாய் வருதலும் ஆகிய இந்த வகைகளினாலே வரு கின்ற ஆதாயங்களே சுத்த சைவர்களுக்குச்சீவனோபாயமென்க.

(அ-கை.) சைவ சந்நியாசங்களின் பேதங்களைக் கூறுகின்றார்.

ஶைவேஷு ஸந்ந்யாஸவிதிஶ்சதுர்தா
வித்வத் விவிதிஷாஸ் ச வைகதிகஸ்ததா ।
ஸதேஷு குடீசகோ வா
ஸந்ந்யாஸிநோஂஸ்ய ஸதாரா ஸத ॥ கச ॥

14. வித்வ சந்நியாசமென்றும், விவிதிசா சந்நியாசமென் றும், வைகூதக சந்நியாசமென்றும், குடீசக சந்நியாசமென் றும், இவ்வாறு சைவசந்நியாசம் நான்கு திறப்படும். அவற் றுள், முன்மூவர் மனைவியற்றவர்கள் குடீசக சன்னியாசமென்பது காஷாய வஸ்திரதாரண முதலான சகல சந்நியாச தர்மங்களோடு மனைவி சகிதமாயிருப்பதாகும். அவாந்திர சைவர்களுக்குக் குடீசக சன்னியாசமே சிரேஷ்டம் என்க. [14]

(அ-கை.) சோடசக்கிரியை யுடையாருக்குரிய அதி காரத்தைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௫||

15. எவர்கள் கர்ப்பாதானமுதல் பதினாறு சமஸ்காரங்களும், இவ்யாகம மந்திரங்களினாலே செய்யப்பெற்றிருக்கின்றார்களோ, அவர்களே சுத்த சைவர்களென்றும், இருபிறப்பாளர் என்றும், சிவாகமாதி படனத்துக்கு அதிகாரிகளென்றும் சைவாசாரியாதர்குரியவர்களென்றும் அறிக. ஆதலினாற்றான் சிவாகமத்தில் சம்ஸ்காரமாகிய விசேடதீக்ஷை பெற்றவர்களே, சிவார்ச்சனையிலும், சிவாகமாதி படனத்திலும் அதிகாரமுடையவராவரென்று கூறப்பட்டிருக்கிறதென்க. (15)

(அ·கை.) இவ்வாறு சிவாகமத்திற் சொல்லப்பட்ட சமஸ்காரமென்னும் தீக்ஷையினாலும் சிரேஷ்டமான பிராமணத்துவம் உண்டென்று கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௬||

16. இருடிகளாற் சொல்லப்பட்ட மிருதி அநுட்டானத்தினாலேயே பிராமணத்துவம் உண்டென்னில், அனைவருக்கும் மேலானவரான மகாதேவர் திருவுளம்பற்றிய ஆகம அநுட்டானத்தினால் ஏன் பிராமணத்துவம் உண்டாகாது. உண்டாகவில்லையாயின், அவர்களால் பூசிக்கப்பெறும் திருக்கோயில்களிலே சென்று கடவுள் உண்டென்னும் புத்தியுடன் நமஸ்காரம் முதலான வழிபாடு செய்தல் கூடாதாகும். ஆதலால், மிருதிவாக்கியங்

களினும் சிவாகம வாக்கியங்களே வலிமையுடையனவென்றும்; அந்த வாக்கியங்களினாலே செய்யப்பட்ட பிராமணத்துவமே பிராமணத்துவமென்றும் அறிக. (16)

(அ-கை) சிவதீக்ஷையுடையாருக்கு முன்னுள்ள சாதியும் பெயரும் போய்விடுமென்று மூன்று சுலோகங்களினாலே கூறுகின்றார்.

[illegible] ॥

[illegible] ॥௧௮॥

[illegible] ॥௧௯॥

(17-18-19.) விறகிற்கு அக்கினியின் சம்பந்தம் வந்த பின்னர், முன்னுள்ள பசுமை சம்பந்தமான வடிவமும் விறகு என்ற பெயரும்போய், சுடர் என்னும் வடிவமும் தணல் என்னும் பெயரும் வந்தாற்போலவும், இரும்பிற்கு ரசகுளிகையின் சம்பந்தம் வந்தபின்னர், முன்னுள்ள கருவடிவமும் இரும்பென்னும்

பெயரும்போய், ஒளிவடிவமும் பொன்னென்னும் பெயரும் வந்தாற்போலவும், முத்துச்சிப்பியிலே விழுந்த நீருக்கு முன்னுள்ள நிகழ்ச்சி வடிவமும் நீரென்னும் பெயரும்போய், கடினமாயுள்ள ஒளிவடிவமும் முத்துவென்னும் பெயரும் வந்தாற்போலவும், அவ்வாறன்றி, மேருவைச்சேர்ந்த காகம் பொன்னிறமானாற் போலவும், மேகத்தைச்சார்ந்த உப்புச்சமுத்திர நீர் நல்ல தண்ணீரானாற் போலவும், மகத்தான நாவற்பழச்சாறின் நதியிலுள்ள நீரைச் சார்ந்த ஓடு முதலிய அனைத்தும் உயர்ந்த பொன்னானாற்போலவும், அவ்வாறன்றியும் கிரியா விசேடத்தாலுள்ள குடுமிபூணூல் ஆகிய இவற்றையுடைய கிரியையாளரினும் சந்நியாசிகள், பக்தர்கள் சிரேஷ்டரானாற் போலவும், உப்பளத்தைச்சார்ந்த அனைத்தும் உப்பானாற்போலவும், காசித்தலத்தை அடைந்து மகோபதேசம் பெற்ற அனைவரும் அநுசதாசிவரென்று பெயர் பெற்றாற் போலவும், அவ்வாறே சிவதீக்ஷா சம்ஸ்காரம்பெற்ற அனைவருக்கும் முன்னுள்ள சாதியும் பெயரும்போய் வேறொரு கோத்திரமும், வேறொரு பெயரும் ஒரு மகத்துவமும் உண்டாகுமென்று அறிக

17, 18, 19

(அ-கை.) சிவதீக்ஷையுடையாரை முன்னுள்ள சாதி பேர்களால் அழைத்தல் குற்றமென்றும் கூறுகின்றார்.

[Grantha verse, 5 lines, not reliably legible] ॥௨0॥

20 சிவசம்ஸ்காரமென்னும் சமயதீக்ஷைபெற்று சிவனுடைய அடையாளமாகிய விபூதி உருத்திராக்கம் தரித்த சிவபக்தர்களை, எவனொருவன் முன்னுள்ள சாதியை நினைத்து நிந்தை செய்கின்றானோ, அவன், பிரமாவினுடைய நாளிலே பதினைந்து நாள் நரகத்திற்கிடப்பானென்றும், அவரினும் அதிகமான விசேடதீக்ஷையுடையாரை நிந்தை செய்தவன் விட்டுணுவினுடைய நா

ளிலே ஐந்து நாள் நரகத்திற்கிடப்பானென்றும், அவரினும் அதிகமான நிருவாணதீக்கையுடையாரை நிந்தைசெய்தவன் ருத்திரனுடைய நாளிலே மூன்றுநாள் நரகத்திற்கிடப்பானென்றும், அவரினும் அதிகமான சைவாசாரியராய், குருபீடமாயிருப்பவரை நிந்தைசெய்தவன் சதாசிவ வருடத்தில் மூன்றுவருடம் நரகத்திற்கிடப்பானென்றும் இவ்வாறு சுவச்சந்தபைரவமென்னும் உபாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றதென்க (20)

(அ-கை) நான்காவது வருணத்தவரான சூத்திரர்க்கும் சிவதீக்ஷையினாலே இருபிறப்பாளரென்னுந் தன்மை உண்டென்று கூறுகின்றார்.

> ஸச்சூத்ராணாமபி தீக்ஷயா க்ருதஸம்ஸ்காரயா ஸித்தம் த்விஜ
> த்வம் பரம் வைசிஷ்ட்யஞ்ச ஸ்நாநஸந்த்யாதிநித்யாதிகர்ம
> ஸூக்ஷ்ம சைவோதிதம் । தேவேநைஷாம் த்விஜதாநஹீ
> யத இதி ஸ்ருஷ்டம் ஸந்த்யாதிகம் ஸ்வஸூத்ரேஷு நி
> யம் த்ரைவர்ணிகம் தத்ஸ்வஸ்யாத்யா ॥ ॥உக॥

21. நான்காவது வருணத்தில் உதித்தவரான சற்சூத்திரர் சிவதீக்ஷையின் மகிமையினால் பிராமணசிரேஷ்டராவர். ஆயினும், வேதமோதல் முதலான வைதீகக்கிரியைகளில் எப்பொழுதும் அதிகாரமுடையவராகார். அதனால் இவருக்குப் பிராமணத்தன்மையில்லையென்றல் கூடாது. அஃது எதுபோலுமெனின், பிராமணப்பெண்களுக்கும் பிராமணசந்நியாசிகளுக்கும் பிராமணத்துவமிருந்தும், வேதமோதல் முதலான கிரியைகள் செய்தல் கூடாதவாறு போலுமென்க. இவ்விஷயத்தில் வேதாகமங்கள் பிரமாணம். இவ்வுண்மையினையுணராது நான்காவது வருணத்துச் சுத்தசைவன், மதிமோகத்தால் தாம் படித்தற்குரிய சிவாகமம், திராவிடநூல்களைப் படியாமல் வைதீகக்கிரியைகளைச் செய்யின் அவனுக்கு நரகவேதனையுண்டென்றும், அவன் செயல் பெரியோர்களுக்கு உடன்பாடில்லையென்றும் அறிக. (21)

(அ-கை) ஆகமங்களுக்கு அதிகாரி இவர் என்றுகூறுகின்றார்

சைவாநாம் விவிதார்த்த ஸாதகதயா பாதா இதி
க்யாதயா ஹ்யஷ்டாவிம்சதி ஸங்க்யயா நிகதிதா
திவ்யாகமா: சம்புநா । ப்ரதமாநுலோமஜநிதா:
வர்ணாஸ் ச ஷட்ஸ்ருதா: நிஷ்டாவா சைவா: ஸ்ம்ருதா:
தஜ்ஜாதிஜாதி ஷுதசம் சைவாகமே ஜந்மநா ॥௨௨॥

(22) பரமகாருண்யராயும் உத்தமராயும் விளங்கும் ஸ்ரீமகாதேவரானவர், சிவதீக்ஷா சம்பன்னரான சத்சைவருக்கு, சாலோக பதவியைக் கொடுக்கிற சரியாபாதம், சாமீப பதவியைக்கொடுக்கிற கிரியாபாதம், சாரூபபதவியைக்கொடுக்கிற யோகபாதம், சாயுஜ்யமுக்தியை கொடுக்கிற ஞானபாதம் என்னும் நான்கு பாதங்களையும் அறிவிக்கும் நிமித்தமாகவும், அறம் பொருளின்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும் சித்தித்தற்பொருட்டும், அனைவரையும் காத்தற்பொருட்டும், * ஏழுவிதசிவதீக்ஷை, கர்ஷணாதிபிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம் உத்ஸவாதி பிராயச்சித்தாந்தம் ஆகிய இந்தக்கிரியைகள் நடைபெறற்பொருட்டும், காமிகமுதலான இருபத்தெட்டுத்திவ்யாகமங்களையும் அனுஷ்டிப்பு சுலோகங்களாகத்திருவுள்ளம் பற்றியருளினர்.

அந்த சத்சைவர் யாரெனில், பிராமணர் முதலான நான்கு வருணத்தவரும், அந்நாலவர்களிடமிருந்து அநுலோமக்கிரமமாக வுற்பத்தியான (அஃதாவது பிராமணப்புருஷனுக்கு க்ஷத்திரியர் முதலிய மூவகைப் பெண்களிடத்தும் க்ஷத்திரியனுக்கு ஏனையிருவரிடத்தும் வைசியனுக்குச்சூத்திரனிடத்தும் உற்பத்தியான) அறுவரும் ஆகப்பதின்மருமாம். இவர் இந்தச்சிவாகமங்களைப்படித்தற்கு அதிகாரிகளாவர் என்க. (22)

(அ-கை) சைவன் தனது சாதிக்கு ஒத்த ஆசாரத்தில் இருக்கவேண்டுமென்று கூறுகின்றார்-

---

* ஏழுவித தீக்ஷையாவன :— நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை நூல், யோகம், அவுத்திரி, யென்பன.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௩||

(23) சிவதீக்ஷையினாலே சிரேஷ்டனாகயிருப்பினும், அத்தகைய சைவன், தன்னுடைய சாதிக்கு ஒத்ததாயும் அந்தந்ததேசத்துக்கு ஏற்றதாயும், அன்னியசமயாசாரங்களுடனே சம்பர்தமின்றியுமுள்ள நல்ல சமயாசாரத்தை அனுட்டிப்பானாயின், அவனே சுத்தவைதிக சைவனென்றறிக. (23)

(அ-கை) வாக்கியங்களின் தாரதம்மியத்தைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௪||

(24) வாக்கியங்களின் தாரதம்மியமானது பௌட்கராகமத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அஃதெவ்வாறெனில், உலகத்திலே சாமான்யமானவருடைய வசனத்தினின்றும் ஆப்தராயுள்ளார் வசனம் சிரேஷ்டம். அதனினின்றும் இருடிகளுடைய வசனம் சிரேஷ்டம். அதினினும் இந்திரனுடைய வசனம் சிரேஷ்டம். அதினினும் பிரமாவின் வசனமும், அதனினும் விஷ்ணுவின் வசனமும், அதனினும் ருத்ரன் வசனமும், அதனினும் மகேசுவரனுடைய வசனமும், அதனினும் சதாசிவனுடைய வசனமும் சிரேஷ்டமென்று இவ்வாறு வசனதாரதம்மிய முறைகூறப்பெற்றிருக்கின்றதென்க. (24)

(அ-கை) சைவருக்குரிய கோத்திரமுதலியவற்றைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]

[illegible] ௨௫॥

[illegible] ॥௨௬॥

[illegible] ॥௨௭॥

[illegible] ॥௨௮॥

(25,26,27,28)சிவாகம வல்லவரான சைவாசிரியர்கள் சிஷ்யர்களு க்கு விசேஷதீக்ஷாசமயத்திலும், ஞானதீக்ஷாசமயத்திலும், உப தேசிக்கப்படும் விஷயங்கள்,ஐந்தென்றும், ஆறு, ஏழு,எட்டு என் றும்,பன்னிரெண்டென்றும்சொல்லப்படும்.அவையெவையெனில், கோத்திரம், சந்தானம், கோசரம், மடம், விருக்ஷம் ஆக ஐந்தும், ஆகமம் சேர்த்து ஆறும், நாமதேயம்சேர்த்து ஏழும், மந்திரம் சேர்த்து எட்டுமாம். அவற்றுள் கோத்திரமாவது சைவகோத்தி ரம். சந்தானமாவது நந்திகேசுவரர் ஸந்தானம்; கோசரமாவது சிவன் என்னும் பொருள்; மடமாவது ஆமர்த்த மடம்; விருக்ஷ மாவது வடவிருக்ஷம்; ஆகமமாவது காமிக முதலிய இருபத்தெ ட்டாகமங்கள்; நாமதேயமாவது சிவநாமதேயம்; மந்திரமாவது

பஞ்சாக்கரம்; இவ்வாறு முன்னையஎட்டும் அறிக. பின்னைய பன்னிரெண்டென்பது, கோத்திரம், நாமதேயம், சந்தானம், மடம், விருக்ஷம், வனம், குகை, வாசம், கோசரம், மந்திரம், தரிசனம், முகம் என்பனவாம். இவ்வாறு சூட்சும ஆகமத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றதென்க, இந்தப் பரம்பரை வருமாறு, ஸ்ரீ மகாதேவர் எழுந்தருளியிருக்கும் கைலாஸ மலையின் பக்கத்தில் அனேக மடங்களும் அனேக இருடிகளும் அநேக திவ்ய விருக்ஷங்களும் உண்டு. அவற்றுள், ஆமர்த்தகமடம் ஒன்று. அதற்கு ஆசிரியர், சனற்குமாரபகவான். அதற்கு விருக்ஷம் கதம்பம். பின்னர் புஷ்பகிரிமடம் ஒன்று, அதற்கு ஆசிரியர் சனக மகாமுனிவர். அதற்கு விருக்ஷம் அர்ச்சுனம். பின்னர் கோளகி மடம் ஒன்று, அதற்கு ஆசிரியர் சனாதன முனிவர். அதற்கு விருக்ஷம் சம்பு. பின்னர் ஆமண்டமடம் ஒன்று, அதற்கு ஆசிரியர் சனந்தன முனிவர். அதற்கு விருக்ஷம் வடம். (ஆல்) இந்நான்கும் சைவமடமாகும். இவ்வாறு இந்த நான்கு மடங்களும் காமிகாகமத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன.

(காலோத்திராகமத்தில்)

ஶிவஶ்ஶிவாதயா கோத்ராதிஸ்யாதிதீதி வக்தவ்யம் ।
ஶைவம் கோத்ரம் ஶிவாஜ்ஜாதம் ஸத்யோஜாதம் ஶிவாத்மகம் ॥
பிம்போத்ப்ராதிஷ்டம் ஜாதம் நாமாக்யாதிஸ்ததைவ ச ।
தீக்ஷாகாலே யதாஸம்ப்ரோக்தம் ஶ்ரீபதேவ ஶிவாஜ்ஞயா ।

தத்தத்ராஶ்ரமஸஞ்ஜாதம் க்ஷேத்ரம் ச வக்தவ்யம் ।
க்ஷேத்ரே சைதத்ர விஜ்ஞேயம் ப்ராஹ்மணாதி வக்தவ்யே ।
ஸத்யோஜாதாத்ப்ரயே நஶ்ரேஷ்ட ப்ராக்தனம் யத்நம்
ஸூசிதம் என்றும் பரமோத்தராகமத்தில்,

ஶ்ரீமானாவர்த்தகஸ்தத் ஏகலோ மடஸ்ஸ வத்ரா
த்ரீ ஸுரோ பிம்பாவர்த்தம் க்ருதாமண்டலட்வீ வ
ஹ்ருதாக்ஷரஸ் ஸவ்யத: । ஶாயதீ நிஜகோத்ர ஸந்ததி,ர
யிவ: ஸந்தான ராட்ஸ்ரோதஸோ ஜயஸோ ஹ
ராஜ ஶிவே ஸ்வஸ்தேஜம் காலோத்தராவதாரே ॥

என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க. இவற்றின் பொருள் வருமாறு:—சிவகுலம், சிகாகுலம், சோதிகுலம், சாவித்திரிகுலம் எனக்குலம் நான்குவகைப்படும். அவற்றுள், சிவகுலம் சிவனிடமிருந்து உண்டானது. சிகாகுலம் சத்தியினிடமிருந்து உண்டானது. சோதிகுலம் விந்துவினிடமிருந்து உண்டானது. சாவித்திரிகுலம் நாதத்தினிடமிருந்து உண்டானது. தீக்ஷாகாலத்தில் சிவன்முதலிய பொருள்களிடத்தில் மந்திரம் லயம் அடையும் கிரமத்தில் நான்கு குலமும் உண்டாயின. பிராமணர் முதலிய நான்கு சாதிகளிடத்தும் முறையே இந்த நான்கு குலமும் அறியப்படும். சுத்தகுலம் உண்டாகும்பொழுது பழையகுலம் முதலியன நீங்குகின்றன என்பது காலோத்தர ஆகமம்.

ஆமண்டமடம், மகிழவிருக்ஷம், அம்சபக்ஷி, விந்துசரசு, கிருதமால விருக்ஷக்காடு, பஞ்சாக்ஷர மந்திரம், பர்வதம், காயத்திரிகோத்திரம், அத்திரிமகாரிஷி, நந்திகேசுரர்சந்தானம், சிவகோசரம் ஊர்த்துவமுகம், காலோத்தரஆகமம், என்பது பைரவோத்தரம் என்னும் உபாகமம். (25, 26, 27, 28)

(அ-கை) சிவப்பிராமணருக்கு இன்னின்ன விஷயங்களில் ஆசிரியத்துவம் உண்டென்று கூறுகின்றார்.

ஶைவாக³மேஷு பரமேஶ்வரவாக்யஜாதே
ஸாத்⁴யாக்ஷரேஷ்வபி ச ஶிவத்³விஜாநாம் ।
ஸர்வேஷு வர்ணேஷ்வபி தத்தத³ர்ஹ
தீ³க்ஷாதி³க்ருத்யேஷு ச ஶாஸ்த்ரஸம்மதம் ॥ ௨௯ ॥

(29) பரமேசுர வாக்கியசமூகமான சிவாகமங்களை ஓதுவித்தலிலும், ஆத்மார்த்தமான கிரியைகள் செய்வதிலும், பிராமணர் முதலிய நான்குவருணத்தவருக்கும் அந்தந்த வருணங்களுக்கு அனுகுணமாக சிவாகமங்களிலே கூறப்பட்ட அந்தந்தமந்திரங்களினாலே தீக்ஷைசெய்வித்தலாகிய பரார்த்தக்கிரியையிலும், சிவப்பிராமணர்களுக்கு ஆசிரியத்தன்மை உண்டென்று சிவாகமங்களில் கூறப்படுகின்றன. (29)

[அ-கை] சிவப்பிராமணர் இல்லாதவிடத்தில் க்ஷத்திரியன் முதலிய மூவருக்கும் ஆசிரியத்துவம் உண்டென்று கூறுகின்றார்.

ஸாமாந்யசைவோ ஹ்யத² ஶைவஶைவ:
ஶிவத்³விஜாநாம் தத³பா⁴வதே³ஶே ।
க்ஷத்ராதி³நாம் க்ஷத்ரியவைஶ்யஶூத்³ராந்
ஸாமாந்யசைவ: ஸ்வீக்ருத்ய ஸம்ஸ்கரோதி ||௩௰||

(30) சிவப்பிராமணராகிய ஆதிசைவருக்கு சிவாகமமுறைப்படி தீக்ஷை முதலியன செய்துவைப்பதற்கு ஆசிரியத்துவம் உண்டென்று சகல மூலாகமங்களிலும் உபாகமங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆதிசைவராகிய சிவப்பிராமணர் இல்லாதஇடத்தில் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியஇவருக்கு தீக்ஷை முதலியன செய்துவைப்பதில் அதிகாரம் உண்டென்று சித்தாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாகமவாக்கியமாவது,

ப்³ராஹ்மணாபா⁴வதே³ஶேஷு
க்ஷத்ர: க்ஷத்ரஸ்ய வைஶ்யஸ்ய ஸாமாந்ய: ।
தத³பா⁴வதே³ஶே து
வைஶ்யோ வைஶ்யஸ்ய ஶூத்³ரஸ்ய ஸாமாந்ய: ।
தச்சூ²த்³ராபா⁴வதே³ஶே து
ஶூத்³ர: ஶூத்³ரஸ்ய ஸாமாந்ய: ॥

(இதன்பொருள்) பிராமணரில்லாத தேசத்தில் க்ஷத்திரியன் குருவாவன். க்ஷத்திரியன் இல்லாதஇடத்தில் வைசியன் குருவாவன். வைசியனில்லாத இடத்தில் சூத்திரன் குருவாவன் என்க. (30)

(அ-கை) ஆதிசைவர்கள் இருக்குமிடத்தில் க்ஷத்திரியர் முதலியோர் தத்தம் சாதியிலுள்ளவருக்கு தீக்ஷைமுதலியன செய்வித்தல் குற்றமென்று கூறுகின்றார்.

க்ஷத்ரேண வைஶ்யேந ஶூத்³ரஜாதயா
தீ³க்ஷாக்ருதா ஸ்வஸ்வஜாதிஷு தோ³ஷதா³ ।
உத்³வாஹ ஸம்ஸ்கார ஹி யதா²ஶயம்
ப்ராயஶ்சித்தம் விஶேஷேண ||௩௧||

(31) சிவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்கள் இருக்குமிடத்தில் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியஇவர்கள் தத்தம்வருணத்திலுள்ளார்க்கு அறியாமையினாலே தீக்ஷை முதலியன செய்துவைப்பின், செய்தவரும் செய்யப்பெற்றவரும் ஆகியஇருவரும், யமலோகத்தை அடைந்து, அங்கு நிகழும் விசாரணைமுடிவில் இரௌரவம் முதலிய நரகங்களை அடைவரென்றறிக. இதற்குப்பிரமாணம்:—

க்ஷத்ரேண தீக்ஷிதா: க்ஷத்ரா:
க்ஷத்ரைர்வைஸ்யைஸ்து தீக்ஷிதா: ।
க்ஷத்ரஸ்ய ஸூத்ரேண தேஸிகே
விஸந்தி யமாலயம் ।
ஹத்வா ஜந்துஸஹஸ்ரம் ஸோடந்து
விஸந்தி நரகாந் யதா வயம் ॥

இதன் பொருள் மேலே கூறியவாறு. (31)

(அ-கை) நான்கு வருணத்தவரும் அவரவர்சாதிக்கு ஆசிரியராயிருக்கலாமென்று கூறுகின்றார்.

ஸ்வஸ்வாசார்யேஷ்வதிகாரிண: சதுர்வர்ணாநாம் தீக்ஷாத்யா
தாநே ஸதா விப்ராத்யாஸ்து சதுர்வர்ண்யம் க்ருதீ
இதி ஸ்ரீ ஸுப்ரபேதாகமே । தத்தஜ்ஜாதிஸமுத்
பவேந ஸர்வாணா காமுகாதி தீக்ஷா ஸிவா தத்தஜ்ஜா
தி ஸமுத்பவம் ஸுத்திஜம் தீக்ஷா க்ரமோயம் ஸ்ம்ருதம் ॥௩௨॥

(32) பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்என்னும் நான்கு வருணத்தவர்களும், சைவதீக்ஷையிலும், நித்தியமாகிய ஆத்மார்த்த பூசையிலும், நைமித்திகமாகிய தனக்கு உசிதமான சிவலிங்கப் பிரதிஷ்டையிலும், காமியமாகிய சோமவார விரத உத்தியாபனம், மந்திரசித்தி முதலியவற்றிலும், தாம் செய்துகொள்வதற்கும் பிறர்க்குச்செய்து வைப்பதற்கும் அதிகாரமுடையவராவர். ஆயினும் அந்தந்தச்சாதியிலே உள்ள ஆசிரியர் அந்தந்தச்சாதியிலேயுள்ள சிஷ்யருக்குச் செய்துவைப்பது முறைமை யென்று சுப்ரபேதாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது(32)

(அ-கை) இன்னொரு முறையாக அனைவருக்கும் ஆசிரியத்துவம் உண்டென்று கூறுகின்றார்.

[illegible]
[illegible] ||௩௩||

(33) பிராமணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் தடையின்றி ஆசிரியத்துவம் உண்டென்றும், இன்னொரு பக்ஷமாக அநுலோமரான ஆறுபேருக்கும் ஆசிரியத்துவ முண்டென்றும் இவ்வாறு சிந்திய விசுவம் என்னும் ஆகமத்திற் சொல்லியிருக்கின்றது. அன்றியும், சிலதேசாசாரத்தினால் பிரதிலோமரான அறுவருக்கும் தத்தம் சாதியிலுள்ளாரைக்குறித்து மந்திரமில்லாமல் ஆசிரியத்துவமுண்டென்றும் அவ்வாகமத்திற்கூறப்பட்டிருக்கின்றது. அநுலோமர் அறுவர் யாரெனில், பிராமணனுக்கு க்ஷத்திரியப்பெண்ணினிடத்திற் பிறந்த சுவர்ணன் என்று ஒருவன் செட்டிப்பெண்ணினிடத்திற் பிறந்த அம்பட்டன் என்றொருவன். சூத்திரப்பெண்ணினிடத்திற்பிறந்த பாரசைவன் என்றொருவன். ஆகப் பிராமணனுக்குப்பிறந்த பிள்ளைகள் மூன்று. க்ஷத்திரியனுக்குச் செட்டிப்பெண்ணினிடத்திற் பிறந்த மத்குருவென்றொருவன், சூத்திரப்பெண்ணினிடத்திற்பிறந்த உக்கிரன் என்றொருவன், ஆக க்ஷத்திரியனுக்குப் பிறந்த பிள்ளைகள் இரண்டு. செட்டிக்குச் சூத்திரப்பெண்ணினிடத்திற் பிறந்த ஆனுகன் என்றொருவன். ஆக அநுலோமராறுவருங்கண்டுகொள்க. ஆதலால், பிராமணனுக்கு நான்கு வருணத்திலும் விவாகம் செய்யலாமென்றும், மற்றவர்களுக்கும் அவ்வாறே தன் சாதியிலும் தனக்கு கீழ்ப்பட்ட சாதியிலும் விவாகம் செய்துகொள்ளலாம் என்றும் அறிக. 33

(அ-கை) விவாகம் எட்டுவிதம் என்று கூறுகின்றார்.

[illegible]

பைஶாசஂ ஸ்வபதே ஸுப்தாஹரணஂ து ராக்ஷஸஂ
ஹரதே ॥ ॥௩௪॥.

(34) விவாகம் எட்டுவிதம் ஆகும். அவை வருமாறு:- பிராமம், தைவம், பிராசாபத்தியம், ஆரிஷம், ஆசுரம், காந்தருவம், பைசாசம், இராக்கதம் என்பனவாம். அவற்றுள், பிராமமாவது நல்லகோத்திரத்திற் பிறந்த அழகுள்ள ஒருவனை அழைத்துவந்து அவனையும் தன்னுடைய புத்திரியையும் நன்ருக அலங்கரித்து புத்திரியை அவனுக்குக் கொடுத்தல். தைவ விவாகமாவது, சிஷ்யனுக்கு தன் புத்திரியைக்கொடுத்தல். பிராசாபத்திய விவாகமாவது, சிஷ்யரல்லாதவருக்கு தர்மங்காரணமாக தன் புத்திரியைக் கொடுத்தல். ஆரிஷ விவாகமாவது, இரண்டுபசுக்களைவாங்கிக்கொண்டு தன் புத்திரியைக்கொடுத்தல். ஆசுர விவாகமாவது அனேக திரவியங்களை வாங்கிக்கொண்டு தன் புத்திரியைக் கொடுத்தல். காந்தருவ விவாகமாவது, நாயகன், நாயகிகள் இருவரும் தாமே கூடிக்கலத்தல். பைசாச விவாகமாவது, நித்திரை செய்கிற பெண்ணை அவளறியாதவண்ணம் கொண்டுபோதல். இராக்ஷச விவாகமாவது அழும்படியாக பலாத்காரமாய்க் கொண்டுபோதல். இவ்வாறு எட்டுவித விவாகங்களும் அறிந்துகொள்க. (34)

(அ-கை) தீக்ஷைமுதலியவற்றின் பிரயோஜன தாரதம்மியத்தைக்கூறுகின்ருர்.

ஸமாநே பீஜம் ஸ்யாத்க்ஷேத்ரபேதாத் ஸ்வதந்த்ரஃ
வதஶ்சாபி பேதோ । தீக்ஷாமந்த்ரோபதேஶாத்யாஃ
வாத்ருஶ்யந்தே பலதாரதம்யஂ ॥ ॥௩௫॥

(35) வித்து ஒன்ருயினும் நிலத்தின் வன்மை, மென்மைகளால் பலன் வேறுபடுதல் போலவும், மேகஜலம் ஒன்ருயினும் பூமியின் வேறுபாட்டால் ரச வேறுபாட்டை யடைதல் போலவும், தீக்ஷை, மந்திரம், உபதேசம் முதலியன, பெற்றுக்கொள்ளுபவர்களின் பக்குவ வேறுபாட்டால் பலன்களில் தாரதம்மியத்தை அடைகின்றன. (35)

(அ-கை) சற்குரு இலக்கணம் இதுவென்று கூறுகின்ருர்.

[illegible] ||௩௬||

(36) சற்குரு என்னும் அம்சபட்சிக்கு சாஸ்திரமும் கிரியையுமாகிய இரண்டும் சிறகாகும். ஆதலால் ஆகமத்தில் ஆற்றலும், கிரியை செய்வதில் சமர்த்தும், சிவனிடத்தும் குருவினிடத்தும், பக்தி சிரத்தையும், உபசாந்தியும், சகல உயிர்களிடத்தும் கிருபையும், சகல ஜனங்களுக்கும் பிரியமான வசனமும், நல்ல ஸம்பிரதாயமும், இலௌகிக சாமர்த்தியமும், அங்கங்களில் குற்றமின்றி இலக்ஷணமும், பதினாறு வயசுக்கு மேற்பட்ட யௌவனமும் உடையவன் சற்குருவாவன். அவனே தீக்ஷைசெய்விப்பதற்கும் குருவாவன் என்க. (36)

(அ-கை) அசற்குரு இலக்கணம் இதுவென்று கூறுகின்றார்.

[illegible] ||௩௭||

(37) உலகத்தில், சிலர் மந்திர தந்திர கிரியா சமூகங்களையும், நல்ல சம்பிரதாயமாகிய பரம்பரையான உபதேசங்களையும் சற்குருமுகமாகக் கனவிலும் அறியக்கூடிய ஆற்றல் இல்லாதிருக்கவும், வயிறோம்புதல் காரணமாக பிறர் பிரமிக்கும்படி குருசின்னங்களைத் தரித்துக்கொண்டு, வேடத்தாலும் சொல்லாலும் நல்லவர்கள் போலக்காட்டி, சிஷ்யர்களுடைய பொருள்களைத் திருடர்களைப்போல் அபகரிப்பார்கள். இவ்வாறு சிஷ்யர்களுடைய பொருள்களை அபகரித்ததேயன்றி அவர்களுடைய மனதிற்குத் துன்பத்தையும் உண்டுபண்ணுவார்கள் இவர்கள் அசற்குரு என்க. (37)

(அ-கை) நன்மாணாக்கனிலக்கணமிதுவென்று கூறுகின்றார்.

தைவாஸ்திக்யம் ஶிவே பக்திஸ்ததா ப்ரேமா ஶிவாஶ்ர-
ப்ரேமஸ்திதே ஸம்ஸாரப்ரேமவிவர்ஜனம் நிஜஶா-
ஸ்த்ரவாக்யபாலனம் கோபஹீனதே । ஸ்வதோஷவீ-
க்ஷணம் ஶாஸ்த்ருதோஷாவலோகனம் விஶ்வா-
ஸஶ்ச க்ருதஜ்ஞதா வர்ஜனம் பாபிபிஶ்ஶாகம் விவேகோ
குணா: ॥ ॥௩௮॥

(38) நன்மாணாக்கனுக்கு அனேக நல்ல குணங்களிருத்தல் வேண்டும். அவற்றுள், பதின்மூன்று குணங்கள் மிக மேலானவை. அவை வருமாறு ; தெய்வம் உண்டென்னும் திடபுத்தி, சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்புடைமை, சமயத்துரோகம், சிவத்துரோகம், குருத்துரோக மில்லாமை; குருவாக்கிய பரிபாலனம், கோபமில்லாமை, தன்னிடத்துள்ள குற்றத்தைத்தெரிதல், ஆசிரியரிடத்துள்ள குற்றத்தைத்தெரியாமை, ஆசிரியரிடத்து அன்புடைமை, செய்நன்றி யறிதல், தீயவரோடிணங்காமை, விவேகமுடைமை என்பனவாம். (38)

(அ-கை) சிஷ்யர்களின் பேதம் பதின்மூன்றென்று கூறுகின்றார்.

ஶிஷ்யாஸ்ஸந்தி த்ரயோதஶ யதா ஶ்ரீமதங்கபாரம-
ேஶ்வரே அத்வாலகபாலகா வீதநிராதாரி ப்ரமா-
தீ அம்புகயாவகா: । பாவகாவநமதீ தாமஸ ஸத்ர-
ப்ருத் ஸௌரேயஶ்ச விசாரதீ
காலவஶ்ச ப்ருதக்தவஸம்ஶ்ரயா ॥ ௩௯॥

(39) அத்வாலகன், பாலகன், நிராதாரி, பிரமாதி, அம்புகன் யாவகன், பாவகன், அநுமதி, தாமசன், சத்திரபிருது, யௌரேயன், விசாரதி, காலவன் எனச்சிஷ்யர்கள் பதின்மூன்றுபிரிவினர் ஆவரென்று மதங்க பாரமேஸ்வர ஆகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. (39)

(அ-கை) சிஷ்யனுசாதவன் இலக்கணமிதுவென்று கூறுகின்றார்.

[illegible] ||௪௦||

[illegible] ||௪௧||

(40, 41) சாதியினாலே பெரியவனாயிருந்தாலும், இழிந்த தொழிலையுடையவனையும், அன்னத்தையும் வித்தையையும் விற்கிறவனையும், ஜனங்களினாலே நிந்திக்கப்பட்டவனையும், பிறர் மனைவியை விரும்புகிறவனையும், ஆசிரியர், தாய் தந்தை, மூத்தோர், சிவனடியார் ஆகிய இவர்களிடத்தில் பக்தி இல்லாதவனையும், மூர்க்கனையும், கோரனையும், விவேகமில்லாதவனையும், குலப்பிரஷ்டனையும் புலாலுண்பவனையும் உள்ளவன் எப்பொழுதும் சிவதீக்ஷைக்குரியவனாகான். பொருளாசையால் இவனுக்குச்சிவதீக்ஷை செய்துவைப்பின், செய்துவைத்த குருவும், பெற்றுக்கொண்ட சிஷ்யனும் ஆகிய இருவரும் நரகத்திற்கிடப்பார்களென்று காமிகமென்னும் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. (40, 41)

(அ-கை) தீக்ஷைபெறுதற்குரியவர் இவரெனக்கூறுகின்றார்.

[illegible] ||௪௨||

(42) தீக்ஷைபெறுதற்குரிய சற்பாத்திரர் எவரெனில், வித்தை தபசு என்னும் இந்த இரண்டும் எவனிடத்தில் விளங்குகின்றனவோ, அவனை சற்பாத்திரனென்று பெரியோர்கள் கூறுகின்றனர். அவ்வாறே ஹேமாத்திரி கல்பத்திலும் சொல்லியிருக்கின்றது. அவற்றுள் வித்தையாவது, நித்திய அநித்தியப்பொருள்களின் ஞானத்தை உண்டுபண்ணிச் சுகத்தைத்தரும் கல்வியாம். தபசாவது, நித்தியகர்மங்களோடுகூடி அனைவரும் அதிசயிக்கும் வண்ணம் ஒழுகும் நல்லொழுக்கமாம் என்க. (42)

(அ-கை) கர்மங்களின் பிரிவைக்கூறுகின்றார்.

நித்யஞ்ச நித்யாங்கமபி ததா நைமித்திகாங்க
வாந்ய: காம்யஞ்ச காம்யாங்கமபி ஸர்வம் ஷட்
விதம் ப்ரிய: । நித்யமேவ ச காம்யஞ்ச
ஶிவராத்ர்யாதி வ்ரதம் நைமித்திகம் ஸூர்யசந்த்ர
க்ரஹணாதிகம் ததா காம்யஞ்ச காம்யம் விது: ॥ ௪௩ ॥

(43) நித்தியம் என்றும், நித்தியாங்கமென்றும், நைமித்திகமென்றும், நைமித்திகாங்கம் என்றும், காமியம் என்றும், காமியாங்கம் என்றும், இவ்வாறு ஆறுவிதமென்றும், அஃதன்றியும் சிவராத்திரி விருத முதலியவிரதங்கள் நித்தியமாயும் காமியமாயும் இருக்கும் என்றும், சூரிய சந்திரகிரகணங்கள் முதலியன, நைமித்திகமாயும், காமியமாயுமிருக்குமென்றும் சிவாகமங்களிற் கூறப்படுகின்றன. (43)

(அ-கை) நித்திய கருமங்கள் இவையெனக்கூறுகின்றார்.

நித்யம் கர்ம ஶிவாகமோக்தமுஷஸி ஸ்வாபாய ஸம்
ஸ்ம்ருதி ஶௌசாசமநஸ்நாந ஶிவார்ச்சநாக்நி ஜப
த்யாநம் ஸமாதிஸ்தித: । ஸம்ஸேவா ஶிவஶாஸ்த்ர பாட ஶ்ரவண
தத்வோபதேஶோ ஹ்யத: ஸாயம் ஸாந்த்யவிதாந
ஜபம் ஶிவகதா ஸாயம் ச ஸந்த்யாவந்தநம் ॥ ௪௪ ॥

(44) சிவாகமத்திற் கூறப்படும் நித்யகர்மங்களாவன: விடிய ஐந்து நாழிகைக்குமுன் எழுந்து குருவையும் சிவனையும் தோத்திரம் செய்தல், மலவிசர்ச்சனம் செய்தல், ஆசமனஞ்செய்தல், பல் துலக்குதல், ஸ்நானம் செய்தல், சந்தி செய்தல், சிவபூஜை பண்ணுதல், நித்தியாக்கினி கார்யம் செய்தல், பஞ்சாக்கர ஜபம் செய்தல், சிவத்தியானம் பண்ணுதல், நிஷ்டை புரிதல், சிவாலய சேவை செய்தல், சிவாகம பாராயணஞ்செய்தல், செய்வித்தல், மத்தியானத்திற் செய்யவேண்டிய மாத்தியான்னிகம் முதலியன செய்தல், பின்னர் அதிதி பூசையுடன் போசனம் செய்தல், சாயங்காலம்வரை சிவ சரித்திரங்களைக் கேட்டல், சாயங்காலத்தில் சந்தியாவந்தனம் முதலியன செய்தல் ஆகிய இவையே யென்க. (44)

(அ-கை) நித்தியாங்கங்கள் இவையெனக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௪௫॥

(45) நித்தியகர்மத்தில் குறைவந்தவிடத்து அதற்குப் பரிகாரமாகப் பிராயச்சித்தம் செய்தல், அஷ்டபந்தசலனம் வந்தவிடத்து மீண்டும் அஷ்டபந்தம் செய்தல், மார்கழி மாசத்தில் நெய் அபிஷேகம் முதலாகப்பன்னிரண்டு மாசத்திலும் அந்தந்த மாசத்திற்குரிய மாசபூஜை செய்தல், வருடப் பிராயச்சித்தமாகிய பவித்திரோத்ஸவம் செய்தல் ஆகிய இவை நித்தியாங்கம் என்றறிக.

(அ-கை) இன்னும் நித்தியாங்கத்தை விசேஷமாகக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௪௬॥

(46) ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, ஆகிய இந்த நான்கு மாசங்களிலும், கிருஷ்ணபக்ஷத்து சதுர்த்தசி, சுக்கிலபக்ஷத்து சதுர்த்தசி, அவ்விருபக்ஷங்களின் அட்டமி அமாவாசை பௌர்ணமி விதீபாதம் பன்னிரண்டு மாஸப்பிறப்பு ஆகிய புண்ணியகாலங்களிலும், சிவராத்திரி, சஷ்டீதியாகிய ஆனிமாதம் புரட்டாசிமாதம். மார்கழி மாதம் பங்குனிமாதம் என்னும் நான்கு மாதங்களிலும், சூரிய கிரகணம், சந்திரகிரகணம், தக்ஷிணாயனம் உத்தராயணம், அர்த்தோதயம் மகோதயம் ஆகிய இந்த புண்ணியகாலங்களிலும், மகாதேவரை விசேஷமாகப் பூசித்தல்வேண்டும். விசே

ட்டமாகப் பஞ்சாக்ஷர ஜெபம் செய்யவேண்டும். இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்படுகின்றன. (46)

(அ—கை) நைமித்திகங்கள் இவையெனக்கூறுகின்றார்

தீக்ஷா ச ப்ரதிஷ்டா ச ததைவோபராக ஸ்நாநம் ச நை
மித்திகாநி ஜ்ஞேயாநி ஸாபேக்ஷம் வக்ஷம் ஸாவித்ரீ
வேதம் தத்ராக மஜ்ஜநாயநேவோக்ஷம் || சஎ ||

(47) தீக்ஷைசெய்தல், பிரதிஷ்டை செய்தல், சூரியசந்திரகிரகணம், அர்த்தோதயம், மகோதயம், புரட்டாசிமாதத்தில் எந்த வாரத்திலேனும் மகநக்ஷத்திரமும் திரயோதசியும் கூடிவருகின்ற கஜச்சாயை ஆகிய இவைமுதலான புண்ணியகாலங்களில் ஸ்நானம் செய்தல், நைமித்திக கர்மங்களாகும் (47)

(அ—கை) நைமித்திகாங்கம் இவையெனக் கூறுகின்றார்-

தீக்ஷாங்கமந்த்யேஷ்டிரியம் ஸபிண்டீ யாகா ப்ரதிஷ்டா
ஸ்திதாயா குருதக்ஷிணா | ஸ்நாநாங்கமந்நம் க்ஷிப்ரம் ப்ரதா
நம் ஸ்ராத்வாரணம் ஸ்ராத்தவவாஸதாங்கம் || சஅ ||

(48) நைமித்திகமாகிய தீக்ஷைக்கு சபிண்டீகரணத்துடனே அந்தியேட்டிக்கிரியை அங்கமாகும். பிரதிஷ்டாக்கிரியைக்கு ஆசாரியதெக்ஷிணை அங்கமாகும். புண்ணியகால ஸ்நானத்துக்குத் தன்னால் இயன்ற அளவு தானமாகக் கொடுத்தல் அங்கமாகும். உபவாசத்திற்கு பாரணை அங்கமாகும். இவ்வாறு நைமித்திகாங்கம் கண்டுகொள்க. (48)

(அ—கை) காமியம், காமியாங்கங்கள் இவை யெனக்கூறுகின்றார்.

காம்யாநி கர்மாணீஹ நித்யகர்மநைமித்திகாந்ய
நியாநி தாநி | காம்யாங்கமேவ்ருத்தம் தயோஹ தத்
ஹோத்ராவநஞேதி தத்ஹ்ருதீத்ரா || || சகூ ||

(49) முன் சொன்ன காமியங்கள் எவையெனில், நித்தியகர்மம், நைமித்திககர்மம் ஆகிய இரண்டிற்கும் வேறாயுள்ள சோம

வாரவிரதம், உமாமகேசுரவிரதம், கேதாரவிரதம், கிருஷ்ணாஷ்டமிவிரதம், விநாயகசதுர்த்தி விரதம், கந்தசஷ்டி விரதம், பானுவார விரதம், துலாக்காவேரி ஸ்னானம், கங்கை முதல் சேது வரை உள்ள புண்ணியதீர்த்த ஸ்நானம் ஆகிய இவையனைத்தும் காமியங்களென்றும், விரதங்களை அந்தந்தக்கற்பத்தில் சொல்லியவாறு விரதோத்தியாபனம் செய்தல் அந்த விரதத்துக்கு அங்கம் என்றும் இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன (49)

(அ-கை) ஸ்நானம் எட்டுவிதமென்று கூறுகின்றார்.

𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ॥௫0॥

(50) ஸ்நானம் எட்டுவிதமாகும். அவை வருமாறு, வாருணஸ்நானமாகிய ஜலஸ்நானம், ஆக்கினேயஸ்நானமாகிய விபூதிஸ்நாநம், மந்திரஸ்நானம், மானதஸ்நானம், என்னும் இந்த நான்கும் நித்யஸ்நானமாகும். திவ்வியஸ்நானம், மாருதஸ்நானம், கௌரவஸ்நானம், பார்த்திபஸ்நானம் என்னும் இந்த நான்கும் நைமித்திக ஸ்நானமாகும். இவ்வாறு எட்டுவிதஸ்நானமும் கண்டுகொள்க. ஸ்நானம் செய்யாதபொழுது ஈரவஸ்திரத்தால் சர்வாங்கமும் துடைத்தல் கபில ஸ்நானமாகும். இவ்வாறு ஸ்நானபேதங்கள் பலவிதமாக சிவாகமங்களிலே கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஜலஸ்நானம் மந்திரத்தோடு கூடினதென்றும், மந்திரம் இல்லாததென்றும் இரண்டு விதமாகும். அவற்றுள் மந்திரத்தோடு கூடின ஸ்நானம் பிராமணரும் சிவதீக்ஷையுடையாரும் செய்யலாம். மந்திரமில்லாத ஸ்நானம் சிவதீக்ஷையில்லாதவர் செய்யலாம். ஆக்கிநேய ஸ்நாநமாவது, விபூதியினாலே சிரசு முதல் சர்வாங்கமும் உத்தூளனம் செய்தல். அந்த ஸ்நானம் விருத்தருக்குரியது. அந்த ஆக்கினேய ஸ்நானமும் மந்திரத்தோடு கூடின

தென்றும், மந்திரமில்லாததென்றும் இரண்டு விதம். மந்திர ஸ்நாநமாவது, மந்திரத்தினுல்ஸ்நாநபாவனைசெய்தல். மானதஸ்நாந மாவது, குருவின் உபதேசப்படி மனத்தால் நன்றாக ஸ்நான பாவனை செய்தல். திவ்ய ஸ்நாநமாவது, சிறிது வெயிலோடு கூடிய மழையில் கிழக்கு முகமாய் நின்று, ஈசான மந்திரத்தை யாவது தத்புருஷ மந்திரத்தையாவது உச்சரித்துக்கொண்டு கிழக்கு நோக்கி ஏழடி நடத்தல். இது மாகேந்திர ஸ்நானம் எனவும் பெயர் பெறும். மாருத ஸ்நானமாவது, பசுக்கள் கூட்டமாக வரும்பொழுது அந்தப்பசுக்களுடைய குளப்படியிலுள்ள தூள்கள் காற்றினுல் சர்வாங்கமும் தோயும்படி பார்த்துக்கொண்டு ஏழு அடி எதிர் நோக்கி நடத்தல். இதற்கு வாயுஸ்நானம் என்றும் பெயருண்டு. பார்த்திப ஸ்நாநமாவது, மகத்தான சிவதலங்களிலே திருமண்ணுடுதல், மகா நதிகளிலேயுள்ள திருமண்ணை எடுத்து தான் இருக்கும் இடத்தில் வைத்துக்கொண்டு தான் வேண்டியபோது ஜலத்திலே கரைத்து சிரசிலே புரோக்ஷித்துக் கொள்ளுதல், அல்லது விபூதி தாரணம்போல் திரிபுண்டரமாகத் தரித்துக்கொண்டு அதன்மேல் விபூதியைத்தரித்தல். இவ்வாறு பார்த்திப ஸ்நானம் பலவகைப்படும். கௌரவ ஸ்நாநமாவது, தனது ஆசிரியனுடைய இரண்டு திருவடிகளிலும் சந்தனத்தைப்பூசிக் கழுவியாவது, அல்லது தண்ணீரால் கழுவியாவது அந்த ஜலத்தினுலே, சிரசுமுதல், சர்வாங்கமும் ஸ்நானம் செய்தல், அல்லது சிரசிலே தரித்துக்கொண்டு உட்கொள்ளுதல். இந்தக் கௌரவ ஸ்நானம் ஏனைய ஸ்நானங்களிலும் மிக விசேஷமாகும். இவ்வாறு எட்டுவித ஸ்நானங்களின் முறைமை கண்டுகொள்க. மகாதேவருடைய அபிஷேக நிர்மால்யத்தை ஒரு குடத்தில் ஏந்திவந்து அந்தச் சிவதீர்த்தத்தினுல் சர்வாங்கமும் ஸ்நானம் செய்தல் சிவநிர்மால்ய ஸ்நானமாகும். இந்த ஸ்நானம் குட்டநோய் முதலான பெருநோய்களையும், பூதப்பிரேத, பிசாச, பிர்ம, ராக்ஷசர்களையும் போக்கும். பிள்ளை இல்லாதவர் நாற்பத்து ஐந்து நாள் இந்த ஸ்நானம் செய்யின், பிள்ளைப்பேறு உண்டாகும்.

முன்சொன்ன எட்டு ஸ்நானங்களுடன் கபிலஸ்நானமும் சிவநிர்மால்ய ஸ்நானமும் கூட ஸ்நானம் பத்து விதம் என்று அறிந்துகொள்க. (50)

(அ-கை,) சமயதீக்ஷை, விசேட தீக்ஷை, நிர்வாண தீக்ஷை ஆசார்யாபிஷேகம் உடையவர்க்குரிய செயல்களைக் கூறுகின்றார்.

தாஸ்யம் சரித்ரம் ஸமயீ ப்ரகுர்யாத்
ஸத்புத்ரஸஞ்ஞ க்ரியாயோகமார்கௌ ।
ததாபி ஸாத்ய ஸ்வநிஜ ஸாதகோயம்
ஸர்வம் சரித்ரம் ஜ்ஞாநீ விதேயம் ॥ ௫௧ ॥

51. தடாகம் அமைத்தல், கிணறு தோண்டல், சோலை அமைத்தல், உத்தியானவனம் அமைத்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், பூக்கொய்தல் மாலைகட்டுதல், திருக்கோவில் அலகிடுதல், மெழுகுதல் முதலிய சரியாபாதமான சிவபுண்ணியச் செயல்களுக்கு சமயதீக்ஷையினை உடையார் உரியராவர், போக மோக்ஷங்களைத்தருகின்ற சிவபூஜைக்கும், ஆறுதார தரிசனமாகிய யோகத்திற்கும், சக மார்க்கத்தோடு கூடிய புத்திர மார்க்கமாகிய கிரியானுட்டானம் அனைத்திற்கும் விசேட தீக்ஷையினையுடைய புத்திரனென்பவர் உரியராவர். இந்தக்கிரியாபாதம், யோக பாதங்களோடு தம்மிஷ்டத்தைப்பூர்த்தி செய்யும் காமிய கர்மங்களனைத்திற்கும், அத்துவ சுத்தி சகிதமான நிர்வாண தீக்ஷையினையுடைய சாதகாபிஷேகமுடையார் உரியராவர். இந்த மூன்று பாதங்களோடு கூடிய ஞானமார்க்கம் அனைத்திற்கும், ஞான நிர்வாணதீக்ஷையினையுடைய மகாபிஷேக சம்பன்னனான ஆசிரியர் உரியராவர். இவர் இவ்வனைத்தையும் செய்யவும் செய்விக்கவும் அதிகாரமுடையர். இவ்வாறு சரியை முதலிய நான்கிற்கும் உரியார் செயலைக்கண்டு கொள்க. (51)

(அ-கை) திருநீறு தரிக்கவேண்டியதானங்களைக் கூறுகின்றார்.

[illegible] ||௫௨||

52, திருநீறு தரிக்கத்தகும் தானம் பதினாறாகும். அவையாவன:— உச்சி, நெற்றி, மார்பு, தொப்புள், முழங்காலிரண்டு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு, கழுத்து, விலாப்பக்கம் இரண்டு, முதுகுக்கீழ்நடு ஒன்றுமாம். இவ்வாறு காமிகாகமத்திலும், சிந்திய விசுவம் என்னும் ஆகமத்திலும் கூறப்பட்டிருக்கின்றன, (52)

(அ·கை.) இன்னின்ன இடத்தில் திருநீறு தரித்தலினால் இன்னின்ன பாவங்கள் நீங்கும் என்று கூறுகின்றார்.

[illegible] ||௫௩||

53. முன்சொன்ன பதினாறு தானங்களிலும் திருநீறு தரித்தலால் சகல பாவங்களும் நீங்கும். அஃதெவ்வாறெனில், உச்சியிற்றரித்தலால் கண்டத்திற்கு மேற்செய்த பாவம் நீங்கும். நெற்றியிற்றரித்தலால், பிரமாவினால் எழுதப்பட்ட கெட்ட எழுத்துக்களின் தோஷம் நீங்கும். கண்டத்திற்றரித்தலால் விலக்கப்பட்ட உணவை உண்ட குற்றம் நீங்கும். மார்பிலே தரித்தலால் மனத்தாற்செய்த குற்றம் நீங்கும். நாபியிற்றரித்தலால் ஆண்குறியினாற்செய்த விஷய தோஷம் நீங்கும். முழங்கால்களிற்றரித்தலால் கால்களாற்செய்த பாவம் நீங்கும். முதுகுக்கீழ் உள்ள முச்சந்திற்றரித்தால், குதத்தினாற்செய்த பாவம் நீங்

கும். புயங்களிற்றரித்தலால் அந்நிய மகளிரை ஆலிங்கனஞ் செய்த பாவம் நீங்கும். இவ்வாறு ஸ்காந்த புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது (53)

(அ.கை.) திருநீறு தரித்தலினால் உண்டாகும் பரலோக பலனைக் கூறுகின்றார்.

[illegible] ||௫௩||

54. திருநீற்றை அங்கந்தத் தானங்களுக்குரிய மந்திரங்களோடு உச்சியிற்றரித்தால் ஒரு சந்திரகலையுண்டாகும். நெற்றியிற்றரித்தால் நேத்திரமுண்டாகும். கண்டத்திற்றரித்தால் ஒரு அடையாளமுண்டாகும். மார்பிற்றரித்தால் சர்வஞ்ஞத்துவம் உண்டாகும். புயங்களிற்றரித்தால் திவ்ய மகளிரைப் பெறுவர். கைகளிற்றரித்தால் மான், மழு, முதலிய திவ்ய ஆயுதங்களுண்டாகும். தொப்புள் முச்சந்திகளிலே தரித்தால் ரிஷபவாகனம் தோலாடை கைலாச வாசம் ஆகிய இவை யுண்டாகும். இவ்வாறு பிரம்ம கைவர்த்தம் என்னும் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. (54)

(அ-கை.) திருநீற்றைத்தரித்தலினால் உண்டாகும் பலனை இன்னும் கூறுகின்றார்.

[illegible] |௫௪|

55. எவனொருவன், சிரசு முதலிய பதினாறு தானங்களில் திருநீற்றைத் தரிக்கின்றானோ, அவனுக்கு அதனாலுண்டாகும் பலனைக் கூறுமிடத்து, நிர்மலமான விபூதியை சிரசிலே தரித்தால் கிரீடமகுடாதிகளைத் தரும். நெற்றியிற்றரித்தால் பட்டவர்த்தனராகச்செய்யும். கழுத்து, மார்பு, புயம், கை, மூச்சந்தி, இவற்றிற்றரித்தால் முத்துமாலை, பொன்மாலை, முதலிய திவ்ய ஆபரணங்களுண்டாகும். அஃதன்றியும், பட்டுவஸ்திரம், திவ்ய மகளிர் திவ்ய அரைஞாண், பஞ்சாலங்காரத்தோடு கூடிய திவ்யமகளிர்கள், திவ்ய போகங்கள் உண்டாகும், கைகளிற்றரித்தால், தோள்வளை முதலான நல்ல திவ்ய ஆபரணங்களுண்டாகும். முழங்கால்களிற்றரித்தால், இரதம், யானை, குதிரை, சிவிகை, முதலான திவ்ய வாகனங்களுண்டாகும். அஃதன்றியும், நூபுர முதலிய திவ்ய பாதாபரணமுமுண்டாகும். திருநீறு தரித்தலால் இவ்வாறு இன்னும் அநேக பலன்கள் உண்டாகுமாதலின், விபூதி தாரணம் இம்மையில் மகா போகங்களையும் மறுமையில் மோக்ஷத்தையும் கொடுக்கும் என்று அறிக. (55)

(அ-கை) விபூதியின் அதிஷ்டான தேவரைத் தியானிக்கும் முறை கூறுகின்றார்.

த்ரிவக்த்ரஞ்ச த்ரிகரம் த்ரிபாதம் நவாக்ஷயுதம்
ரக்தம் ஸந்ருத்தம் | விபூதிதேவம் ஸமுத்தூளனவா
க்ஷம் நமாமி ஸித்திம் ப்ரோக்தம் மகுடாகமே ||ருசு||

(56) விபூதிதேவரைத் தியானிக்கும்முறை எவ்வெறெனில் மூன்று திருமுகமும், ஒன்பது கண்ணும், மூன்று கையும், மூன்றுகாலும், திருநடன கோலமும், சிவந்த திருமேனியும், உக்கிர வேடமும், விபூதி உத்தூளனமும், உடையவராகத் தியானம் பண்ணுபவன் இஷ்டசித்தியைப் பெறுவானென்று மகுடாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றதென்க (56)

(அ-கை) விபூதியின் நிறமும் பயனும் கூறுகின்றார்.

க்ருஷ்ணம் ரோககரம் ப்ரோக்தம் ரக்தம் கீர்த்திவிநாசனம் ।
பீதம் ஸம்பத்விநாசாய ஸிதம் ஸர்வார்த்தஸாதகம் ॥ ௫௭

(57) கருநிற விபூதியைத் தரித்தால் நோயுண்டாகும். செந்நிற விபூதியைத் தரித்தால் கீர்த்தியைப் போக்கும். பொன்னிற விபூதியைத் தரித்தால் ஐஸ்வரியத்தை நீக்கும். வெண்ணிற் விபூதியைத் தரித்தால் போகமோக்ஷம் இரண்டும் உண்டாம். இவ்வாறு காமிகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதென்க. (57)

(அ—கை) உருத்திராக்கம் தரிக்கும் முறையைக் கூறுகின்றார்.

ருத்ராக்ஷஸ்ய து தாரணம் ஶிகாயாமேகம் ஶி
ரஸ்யாம் வரம் சத்வாரிம்சத் ச்ரவண
யோரேகைகயோஷ் ஷட்ஷட் । ஆகண்டே த்வாத்ரிம்ஶத் புஜயோஷ்
ஷோடஶ ஷோடஶ ஹ்ருதி ...
... ஸஹஸ்ரம் ... ॥ ௫௮ ॥

(58) உருத்திராக்கம் தரிக்கும் முறை வருமாறு—சிகையிலே ஒரு உருத்திராக்ஷமும், சிரசில் நாற்பது உருத்திராக்ஷமும், காதுகளிலே ஒவ்வொன்றில் ஆறு உருத்திராக்ஷமும், கழுத்தில் முப்பத்திரண்டு உருத்திராக்ஷமும், தோள்களில் ஒவ்வொன்றில் பதினாறு உருத்திராக்ஷமும், மார்பில் நூற்றெட்டு ஆயிரத்தெட்டு, பதினாயிரத்தெட்டு உருத்திராக்ஷமும், அவ்வாறே சிரமாலையும் தரிக்கவேண்டுமென்று சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. (58)

(அ—கை) உருத்திராக்ஷம் தரித்தலால் உண்டாகும் புண்ணியத்தைக் கூறுகின்றார்.

யஸ்தேந ருத்ராக்ஷைர் ஶிரஸ்ஸு
பாதஞ்ச கோடிகுணம் கோடி பாதஞ்ச ।
கர்ணேந கர்ணேந ஸஹஸ்ர கோடி
பாஹ்வாரந்தம் ஶிவமய ஶதம் ॥ ௫௯ ॥

59 உருத்திராக்கத்தைச் சிரசிற்றரித்தால் கோடி புண்ணியம், காதுகளிற்றரித்தால் பத்துக்கோடி புண்ணியம், கழுத்திற்றரித்தால் நூறுகோடி புண்ணியம், மார்பிற்றரித்தால் ஆயிரங்கோடி புண்ணியம், தோள்களிற்றரித்தால் பதினாயிரம் கோடி புண்ணியம், மணிக்கட்டிற்றரித்தால் அனந்தகோடி புண்ணியம். இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இதற்கு ஸ்மிருதிப்பிரமாணம் :—

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

இதன் பொருள் :— உருத்திராக்ஷத்தைப் பார்த்தால் லக்ஷம் புண்ணியமென்பதும், தீண்டினமாத்திரத்தால் கோடிபுண்ணியமென்பதும் தரித்தால் நூறு கோடிபுண்ணியமென்பதும் உருத்திராக்ஷத்துடன் ஜபம் செய்தால் நூறுலக்ஷம் கோடி அல்லது ஆயிரம் லக்ஷம் கோடி புண்ணியம் என்பதும் இதில் சந்தேகமில்லையென்பதுமாம்.

ஜபமாலைக்கும் அம்மாலையை ஜபிக்கும்பொழுது விரல்களில் வைத்துத்தள்ளும் முறைக்கும் ஆகமப்பிரமாணம் வருமாறு :—

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

இவற்றின் பொருள் :— மோக்ஷத்தை விரும்புகின்றவன் இருபத்தைந்து உருத்திராக்கமணிகள் அடங்கியமாலைகளுடனும், திடத்தை விரும்புகின்றவன் இருபத்தேழுமணிகள் அடங்கிய மாலைகளுடனும், தனத்தை விரும்புகின்றவன் முப்பது அல்லது பதினைந்து மணிகளடங்கிய மாலைகளுடனும் ஜபம் செய்ய வேண்டும்.

மாலையைக்கட்டை விரலால் தள்ளினுல் மோக்ஷமும், சுட்டு விரலால் தள்ளினுல் சத்துருநாசமும், நடுவிரலால் தள்ளினுல் ஸம்பத்தும், கடைவிரலாலும் அதற்கடுத்த அணிவிரலாலும் தள்ளினுல் திடமும் சித்திக்குமென்பதாம், (59)

(அ-கை) சந்தியாவந்தனமுறைமையைக் கூறுகின்றார்.

[illegible] ||௬௦||

(60) சமயதீக்ஷையுடைய சமயியானவன் தியான பீஜாக்ஷரங்களில்லாமல் பதினெரு சம்மிதாமந்திரங்களாலும் பிராதக்காலமாவது, மத்தியானகாலமாவது ஒருகாலம் அனுஷ்டானஞ்செய்யவேண்டும். மற்றக்காலங்களில் மந்திரமில்லாமல் விபூதியை நீரோடுசேர்த்துத் தரித்தல்வேண்டும். சமயம், விசேடம் என்னும் இரண்டு தீக்ஷையுடைய புத்திரனானவன், தியான பீஜாக்ஷரங்களுடனே நீரில்லாமல் விபூதியை தரிக்கும்போதெல்லாம் சிவமந்திரத்தால் தரிக்கவேண்டும். இவ்வாறு தரிப்பதுடன் காலை மாலைகளாகிய இரண்டு காலங்களிலும் விபூதியைத் தரித்து அநுஷ்டானமும் செய்யவேண்டும். சமயம், விசேடம், நிருவாணம் என்னும் மூன்று தீக்ஷயினையுடைய சாதகனும், அம்மூன்றனோடு அபிஷேகத்தையுமுடைய ஆசிரியரும் காலை, உச்சி, மாலை, பாதியிரவு ஆகிய இந்த நான்கு காலங்களிலும் அநுஷ்டானங்கள் செய்யவேண்டும்' (60

(அ-கை) சைவாநுஷ்டானத்தின் முறையைக் கூறுகின்றார்

[illegible] ||௬௧||

[illegible] ||௬௨||

[illegible] ||௬௩||

(61-62-63.) விசேடசைவரானவர் சிவாகமங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி செய்யவேண்டும் அநுட்டான முறை வருமாறு:—விதிப்படி மல நிவர்த்தி செய்துகொண்டு, நீராடி ஆடைதரித்துக்கொண்டு நீருக்குப்பக்கத்தில் வடக்கு முகமாகவேனும் கிழக்குமுகமாவேனும் இருந்துகொண்டு சுத்தமான நீரினல் மந்திரத்தோடுகூட ஆசமனஞ்செய்தல், விபூதிஸ்னானம், மானதஸ்நானம் செய்தல், அந்தந்தத்தானங்களில் விபூதி தரித்தல், இரக்ஷை தரித்தல் ஆசமனஞ்செய்தல், கரநியாசம் அங்கநியாசம் செய்தல், மகாமுத்திரை செய்தல், பிராணாயாமஞ்செய்தல், சிவதீர்த்தமாக்கல், பிராமீமுதலிய சத்திகளின் தியானம், அமிர்தாபிடேகம், அங்கமார்ச்சனம், அகமர்ஷணம், மீள ஆசமனம், சகளீகரணம், ஜலத்தாற் சுற்றுதல், காயத்திரி ஜபம், அதற்கு உசிதமான சந்தர்ப்பணம், சிவகாயத்திரி யென்னும் பத்தெழுத்து மந்திரஜபத்தின் உபஸ்தானம், சிவமூலதர்ப்பணம், சிவமூலஜபம், ஈசானமுதல் சத்தியோஜாதமீறான மந்திரதர்ப்பணம், ஆசமனம், கரநியாசம், அத்தத்தீர்த்தத்தின் உபசம்ஹாரம், உத்தாபனம், திக்குபந்தனம், சிவ சூரியோபஸ்தானம், சிவமந்திரஜபம், குருவந்தனம், என்பன முறையே செய்தல். இவ்வாறு சைவ சந்தியாநுட்டான முறை சிவாகமங்களில் சொல்லியிருக்கின்றதென்றறிக. (61-62-63)

(அ-கை,) பிராமீ முதலிய நான்கு சந்திகளின் தியானம், தேவதாத்தியானம், என்னும் இவற்றை நான்கு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௬௪||

[illegible] ||௬௫||

[illegible] ||௬௬||

[illegible] ||௬௭||

(64—65—66—67·) பிராதக்காலத்துக்குச் சந்தியா தேவதை பிராமீ என்றும், மத்தியான காலத்துக்குச் சந்தியா தேவதை வைஷ்ணவீ என்றும், சாயங்காலத்துக்குச் சந்தியா தேவதை ரௌத்ரீ என்றும், பாதிராத்திரிக்குச் சந்தியா தேவதை நிஷ்களரூபி என்றும், இவ்வாறு நான்கு தேவதைகளின் பெயரும் அறிந்துகொள்க. அவற்றுள், பிராமி தேவதையின் தி

யானம் வருமாறு:—நான்கு திருமுகமண்டலமும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலது பக்கத்தில் சுருக்கும், அக்ஷமாலையும்: இடதுபக்கத்தில் தண்டு கமண்டலங்களும் தரித்திருப்பதாகவும், சிவந்த திருமேனியை யுடையதாகவும், சிவந்த பரிவட்டமும், சிவந்த திருவாபரணமும், சிவந்த மாலையுந்தரித்திருப்பதாகவும், எட்டுக்கண்களுடையதாகவும், யக்ஞோபவீதம் தரித்துக்கொண்டு ஒருகோடி யோசனை பிரபையுடனே அன்னத்தின் மேரில் பத்மாஸனத்தில் பாலவயதுடன் எழுந்தருளியிருப்பதாகவும், சைவசம்பந்தமான கிரியைகளுக்கு சாக்ஷிபூதையாகவும், தியானம் செய்க. இது பிராதகால சந்தியாத்தியானமாகும் இனி வைஷ்ணவீ தியானம் வருமாறு:— ஒரு திருமுக மண்டலமும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலது பக்கத்தில் சங்கமும் அபயமும் இடது பக்கத்தில் சக்கரமும் தடியும் தரித்திருப்பதாகவும், வெள்ளை நிறமுடையதாகவும், வெள்ளைப் பரிவட்டமும், வெள்ளை முத்துமாலையும், வெள்ளை மாலையும், யக்ஞோபவீதமும் தரித்திருப்பதாகவும், இரு திருநயனமுடையதாகவும், யௌவனவயதுடையதாகவும், கருடன்மீது பத்மாசனமாக இருநூறுகோடி யோசனை பிரபையுடனே எழுந்தருளியிருப்பதாகவும், வநமாலையை ஆபரணமாகவுடையதாகவும். புருவமத்தியத்தில் தியானஞ் செய்க. இது மத்தியானகால சந்தியாத்தியானமாகும். இனி, ரௌத்திரீ தியானம் வருமாறு— ஒரு திருமுகமண்டலமும், மூன்று திருக்கண்களும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலதுபக்கத்தில் அக்ஷமாலையும் திரிசூலமும், இடதுபக்கத்தில் வேலும் அபயமும் தரித்திருப்பதாகவும், சிறிது பசுமையான திருமேனியும், சாயுங்காலத்தில் கருமைவண்ணமும் சிறிது குறைந்த யௌவனமும் உடையதாகவும், பச்சைப்பரிவட்டமும், மரகத ஆபரணங்களும் யக்ஞோபவீதமும், இளம் பிறையும், கமண்டலமும், மகுடமும், தரித்துக்கொண்டு இடபத்தின்மீது பத்மாசனமாக மூன்று கோடி யோசனை பிரபையுடன் எழுந்தருளியிருப்பதாகவும் பிரமரந்திரத்தில் தியானஞ்செய்க. இது சாயங்கால சந்தியாத்தி

யானம். நான்காங்காலத்துச் சந்தியாத்தியானம் வருமாறு:—தாமரைநூலை ஒத்து எங்கும் நிறைந்து பரிபூரணமாயிருக்கின்ற நிஷ்கள காந்தியையுடைய வடிவாகத் தியானம் பண்ணுக. இது நான்காவது நிஷ்கள சந்தியாத் தியானம். இவ்வாறு நான்கு காலத்துச் சந்தியாதேவதைத் தியானம் கண்டு கொள்க. (64—65—66—67.

(அ-கை) சிவகாயத்திரியைத் தியானிக்கும் முறையைப் பற்றிக் கூறுகின்றார்.

த்ர்யக்ஷாம் வ்யாப்த தக்ஷிணேஸ்மின் ஸாக்ஷமாலாம் ஸநாமீஸ்வ
ரீம் வாமே சைகஜதேவிதாம் த்ரிநயநாம் ஹேமாங்கநா
லஜ்ஜாட்யாம் । ஸாயுதீம் வரதாம் தக்ஷிணே வாமகராம்
ஸரோஜம் தக்ஷிணே வாமே ஸாபய வாரிஜாம்
ஸிதவஸ்த்ரோபவீதாம் த்ரிநேத்ராம் ஜடாட்யாம் ॥ ௬௮॥

(68.) சிவகாயத்திரி தியானம் வருமாறு:—

ஒரு திருமுகமண்டலமும், மூன்று திருநயனமும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலது பக்கத்தில் அக்கமாலையும், வரப்பிரதான முத்திரையும். இடதுபக்கத்தில் அபய முத்திரையும், தாமரைப்பூவும் தரித்திருப்பதாகவும், சுந்தரியாகவும், வலதுகாலைக் குறுக்காகமடக்கி இடதுகாலைப் பத்மதளத்தின்மீது நீட்டிச்சுகாசனமாக எழுந்தருளியிருப்பதாகவும், இளம்பிறையோடு கூடின சடையும், வெள்ளைப்பரிவட்டமும், வெள்ளைமாலையும், நல்ல திவ்யாபரணமும், விபூதியும் திரிபுண்டரமும் தரித்திருப்பதாகவும், ஆதித்யமண்டலத்தில் எழுந்தருளியிருப்பதாகவும் தியானஞ்செய்க. (68.)

(அ-கை.) ஆசனவிதி கூறுகின்றார்.

ஸம்ப்ரோக்ஷ்ய தர்ப்பேஷ்வேவாஸநே ச நாமாஸ்த்ராப்யாம்
கூர்ச்சாஸ்த்ரேண விதாய விதிவந்நாஸனம் ஸ்வஸ்தி
காஸனம் வா பத்மாஸனம் வா । ஸம்ஸ்கரோதி ஸ்வ
தேஹஸ்ய ஸமீபே ப்ராயஸ்சித்தம் ஸம்ஸ்கர்த்துஞ் சைவம்
ப்ராணாயாமம் ச ஸம்யக் க்ருத்வா ஜ்ஞாநதோ ஸ்வ
ஷோடஸீ கரோதி । ௬௯

(69.) வெறும் பூமியிலிருந்தால் துக்கமுண்டாகும். கல்லிலிருந்தால் காந்தியுண்டாகும். புல்லிலிருந்தால் கீர்த்தியுண்டாகும். இலையிலிருந்தால் சித்தப்பிரமமுண்டாகும். மரப்பலகையிலிருந்தால் மகாசம்பத்துண்டாகும். மூங்கிற்றடுக்கிலிருந்தால் அஷ்டதரித்திரமுண்டாகும். ஆடையிலிருந்தால் வியாதி நீங்கும். கம்பளத்திலிருந்தால் சௌக்கியமுண்டாகும். புலித்தோலிலிருந்தால் சம்பத்தும், மோக்ஷமுமுண்டாகும். மான் தோலிலிருந்தால் சிவஞானமுண்டாகும். இவ்வாறு பூஜாகால ஜபகாலங்களில் தானிருக்கக்கூடிய ஆசனமும், பலனுங்கண்டு கொள்க. இவ்வாறன்றித் தென்னோலையினாலுண்டானது, பனையோலையினாலுண்டானது, கமுகப்பட்டையினாலுண்டானது, தாழையோலையினாலுண்டானது, ஈச்சையோலையினாலுண்டானது, என்னும் இவைமுதலான ஆசனங்கள் சில ஆகமங்களிலே ஆகாதென்றும், சில ஆகமங்களிலே ஆகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வாக்கியம் வருமாறு:—

[illegible] ।
[illegible] ।௬௯॥

(அ-கை.) ஆத்மார்த்த சிவபூஜையின் முறை கூறத்தொடங்கி நான்கு சுலோகங்களினால் சூரியபூஜை கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ॥௭௦॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(க) [illegible] ।

𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌰 𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌾 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌚𑍍𑌯𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌯𑌥𑌾𑌹𑍋
𑌗𑍃𑌹𑍍𑌯 । ॥எக॥

𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍋𑌤𑍍𑌰𑌂 𑌤𑌰𑍍𑌪𑌣𑌂 𑌭𑍋𑌜𑌨𑌂
𑌪𑍂𑌜𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵 𑌧𑌾𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑌨𑌂 𑌚 𑌉𑌚𑍍𑌯𑌤𑌂 𑌵𑌾𑌰𑍍𑌤𑍍
𑌸𑌾𑌰𑌜𑍍𑌞𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 । 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑍍𑌰𑌤 𑌪𑍍𑌰𑌦𑍀𑌷𑍍𑌯𑌾 𑌚 𑌸𑌰𑍍𑌵
𑌗𑍃𑌹𑍀𑌤 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌦𑍀𑌷𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 𑌪𑌾𑌰𑌿
𑌪𑍂𑌰𑍍𑌣𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯 ॥ ॥எஉ॥

𑌤𑌤𑍍𑌰𑌾𑌵𑌾𑌹𑌨 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌚 𑌬𑌿𑌂
𑌬𑌾𑌂𑌬𑌪𑍂𑌜𑍇 𑌨𑍃𑌪𑌃 𑌪𑌾𑌦𑌨𑌿𑌷𑍇𑌕 𑌗𑍃𑌹𑌕𑌪𑍂𑌪𑌾
𑌪𑍂𑌜𑌨𑌂𑌕𑌾𑌰 𑌪𑍂𑌜𑌾𑌜𑍍𑌞𑍈𑌃 । 𑌹𑍋𑌮𑌾𑌗𑌮𑌾𑌪𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑌿
𑌕𑌾𑌪𑍍𑌤𑌿𑌨𑌤𑍀𑌃 𑌕𑌪𑌾𑌯𑌾𑌵𑌿 𑌹𑍋𑌮𑌜𑍍𑌯𑌾𑌦𑌿 𑌪𑌤𑍍𑌨𑌜𑌸𑍍𑌯
𑌜𑍍𑌞𑌾𑌸𑌮𑌾𑌪𑌨𑍇𑌤𑌿 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌪𑌾𑌷𑌾𑌣𑍍𑌡𑌪𑍂𑌜𑌾
𑌕𑍍𑌰𑌮𑌃 ॥ ॥எ௩॥

(70-71-72-73) சூரியபூஜை, ஆத்மார்த்த அந்தரியாகபூஜை, சிவலிங்கபூஜை, அக்கினிகாரியம், குருபூஜை, சிவபூஜை என்னும் இந்த ஆறும் நித்தியமாகையால் இவற்றுள் சூரியபூஜை முதலாவது செய்யவேண்டுவது. மோகசூரோத்தரம் என்னும் ஆகமத்தில் ஆத்மார்த்த சிவபூஜைக்கு அங்கமாகச் சூரியபூஜை செய்யும்படி சொல்லப்பட்டிருக்கின்றது, அது வருமாறு:—

சிவபூஜை செய்தற்குரிய இடத்தை யடைந்து ஆசனத்திலே கிழக்குமுகமாகஇருந்து, விபூதி தரித்துக்கொண்டு, சகளீகரணஞ்செய்து, பின்னர்ச் சூரிய ஷடங்கமந்திரங்களால் கரநியாசஞ்செய்து, தரிசனார்க்கியங்கொடுத்து, சூரிய மூலமந்திரத்தைப் பத்துமுறை ஜபித்து, பின்னர் அர்க்கியபாத்திர ஜலத்தைப் போக்கி, அந்தப்பாத்திரத்தைச் சுத்தஞ்செய்துவைத்து, சூரிய மூல ஷடங்கமந்திரங்களாலும் மூலமந்திரத்தாலும், சூரியபூஜைக்கு அர்க்கியங்கற்பித்துத் தனக்கு நேராக வேதிகையின்மேல் ரேகாகாரமாக அஷ்டதளபத்மம் கற்பித்து, அஸ்திரமந்திரத்தால் அந்தப்பத்மத்தைப் புரோக்ஷித்துத் தண்டி, பிங்கள, விநாயக சாந்தகுரு என்னுமிவர்களைப் பூஜித்து அந்தத்தாமரையின்

நடுவில் பிரபூத ஆசனம், விமலாதி நாள்குபாதம், வெண்டாமமரை என்னும் இவ்வித ஷடித்தாசனத்தைப் பூஜித்து, கிழக்குமுதலாக எட்டுக்கேசரங்களில் திப்தாதி ஒன்பது சத்திகளேயும் கர்ணிகையினுடைய ஈசானத்தில் சர்வதோமுகி சத்தியையும் பூஜித்து, அதன்பின்னர் அர்க்காசனம் பூஜித்து, கஷோல்கமூர்த்தியைப் பூஜித்து, இரண்டு நேத்திரங்கொடுத்து, போகமோக்ஷத்தைத் தரக்கூடிய சூரியனைத்தியானிக்கவேண்டும். தியானிக்குமுறை வருமாறு:——குங்குமம்போல் சிவந்த காந்தியை யுடைவராயும், இரண்டு கண்களையுடையவராயும் ஒருமுகமுடையவராயும் தாமரைமலரில் இருக்கிறவராயும், வலதுகையில் தாமரைமலரும்அபயமும் இடதுகையில்வரமும் தாமரைமலரும்தரித்துக்கொண்டிருப்பவராயும், இடதுபக்கத்தில் பிரத்யுஷையுடனும் வலதுபக்கத்தில்உஷையுடனும் கூடினவராகவும், இரத்தவஸ்திரத்துடன்மண்டலத்தையுடையவராகவும்,சர்வபூதங்களுக்கும் சாக்ஷிபூதராகவும், தியானஞ்செய்யவேண்டும். பின்னர்ச்சூரியமூலமந்திரத்தால்சூரியனை ஆவாஹணம் பண்ணிநிரோதார்க்கியங்கொடுத்து பிம்ப முத்திரை, பத்மமுத்திரைகளுங்கொடுத்து ஹிருதயாதிமந்திரங்களை நியாஸஞ்செய்து நல்வரவாருக என விண்ணப்பஞ்செய்து, திருவடிவிளக்கி, வாசனைதிரவியங்களாலும் ஆடையாலும் அலங்காரஞ்செய்து, சூரியமூலமந்திரத்தால் புஷ்பாஞ்சலி சமர்ப்பித்துப் பின்னர் போகாங்கமாக,

தேவதேவக்ரியாமேச ஜகத் ப்ரதம மங்கள
அபீஷ்டம் ஸ்தாபிதோ பக்தியா மயா சூர்யஜகத்பதே,

என்று பூஜித்து ஷடங்கங்களுக்குத் தேனு முத்திரை கோவிஷாண முத்திரை திராசினி முத்திரை கொடுத்துப்பின்னர் சோமாதி ஆவாரணபூஜை செய்து நமஸ்காரமுத்திரை கொடுத்துப்பின்னர் நைவேத்தியமுதலானவை ஸமர்ப்பித்துத் தோத்திரஞ் செய்து வேண்டுவதைப் பிரார்த்தித்துக்கொண்டு, பின்னர்ப் பூஜைசெய்த இடத்தில் சூரியன் முதலாக பராங்முகார்க்கியங்கொடுத்துப்பூஜையை முடித்துத்தேஜஸ் சண்டேசுவரனை அவருடைய ஆசனமூர்த்தி மூலங்களாலே பூஜித்துச்சூரிய நிவேதனங்களைச் சமர்ப்பித்து

அந்தப்பூஜாபலனைத்தரும்படி பிரார்த்தித்துத் தேஜஸ் சண்டேசுவரனை உத்தாபனஞ்செய்து சூரிய பூஜார்க்கியங்களையும் உத்தாபனஞ்செய்து இவ்வாறு சூரியபூஜையை ஒவ்வொரு நாளும், ஒவ்வொருகாலம் செய்க. இது சூரியபூஜையின் முறைமையாகும்.

(70-71-72-73)

(அ—கை) ஆத்மார்த்த சிவபூஜையின் முறையைப்பதினாறு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௭௪||

[illegible] ||௭௫||

[illegible] ||௭௬||

[illegible] ||௭௭||

[illegible] ॥௭௮॥

[illegible] ॥௭௯॥

[illegible] ॥௮௦॥

[illegible] ॥௮௧॥

[illegible] ॥௮௨॥

[illegible] ॥௮௩॥

[illegible] ॥௮௪॥

[illegible] ॥௮௫॥

[illegible] ।௮௬।

[illegible] ॥௮௭॥

[illegible]

[illegible] ॥௮௮॥

[illegible] ॥௮௯॥

(74—89) பார்வதிநாயகரான ஸ்ரீமகாதேவருடைய பிரசாதத்தினால் ஆத்மார்த்த சிவபூஜையின் முறை சொல்லப்படுகின்றது. அது வருமாறு :— சூரிய பூஜையானது சிவபூஜைக்கு அங்கமாகையால் சௌராதி சண்டாந்தம் என்று சொல்லப்படுகிறது, ஆகையால், முன்சொன்னவாறு சூரிய பூஜைசெய்து முடித்துப் பின்னர் சூரியபாவனையின் நிவிர்த்தி நிமித்தமாக மீளவும் ஆசமனஞ்செய்து. நியாசஞ்செய்து, விபூதியை நீரோடு சேர்த்தாவது அல்லது சேராமலாவது நெற்றியில் தரித்துக்கொண்டு வடக்கு முகமாக விருந்து பிரணவத்தால் சாமான்யார்க்கியங் கற்பித்து. எழுந்திருந்து அர்க்கியத்தை இடதுகையில் வைத்துக்கொண்டு, துவாரத்துக்கு வெளியே வந்து நின்று, கிழக்குத்துவாரம், தெற்குத்துவாரம், மேற்குத்துவாரங்களில் சாமான்யார்க்கியத்தால் அஸ்திரமந்திரத்தோடு புரோக்ஷித்துத்துவார பூஜைசெய்து,விநாயகர், ஸரஸ்வதி மகாலக்ஷ்மீ, நந்தி, கங்கை, மகாகாளர், யமுனை, இவர்களைப்பூசித்து பூமி, ஆகாயம், சுவர்க்கம் என்னும் மூன்றினுலும் உண்டாகும விக்கினங்களைப்போக்கி, உள்ளே புகுந்து, திரும்பி நின்று, கீழ்ப்படியில் அஸ்திரதுவாரபாலரைப் பூசித்து, கபாடங்களில் வலமிடமாக மானதத்தியானத்துடனே விமலாய நம: சுபாகவே நம: என்று உச்சரித்துப் பூஜாமண்டபத்தில் ரிஷபத்தையும், நிருதிதிக்கில் வாஸ்து பிரமாவையும் பூஜிதநுச்சிவ பூஜாஸ்தானத்தில் மான்தோல் முதலான ஆசனத்தில் வடக்கு முகமாக இருந்து அவ்விடத்தில் சாமான்யார்க்கியத்தை வைத்து, கிழக்கே வந்து கிழக்குமுகமாக இருந்து சுதேசான சகிதமாக

நந்திகேசுவரரைப் பூஜித்து, அஸ்திரப்பிராகாரம், கவசாவகுண்டனம் பரிகாத்தியானஞ்செய்து, பூதசுத்தி பண்ணவேண்டும். பின்னர், அந்தரியாகஞ்செய்து ஸ்தானசுத்திசெய்து, விசேஷார்க்யங்கற்பித்து, ஷடங்கங்களால் பாத்யமும் சம்மிதா மந்திரங்களால் ஆசமனம், சிரோதார்க்கியம் என்னும் இவைகளையும் கற்பித்து பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தமும் கற்பித்துத்திரவிய சுத்திசெய்து தன்னுடைய ஆசனத்திலே சிவாசனமும், தன்னுடைய தேகத்திலே சிவமூர்த்தியும் பூஜித்துச்சந்தனத்தால் நெற்றியில் திலகமிட்டு, சிரசிலே புஷ்பத்தை வைத்து சிவோஹம் என்று பாவனைசெய்து ஆத்மசுத்திசெய்து, பின்னர் மந்திரசுத்தி செய்யவேண்டும்.

மந்திரசுத்தி வருமாறு :- மூலமந்திரத்தைத் துவாதசாந்தமளவாகவும், பஞ்சப்பிரம மந்திரங்களைப் பிரமரந்திரமளவாகவும் ஷடங்கமந்திரங்களை விந்துஸ்தானமளவாகவும் மூன்றுமாத்திரை இரண்டுமாத்திரை ஒருமாத்திரைப்பிரகாரம் முறையே ப்லுதம், தீர்க்கம், ஹ்ரஸ்வமாக உச்சரித்தல் மந்திரசுத்தியாகும். பின்னர், இருதயத்தில் வைத்து அஞ்சலிசெய்யும் கையை விடுத்து * சலப்ராசாதமாகிய பெட்டகத்தின் முன்பக்கத்தில் ஸ்ரீமருத்திரரைப் பூஜித்து அநுக்ஞை செய்து பெட்டகக்கோயிலைத் திறந்து பரிவாரதேவதைகளை அந்தந்த ஸ்தானங்களிலே எழுந்தருளச்செய்து பூஜித்து, ஸ்நானவேதிகையில் பரிவட்டம் அமைத்து, அதன்மேல் ஷடுத்தாசனம் பூஜித்துப் பெட்டகக் கோவிலினின்றும் சிவலிங்கப்பெருமானை இரண்டுகைகளாலும் எழுந்தருளச்செய்து, தரித்திருந்த பரிவட்டத்துடனே ஸ்நானவேதிகையிலெழுந்தருளச்செய்து, பரிவட்டத்தை முற்றும் நீக்கிச் சிவகாயத்திரிமந்திரத்தால் பழைய பூஜையாக ஒரு புஷ்பஞ்சாத்தி, ஐந்து திருமுடிகளிலும் போகியானவன் மூலமந்திரத்தால் சாமான்யார்க்கியத்தை ஈசான முதலாகக் கொடுத்து, இந்த அவசரத்தில் தயிரன்னமாதல் தின்னக்கூடிய பொருளாதல், கறந்த உஷ்ணத்தோடு கூடிய பச்சைப்பாலாதல், தாம்பூலமாதல் நைவேத்யம் செய்து, அஸ்திர மந்திரத்தால் மணியடித்து, சிகாமந்திரத்தினால் தூபமும், நேத்திர மந்திரத்தால் தீபமும் சமர்ப்பித்து, ஐந்து திருமுடிகளிலும் கட்டை விரல் முதலாக சத்தியோஜாத முதலான மந்திரங்களை

* சலப்பிராசாதம்— அசையும் மேடை.

நியாசித்து, கட்டைவிரல் அணிவிரல்களின் நுனியிலுல் ஒரு புஷ்பம் எடுத்து அங்குஷ்ட அநாமிகா மந்திரங்களினுலும், இருதய மந்திரத்தாலும் நிருமாலியத்தைக் கழித்து, மேற்கூறிய புஷ்பத்தை இருதய மந்திரத்தினுல் திருமுடியின்மீது சாத்திச் சண்டேசுவர நிமித்தமாக ஒரு பாத்திரத்தில் ஈசான திக்கில் இருதயமந்திரத்தால் நிருமாலிய புஷ்பங்களை வைத்துக் கையைச் சுத்தஞ்செய்து, அஸ்திர மந்திரத்தால் சிவ லிங்கத்தையும், பாசுபதாஸ்திர மந்திரத்தால் ஆவுடையாளையும் அபிஷேகஞ்செய்து, பின்னர் சாமான்யார்க்கியத்தால் அபிஷேகஞ்செய்து, அதன் பின்னர்க் கெண்டியிலுள்ள ஜலத்தால் இருதய மந்திரத்தோடு அபிஷேகஞ் செய்க. இது லிங்க சுத்தியாம்.

அதன்பின்னர்க் கவசமந்திரத்தால் குச்சுப்பில்லுஞ் சாத்தி மீளவும் ஸ்நாக வேதிகையிலெழுந்தருளச் செய்து, இருதய மந்திரத்தால் சுத்தஜல அபிஷேகஞ்செய்து, மீளவும் ஷடுத்தாசனம் பூசித்து, சிவாசனமும் சிவமூர்த்தியையும் பூஜித்து, மூல மந்திரத்தால் ஆவாஹனம் செய்து ஸ்தாபனம், ஸந்நிதானம், ஸந்நிரோதனம் செய்து, நேத்திர மந்திரம் நீங்கிய இருதய முதலிய ஐந்து மந்திரங்களாலும் அர்ச்சித்து, தேனுமுத்திரை கொடுத்து அஷ்ட புஷ்பார்ச்சனையுடன் தூபதீபம் சமர்ப்பித்துப் பின்னர் இருதய மந்திரத்தால் அபிஷேகஞ்செய்து, கவச மந்திரத்தால் வஸ்திரங்கொண்டு ஈரத்தை மாற்றி ஒரு புஷ்பஞ்சாத்தி வாசனை தைலமாகிய எண்ணெய்க்காப்பு சத்தியோஜாத மந்திரத்தாற் சமர்ப்பித்து, அந்த மந்திரத்தால் மாக்காப்புச் செய்து, இருதய மந்திரத்தால் சுத்தஜல அபிஷேகம் செய்து, சத்தியோஜாத மந்திரத்தால் நெல்லிக்காப்பும், வாமதேவ மந்திரத்தால் மஞ்சட்காப்பும் அபிஷேகஞ்செய்து, பின்னர் இருதய மந்திரத்தால் சுத்தஜல அபிஷேகஞ்செய்து, மூலமந்திரத்தால் பஞ்சகவ்யாபிஷேகமும் பஞ்சப்பிரம மந்திரங்களால் தனித்தனியே பஞ்சாமிர்தம், பால், தயிர் அபிஷேகமும், இருதய மந்திரத்தால் தேங்காய்த்திருவல், வாழைப்பழம், மாம்பழ அபிஷேகமும் செய்து, பின்னர் இருதய மந்திரத்தால் ஜல அபிஷேகஞ் செய்க. அதன் பின்னர் நாரத்தம் பழச்சார், எலுமிச்சம்பழச்சார், தம்பரத்தம்பழச்சார், கொளுஞ்

சிப்பழச்சார் என்னும் இவைகளை அபிஷேகஞ்செய்து, சுத்தஜல அபிஷேகஞ் செய்க. அதன் பின்னர் ஆத்மார்த்த மூர்த்திக்கு அன்னாபிஷேகம் செய்யலாமென்று மகுடாகம வசனமிருத்தலால் அன்னாபிஷேகஞ்செய்து, தூபதீப நைவேத்தியம் சமர்ப்பித்து, சுத்தஜல அபிஷேகஞ்செய்க. பின்னர் சந்தனக்குழம்பு, குங்குமக்குழம்பு சாத்தி தூபதீப நைவேத்தியம் சமர்ப்பித்து மூலமந்திரம் பஞ்சப்பிரம மந்திரம், ஷடங்க மந்திரம், பதமந்திரங்களால் சததாரையால் சுத்த ஜல அபிஷேகஞ்செய்து. பின்னர் விசேஷார்க்கிய ஜலத்தால் அபிஷேகஞ்செய்து, சுத்தமான வெள்ளை வஸ்திரங்கொண்டு கவச மந்திரத்தால் திருவொற்றாடை சாத்தித் திருமுடியில் ஒரு புஷ்பஞ்சாத்தி பத்திர பீடத்தின்மேல் வடக்கே கோமுகியாக எழுந்தருளச் செய்க. பின்னர் வாயு கோணத்தில் தெற்கு முகமாக விநாயகரையும், அவருக்குக் கிழக்காக மஹா லட்சுமியையும், ஈசான கோணமுதல் மேற்கு முகமாக சத்தகுரவர்களையும் பூஜித்து சக்தியாதிசக்தி பரியந்தம் சிவாசனத்தைப் பூஜிக்குமுறையில் மகாதேவருடைய கீழ்ப்பீடத்திற்குக் கீழாகக் கூர்மாசனமும், அதன்மேல் ஆதாரசக்தியையும் அதன்மேல் அனந்தாசனமும், அனந்தரையும் பூஜித்து பத்மபீடத்தின் கால்களில் அக்கினி திக்கு முதலாக தர்ம ஞான வைராக்கிய ஐசுவரியங்களைப் பூஜித்துக் கிழக்கு முதலாக நான்கு திக்கிலும் அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியங்களைப் பூஜித்துப் பீடத்தின்கீழ் நிருதிதிக்கில் அதச்சதனமும் பீடத்தின்மேல் ஊர்த்வச்சதனமும் அர்ச்சித்துப்பீடத்திலகந்தம், பீஜம், அங்குரம், நாளம், முகுளம், கண்டகங்கள், உபக்கிரந்தி, மஹாக்கிரந்தி, உபதளங்கள் கேசரங்கள், கர்ணிகை, பீஜம் என்னும் இவைகளை அர்ச்சித்து ஓம் ஹாம் பத்மாயநம என்று பத்மத்தையர்ச்சித்துப் பத்மமுத்திரை கொடுத்து, ஸ்திராசனம் பூஜித்துப் பின்னர்க் கேசரஙகளிலே கிழக்கு முதலாக வாமை சியேஷ்டை, ரௌத்ரீ, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதினி, ஸர்வபூததமநி, என்னும் எட்டுச்சக்திகளையும், கர்ணி

கையின் ஈசானத்தில் மனோன்மணி சத்தியையும் பூஜித்து தளத்தின் நுனிவட்டத்தில் சூரிய மண்டலத்தையும், அதற்கதிபதியான பிரமாவையும் பூஜித்து, பின்பு கேசரநுனியின் வட்டத்தில் சோமமண்டலத்தையும் அதற்கதிபதியான விஷ்ணுவையும் பூஜித்து, கர்ணிகை நுனியின் வட்டத்தில் அக்கினி மண்டலத்தையும் அதற்கதிபதியான ருத்திரனையும் பூஜித்து, கர்ணிகையின் மத்தியில் சந்திரமண்டலத்தையும் அதற்கதிபதியான ஈசுவரனை விஷ்ணுவையும் பூஜித்து, அதன்மேல் சிவாசனத்தில் ஆதார சக்தி முதல் அனந்தாசனம் வரை அனந்தாசனத்தையும், அதன்மேல் ஊர்த்வச்சதனம்வரை சிம்மாசனத்தையும், அதன்மேல் யோகாசனத்தையும், கர்ணிகைவரை பத்மாசனத்தையும், கர்ணிகையில் விமலாசனத்தையும் இவ்வாறு அனந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்னும் பஞ்சாசனங்களையும், சிவாசன அந்தர்க்கதமாகத் தியானித்துப் பூஜித்துச் சிவாசனத்தின்மீது தண்டாகாரமான ஜோதிமய சிவ மூர்த்தியை சிருஷ்டிக்கிரமமாக தண்டபங்கிநியாசம், முண்டபங்கிநியாசம், ஸ்ரீகண்டநியாசம், ஆகமநியாசம், முப்பத்தெட்டுக் கலாநியாசம், மாதிருகா நியாசம் செய்து பூஜிக்கவும்.

பின்னர், வித்தியாதேகத்தைப் பூஜிக்குமுறை வருமாறு:— ஸ்ரீமத் காமிகம், வாதுளமுதலிய சிவாகமங்களில் உள்ள விஷயங்களைச் சுருக்கி அவற்றின் சாரமாகச் சகுணத்தியானமாகிய சதாசிவத்தியானம் கூறப்படுகின்றது. எவ்வாறெனில் வெளுப்பு வர்ணமான திருமேனியாகவும், பத்மாஸனத்தில் எழுந்தருளியிருப்பதாகவும், ஐந்து முகமும் பத்துப்புயமும், ஒவ்வொரு முகத்திலும் மூன்றுகண்களும், இரத்தவர்ணமான திருக்கரங்களும், திருவடிகளும், வலப்பக்கத்திற் சூலமும், கோடரியும், வாளும், குலிசமும், அபயமுத்திரையும், இடப்பக்கத்தில் அக்கினியும், பாசமும், கண்டையும், சர்ப்பமும், அங்குசமும் தரித்துக்கொண்டெழுந்தருளியிருப்பதாகவும், வெண்மை, பொன்மை, கருமை, செம்மையினையுடைய ஈசானமுதலிய ஐந்துமுக சதாசிவருடைய திருமேனியைத் தியானஞ்செய்து புஷ்பாஞ்சலியினால் வித்தியாதேகத்தைப் பூஜிக்க வேண்டுமென்க.

பின்னர், ஈசான முதலிய ஐந்து முகங்களுக்கும் மூன்று நேத்திரங்கற்பித்து, மூலமந்திரத்தால் சிவனை ஆவாஹனஞ்செய்து, ஆவாஹனார்க்கியங் கொடுத்து. பிராணப் பிரதிஷ்டாமந்திரத்தை ஒரு முறை உச்சரித்து, பின்னர் ஸ்தாபன, சந்நிதான, நிரோதனஞ்செய்து, நிரோதார்க்கியங்கொடுத்து, விபூதி தாரணஞ்செய்து, பட் என்னும் பதத்தை இறுதியிலுடைய அஸ்திர மந்திரத்தால் காலகண்டிகை முத்திரையும், வாமதேவமந்திரத்தால் லிங்கமுத்திரையும், இருதய மந்திரத்தால் நமஸ்கார முத்திரையுங்கொடுத்து, கவசமந்திரத்தால் அவகுண்டனஞ்செய்து, ஈசான முதலியமந்திரங்களை நியாசஞ்செய்து, ஷடங்கமந்திரங்களையும் நியாசஞ்செய்து மூலமந்திரத்தால் ஏகத்வஞ்செய்து, தேனுமுத்திரை மகா முத்திரையுங்கொடுத்து, மூலமந்திரத்தால் ஒரு புஷ்பஞ்சாத்தி, ஈசான முதலிய சம்மிதாமந்திரங்களின் குணங்களைத்தியானித்து, அங்காங்கிபாவகஞ்செய்து, இருதயத்தில் அஞ்சலியுடன் நல்வரவா வருக என விஞ்ஞாபித்து, குழந்தாய்? நல்வரவென்று சுவாமி திருவாய்மலர்ந்தருளினதாகப் பாவித்துப்பின்னர்,

ஸ்வாமிந் ஸர்வஜகந்நாத யாவத்பூஜாவஸாநகம் ।
தாவத்த்வம் ப்ரீதிபாவேந லிங்கேஸ்மிந் ஸந்நிதிம் குரு ॥

(இதன் பொருள்) எல்லாவுலகத்திற்கும் நாதனான ஸ்வாமின்! பூஜைமுடியும் வரை கிருபையோடு இந்தலிங்கத்தில் நீர் சாந்நித்தியஞ்செய்யவேண்டும் என்பதாம். இவ்வாறு விஞ்ஞாபித்து, ஸ்வாகதார்க்கியங்கொடுத்து, இந்தச்சமயத்தில் பஞ்சமுக முத்திரையும், பாத்தியாசமனார்க்கியமுங் கொடுத்து, புஷ்பம், அருகு, அக்ஷதைகளைச் சாத்தித் தூபதீபஞ் சமர்ப்பித்துப் பாத்யாதி கொடுத்துச் சுத்தாபிஷேகம் செய்யப்பெற்ற இடதுகையிலுள்ள அநாமிகை விரலால் லிங்கபீடத்தைப் பரிசித்துக்கொண்டு வலக்கையால் ஒரு புஷ்பஞ்சாத்தி முன் சாத்தியிருந்த புஷ்பத்தை நீக்கிக் கையைச் சுத்தஞ்செய்து, பின்னர் கெண்டி ஜலத்தால் திருவடியை விளக்கி விசேஷார்க்கிய ஜலபிந்துவை ஒரு புஷ்பத்தால் திருமுடியில் நனைத்து, சுத்த வஸ்திரத்தால் துடைத்து, மந்திரமில்லாமல் ஒரு புஷ்பமும், மந்திரத்தோடு கூடிய புஷ்பமும் சாத்திப் பின்னர் இடதுகையை விட்டுச் சிறிது விபூதி தாரணஞ்செய்து, மஹாபிஷேகத்தின் முடிவில் அதிகப் பசியினால் மூவுலகத்

தையும் உண்ணுதற்குச் சமர்த்தராயிருக்கின்றாராதலின், அக்காலத்தில் நைவேத்தியஞ் சமர்ப்பிக்கவேண்டும். இல்லையாயின், பூஜிப்பவனுடைய ஆயுள், வீரியம், பலம் என்னுமிவைகளை உட்கொண்டுவிடுவர் என்று சொல்லப்படுவதால் மந்திரத்தோடு கூடிய அன்னத்தை விரைவில் நிவேதித்து, ஆசமனார்க்கியம பாத்தியார்க்கியங்கொடுத்து, வாமதேவ மந்திரத்தால் திவ்யமான இரண்டு வஸ்திரமும், இருதயமந்திரத்தால் சுவர்ண உபவீதமும் தரித்து, கஸ்தூரி முதலான வாசனாதிரவியங்களைப் பூசி பனிநீர் பச்சைக் கற்பூரங்கலந்த சந்தனஞ் சாத்தி, கோளக முதலிய திவ்யாபரணமும், வாசனையுள்ள புஷ்பங்களுஞ் சாத்தி, மூன்று தத்துவங்களால் புஷ்பாஞ்சலி சாத்தி, இண்டை மாலை முதலியவற்றாலலங்கரித்து, இவ்வாறு சதாசிவமூர்த்தியை நன்றாகப் பாவனைசெய்து, பின்னர் அஸ்திரமந்திரத்தால் மணியடித்து, சிகாமந்திரத்தால் தூபமும், நேத்திரமந்திரத்தால் தீபமும், திருமுடியிலிருந்து திருவடிவரையும், திருவடியிலிருந்து திருமுடிவரையும் மாற்றிச் சமர்ப்பித்துப் பின்னர் ஆசமனார்க்கியங்கொடுத்து, மனோரத முத்திரைகொடுத்து மூலமந்திரத்தால் ஒரு புஷ்பஞ்சாத்தி லயாங்கம் பூஜிக்கவும். பின்னர், போகாங்கம் பூஜிக்கு முறை வருமாறு:—

பத்மத்தின் ஈசானதளத்தில் ஈசானத்தையும், கிழக்குத்தளத்தில் தற்புருஷத்தையும், தெற்குத்தளத்தில் அகோரத்தையும் வடக்குத்தளத்தில் வாமதேவத்தையும், மேற்குத்தளத்தில் சத்தியோஜாதத்தையும், மீளவும் ஈசானதளத்தில் நேத்திரத்தையும், அக்கினிதளத்தில் இருதயத்தையும், மீளவும் ஈசானதளத்தில் சிரசையும், நிருதிதளத்தில் சிகையையும், வாயுதளத்தில் கவசத்தையும், கிழக்குமுதல் நான்கு தளத்தில் அஸ்திரத்தையும் அந்தந்த மந்திரங்களினால் தியானித்து, இவ்வாறு அங்கம், பிரத்தியங்கம், சாங்கம், உபாங்கமாகச் சிவனைப் பூஜித்துப் பின்னர் ஈசானாதி பஞ்சப்பிரமங்களுக்குத் தேனுமுத்திரை, பத்மமுத்திரை, திரிசூலமுத்திரை, மகரமுத்திரை, சிருக் முத்திரையும், அங்கங்களுக்கு நமஸ்காரமுத்திரையும் இருதயமந்திரத்தாற் கொடுத்து, பராமீகரணஞ்செய்து வௌஷட் என்னும் பதத்தை இறுதியிலுடைய மூலமந்திரத்தால் ஒருமுறை புஷ்பாஞ்சலியுடன் மகாமுத்திரை கொடுத்து, பாவனைசெய்து, அங்காங்கி பாவனையுடன் நன்றாகத் தியானஞ்செய்து இந்தச் சமயத்தில் மகாநைவேத்யம்

சமர்ப்பிக்க. அல்லது, பஞ்சாவரண பூஜைசெய்து மகாநைவேத்யம் சமர்ப்பிக்க.

பஞ்சாவரணபூஜை வருமாறு :—முதலாவது ஆவரணத்தில் பஞ்சப்ரம்ம ஷடங்கங்களையும், இரண்டாவது ஆவரணத்தில் அநந்தர்முதலிய எட்டு வித்தியேசுவரர்களையும், மூன்றாவது ஆவரணத்தில் கிழக்கு முதலாக நந்தி முதலிய எட்டுக் கணநாதர்களையும், நான்காவது ஆவரணத்தில் கிழக்கு முதலாக இந்திரன் முதலிய பத்து லோகபாலர்களையும், ஐந்தாவது ஆவரணத்தில் கிழக்கு முதலாக வச்சிரம் முதலிய ஆயுதங்களையும் தத்தம் மந்திரங்களிற் பூஜித்து, அனந்தாதிகளுக்கும், நந்தியாதிகளுக்கும் காலகண்டிகா முத்திரையும், இந்திராதிகளுக்கும் வச்சிராதிகளுக்கும் திரிசூல முத்திரையும் இருதயமந்திரத்தாற்கொடுத்துப் பின்னர், மூலமந்திரத்தாற் சிவனைப் பூஜித்துத் தூபதீபம் சமர்ப்பித்து மகாநைவேத்யம் சமர்ப்பிக்க.

மகாநைவேத்யமாக்குமுறை வருமாறு :— வெள்ளை அரிசியல்லாத ஏனைய அரிசியால் அன்னஞ்செய்தல் ஒருவித பலன். வெள்ளை அரிசியால் அன்னஞ்செய்யில் அதனினும் பதின்மடங்கு பலன். தினை அரிசியில் அன்னஞ்செய்யில் அதனினும் நூறுமடங்கு பலன். குளச்செந்நெலரிசியில் அன்னஞ்செய்யில் அதனினும் ஆயிரமடங்கு பலன். கோதுமையரிசியில் அன்னஞ்செய்யில் அநந்தபலன. இனி அரிசியின் அளவு வருமாறு :— இருநாழி முதல் எட்டு மரக்கால்வரை ஆத்மார்த்த பூஜைக்கு ஆகும். அவற்றுள், குறுணி உத்தமம். அறுநாழி மத்திமம். நான்கு நாழி அதமம். இருநாழி அதமாதமம். இவ்வாறு காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறன்றி, நான்குநாழி உத்தமமென்றும், இருநாழி மத்திமமென்றும் காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த முறைமையை யறிந்து ஷட்ரசத்தோடு கூடியதாக நைவேத்யத்தை மூலமந்திரத்தாற் சமர்ப்பித்து, ஆசமனம், அர்க்கியம், பாத்யம் கொடுத்துப் பின்னர், கை துடைத்தல் செய்து முகவாசங்கொடுத்துக்கற்பூரசகிதமான தாம்பூலம் சமர்ப்பித்து ஆசமனார்க்கியங்கொடுத்துப் பின்னர்க் குங்கிலிய தூபம், ஒருகுவ

ளை, ஏழுடுக்கு முதலான புஷ்பதீபம், நாகதீபம், ரிஷபதீபம், புருஷமிருகதீபம், சிம்மதீபம், சூலதீபம், கூர்மதீபம், பத்மதீபம், சக்கரதீபம், கற்பகவிருக்ஷதீபம், லதாதீபம், மகரதீபம், சூலதீபம், நக்ஷத்திரதீபம், ரததீபம் என்னும் இந்தப்பதினாறுதீபமும் திருமுடிமுதல் திருவடிவரையும், திருவடிமுதல் திருமுடிவரையும் மாறிச்சமர்ப்பித்து இடையிடையே ஆசமனார்க்கியங்கொடுத்துப் பின்னர் மூலமந்திரத்தால் புஷ்பசகிதமாக தூர்வாக்ஷதையாகிய நித்திய பவித்திரஞ்சாத்திப்பின்னர், மனவாக்குக் காயங்களாலுண்டான பாவநிவிர்த்தியின் பொருட்டுச் சிவதத்துவம் ஆதியாக மூன்றுமுறை புஷ்பாஞ்சலிசெய்து, பின்னர், நீராஞ்சனஞ்செய்து, அதன்பின்னர் இந்துகுவளைமுதலான கர்ப்பூராராத்தியை நான்கு சுத்திசெய்தர்ச்சித்துத் திக்குபந்தனம் முதலாகத்தூபதீபமுடிவாகப் பூஜைசெய்து இரண்டுகைகளாலும் இருதயமந்திரத்தால் எடுத்துச்சுத்திசெய்து திருவடிமுதல் திருமுடிவரையும் திருமுடிமுதல் திருவடிவரையும் மூன்றுமுறை மாற்றிச்சமர்ப்பித்து ஆசமனார்க்கியங்கொடுத்துப்பின்பு நிம்ப பத்திரம், தூர்வை, கார்பாசபீஜம் அஃதாவது பருத்திக்கொட்டை, புஷ்பம் இவைகளை ஒருபாத்திரத்தில் வைத்துக்கவசமந்திரத்தால் மூன்றுமுறை சுத்திசெய்து பின்னர் மிருகிமுத்திரையால் விபூதியை மூன்றுமுறை சுத்தித்தட்டி அக்கினியிலிட்டுச் சிவபெருமானுக்குத்தரிக்கவேண்டும். பின்னர்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இதன் பொருள். வெண்மையாயும் வாசனையுள்ளதாயும் மணலில்லாததாயும் இருக்கிற பஸ்மத்தை ஈசானாதி ஐந்துமுகங்களிலும சாத்தவும். புருவங்களின் மத்தியில் ரக்ஷைசெய்வதினால் பிரயோஜனமில்லாமையால் நெற்றியில் ரக்ஷையைச்செய்ய வேண்டும்.

என்னுங் காமிகாகமவசனப்படி சிவபெருமானுக்கு மூலமந்திரத்தால் அந்தந்தத் தானங்களிலே விபூதிதரித்து கரசுத்தி நிமித்தமாக இடைநடுவே அஸ்திரமந்திரத்தை உச்சரித்துப் பின்னர் கண்ணாடி, குடை, சாமரம், விசிறி, பனைவிசிறி, ஆலவட்டம் இவைகளை ஈசானமுதலியமந்திரங்களால் சமர்ப்பித்துப் பின்னர் அநந்தர் முதலானவர்களால் தோத்திரஞ் செய்யப்படுபவராகச் சிவபெருமானைத்தியானஞ்செய்து மூலமந்திரத்தால் புஷ்பாஞ்சலி மூன்று சாத்திப் பஞ்சமுகி முத்திரை, தேனுமுத்திரை, மஹாமுத்திரைகளைக் கொடுத்துச் சிவபெருமானைப் பிரார்த்தித்து ஜபித்து நிவேதிக்கவேண்டும். ஜபமாலையை நிரீக்ஷணமுதலாக நான்கு சுத்திகள்செய்து, இருதயமந்திரத்தாலர்ச்சித்து வலதுகையாலெடுத்து, இடதுகையில் புஷ்பம்வைத்து, மறைக்கும் ஆடையால்மூடி, குருமுகமாகக்கேட்டமூலமந்திரத்தால் ஜபித்துப் பின்னர் அந்தப்புஷ்பத்தைவலதுகையில் வாங்கி அர்க்கிய ஜலத்தைவார்த்து, ஓம் ஹாம்.

𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌤𑌿𑌗𑍁𑌹𑍍𑌯𑌗𑍋𑌪𑍍𑌤𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌗𑍃𑌹𑌾𑌣𑌾𑌸𑍍𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑌂
𑌜𑌪𑌂 । 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑍁 𑌮𑍇 𑌦𑍇𑌵 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 । ஓம்
𑌹𑌾𑌂 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍁𑌰𑍍𑌮𑌹𑍇 𑌦𑍇𑌵 𑌸𑌦𑌾 𑌸𑍁𑌕𑍃𑌤𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 ।
𑌤𑌨𑍍𑌮𑍇 𑌶𑌿𑌵𑌪𑌦𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌹𑍂𑌂𑌕𑍍𑌷𑌃 𑌕𑍍𑌷𑌪𑌯 𑌶𑌙𑍍𑌕𑌰 ॥ ஓம் ஹாம்.
𑌶𑌿𑌵𑍋 𑌦𑌾𑌤𑌾 𑌶𑌿𑌵𑍋 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌶𑌿𑌵𑍋 𑌜𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌯𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍋𑌹𑌮𑍇𑌵 𑌹𑌿 ॥

(இந்த சுலோகங்களின் பொருள்வருமாறு:—) குஹ்யம் அதிகுஹ்யம் முதலிய மந்திரதத்துவங்களனைத்தையுங் காப்பவர் நீரே. ஆகையால் எல்லாவற்றையும் காப்பதால் இந்த இடத்தில் எங்களாற்செய்யப்பட்ட ஜபத்தையும் ஏற்றருளவேண்டும். எந்த ஜபமானது உம்மிடத்தில இருக்கின்றதோ அதுகொண்டு உம்முடைய பிரசாதத்தால் எனக்குச் சித்தி நிச்சயமாயுண்டாகும். ஆதலால் என்னிடத்தில் கருணையால் அந்த ஜபத்தை ஏற்றுக்கொள்ளும். உம்முடைய திருவடியின்கீழிருக்கும் என்

ளூற்செய்யப்பட்ட புண்ணிய பாவ ரூபமான கன்மங்களை நீர் ஏற்றுக்கொண்டு அவை என்னைப் பந்திக்காதபடி அவற்றை நாசஞ்செய்யவேண்டும். சிவனே எல்லாவற்றையுந் தருகிறவன்; சிவனே எல்லாவற்றையும் அநுபவிக்கிறவன்; எல்லாவுலகமும் சிவனே; எல்லாவுலகத்திலும் பூசைகொள்பவரும் சிவனே; அந்தகையசிவனே சிவனே நான் என்பதாம்.

இந்தப்பிரகாரம் தோத்திரஞ்செய்து, முழங்காலைப் பூமியில் வைத்துக்கொண்டு மூலமந்திரத்தால் உற்பவமுத்திரை செய்து, சிவனுடைய திருவடி மூலத்தில் இந்தத் தோத்திரங்களைச் சமர்ப்பித்துப் பின்னர் பிரமாங்கங்களுக்குத் தசாம்சஞ் செபித்து நிவேதித்துப் பின்னர் காமியமந்திரபூஜை செய்கிறேனென்று சிவபெருமானுக்கு விஞ்ஞாபித்து, அநுக்ஞைபெற்று அவர் எழுந்தருளியிருக்கிற பத்மத்தினுடைய தெற்குத்தளத்திற்குக் கீழாகச் சமீபத்தில் இடதுபக்கத்தில் கௌரியாதி ஸ்திரீரூப மந்திரசத்திகளையும் அர்ச்சித்துத்தனக்குத் தெற்குத்திக்கில் மிருத்யுஞ்சயர் முதலிய புருஷவடிவமான மகாதேவர்களையும், நடுச்சந்நிதியில் அர்த்தநாரீசுவர மகாதேவனையும் அர்ச்சித்துத்தனக்கு அபீஷ்டமான சாத்தியமந்திரங்களையும் சக்திக்குத் தகுந்தவாறு ஜபித்துச் சிவபெருமானின்பொருட்டு நிவேதித்துப் பின்னர்த் தேவகுருவுக்கு மேற்குப்பக்கத்தில் யோகபீடம் வித்யாபீடம் பூஜித்து இருதயத்தில் அஞ்சலிசெய்துகொண்டு, வித்யாபீடத்திலிருக்கிற சிவனை நமஸ்கரித்துப் பின்னர் தேவகுருவுக்கு அக்கினிதிக்கில் ஷடுத்தாசனம் பூஜித்து அதிலே தன் குருவைப்பூஜித்து, "எப்பொழுதும் பக்குவர்களாயிருக்கிறவர்களுக்கு ஞானரூபமாக அநுக்கிரகஞ் செய்பவராயும், சத்தியுடன் கூடினவராயுமிருக்கிற ஆசிரியரின் திருவடிகளுக்கு நமஸ்காரம்" என்று தோத்திரஞ்செய்து நமஸ்கரித்து மூன்று புஷ்பாஞ்சலிகளால் சிவனை அர்ச்சித்து சிவாகமமுதலானவற்றில் தனக்குத்தெரிந்த தோத்திரங்களால் சிவனைத் தோத்திரஞ்செய்து, பின்னர் எழுந்திருந்து மூன்று முறை பிரதக்ஷிணஞ்செய்து, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழு

ந்திருந்து தனக்கு வேண்டியவற்றைப் பிரார்த்தித்துக் கொண்டு பின்னர் அக்கினிகாரியஞ்செய்யச் சக்தியுடையவனாகச் சிவனைப் பிரார்த்தித்து.

𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 [illegible] 𑌶𑍍𑌰𑍀 [illegible] 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿 [illegible] 𑌨𑌃 ।
𑌅𑌶𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 [illegible] 𑌅𑌷𑍍𑌟𑌪𑍁𑌷𑍍𑌪 [illegible] ॥

(இதன்பொருள்) ஈசா! அக்கினிபகவான் எவ்விதமாகத் திருப்தியடைவாரோ அவ்விதமாகத் தேவரீர் அநுக்கிரகஞ்செய்ய வேண்டும். அக்கினிகாரியஞ் செய்யச் சக்தனாக நானில்லாவிடில் அஷ்டபுஷ்பங்களால் அந்தப்ரீதியானது எனக்குண்டாகட்டும் என்பதாம் இவ்வாறு விஞ்ஞாபித்து அர்க்கிய பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு கீழ்க்கண்டவாறு அக்கினி காரியஞ் செய்து முடிக்கவும். ஏதேனும் காரணத்தால் அக்னிகார்யம் செய்யமுடியாவிடில் எட்டு புஷ்பங்களால் அக்னிகார்யம் செய்தபலன் உண்டாகும். பின்னர், சிவனுக்குச்சமீபத்தில் வந்து ஆசனத்திலிருந்து,

𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌯𑌤𑍍𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌤𑌵 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌤𑌾 𑌚 𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋 𑌨𑌾𑌥𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌶𑌿𑌵 ॥
𑌪𑍂𑌜𑌾𑌹𑍋𑌮𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌯𑌨𑍍𑌮𑌯𑌾 𑌕𑍃𑌤𑌂 ।
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑌾𑌨 [illegible] 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌂 ॥
𑌤𑌦𑍍𑌗𑍃𑌹𑌾𑌣 [illegible] 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿 [illegible] ॥

(இதன் பொருள்) ஓ ஈசா; யாதொன்று என்னால் செய்யப்பட்டதோ, யாதொன்றை நான் செய்யப்போகிறேனோ அவை யாவும் உம்முடைய புண்ணியமே. உலகத்தை இரக்ஷிப்பவர் நீரே. உம்மையின்றி என்னை இரக்ஷிப்பவர் யாருமில்லை. பூஜை ஹோமம் முதலிய கார்யங்களால் யாதொருபுண்யம் என்னால் செய்யப்பட்டதோ அப்புண்யத்தின் பலமானது என்னால் தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த புண்ணியத்தின் பலத்தை கிரஹித்துக்கொண்டு எனக்குப் போக மோக்ஷத்தைத் தந்தருள வேண்டும் என்பதாம்,

இந்த இரண்டு சுலோகங்களையும் படித்து முழங்காலைப் பூமியில்வைத்துச் சுகாசனமாகவிருந்து அஷ்டபுஷ்பங்களாலர்ச்சித்துச் சிரசில் அஞ்சலியோடு நமஸ்கரித்துப் பின்னர்ச் சத்தியோஜாதமுதலான பஞ்சப்பிரம மந்திரங்களாலும், மூலமந்திரத்தாலும் அர்ச்சித்து, சுவாகா என்னும் பதத்தை இறுதியிலுடைய மூலமந்திரத்தால் அங்காங்கி பாவமாகப் பராங்முகார்க்கியங்கொடுத்துப் பின்னர், ஆவரணதேவர்கள் காமியதேவர்களுக்கும் பராங்முகார்க்கியங்கொடுத்து, லிங்கத்திற்சேர்த்துத் தன்னுடைய தானங்களிலுள்ள ஆசனார்ச்சனாதி மந்திரங்களையும் பீடத்திற் சேர்த்துப் பின்னர் நமோந்த மூலமந்திரத்தால் சிவனை அர்ச்சித்து ரக்ஷாவகுண்டனஞ்செய்து வௌஷடந்த மூலமந்திரத்தால் தேனுமுத்திரை கொடுத்து அஞ்சலியோடு கூடிய கையை யுடையவனாய்

மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்திஹீநம் மஹேச்வர ।
யத்பூஜிதம் மயா தேவ பரிபூர்ணம் ததஸ்து மே ॥
ந்யூநம் வாத்யதிகம் வாபி யத்பாபம் மோஹதஃ க்ருதம் ।
ஸர்வம் ததஸ்து ஸம்பூர்ணம் த்வத்ப்ரஸாதாந் மஹேச்வர ॥
அபராதஸஹஸ்ராணி க்ரியந்தேऽஹர்நிசம் மயா ।
தாஸோऽயமிதி மாம் மத்வா க்ஷமஸ்வ பரமேச்வர ॥
ஸ்வாமிந் க்ஷந்தவ்ய தாஸேந ஸம்ஸேவயிதா மயா ।
அசுத்தபுத்திநாऽல்பயா பக்த்யா ஸ்ராந்தஃ க்ஷமஸ்வ தத் ॥

(இதன்பொருள்) ஓ மகேச்வர! மந்திர சூன்யமாயும் க்ரியா சூன்யமாயும் பக்தி சூன்யமாயும் யாதொரு பூஜை என்னால் செய்யப்பட்டதோ அந்தப்பூஜையானது பூர்த்தியடையும் வண்ணம் அருள் புரியவேண்டும். யான் அறியாமையால் பூஜையை அதிகமாகவாவது குறைவாகவாவது செய்திருப்பினும் அந்தப் பூஜையானது தேவரீர் அனுக்கிரகவிசேஷத்தால் பூர்த்தியாகவே பாவிக்க வேண்டும். அல்லும் பகலும் அனேகம் அபராதங்கள் செய்யும் என்னைத் தாஸன் என்று எண்ணி தேவரீர் அவ்வபராதங்களை க்ஷமித்துக் கொள்ளவேண்டும். அசுத்தமான புத்தியையுடைய சிறியனான தாஸனாகிய என்னால் செய்யப்பெற்ற சிறிய பக்தியால் தேவரீர் சிரமமுற்று இருக்கின்றீர். அவ்வபராதங்களை க்ஷமித்துக் கொள்ளவேண்டும். (என்பதாம்)

இவ்விதம் சிவபெருமானிடம் பிரார்த்தித்துப் பின்பு.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்று அம்சுமானாகமத்தில் கூறியவண்ணம் வலது மணிக் கட்டையும் இடது கையையும் அவ்விதமே நடுவிரல் முதல்மூன்று விரல்களையும் அந்த அந்த அங்கங்களின் மத்தியப்ரதேசத்தில் சேர்க்க வேண்டியது. பின்பு கட்டைவிரல் சுட்டுவிரல் இவைகளைக்கொண்டு மூன்று புஷ்பங்களை லிங்கத்தின் மூர்த்தியில் சமர்ப்பித்து நிரோதமென்னும் பெயருடைய முத்திரை செய்துகொண்டு சிரசில் அஞ்சலிபந்தனம் செய்யவேண்டியது. அல்லது இருகைகளிலும் திவ்ய முத்திரை செய்துக்கொண்டு லிங்கத்தின் மூர்த்தியில் இரண்டு புஷ்பங்களைச் சமர்ப்பித்து பின் நமஸ்காராஞ்சலி செய்துகொண்டு விசேஷார்க்கிய ஜலத்தால் பராங்முகார்க்கியம் கொடுக்கவேண்டியது. அதன்பின்னர், தேஜோமயமாக மூர்த்தியைப் பாவித்துத் தன்னுடைய இருதயத்திலே சேர்த்துப் பின்னர்ச் சாமான்யார்க்கிய பாத்திரத்தை இடதுகையில் வைத்து அந்தஜலத்தினால் யோகபீடம், வித்யாபீடம் குருமுதலானவர்களுக்குப் பராங் முகார்க்கியங்கொடுத்து அந்தந்த மந்திரங்களையும் தன்னுடைய இருதயத்தில் சேர்க்கவேண்டும். பின்னர், இரண்டுகைகளையுஞ் சுத்தஞ்செய்து, கையிலுள்ள ஈரத்தை நன்றாகமாற்றி

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

விசித்ரவஸ்த்ரேண ஸம்வேஷ்ட்ய வேஷ்டிகாயாம் ந்யஸேத் |
கவாடாந்தம் ஸம்யோஜ்ய பீமருத்ரம் ஸ்மரேத்ததா ||

என்று அம்சுமான் ஆகமத்தில் கூறிய வண்ணம் பரிவார தேவதைகளுடன் சிவலிங்கதேவரை ஒவ்வொன்றாக புஷ்பத்துடன் எடுத்து கவசமந்திரத்தை உச்சரித்து வஸ்திரத்தால் மூடி பெட்டகக் கோயிலின் பக்கத்தில் வைக்கவேண்டியது. விக்னேச்வரர்முதலிய பரிவாரதேவதைகளை கிரமப்படி வைத்தபின், அவர்களின் மத்தியில் சிவலிங்கதேவரை வைக்கவேண்டும். பின் சிவமந்திரத்தை நினைத்துக்கொண்டு லிங்கமூர்த்தியை எடுத்து சித்திரவஸ்திரத்தால் மூடிபெட்டகக்கோயிலுக்குள் பரிவாரதேவதைகளுடன் எழுந்தருளச் செய்யவேண்டும் பின்பு பெட்டகக் கோயிலைமூடி பெட்டகக்கோயிலாகிய கர்ப்பக்கிருகத்திற்கு ரக்ஷார்த்தமாக பீமருத்திரனை தியானம் செய்து,

சதுர்புஜம் த்ரிநேத்ரம் ச வராபயஸமந்விதம் |
சத்ரசாமரஸம்யுக்தம் பீமருத்ரம் ஸமர்ச்சயேத் ||

(இதன்பொருள்) நான்கு கைகளையுடையவரும், மூன்று நேத்திரங்களையுடையவரும், வரம் அபயம் இவைகளை கையிலுடையவரும், சத்திரம் சாமரம் இவைகளையுடையவருமான பீமருத்திரனை அருச்சிக்கவேண்டும். ஓம். ஹாம் பீமருத்ராயநம: என்று சொல்லிக்கொண்டு பீமருத்திரரை ஒரு புஷ்பத்தால் அருச்சித்து கிரகாரக்ஷையை விக்ஞாபித்து பின்பு கிழக்கே முகமாகத் திரும்பி அர்த்தசந்திராகாரமாக மண்டலமிட்டு அம்மண்டலத்தில் ஆசனமூர்த்தியைப்பூசித்து, அதில்,

ருத்ரகோடாக்நிஸங்காசம் வஜ்ரம் கஜ்ஜலஸந்நிபம் |
சங்கோஷ்டப்ரபம் ரௌத்ரம் ஸாக்ஷாத்ருத்ரகணேஸ்வரம் ||
வ்யாலயஜ்ஞோபவீதாட்யம் சதுர்வக்த்ரம் சதுர்புஜம் |
த்ரிநேத்ரம் தம்ஷ்ட்ராகராளம் ரக்தம் ரக்தவிலோசநம் ||
ஜடாமகுடஸம்யுக்தம் ஸ்வர்ணாபம் மணிகங்கணம் |
சிதவஸ்த்ரபரீதாநம் ஸர்வாலங்காரநாகபூஷணம் ||

யதா ॥ ருத்ராக்நே: க்ரோதஜாதம் க்ருஷ்ணவர்ணம் த்ரிஶூலடங்கதரம் ।
பயங்கரம் அக்ஷமாலா கமண்டலுயுதம் வ்யாலயஜ்ஞோபவீதம் ॥
சதுர்முகம் சதுர்புஜம் ஜ்வாலாஸ்யம் ரக்தவர்ணம் த்வாதஶநேத்ரம் ।
ஜடாமகுடம் அர்த்தசந்த்ரம் ஸர்ப்பபூஷணம் ஶ்வேதாம்புஜாஸநம் ॥

(இதன் பொருள்) உருத்திரனின் கோபாக்னியிலிருந்து உண்டானவராயும், கருமை வண்ண முடையவராயும், சூலம் டங்கம் இவைகளைத் தரித்துக்கொண்டு இருக்கிறவராயும், பயங்கரராயும், அக்ஷமாலை கமண்டலம் இவைகளுடன் கூடினவராயும், வியாளம் யக்ஞோபவீதம் இவைகளையுடையவராயும், நான்கு முகங்களையும் நான்கு கைகளையும் முகத்தில் கக்குகிற பெரியஜ்வாலையையும் சிவப்புவர்ணத்தையும் பன்னிருகண்களையுமுடையவராயும், சடையின் கிரீடத்தில் அர்த்தசந்திரனால் அலங்கரிக்கப்பெற்றவராயும், சர்ப்பங்களால் செய்யப்பெற்ற காப்புக்களை யணிந்தவராயும், வெண்தாமரையில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறவராயும், பக்தி செய்யும் பொழுது நேரிடும் பெரிதான பீடைகளை நாசம் செய்கிறவராயும் இருக்கும் சண்டேசுவரரை யென்றாவது, அல்லது மூன்று நேத்திரங்களை யுடையவராயும், நான்கு கைகளை யுடையவராயும், ஒருமுகமும் வெண்மையான வஸ்திரத்தையு முடையவராயும், வலதுகையைத் தொங்கும்படி செய்து கொண்டு இருக்கிறவராயும், ஒருகாலால் உட்கார்ந்து கொண்டு இருக்கிறவராயும், முழங்காலின் மேல் பிரகாசிக்கும் கையையுடையவராயும், வலது கையில் டங்கமென்னும் ஆயுதத்தையுடையவராயும், ஹிருதயத்தில் அஞ்சலிபந்தனம் செய்துக் கொண்டிருக்கிறவராயும் இருக்கும் சண்டேசுவரரை யென்றாவது தியானம் செய்யவேண்டியது என்பதாம். இவ்விதம் தியானம் செய்து சாஷ்டாங்கமாக சண்டேசுவரரை நமஸ்கரித்து.

லேஹ்ய சோஷ்யாந்நபாநாதி தாம்பூலம் ஸ்ரக்விலேபநம் ।
நிர்மால்ய போஜநம் துப்யம் ஸமர்ப்பிதம் ஶிவாஜ்ஞயா ॥

(இதன்பொருள்) தின்பதற்கும் உறிஞ்சுவதற்கும் உரித்தான அன்னம் பானம் முதலியவைகளையும் தாம்பூலம் மாலைசந்தனம் முதலியவைகளையும் நிர்மால்யபோஜனமாக சிவபெருமானின் ஆக்ஞையினால் என்னால் உமக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விதம் சொல்லிக்கொண்டு சிவநிர்மால்யம் சமர்ப்பித்து.

ஸர்வக்ருதே ததக்ரியாகாண்டம் யோ மத்தேதவாஜ்ஞயா ।
ந்யூநாதிகம் க்ருதம் மோஹாத் ஸர்வம் பூர்ணம் ததஸ்து மே ॥

இதன்பொருள். ஓ சண்டேசுவர! உம்முடைய ஆக்ஞை யினால் இந்த எல்லாக்கிரியாகாண்டமும் என்னால் செய்யப்பெற் றது. குறைவாகவாவது அதிகமாகவாவது அறியாமையால் செய் திருப்பினும் அதைப்பொறுத்துக்கொண்டு பூர்த்தியடைந்ததாக வே செய்யவேண்டும் என்பதாம். இவ்விதம் சண்டேசுவரருக்கு விக்ஞாபித்து உத்தாபித்துப்பின்பு அர்க்கிய பாத்திர ஸ்தானமந் திரங்களை ஹிருதயத்திலே சேர்த்து நிர்மால்யசோதனம் செய்து பின்பு ஆசமனம் செய்வதுடன் ஜலாக்கிதமாக திருநீறு தரித்துக் கொண்டு காண்யாசம் செய்து ஒருதடவை மந்திர சம்ஹிதைகளை ஜபித்து,

ஸ்ரீ ஸர்வவாரஹோவ்ருத்த்யா பூஜாந்தே நியதேந து ।
பூஜாஸமம் ஜபேதகோரம் ஸஹஸ்ரம் ஸாதகம் ॥
அகோராந்நாபரோ மந்த்ர: கலௌ ஸித்திப்ரத: ஸ்ம்ருத: ।
அகோரார்ப்பிதசித்தாயோ ஸந்தேகோ முக்திரக்ஷயா ॥

(இதன்பொருள்) பூஜையின் முடிவில் நியமத்துடன் இரு பத்தொருமுறை அகோரமந்திரத்தை ஜபித்தால் பூஜாபலத்தை அப்பொழுது தான் யுடைகிறுன். அகோரத்தைக்காட்டிலும் பிறிதொருமந்திரமும் கலியில் சித்தியைக் கொடுக்காது. எவன் அகோர மந்திரத்தில் அர்ப்பணம் செய்யப்பெற்ற சித்தத்தையு டையவனுக விருக்கின்றுனே அவன் முத்தியைச் சந்தேகமின்றி யடைவான். இல்லையேல் ஒருக்காலும் முத்தியை யடைய மாட் டான் என்பதாம்.

இந்த வாக்கியப்படி அகோரமந்திரத்தையும் பிராயச்சித்த மாக இருபத்தொருமுறைஜபித்துப் பின்னர் எழுந்திருந்து கபில பூஜை பண்ணிப் பசுவிற்குக் கவளங் கொடுத்துப்பின்னர்த் தன் னுடைய குருவை நமஸ்கரித்துக் குருபத்தினி, குருபுத்திரர்களை யும் நமஸ்கரித்துக் குருவினுடைய வேலைக்காரரையும் இனிய மொழிகளால் மகிழச்செய்து, சிவாகமபூஜைசெய்து, சூரியனைப் பார்த்து, சிவாலயசேவைசெய்து." பின்னர் வீட்டில் சிவாகம பாராயணஞ் செய்யவேண்டும். இவ்வாறு, ஆன்மார்த்த சிவ

பூஜையின் முறைமையறிந்துக்கொள்க. இந்தச் சிவபூஜை சிவ தீக்ஷையோடுகூடிய அவாந்தரசைவராகிய சூத்திரருக்குக் கிடையாது. எவ்வாறெனில்,

காமிகாகமத்தில்,

அஷ்டத்ரிம்ஶத் கலாந்யாஸம் ஶிவகாயத்ரிமேவ ச ।
வாமாதிஶக்திமந்த்ராணி ஷிக்கா ஸஹைவம் ஸமாசரேத் ॥
ப்ரணவம் பீஜவர்ணாம்ஶ்ச வ்யாஹ்ருதீர்வேதமந்த்ரகம் ।
காயத்ரீம் வேதமந்த்ராணி ஶூத்ரஸ்த்யக்த்வா ஸமாசரேத் ॥

சகலாகமசாரசங்கிரகத்தில்

ஶூத்ராணாமபி நித்யகாம்ய யஜநே நாதஞ்ச பீஜம் வினா ।
அஷ்டத்ரிம்ஶத்கலாத்மகஸ்ய ததயா ந்யாஸஞ்ச ஶைவீம் ததः ॥
காயத்ரீஞ்ச ஜபாத் மந்த்ர யஜநம் வாமாதி ஶக்த்யாத்மகம் ।
ஓங்காராதிகஞ்ச வினாச ஶேஷ விதயஸ் த்ர்யாஹ்ருத்யயாகாரணே ॥

அஜிதாகமத்தில்

வர்ணாஶ்ரமானுஸாரேண விதியுக்தம் ப்ரபூஜ்யதே ।
ஸ ஏவ ஸர்வ வர்ணானாம் ஶ்ரேயஸாம் விதீயதே ॥

பிறிதொருகிரந்தத்தில்

யஶ்சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமசாரதः ।
பதாயாந்தர்யகே கோரரௌரவேஸஞ்ச ஶாஶ்வதம் ॥

(இதன்பொருள்.) காமிகாகமத்தில்,

முப்பத்தெட்டுக் கலாநியாசங்களையும் சிவகாயித்திரியையும் வாமை முதலிய சக்திகளின் மந்திரங்களையும் பிரணவத்தையும் பீஜவர்ணங்களையும் வியாஹிருதிகளையும் காயித்திரியையும் வேத மந்திரங்களையும் சூத்திரஜாதியர் அனுஷ்டியாது மற்ற ஆகமோக்தமானகர்மாக்களை அனுஷ்டிக்கவேண்டும்.

சகலாகமசாரசங்கிரகத்தில்

நித்தியவிதியிலும் காமியவிதியிலும் சூத்திரஜாதியார் நாத மந்திரங்களையும் பீஜாக்கரங்களையும் முப்பத்தெட்டுக் கலாநியா சங்களையும் சிவகாயித்திரியையும் வாமை ஜியேஷ்டைமுதலிய சக்திகளின் மந்திரங்களையும் ஓம் பூ: முதலிய வியாஹிருதிகளை

யும் விலக்கி மற்றக் கர்மாக்களைத்தான் அனுஷ்டிக்கலாம். இவ் விதமே காரணாகமத்திலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

அஜிதாகமத்தில்,

வருணாச்சிரமத்தை அனுசரித்து எந்தவிஷயத்தில் விதியானது காணப்படுகின்றதோ அவ்விதமே எல்லாவருணத்தாரும் ஆச்சிரமஸ்தர்களும் அனுஷ்டிக்கவேண்டியது.

பிறிதொருகிரந்தத்தில்,

எவன் சாஸ்திரத்தின் வரம்பை மீறி இஷ்டப்படி நடந்துக் கொள்ளுகிறானோ அவன் இறந்து பயங்கரமான நரகத்தில் முன்னூறுகற்பகாலம் வசிப்பான், இவ்வாறு கூறியிருத்தல் காண்க.

(74—89.)

(அ-கை.) இரண்டு சுலோகங்களால் பஞ்சமுக சதாசிவத்தியானங் கூறுகின்றார்.

[illegible] ॥௯௦॥

[illegible] ॥௯௧॥

(90-91.) ஈசானமுகம் பால்நிறமென்றும், தற்புருஷமுகம் சுவர்ணநிறமென்றும், அகோரமுகம் வண்டுநிறமென்றும், வாமதேவமுகம் இரத்தநிறமென்றும், சத்தியோஜாதமுகம் சந்திரநிறமென்றும் இவ்வாறு பஞ்சமுகங்களையும், பதினைந்து கண்களையும் உடையராயும், சுத்தமான வெண்மை நிறமுடைய திருமேனியுடையராயும் கங்கையினையும், சந்திரகலையினையும், தரித்துக்கொண்டு, பத்துத்திருக்கரங்களும், அவற்றுள் வலதுபக்கத்தில் சூலம் கட்டுவாங்கம், சத்தி, வரதம், அபயமும்; இடதுபக்கத்தில் மாது

ளம்பழம், உருத்திராக்கமாலை, உடுக்கு, நாகம், நீலோற்பலமும் ஆகிய பத்து ஆயுதங்களையுந்தரித்துக்கொண்டு திருக்கை திருவடிகள் சிவந்தநிறத்தையுடையதாகவும், சத்தியாதி சத்திவரையுள்ள மிக மகிமை வாய்ந்த ஆசனத்தில் பத்மாசனமாக எழுந்தருளியிருப்பவராகவும், இச்சா ஞானக் கிரியாசத்திரூபமாயும், எல்லாவுயிர்களிடத்தும் வியாபகமாயும், எல்லாவுயிர்களையும் இரக்ஷிக்கிறவராயும், பிரசித்தமான எல்லாவற்றையும் பூர்த்திசெய்கிறவராயும், எல்லா இந்திரியங்களின் சேட்டைக்கும் காரணமாயும், எல்லாவற்றிற்கும் உற்பத்திஸ்தானமாயும், எல்லாருடைய மனத்திற்கும் லக்ஷியஸ்தானமாயும், இவ்வாறு சதாசிவருடைய தியானம் செய்யவேண்டுமென்று சிவாகமங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. (90—91.)

(அ-கை.) இவ்வாறு சதாசிவத்தியானம் செய்து பின்னர், பஞ்சப்பிரம்மஷடங்கத்தியானஞ் செய்யுமுறை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௯௨||

[illegible] ||௯௩||

(92–93.) ஈசானம் வெள்ளை நிறத்தையும், சூலமும் அபயமுந் தரித்த இரண்டுகரங்களையு முடையதாயிருக்கிறதாகவும், தற்புருடம் பொன்னிறத்தையும், மாதுளம்பழமும் ஜபமாலையுமுடைய இரண்டுகரங்களையுமுடையதாயிருக்கிறதாகவும், அகோரம் கருமைநிறத்தையும், சூலமும், மழுவும், வாளும், தண்டமும்,

மாத்திரைக்கோலும், கபாலமும், ஆகாயத்தில் சஞ்சரிப்பதற்கு உரியதான கேடமாகியயோகதண்டமும், ஜபமாலையும், தரித்திருக்கும் எட்டுக்கரங்களையு முடையதாயிருக்கிறதாகவும், வாமதேவம் சிவந்தநிறத்தையும், வாளும் கேடகமும் தரித்த இரண்டுகரங்களையுமுடையதாய் நடந்துகொண்டிருக்கும் பெண்ரூபமாயிருக்கிறதாகவும், சத்தியோஜாதம் வெள்ளை நிறத்தையும், அபயமும் வரதமுந்தரித்த இரண்டு கரங்களையுமுடையதாயிருக்கிறதாகவும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மூன்று திருக்கண்கள் இருக்கிறதாகவும் இவ்வாறு ஈசானமுதலான பஞ்சப்பிரமத்தியானஞ்செய்யவேண்டும். இனி, ஷடங்கத்தியானம் வருமாறு:—நேத்திரத்திற்கு அதிஷ்டான தேவதை வெள்ளை நிறமும், நான்கு திருமுகமும், சூலம் ஜபமாலை கண்டிகை கபாலம் என்னுமிவற்றைத்தரித்த நான்கு திருக்கரங்களுமுடையதாயிருக்கிறதாகவும், இருதயத்திற்கு அதிஷ்டான தேவதை வெள்ளை நிறமும், நான்கு திருமுகமும், நான்கு திருக்கரங்களுமுடையதாயிருக்கிறதாகவும், சிரசுக்கு அதிஷ்டானதேவதை பொன்னிறமும், நான்கு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் உடையதாயிருக்கிறதாகவும், சிகைக்கு அதிஷ்டானதேவதை சிவந்த நிறமும், நான்கு திருமுகமும், நான்கு திருக்கரங்களு முடையதாயிருக்கிறதாகவும், கவசத்திற்கு அதிஷ்டானதேவதை நீலநிறமும், நான்கு திருமுகமும், நான்கு திருக்கரங்களுமுடையதாயிருக்கிறதாகவும், அஸ்திரத்திற்கு அதிஷ்டானதேவதை சிவந்த நிறமும், நான்கு திருமுகமும், நான்கு திருக்கரங்களுமுடையதாயிருக்கிறதாகவும், இருதயமுதல் அஸ்திரம் வரை ஒவ்வொருதேவதையும் சூலம், வேல், அபயம், வரதம் என்னுமிவற்றைத் தரித்திருக்கிறதாகவும், இந்த ஆறங்கங்களுக்குரிய அதிஷ்டான தேவதைகள் ஒவ்வொன்றின் திருமுகத்திற்கும் மூன்று கண்கள் இருக்கிறதாகவும் இவ்வாறு ஷடங்கத்தியானஞ் செய்யவேண்டும். (92—93.)

(அ-கை.) பஞ்சப்பிரமங்களின் குணங்கள், ஷடங்கங்களின் குணங்கள், பத்து ஆயுதங்களின் குணங்கள் இவையெனக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]

[illegible] ॥௯௪॥

[illegible] ॥௯௫॥

(94—95.) ஈசானம் சகளமாய் ஊர்த்துவமாகப் பிரகாசிக்குங் குணமுடையது. தற்புருஷம் எல்லாவற்றையும் அறியுங் குணமும் எவ்விடத்துஞ் செல்லுங்குணமுமுடையது. அகோரம் இருதயத்திற்கு நின்மலமான அறிவை யுண்டுபண்ணுங்குணமுடையது. வாமதேவம் காக்குங்குணமுடையது. சத்தியோஜாதம் எல்லாவற்றையுந் தோற்றுவிக்கும் விரைவுடையது. இவ்வாறு பஞ்சப்பிரமங்களின் குணங்கள் அறிந்து கொள்க. அவ்வாறே, ஈசுவரனுடைய ஆறு அங்கங்களும் சத்தாயிருக்குந்தன்மைமுதலிய குணங்களுடன் கூடினவையாகவும், முற்றறிவு முதலிய குணங்களுடன் கூடினவையாகவும் அறிந்துகொள்க. அவை யாவன :—

[illegible]

(இந்தச்சுலோகங்களின் பொருள்.) எல்லாவற்றையும் அறியுந்தன்மை, திருப்தி, கொடை, சாமர்த்தியம், லோபத்தை யடையாதசத்தி, அனந்தசத்தி என்னும் இவ்வாறும் ஆறங்கங்களின் குணங்களாம். இவற்றையே வேறுவழியாகக் கூறுகின்றார். அஃதாவது, எல்லாவற்றையும் அறியுந்தன்மை, திருப்தி, அநாதி

யான அறிவு, சுதந்தரம், லோபத்தையடையாதசத்தி, அனந்த சத்தியென்பன. சத்தாயிருக்குந்தன்மைமுதலிய குணங்களாவன:—சத்தாயிருக்குந்தன்மை, மேம்பட்டிருக்குந்தன்மை, சுதந்தரம், எல்லாவற்றையுங்காத்தல், எல்லாவற்றையும் அறியுந்தன்மை, காம்பீர்யம், என்னும் ஆறுமாம், இவ்வாறு பஞ்சப்பிரமஷடங்கங்களின் குணங்கள் அறிந்துகொள்க.

இனிப்பத்து ஆயுதங்களின் குணங்களாவன:—சூலம் சிருட்டி, திதி, சங்காரம் என்னுமூன்றனையும், பரசு சத்தியத்தையும், வாள் பிரதாபத்தையும், வச்சிரம் பேதிக்கப்படாமையினையும், அபயம் அநுக்கிரகத்தையும், அக்கினி பாச சங்காரத்தையும், கண்டை நாதத்தையும், நாகம் கம்பீரத்தையும், பாசம் அமோமாயையையும், அங்குசம் அடக்குதலையும் உணர்த்துங் குணங்களையுடையன. இவ்வாறே, காமிகம் வாதுளம் முதலிய ஆகமங்களிற் கூறியிருத்தல் காண்க. (94—95.)

(அ-கை.) அபிஷேகமுறையும், அபிஷேகபலனும் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

தைலாஜ்ய பிஷ்டாமலகீ ஹரித்ரா பஞ்சாம்ருத க்ஷீர தத்யாஜ்ய மது இக்ஷுஸாரை: । பலோதக ஸ்நாந ஸுகந்த தோயைர் ஸ்நாநம் விதத்யாத் ஸ்நபநாஷ்டகம் ச ॥ ௯௬ ॥

ஸம்ஸ்நாப்ய விதிவத் ஸ்நபநம் மஹேசம் ... ... ॥ ௯௭ ॥

(96—97.) ஸ்ரீமஹாதேவருக்கு அபிஷேகஞ்செய்யுமுறை எவ்வாறெனின், 1. எண்ணெய் அபிஷேகம், 2. மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு, அபிஷேகம், 3. பஞ்சகவ்ய அபி

ஷேகம். 4. பஞ்சாமிர்த அபிஷேகம். 5. நெய் அபிஷேகம். 6. பால் அபிஷேகம். 7. தயிர் அபிஷேகம். 8. தேன் அபிஷேகம். 9. சர்க்கரை அபிஷேகம். 10. கருப்பஞ்சாறு அபிஷேகம். 11. நாரத்தம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, தம்பரத்தம்பழச்சாறு, கொளஞ்சிப்பழச்சாறு, குமட்டி மாதுளம்பழச்சாறு ஆகிய இவற்றின் அபிஷேகம். 12. வாழைப்பழ அபிஷேகம். 13. மாம்பழ அபிஷேகம். 14. பலாப்பழ அபிஷேகம். 15. தேங்காய்த்திருவல் அபிஷேகம். 16. இளநீர் அபிஷேகம். 17. செவ்விளநீர் அபிஷேகம். 18. அன்ன அபிஷேகம், சந்தனம் குங்குமம் இவைகளால் அபிஷேகம். 19. கும்பாபிஷேகம், அர்க்யாபிஷேகம். 20. சததாராபிஷேகம். 21. பரார்த்தத்திற்கு சகஸ்ரதாராபிஷேகம். 22. விசேஷார்க்கியாபிஷேகம். இவ்வாறு முறையாக ஸ்ரீமஹாதேவருக்கு அபிஷேகஞ்செய்க. இந்த அபிஷேகத்திற்குப் பலன் வருமாறு :— ஒரு திருமஞ்சன அபிஷேகஞ்செய்யின் தாம்செய்தபாவத்தில் பத்துப்பாவம் நீங்கும். பாலபிஷேகஞ்செய்யின் நூறுபாவம் நீங்கும். தயிரபிஷேகஞ்செய்யின் ஆயிரம்பாவம் நீங்கும். நெய்யபிஷேகஞ்செய்யின் பதினாயிரம் பாவம் நீங்கும். கருப்பஞ்சாரபிஷேகஞ் செய்யின் நூறாயிரம்பாவம் நீங்கும். தேனபிஷேகஞ்செய்யின் பத்துலக்ஷம் பாவம் நீங்கும். இளநீரபிஷேகஞ்செய்யின் கோடிபாவம் நீங்கும், அன்னம் சந்தனக்குழம்பு குங்குமஅபிஷேஞசெய்யின் அளவில்லாதபாவம் நீங்கும். இவ்வாறு, சிந்தியாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (96—97.)

(அ—கை) பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தங்களின்விதி ஆறுசுலோகங்களாற் கூறுகின்றார்.

ஸ்நாநம் பஞ்சகவ்யம் ஹி ஶிவாய யோக்யம் மோ
க்ஷீரதத்யாஜ்யமேயோகயோநி ।
பஞ்சகவ்யம் க்ஷீரதத்யாஜ்யமேவ
பிண்டீகளாரம் தத்வத்தா வா ॥ ௯௮ ॥

த்ரோணமய வ்ரீஹி ஜ ணேத வா
ஶகலம் யவாஸநவாஸிதே வா ।
கொஷ்டாநி கவ்யாநி நவாத்தஶ்ரா
நாஸீய ஹேவ்ய ஶிவதக்கொஷ்டம் ॥ ௯௯ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௧௦௦॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௧௦௧॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௧௦௨॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௧௦௩॥

(98—103) *ஆத்மார்த்த பரார்த்த பூஜைகட்குரிய பஞ்சகவ்யமாவது, பசுவின்பால், பசுவின்தயிர், பசுவின்நெய், பசுவின் நீர், பசுவின் சாணம் ஆக இந்த ஐந்தும் பஞ்சகவ்யமாம். பஞ்சாமிர்தமாவது, பசுவின் பால், பசுவின் தயிர், பசுவின் நெய், தேன், கருப்பஞ்சாறு அல்லது சர்க்கரை ஆக இந்த ஐந்தும் பஞ்சாமிர்தமாம். பஞ்சகவ்யம் ஸ்தாபிக்கு முறை வருமாறு:— நான்கு மரக்கால் நெல் சொரிந்து அல்லது தன்னுலியன்ற அளவு நெல்லாவது, அரிசியாவது சொரிந்து அதில் ஒருமுழநீளம் சதுரமாக ஒரு மண்டலமிட்டு அதில் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என்னும நான்கு ரேகைகீறி நவகோஷ்டங்கற்பித்து, ரேகைகள் தோறும் கிழக்கும் வடக்கும் நுனியாக தெர்ப்பைகளைப்பரப்பி அதன் நடுக்கோஷ்டத்தில் சிவதத்துவகோஷ்டத்தையும், கிழக்கில் சதாசிவதத்துவகோஷ்டத்தையும் தெற்கில் வித்தியாதத்து*

வகோஷ்டத்தையும், வடக்கில் புருஷதத்துவகோஷ்டத்தையும், மேற்கில் காலதத்துவகோஷ்டத்தையும், ஈசானத்தில் பிரகிருதி தத்துவகோஷ்டத்தையும், அக்கினிதிக்கில் பிருதிவிதத்துவகோஷ்டத்தையும், நிருதிதிக்கில் அப்புதத்துவகோஷ்டத்தையும், வாயுதிக்கில் வாயுதத்துவகோஷ்டத்தையும் பூஜைசெய்து இந்த இடத்தில் நடுகிழக்கு தெற்கு முதலிய ஒன்பது திக்குக்களில் முறைப்படி சுப்ரதிஷ்டபாத்ரம், சுசாந்த பாத்ரம், தேசோபாத்ரம், இரத்னோதகபாத்ரம், அமிர்தபாத்ரம், அவ்வியக்த பாத்ரம், வியக்த பாத்ரம், சூரிய பாத்ரம், சம்யுக்த பாத்ரம் என்னும் இவற்றிற்குப் பாத்ரபூசைசெய்து, பசுவின்பால், பசுவின் தயிர், பசுவின்நெய், பசுவின்நீர், பசுவின் சாணம் என்னும் இவ்வைந்தினையுங் கரைத்துத் தர்ப்பைஜலம், மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு என்னுமிவற்றையும் கரைத்து அந்தப் பாத்திரங்களிலே வார்த்து, இதனமேல் ஈசானாதி பஞ்சமந்திரங்களினால் பாலை ஐந்துமுறையும், தயிரை நான்குமுறையும், நெய்யை மூன்றுமுறையும், நீரை இரண்டுமுறையும், சாணத்தை ஒருமுறையும் ஜபித்து, மாக்காப்பை இருதயமந்திரத்தாலும், நெல்லிக்காப்பைச் சிரோமந்திரத்தாலும், மஞ்சட்காப்பைக் கவசமந்திரத்தாலும், தர்ப்பைஜலத்தை ஆறுமுறை ஆவர்த்திசெய்த பஞ்சப்பிரமமந்திரங்களினாலும் அபிமந்திரிக்கவேண்டும். பின்னர், கோமயத்தைக் கோசலத்திலும், இவ்விரண்டினையும் பசுவின் நெய்யிலும், இம்மூன்றினையும் தயிரிலும், இந்நான்கினையும் பசுவின்பாலிலும் இருதயமந்திரத்தாற் சேர்த்துப் பின்னர்த்தர்ப்பைஜலத்தையும் மூலமந்திரத்தாற்சேர்த்து அதன் பின்னர்க்கூர்ச்சத்தால் ஒன்றாக ஆக்கிமீண்டும் தூபதீபம் கொடுத்துப் பின்னர் வலக்கையால்மூடி மூலமந்திரத்தினாலும், பஞ்சப்பிரமமந்திரம் ஷடங்கமந்திரங்களினாலும் ஒருமுறை அபிமந்திரிக்கவும். பிராயச்சித்தவிஷயமாயின், மூலமந்திரத்தால் நூற்றெட்டுமுறை அபிமந்திரிக்கவேண்டும். இவ்வாறு, பஞ்சகவ்யஸ்தாபன சங்கிரகமுறை யறிந்துகொள்க.

பஞ்சாமிர்தஸ்தாபனவிதியாவது, பஞ்சகவ்யத்திற்குக் கூறியவாறே நெல் பரப்பி அதில் கோஷ்டபூசை, பாத்ரபூசைகளைச்

செய்து முன்சொன்ன பஞ்சாமிர்தங்களை ஸ்தாபித்துத் தர்ப்பை ஜலஸ்தானத்தில் கந்தோதகத்தையும், அக்கினிமுதலிய மூன்று கோணங்களிலும் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் அல்லது இளநீர் என்னும் இவற்றையும் முன்சொன்னவாறு அந்தந்த மந்திரங்களினால் ஸ்தாபிக்கவேண்டும். இவ்வாறு பஞ்சாமிர்தஸ்தாபனவிதி யறிந்துகொள்க. (98—103.)

(அ—கை.) நவ கலச ஸ்நபநவிதி கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ॥௧0௪॥

(104.) ஆன்மார்த்தபூஜைக்கும் நவகும்பம் ஸ்தாபித்து அபிஷேகஞ்செய்யலாமென்று காமிகாகமத்தில் கூறுகின்றமையால், அது வருமாறு:— தூணிநெல் சொரிந்து, இரண்டுமுழக் கோல் நீளத்தில் சதுரமாக ஒருமண்டலமிட்டு, அதில் நவகோஷ்டங் கற்பித்து, அதில் தெற்பையைப்பரப்பி, அதனடுவே சிவகும்பத்தையும், அக்கும்பத்திற்கு வடக்கில் வர்த்தனிகும்பத்தையும், கிழக்கு முதலெட்டுத்திக்கிலும் எட்டுக்கலசங்களையும் வைத்து, அவற்றுள் சிவகும்பத்தில் சிவபெருமானையும், வர்த்தனிகும்பத்தில் பரமேஸ்வரியையும், ஏனைய எட்டுக்கும்பங்களில் அஷ்ட வித்யேஸ்வரர்களையும் ஆவாகனஞ்செய்து தூபதீபஞ்சமர்ப்பித்துப் பூஜிக்கவேண்டும். (104)

(அ—கை.) ஐந்து பழமிவையெனக் கூறுகின்றார்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ॥௧0௫॥

(105.) பழங்கள் ஐந்தாவன, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தென்னம்பழம், (தேங்காய்) கும்மட்டி மாதுளம்

பழம் என்னுமைந்தாம். ரசமிகுதியானபழம் ஐந்து வருமாறு:— எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், தமரத்தம்பழம், குளஞ்சிப்பழம், மாதுளம் பழம் என்பன. இவ்வாறு பழவர்க்கமறிந்து கொள்க. (105)

(அ—கை) பஞ்சோதகங்கள், பஞ்சதிரவியங்கள், பஞ்சகந்தங்கள், பஞ்ச அன்னங்கள், இவையென மூன்று சுலோகங்களால் கூறுகின்றார்.

𑌪𑌞𑍍𑌚𑍋𑌦𑌕𑌾𑌨𑍍𑌯𑌥 𑌫𑌲𑍈𑌶𑍍𑌚 𑌬𑌿𑌲𑍍𑌵𑍈𑌃
𑌰𑌤𑍍𑌨𑍈𑌶𑍍𑌚 𑌗𑌂𑌧𑍈𑌶𑍍𑌚 𑌕𑍁𑌶𑍈𑌶𑍍𑌚 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 ।
𑌏𑌲𑌾𑌲𑌵𑌂𑌗𑌂 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌚 𑌕𑍋𑌷𑍍𑌠𑌂
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑌞𑍍𑌚𑌾𑌪𑌿 𑌚 𑌚𑌮𑍍𑌪𑌕𑍇𑌨 ॥ ॥௧௦௬॥

𑌗𑌂𑌧𑌾𑌶𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚𑌾𑌗𑌰𑍁𑌚𑌨𑍍𑌦𑌨𑍇 𑌦𑍍𑌵𑍇
𑌕𑌾𑌶𑍍𑌮𑍀𑌰𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌹𑌰𑌿𑌚𑌨𑍍𑌦𑌨𑌞𑍍𑌚 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌗𑌂𑌧𑌾 𑌬𑌹𑌵𑍋 𑌸𑌨𑍍𑌤𑌿
𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾 𑌮𑍃𑌗𑌨𑌾𑌭𑌿𑌨𑌾𑌮 ॥ ॥௧௦௭॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ॥௧௦௮॥

(106, 107, 108.) பஞ்சோதகம், பஞ்சதிரவியம், பஞ்சகந்தம், பஞ்சான்னம் என்னுமிவை, ஆத்மார்த்தபூஜைக்கும், பரார்த்தபூஜைக்கும் உரியனவாம். அவற்றுள், பஞ்சோதகமாவன, பலோதகம், வில்வோதகம், இரத்நோதகம், கந்தோதகம், குசோதகம் என்னும் ஐந்துமாம். பஞ்சதிரவியமாவன, ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம், சண்பகமொட்டு என்னும் ஐந்துமாம் பஞ்சகந்தமாவன, இருவகை அகில் சந்தனம், காஸ்மீர சந்தனம், வில்வச்சந்தனம், செஞ்சந்தனம் என்னும் ஐந்துமாம். இன்னும், பச்சைக்கற்பூரம், சாந்து, கஸ்தூரி, முதலிய பரிமளதிரவியங்கள் பலவுங் கொள்க. பஞ்சான்னமாவன, எள்ளன்னம்,

கடுகன்னம், புளியன்னம், பயறன்னம், உளுந்தன்னம் என்னும் ஐந்துமாம். இன்னும், கோதுமை அரிசியன்னம், சம்பா அரிசியன்னம், யவையரிசியன்னம், மூங்கிலரிசியன்னம், குழைச்செந்நெலரிசியன்னம் என அன்னவகை ஐந்தும், இன்னும், சுத்தான்னம், தயிரன்னம், சர்க்கரையன்னம், நெய்யன்னம், பாமான்னம், என அன்னவகை ஐந்தும் இவைபோல்வனபிறவுங்கொள்க. இவ்வாறு பஞ்சோதகமுதலானவற்றை மகாதேவருக்குச் சமர்ப்பிக்கவும். (106, 107, 108.)

(அ-கை.) பஞ்சோதகமுதலியவற்றை மகாதேவருக்குச் சமர்ப்பிக்கிறவனுக்கு உண்டாகும்பலன் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஶம்போ⁴꞉ ஸ்னாபனகாபி⁴ஷேககரணாச் சா²ந்திம் ப்ரயா
ஸுக³ந்தி⁴த்³ரவ்யை꞉ தீ³ர்கா⁴யு꞉ ஸம்பத்³யதே கால
ம் ஸம்பத்கரம் சந்த³னம் தூ⁴பம் பாபஹரோ ம
ஹேஶ்வரார்ச்சயா தீ³பேன பாபநாஶனம்
ஜனிதம் ... ப்ரத்யக்ஷமாப்ய
தே꞉ ॥ ॥௧௦௯॥

த்³ரவ்யாஹ்ருதம் ஸர்வம் ஶிவாய நைவேத்³
யம் ... ஶ்ரத்³தா⁴ஸம்
ஜன ... ॥ ...
...
... ॥௧௧௦॥

(109—110.) சம்புவாகிய மகாதேவருக்குத்திருமஞ்சன அபிஷேகஞ்செய்யின் சாந்தியுண்டாகும். புனுகுமுதலிய பரிமள திரவியங்கள் சமர்ப்பித்தால் தீர்க்காயுள் உண்டாகும். நல்ல புட்பங்களாலருச்சனை செய்யின் கோட்சொல்லிக்கெடுத்த தோஷம் நீங்கும், சந்தனஞ் சாத்தினால் செல்வமுண்டாகும். நல்ல சாம்பிராணித் தூபஞ்சமர்ப்பித்தால் அநேக பாபம் நீங்கும், தீபஞ்சமர்ப்பித்தால் பாப நீக்கமும், அபமிருத்து நீக்கமுமுண்டா

கும். நல்ல அமுது நைவேத்தியஞ்செய்யின் அரசாட்சியுண்டா
கும். தாம்பூலஞ்சமர்ப்பித்தால் அநேக நன்மைகளும் அழகும்
உண்டாகும். அக்ஷதை சமர்ப்பித்தால் சத்துரு நீக்கமுண்டா
கும். அருகம்புல்லாலருச்சித்தால் சகோதரனைக்கொன்ற தோஷ
ம் நீங்கும். எள்ளினால் அருச்சித்தால் பிராமணரைக் கொன்ற
பாபம் நீங்கும். தும்பைப் புஷ்பத்தாலருச்சனை செய்யின் பசுக்
கொலையினாலுண்டாகும் தோஷம் நீங்கும். கொன்றைப்பூவால
ருச்சனைசெய்யின் தாயாரைக்கொன்ற தோஷம் நீங்கும். வெள்
ளெருக்கம் பூவாலருச்சனை செய்யின் பிறபெண்களைக் கூடின
தோஷம் நீங்கும். நீலோத்பல மலராலருச்சித்தால் வாக்காற்செய்
த பாவம் நீங்கும். குங்குமப்பூவாலருச்சித்தால் நவக்கிரகங்களா
லுண்டாகும் பீடை நீங்கும். இவ்வாறு சிந்தியாகமத்திற் கூறப்
பட்டிருக்கின்றது. (109—110.)

(அடை.) புஷ்பத்தின் குணவிசேடமும் அர்ச்சித்தலாலு
ண்டாகும் பயனும் இரண்டரைச் சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௧௧௧||

[illegible] ||௧௧௨||

[illegible] ||௧௧௩||

(111-112) 112½) வெள்ளை ஊமத்தம்பூ, வெள்ளை அரளி, பிச்சி, சிறுசெண்பகம், மகிழம், வெள்ளை மந்தாரம், வெண்டாமறை, வெள்ளைக்கொக்கிறகம்பூ, புன்னை, மருதாணி, வெள்ளெருக்கு, நந்தியாவர்த்தம், மல்லிகை, குடமல்லிகை, தும்பை, முல்லை முதலான வெள்ளைப் புஷ்பங்களனைத்துஞ் சாத்துவித புஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீ மகாதேவருக்கருச்சனை செய்யின் முத்தியுண்டாகும்.

செங்கழுநீர், செந்தாமரை, செவ்வலரி, சிவந்தபட்டி, சிவந்த பாதிரி, சிவந்த பலாசம், செங்கடம்பு முதலிய சிவந்த புஷ்பங்களனைத்தும் இராசத புஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீ மகாதேவருக்கு அருச்சனை செய்யின் போகமுண்டாகும்.

நீலோத்பலம் நீங்கிய ஏனைய கருநிறமுள்ள புஷ்பங்களனைத்தும் தாமத புஷ்பங்களாகும். இவை சிவனை அருச்சித்தற்கு உரியனவாகா.

கொன்றை, சண்பகம், பொன்னூமத்தம், கர்ணிகாரம் முதலான பொன்மயமான புஷ்பங்களனைத்தும் இராசத சாத்விக புஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீ மகாதேவருக்கு அருச்சனை செய்யின் போகம் மோக்ஷம் என்னுமிரண்டும் உண்டாம்.

வில்வபத்திரம், பச்சை, துளசி, வெட்டிவேர், மரு, கொழுந்து, அருகு, கதிர்ப்பச்சை முதலிய புதிய பத்திரங்களனைத்துந் தாமத இராசத பத்திரங்களாகும். இவற்றால் சிவபெருமானுக்கு அருச்சனை செய்யின் போகம் மோக்ஷம் இரண்டுமுண்டாகும். இவ்வாறு அசிதாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றமையாலிம்முறைமையினையறிந்து சிவபெருமானுக்கு அருச்சனை செய்யின் மேற்கூறியவாறு பலனுண்டாகுமென்றறிந்துகொள்க. (111-112-112½)

(அ-கை.) புஷ்ப பலத்தினுடைய தாரதம்மியம் ஒன்றைச் சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]

[illegible]

[illegible Grantha verse]

(113-114) ஸ்ரீ மகாதேவர் தம்முடைய குமாரருக்குத் திருவுளம் பற்றியருளிய ஸ்காந்தம் காலோத்தரம் என்பவற்றினு னும், இன்னும் மகாதேவர் திருவுளம் பற்றியருளிய மகுடாகம வசனங்களினாலும் உண்டான புஷ்ப தாரதம்மியம் வருமாறு.— சாமாந்ய புஷ்பங்களினும் ஒரு அலரி புஷ்பம் அதிகம். அந்த அலரிப்புஷ்பம் ஆயிரத்தினும், ஒரு வெள்ளெருக்கம் புஷ்பம் அதிகம். அதினும் அதிகம் வில்வப்புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், மூன்று கிளையோடு கூடிய ஒரு வில்வம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு வெண்டாமரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தின் அதிகம், நூறு இதழோடு கூடிய ஒரு செந்தாமரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தின் அதிகம் ஆயிரம் இதழோடு கூடிய ஒரு செந்தாமரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தின் அதிகம் ஒரு நாயுருவிப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு தர்ப்பைப்புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு முல்லைப்புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு கண்டங்கத்திரிப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு கொக்குமந்தாரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு ஊமத்தம் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு தும்பைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், சங்கப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு பெருந்தும்பைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு நீலோத்பலபுஷ்பம். அது ஒரு வருடத்திற்கு நிர்மால்யமாவதில்லை. புஷ்பஜாதிக்குள் நீலோத்பலம் அதிகம் பத்திரஜாதிக்குள் மருக்கொழுந்து அதிகம். அதினும் அதிகம், வில்வபத்திர மென்றறிந்துகொள்க.

[illegible Grantha verse]

என்பது சிவபுராணம். இதன்பொருள், எண்ணிறந்த வரு

டங்கள் கங்காஸ்நானஞ்செய்த பலத்தைப் பரமசிவனுக்கு அருச்சித்த ஒரு வில்வதளம் தரும் என்றவாறும். இதனால் வில்வதளத்திற்குச் சமமானதளம் (பத்திரம்) ஒன்றுமில்லையென நன்கு விளங்குகின்றது. எல்லாவற்றிலும் பக்தியாகிய புஷ்பமேவிசேஷம். இவ்வாறு சிவாகமத்தில் கூறப்பட்டிருத்தல் காண்க. இன்னும் புஷ்பதாரதம்யம் சிவாகமங்களில் விரிவாகக் கூறப்பட்டிருப்பதை ஆங்காங்குக்கண்டு கொள்க.

ஸக்ருத்பூஜம் பில்வபத்ரம் ஸ்யாச்சுக்லாயாஸ்துளஸ்யபி ।
ஷண்மாஸமர்க்கபுஷ்பேண கரவீரம் த்ரிநத்ரயம் ॥

(இ—ள்.) வில்வம் வெள்ளைத்துளசி இவ்விரண்டும் ஒருவருடம் பூசைசெய்த பலனையும், எருக்கம்பூ ஆறுமாதம் பூசைசெய்த பலத்தையும், அலரி மூன்றுநாட்கள் பூசைசெய்த பலத்தையும், கொடுக்கும் என்பதாம்-

மகுடாகமத்தில்.

துலஸீ பில்வபத்ரஞ்ச பலாசஞ்ச ஸுவர்ணகம் ।
ப்ரக்ஷால்ய பரமேசாநஸ்ய தேயாநி புந: புந: ॥

(இ—ள்.) துளசி, வில்வம், பலாசம், சுவர்ணபுஷபம், என்னுமிவற்றை ஸ்ரீமகாதேவருக்குச் சாத்தி, மீளமீளக்கழுவி அர்ச்சிக்கலாம் என்பதாம். பஞ்ச வில்வங்களாலும் அர்ச்சிக்கலாம். அவையாவன, வில்வம், கிளுவை, மாவிலங்கு, விளா, நாயுருவி அல்லது நொச்சி என்பன. இவ்வாறறிந்து பூசைசெய்க. ஒவ்வொருநாளும் புதிதான புஷ்பங்களைக் கொய்தல்வேண்டும்.

(113–114.)

(அ–கை.) அருகுதரிப்பதற்கு மந்திரங் கூறுகின்றார்.

தேவி தூர்வே த்வம் ஸஹஸ்ரஸ்ய ஸாம்யே ஸஹஸ்ர உத்தமம்
பாதே । ப்ருதக தேவியா நாநாஜந்மார்ஜிததுஷ்கர்மம்
ஹர ॥ ॥௧௧௫॥

ஸௌபாக்யம் ஸம்பதம் தேஹி மே ஸர்வகாமதே ।

(115) தூர்வாதேவியே ஆயிரங்கால்களையுடையவளே! என்னுடைய சிரசினால் தரிக்கப்பட்டவளாய்க்கொண்டு என்னுடைய அநேக பிறவிகளிலுண்டான பாவங்களைப்போக்கி, எனக்கு

மகா சௌந்தரியத்தையும் மகத்தான ஐசுவரியத்தையுந் தந்து, என்னுடைய சத்துருக்களையெல்லாம் சங்கரிப்பாயாக வென்று சொல்லித் தரித்தல் வேண்டும், (115)

(அ-கை.) விஷ்ணுக்கிராந்தி தரிப்பதற்கு மந்திரங் கூறுகின்றார்.

சுபகராஹை ரயகராஹை விஷ்ணுக்ராந்தை நமோஸ்து
தே । ஶிரஸா தாரயாம்யத்ய ரக்ஷ மாம் த்வம்
தினே தினே ॥ ॥ககசு॥

(116) விஷ்ணுக்கிராந்தியே? யென்றால் சிரசில் தரிக்கப் பட்டவளாய்க்கொண்டு, ஒவ்வொருநாளும் என்னை இரக்ஷிக்க வேண்டும் என்பதாம். (116)

(அ-கை.) காட்டாத்தியைச் சூரியோதய காலத்திற்றரிசித்துத் தெரிவித்துக்கொள்ள வேண்டியதைக் கூறுகின்றார்.

க்ஷுத்ரக மஹாவ்ருக்ஷ வ்ருக்ஷராஜ நமோஸ்து தே ।
ஶுத்தம் மே போஜனம் தேஹி ஶத்ரூணாம் க்ஷயம்
குரு ॥ ॥ககஎ॥

(117) ஓ விருக்ஷராஜனே! உமக்கு நமஸ்காரம். எனக்குச் சுத்தமான போஜனத்தைத் தந்தருளும். சத்துருக்களையும் நாசஞ்செய்வீராக என்பதாம். (117)

(அ-கை.) துளசி கிள்ளுதற்குரிமையில்லாத நாள்களிவை யெனக் கூறுகின்றார்.

ஆதித்யே சந்த்ரவாரே ஸுரகுருதிவஸே பார்கவே ஸப்தம்யாம் த்வாதஶ்யாம் க்ரஹணதினே சௌரிவாரே
...
விஷ்ணோர் ப்ரியாம் துலஸீம் ...
... ॥

(118) ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி, இந்த நான்கு தினங்களிலும், சப்தமி, துவாதசி, சந்திரகிரகணம், சூரிய கிரகணம், திருவோண நக்ஷத்திரம், விடியுங்காலம், சாயுங்காலம்,

ஐந்து பருவங்களாகிய கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி, கிருஷ்ண பக்ஷத்துச் சதுர்த்தசி, அமாவாசை, பவுர்ணமி, மாசப்பிறப்பு ஆகிய இந்நாட்களிலும், விதீபாதயோகம், இரவு ஆகிய இந்தக் காலங்களிலும் புத்திமானானவன் துளசியைக்கிள்ளுதல் கூடாது. புத்தியில்லாமல் கிள்ளினால் விஷ்ணுவினுடைய சிரசைக் கிள்ளிய தோஷமாகும். இவனுக்குப் பிராயசித்தமில்லை.

இதற்கு ஸ்மிருதி வசனம்:—

[illegible]

(இதன் பொருள்.) வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை முதலிய விலக்கப்பட்ட தினங்களிலும், துவாதசியிலும், ஐந்து பர்வ தினங்களிலும், எவர்கள் துளசியைக் கொய்கின்றார்களோ, அவர்கள் விஷ்ணுவினுடைய சிரசைக் கொய்கின்றனர் என்பதாம்.

[illegible]

(இதன் பொருள்.) கையில் கொண்டுவரப்பட்டதும், ஆடையிற் கொண்டுவரப்பட்டதும், பூமியில் விழுந்ததும், ஆமணக்கு எருக்கு இலைகளில் கொண்டுவரப்பட்டதுமான பத்திரமும், புஷ்பமும் பழவகையும் விலக்கத் தகுந்தன. கவனிக்காது கொண்டுவரின் பூஜைக்கு உபயோகப்படா என்பதாம்.

பஞ்ச பர்வத்திற்கு வசனம்,

[illegible]

இதன் பொருள் மேலே கூறப்பட்டிருக்கின்றது. (118)

(அ-கை.) வைதிகாக்கினியை தியானிக்கும் முறை கின்றார்.

[illegible]

க்ஷா வாமே த்ர க்ஷ பஞ்சம் யவித்ரம் ஸவ்யே ஸ்ருஷ்டிதஹஸ்தம் வ தக்ஷிண த்ருவம் ஸ்ருவம் கஹ்வரேஸ்வஸ்ஸி ॥ ௧௧௯ ॥

(119) இரத்தநிறமான உடம்பும், ஒரு கழுத்தும், இரண்டு முகமும், ஆறு கண்ணும், நான்கு செவியும், நான்கு கொம்பும், மூன்றுகாலும், ஏழு நாவும், ஏழு கையும், அவற்றின் வலது பக்கத்தில் சுருக்கு சுருவமும், வேலும், ஜபமாலையும், இடது பக்கத்தில் குந்தாயுதமும், விசிறியும், நெய் பாத்திரமும் உடையதாகவும், ஆட்டின் மேலிருப்பதாகவும் தியானிக்க வேண்டுமென்று சிவாகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. (119)

(அ-கை.) சிவாக்கினியை தியானிக்குமுறை கூறுகின்றார்.

ப்ராயேவேவ ஸம்ஸ்த்ரபநம் த்ரிணயநம் பத்மாஸநஸ்தம் ஜவாரக்தம் பஞ்சவக்த்ரம் ஸஹஸ்ரஸமஸ்ருதம் வெகாநநம் வாஸ்வரம் । ஊர்த்வமூர்த்நோஸ்த்ர ரஸநாத்ர யஜ்ஞநகாத்யாஸ்யம் ஹிரண்யாதிகாஃ வா த்யக்ஷிகே வ த்வேவாஸ்யம் ஹஸ்த பதம் பாலம் த்விவாதம் பூதம் ॥

(120) சிவந்த திருமேனியும், பத்மாசனமும், சிவகுமாரனுடையால் ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும் உடையதாகவும், நடுமுகத்தில் கநகைமுதலிய மூன்று நாக்கும், மேற்கு முதலாகிய நான்கு முகங்களில், இரண்யன் முதலிய நான்கு நாக்கும் இருப்பதாகவும், இரண்டு பாதங்களும், பாலவயதும் உடையதாகவும், முகங்கள் தோறும், மூன்று கண்களிருப்பதாகவும், அல்லது ஒரு திருமுகமும்; நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், அந்தத் திருக்கரங்களில் சத்தியும், ஜபமாலையும் அபயமும், வரப்பிரசாதமும், உடையதாகவும், சிவாக்கினியை தியானிக்க வேண்டும். பாலவயதாகத் தியானிப்பதற்குப் பிரமாணம். காமிகம்:—

வ்ருத்தம் ப்ரதிஷ்டாயாமுத்ஸவே த்ர ஸம்யௌவநம் । தீக்ஷாயாம் பாலரூபந்து த்யாயேதக்நிம் ஶிவாத்மகம் ॥

(இதன் பொருள்.) பிரதிஷ்டாகாலத்தில் விருத்தரூபமாகவும், உத்ஸவகாலத்தில் யௌவனரூபமாகவும், தீக்ஷாகாலத்தில் பாலரூபமாகவும் அக்கினியைப் பாவிக்கவேண்டுமென்பதாம்.

(அ-கை.) ஏழு நாக்கு உண்டென்பதற்குப் பிரமாணம் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] ||கஉக||

(121.) ரக்தை, கநகை, பகுரூபை, சுப்பிரபை, கிருஷ்ணை, அதிரக்தை, ஹிரண்யை, என ஏழு நாக்குக்கள் அக்கினிக்கு உண்டு. அவற்றுள், கிழக்குமுகத்தில் சுப்பிரபையும், தெற்குமுகத்தில் கிருஷ்ணையும், வடக்குமுகத்தில் ரக்தையும், மேற்குமுகத்தில் ஹிரண்யையும், என்றறிந்துகொள்க. நடுமுகத்தில் மூன்று நாக்குஞ்சேர்த்து ஐந்துமுகங்களிலும் ஏழுநாக்குக்கள் உண்டென்பது கண்டுகொள்க. இவ்வாறறிந்து அக்கினிகாரியஞ் செய்யவேண்டும். (121)

(அ-கை.) ஓமஞ்செய்வதற்குரிய முத்திரையைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||கஉஉ||

(122) தனது வலதுகையின் அணிவிரல் கட்டைவிரல்களால் சுருவத்தைப் பிடித்துக்கொள்ளல்வேண்டும். சுண்டுவிரல் குறுகினதாகவும் சுட்டுவிரல் நடுவிரல்கள் உயர்ந்திருக்கவேண்டும். இது ஓமமுத்திரையாகும். (122)

(அ-கை) ஓமத் திரவியங்களைக்கொண்டு ஓமஞ்செய்யும் முறையை மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||கஉங||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௨௪||

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௨௫||

(123-124-125.) சகல ஓமத்திரவியங்களையும், ஓமத்தில் உபயோகிக்கு முறை வருமாறு:— சம்பா நெல்லு, அரிசி, பயர் உழுந்து, கடலை, துவரை, அவரை, கடுகு, கொள்ளு முதலியவற்றை ஐந்து விரல்களால் ஆகுதி செய்யவேண்டும். எள்ளை மிருகீ முத்திரையினாலும், தயிரை குவித்த கையினாலும், ஆகுதி செய்ய வேண்டும். பொறியை ஒரு பிடியால் ஓமஞ்செய்ய வேண்டும். பாயசம், பால், தேன் முதலிய திரவகத்திரவியங்களனைத்தையுஞ் சுருவமென்னும் பாத்திரமெவ்வளவு கொள்ளுமோ, அவ்வளவு பிரமாணம் சுருவத்தாலும், இன்னும் ஏனையதின்னும் பொருள்களை அவை எவ்விதம் இருக்குமோ அவ்விதமே ஒரு பலப்பிரமாணம் பர்வாக்களாலும், அன்னத்தை ஒரு கவள அளவாகவும், பழவகை அனைத்தையும் நாலங்குல அளவாகவும், கிழங்குவகை அனைத்தையும் முஷ்டிப்பிரமாணமாகவும், பணியாரவகையனைத்தையுஞ் சிறிதாகத்துண்டு செய்தும் சந்தனத்தைக் கடலை அளவாகவும், வெல்லம் குங்கிலிய முதலானவற்றை இலந்தைப்பழ விரை அளவாகவும் ஓமஞ்செய்ய வேண்டும். நெய்யை ஒரு கழஞ்சி அளவாகவும், சமித்து, கரும்பு, விறகு, கொடி என்னுமிவற்றை ஒருசாண் அளவாக பதாக முத்திரையினாலும் ஓமஞ்செய்ய வேண்டும். அன்ன முதலியவற்றை சங்க முத்திரையினால் ஓமஞ் செய்யவேண்டும். (123-124-125.)

(அ—கை) ஓமஞ்செய்வதாலுண்டாம் பலனை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

கோவ்ருத்தி: பயஸா க்ருதேந மஹைச்வர்யஞ்ச
ஸிதாதோ யசோ தத்நா ஸர்வஸம்ருத்திரந்நைர்வச்ய
ஸுபோஜநாநி லாஜைர்யச: | வித்தம் ஸ்யாத் ஸதி
லாக்ஷதைஸ்து மதுநாபீஷ்டம் ஹி காச்மீரஜை:
கௌசேயம் ஸுரூபகவிதே ஸ்யா
தாம் ஸதாம்பூலபூகை: || ||௧௨௬||

அம்போஜைர் ந்ருபவச்யதா ந்ருபவதூவச்யா
ஹி நீலோத்பலைஸ் ஸ கைரவைஸ் ஸசிவோ த்வி
ஜாதீநாம் போதிவ்ருக்ஷஸமிதா வச்யோ பவேத் | த்ரோணே
வ்ருஷ்டிநிவாரணம் வஞ்ச்யா வ்ருஷ்டியோ வே
தஸை: புத்ரஜீவாதிபிஸ் ஸர்வ
வச்யாதிகாநு ஸீஜநாநு || ||௧௨௭||

(126—127.) பாலினால் ஓமஞ்செய்தால் பசுக்களுண்டாகும். பசுவின் நெய்யால் ஓமஞ்செய்தால், மகத்தான ஐசுவரியமுண்டாகும். சருக்கரையால் ஓமஞ்செய்தால் கீர்த்தியுண்டாகும், தயிரினால் ஓமஞ்செய்யின் எல்லா விருத்தியுமுண்டாகும். அன்னத்தினால் ஓமஞ்செய்யின் வசியமும், திவ்யான்ன முதலிய சுகபோஜனமு முண்டாகும். பொறியினால் ஓமஞ்செய்யின் அதுவுங் கீர்த்தியைத்தரும். எள்ளும், அரிசியுங்கலந்து ஓமஞ்செய்யின் அதிக தனமுண்டாகும். தேனினால் ஓமஞ்செய்யின் நினைத்த காரியம் சித்தியாகும். குங்குமப்பூவினால் ஓமஞ்செய்யின் திவ்ய வஸ்திரமுண்டாகும். வெள்ளை வெற்றிலையாலும் பாக்காலும் ஓமஞ்செய்தால் நல்ல ரூபமும் கவிதையுமுண்டாகும். தாமரை புஷ்பத்தால் ஓமஞ்செய்யின் ராஜ வசியமுண்டாகும். நீலோத்பல புஷ்பத்தால் ஓமஞ்செய்யின் ராஜஸ்திரீ வசியமாவள். ஆம்பலினால் ஓமஞ்செய்தால் மந்திரி வசியமாவன். அரசின் சமித்து முதலியவற்றால் ஓமஞ்செய்யின் பிராமணர் முதலியவர் வசியமாவர். வறள்வஞ்சியினால் ஓமஞ்செய்யின் மழை விட்டுப்போகும். நீர்வஞ்சியினால் ஓமஞ்செய்யின் மழையுண்டாகும். புத்தளி முதலியவற்றால் ஓமஞ்செய்யின் எல்லாம் வசியமாகும். இவ்வாறு ஓமபலன் அறிந்துகொள்க. (126—127)

(அ-கை.) ஓமத்திரவியம் பதினெட்டின் பெயரைக் கூறுகின்றார்.

[illegible] ॥௧௨௮॥

(128) ஓமத்திரவியம் பதினெட்டாவன:— விறகு, நெய், பால், தயிர், துவரை, பொறி, கடுகு, சமித்து, பயர், பணியாரம், வெல்லம், பொறிமா, தேன், குழைச்செந்நெல், உழுந்து, சம்பா நெல், எள்ளு, சருவாகிய அமுது என்பன. இவை தவிர ஏனைய பதார்த்தங்களும் ஓமத்திற்காகும். இவ்வாறு ஓமத்திரவியம் அறிந்துகொள்க. (128)

(அ-கை.) அக்கினியினுடைய அவயவத்தைக் கூறுகின்றார்.

[illegible] ॥௧௨௯॥

(129) ஓமஞ்செய்யும் அக்கினிகுண்டத்தில் விறகாக இருக்குமிடம் செவி. அதில் ஓமஞ்செய்தால் வியாதி யுண்டாகும். புகையாக இருக்குமிடம் மூக்கு. அதில் ஓமஞ்செய்தால் துக்கமுண்டாகும். சிறிது எறிகிறயிடம் கண்கள். அதில் ஓமஞ்செய்தால் தான் இருக்கும் ஊருக்கு அக்கினியினால் கெடுதல் உண்டாகும். தணலாயிருக்குமிடம் சிரசு. அதில் ஓமஞ்செய்தால் துக்கம் நேரிடும். ஆகையால் அக்கினியினுடைய சுவாலையாகிய சிகையில் ஓமஞ்செய்ய வேண்டும். (129)

(அ-கை.) அக்கினி லக்ஷணத்தைக்கொண்டு சிஷ்யனுடைய சுபாசுப லக்ஷணம் அறியும்படி நான்கு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௩௰||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௩௧||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௩௨||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௩௩||

(130--133) குண்டத்தில் அக்கினியிலக்கணம் ஆறு வகையாகக் கூறப்படும். அவையாவன, வர்ணம், சப்தம், கந்தம், சுவாலை, தூமம், சரணம் என்பன. அவற்றுள், வர்ணமாகிய நிறம் பதினொரு வகைப்படும். சப்தம் ஐந்து வகைப்படும். கந்தமாகிய பரிமளம் பதின்மூன்று வகைப்படும். சிகையாகிய சுவாலை ஐந்து வகைப்படும். தூமமாகிய புகை, நான்கு வகைப்படும். சரணமாகிய கதிபேதம் பன்னிரண்டு வகைப்படும். ஆக இவ்வாறு அக்கினி இலக்கணம் ஐம்பது வகைப்படுமென அறிந்துகொள்க.

இவ்வாறு தீப்தாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. காலோத்தரம் என்னும் உபாகமத்தில் இன்னும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இனி சிஷ்யலக்ஷணம் அறியுமுறை வருமாறு:— பிராமணக்கொலை, ஆசிரியக் கொலை, குருவின் மனைவியைப் புணர்தல், பசுவைக் கொல்லுதல், செய்நன்றி மறத்தல், கள்குடித்தல் என்னும் இந்தப் பாவங்களைச் செய்தவனுக்கு அக்கினி கருமை நிறமுடையதாயிருக்கும். பூமியைத்திருடினவனுக்கு அக்கினி அசுத்த வாசனையுடையதாயிருக்கும் தன்னுடைய தலைவனைக்கொலை செய்தவனுக்கு அக்கினி பிண வாசனையுடையதாயிருக்கும். மகளிரைக்கொன்றவனுக்கு அக்கினி பிரமித்தலையுடையதாயிருக்கும். சுவர்ணத்தைத் திருடினவனுக்கு அக்கினி நடுங்கும். சிசுக்கொலை செய்தவனுக்கு அக்கினி துடிக்கும் கருப்பத்தைக் கெடுத்தவனுக்கு அக்கினி காந்தியில்லாதிருக்கும். இவ்வாறன்றி, உச்சித்திலத முதலிய புஷ்பத்தின் நிறம்போலும், இந்திரகோபப் பூச்சியின் நிறம்போலும், அக்கினி சிவந்திருந்தால் தீக்ஷை பெற்றுக்கொள்பவனுக்கு மிகுந்த நன்மை உண்டு. கற்பூரம், அகில், சந்தனம், கஸ்தூரி முதலிய நல்ல வாசனையுண்டாயின் சிஷ்யன் சுகியாயிருப்பான் வீணை முதலிய இனிய சப்தமுண்டாயின் சிஷ்யன் இம்மையிலும் மறுமையிலும் உத்தமனாக இருப்பான். அக்கினியின் சுவாலையானது கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு, நடு என்னும் இந்தத் திக்குகளில் சாய்ந்திருந்தால் சிஷ்யன் பெரிய தனவானாக இருப்பான். புகை வெளுத்திருந்தால் சிஷ்யன் இராஜாவாக இருப்பான். அக்கினியினுடைய குறிகளைக்கொண்டு சிஷ்யனுடைய இலக்கணங்களையறிந்து, நல்லாசிரியன், சிஷ்யனுக்குத் தீக்ஷை செய்துவைக்க வேண்டும். அக்கினியின் குறிகள் பொல்லாதனவாயிருந்தால் பிராயச்சித்தஞ்செய்து தீக்ஷை செய்துவைக்க வேண்டும்.

(130–133)

(அ-கை.) பஞ்சாசன இலக்கணம் இரண்டுசுலோகங்களாற் கூறுகின்றார்.

ஶம்போ⁴ரநந்தாஸநஞ்சைகம் ப்ரோக்தோऽநந்தஸ் த்ரிகோ
ணகஃ ஸிம்ஹாஸநம் சதுரஶ்ரகம் ததா² சது
ஶ்ரம் யோகாஸநம் | பத்³மம் வ்ருத்தமிதி ஷட³ஶ்ரம்
ஸ்நாநே து ஸிம்ஹாஸநம் அநந்தம் பட வஸ்த்ராதி³
யஜேந் த்வாநந்த ப்ரஹே நிர்மலம் || ||௧௩௪||

ஆதா⁴ராஸநமாரப்⁴ய அநந்தாஸநமுச்யதே
த⁴ர்மாத்³யூர்த்⁴வச்ச²த³நாந்தகம் ஸிம்ஹாஸநம்
உச்யதே | கந்தா³த் க்³ரந்தி²பர்யந்தம் யோகா³ஸநம்
உக்தம் உபதளாத் கர்ணிகாந்தம் பத்³மாஸநம் கர்ணிகா
விமலம் ஸர்வம் ஶிவாஸநம் உதீ³ரிதம் || ||௧௩௫||

(134-135) சம்புவாகிய ஸ்ரீ மகாதேவருக்கு அனந்தாசனம், சிங்காசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என ஐந்து ஆசனங்கள் உண்டு. அவற்றுள் அனந்தாசனம் மூன்று கோணமுடையது. சிங்காசனம நாலு கோணமுடையது. யோகாசனமும் நான்கு கோணமுடையது பத்மாசனம் வட்டமாக விளங்குவது. விமலாசனம் ஆறு கோணமுடையது. இந்தப் பஞ்சாசனங்களுள், அபிஷேக சமயத்தில் அனந்தாசனம், சிங்காசனம் இரண்டும் பூஜிக்கவேண்டும். பரிவட்டம், உத்தரீயம், திருவாபரணம், புஷ்பம், சந்தனம் முதலியன அணியும்பொழுது யோகாசனமும், பத்மாசனமும் பூஜிக்கவேண்டும். அனுக்கிரகஞ் செய்யும் பூஜை சமயத்தில் விமலாசனம் பூஜிக்கவேண்டும். இவ்வாறு பஞ்சாசனம் பூஜிக்குமுறை அறிந்துகொள்க. இந்தப் பஞ்சாசனமும் சிவாசனத்துள் அடக்கமாகும். எவ்வாறெனில், ஆதாரசக்திமுதல் அனந்தார்ச்சனை முடிவாக அனந்தாசனம். தர்மமுதல் ஊர்த்துவச்சதந முடிய சிங்காசனம். கந்தமுதல் கிரந்தி முடியயோகாசனம். உபதளமுதல் கர்ணிகைவரை பத்மாசனம். கர்ணிகை விமலாசனம் என்க. இவ்வாறு ஐந்தாசனமுஞ்சிவாசனத்துள் அடங்குமுறையை அறிந்து சிவபூஜை செய்யவேண்டும். யோகஜம் என்னும் சிவாகமத்தில் இவ்வாறு ஆசன இலக்கணம் சொல்லப்பட்டிருக்கின்றது. (134-135)

(அ-கை) சோடசோபசாரத்தைப்பற்றி கூறுகின்றார்.

[illegible] ||௧௩௬||

(136) சிவார்ச்சனைக்குரிய உபசாரம் பதினாறு வருமாறு:- பாத்யம், ஆசமனீயம், அர்க்கியம், துவாரபூஜை, அபிஷேகம், ஆசனமூர்த்தி மந்திரத்தால் அருச்சித்தல், ஆவாகனம், சந்தன முதலியன சமர்ப்பித்தல், நைவேத்தியஞ் சமர்ப்பித்தல், தூபஞ் சமர்ப்பித்தல், தீபஞ்சமர்ப்பித்தல், நித்தியாக்கினி காரியஞ் செய்தல், திருக்கரத்தில் சுளுகோதகத்தை (உள்ளங்கை ஜலத்தை) வார்த்தல், தோத்திரஞ்செய்தல், பராமுகார்க்கியங் கொடுத்தல், சண்டேஸ்வர பூஜை என உபசாரம் பதினாறுங்கண்டு கொள்க.

(அ-கை) இனி பஞ்சோபசாரத்தைப் பற்றிக் கூறுகின்றார்

[illegible] ||௧௩௭||

(137) கிழங்கு, மூலம், பலம், சந்தனம், புஷ்பம், அமுது முதலாயின பார்த்திப (பிருதிவி) உபசாரம். பால், தயிர், திருமஞ்சனம், சர்க்கரை, வஸ்திரம் முதலியன ஜலமயமான உபசாரம். நெய்த்தீபம், ஆபரணம், ரத்தினம் முதலியன அக்கினி சம்பந்தமான உபசாரம். தூபம், சாமரம் முதலியன வாயுசம்பந்தமான உபசாரம். மணி, கீதம், முகவீணை முதலியன ஆகாச சம்பந்தமான உபசாரம். இவ்வாறு பஞ்சோபசாரங்கண்டு கொள்க.

(அ-கை) மாசபூஜாவிதியைப்பற்றிக் கூறுகின்றார்.

[illegible]

ஸகலம் தேவதேவஸ்ய ஸ்நபநம் । ஜ்யேஷ்டே ராஜி மஹா
த்ரயம் ஸர்வ பஞ்சக்ஷீரம் வி கா ஶ்ராவணே மாஸே
ஸம்பூர்ணே வாராஞ்சநம் தீபாவளிநம் கார்த்திகே ॥

(138) பன்னிரண்டு மாசத்திற்கும் மாசபூஜை வருமாறு மார்கழி மாதத்தில் நெய்யபிஷேகம். தை மாதத்தில் தேனபிஷேகம். மாசி மாதத்தில் நெய்க்கம்பளம். பங்குனி மாதத்தில் வடிக்கட்டின பசுந்தயிர். சித்திரை மாதத்தில் மருக்கொழுந்து. வைகாசி மாதத்தில் சந்தனம். ஆனி மாதத்தில் முப்பழம். ஆடி மாதத்தில் திரட்டிப்பால். ஆவணி மாதத்தில் எள்ளுஞ்சர்க்கரையும். புரட்டாசி மாதத்தில் பணியாரம். ஐப்பசி மாதத்தில் சம்பா அன்னம். கார்த்திகை மாதத்தில் தீபவரிசை. இவ்வாறு பன்னிரெண்டு மாசத்திலும் மாசபூஜை செய்யவேண்டும். (138)

(அ-கை.) இரத்நலிங்கம் எட்டு விதமென்று கூறுகின்றார்.

லிங்கம் ரத்நஜமஷ்டதா ப்ரோக்தம் வஜ்ரமாணிக்யஜம்
வைடூர்யம் ஸ்படிகப்ரவாளஜமிந்த்ரநீலஜம்
கோமேதகம் । ஶத்ருஜிச்ச வித்யாஶ்ரியம்
ஸுதம் ஸர்வஸித்திதா ஸௌபாக்ய ஸர்வவஶ்யம் த
நலிங்கே ஸௌபாக்யம் போகஸித்திதம் ॥ ॥௧௩௯॥

(139.) இரத்நலிங்கம் எட்டு விதமாகும். அவையாவன, வச்சிரலிங்கம், மாணிக்கலிங்கம், வைடூரியலிங்கம், ஸ்படிகலிங்கம், பவளலிங்கம், இந்திர நீலலிங்கம், கோமேதகலிங்கம், மரகதலிங்கம் என்பன. இந்தலிங்கங்களுள், வச்சிரலிங்கத்தைப் பூசித்தால் சத்துருஜயமுண்டாகும். மாணிக்கலிங்கத்தைப் பூஜித்தால் ஐசுவரியமுண்டாகும். வைடூரியலிங்கத்தைப் பூஜித்தால் நல்லபுத்திரன் உண்டாவன். ஸ்படிகலிங்கத்தைப் பூஜித்தால் சகலவிருத்தியுமுண்டாகும். பவளலிங்கத்தைப்பூஜித்தால் சகலவசியமும் உண்டாகும். இந்திர நீலலிங்கத்தைப்பூஜித்தால் தனம் உண்டாகும். கோமேதகலிங்கத்தைப் பூஜித்தால் அழகுண்டாகும். மரகதலிங்கத்தைப்பூஜித்தால் நல்லபோகமுண்டாகும். இவ்வாறு சிந்தியவிசுவமென்னும் ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. (139)

(அ-கை.) உலோகலிங்கம் எட்டுவிதமென்று கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥கசO॥

(140.) உலோகலிங்கம் எட்டு விதமாகும். அவையாவன, சுவர்ணலிங்கம், வெள்ளிலிங்கம், செம்புலிங்கம், வெண்கலலிங்கம், துத்தநாகலிங்கம், ஈயலிங்கம், அரக்குலிங்கம், இரும்புலிங்கம் என்பன. இந்தலிங்கங்களுள், சுவர்ணலிங்கத்தைப்பூஜித்தால் சம்பத்துண்டாகும். வெள்ளிலிங்கத்தைப்பூஜித்தால் ஆசாக்ஷியுண்டாகும். செம்புலிங்கத்தைப்பூஜித்தால் நல்லபுத்திரன் உண்டாவன். வெண்கலலிங்கத்தைப்பூஜித்தால் ஜனங்களுடைய விரோதமுண்டாகும். துத்தநாகலிங்கத்தைப்பூஜித்தால் உச்சாடனமுண்டாகும். ஈயலிங்கத்தைப்பூஜித்தால் வியாதியுண்டாகும். பித்தளைலிங்கத்தைப்பூஜித்தால் ஆயுள் உண்டாகும். இரும்புலிங்கத்தைப்பூஜித்தால் மரணமுண்டாகும். இவ்வாறு உலோகலிங்கங்களும் அவற்றைப்பூஜிப்பதாலுண்டாம் பலன்களும் அறிந்துகொள்க. (140)

(அ-கை) க்ஷணிகலிங்கம் பதினாறுவிதமென்று மூன்று சுலோகங்களினாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥கசக॥

[illegible]
[illegible]
[illegible]

[illegible] ||கசஉ||

[illegible] ||கசங||

(141-142-143.) க்ஷணிகலிங்கம் பதினாறு வகைப்படும். அவையாவன, மணல்லிங்கம், அரிசிலிங்கம், அன்னலிங்கம், மண்லிங்கம், கோமயலிங்கம், வெண்ணெய்லிங்கம், பழலிங்கம், மாவுலிங்கம், சந்தனலிங்கம், தெற்பைலிங்கம், விபூதிலிங்கம், உருத்திராக்கலிங்கம், புஷ்பமாலாலிங்கம், சர்க்கரைலிங்கம், அப்புலிங்கம், தளிர்லிங்கம் என்பன. இந்தலிங்கங்களுள், மணல்லிங்கத்தைப்பூஜித்தால் முத்தியுண்டாகும். அரிசிலிங்கத்தைப் பூஜித்தால் போகமுண்டாகும். அன்னலிங்கத்தைப் பூஜித்தால் ஆயுள் உண்டாகும். மண்லிங்கத்தைப் பூஜித்தால் ஆத்மசுத்தியுண்டாகும். கோமயலிங்கத்தைப் பூஜித்தால் வியாதியில்லை. வெண்ணெய்லிங்கத்தைப் பூஜித்தால் சரீரதிடமுண்டாகும். பழலிங்கத்தைப் பூஜித்தால் சௌக்கியமுண்டாகும். மாவுலிங்கத்தைப் பூஜித்தால் இஷ்டசித்தியுண்டாகும். சந்தனலிங்கத்தைப் பூஜித்தால் வீரியமுண்டாகும். தெற்பைலிங்கத்தைப் பூஜித்தால் தேஜசுஉண்டாகும். விபூதிலிங்கத்தைப் பூஜித்தால் பாக்கியமுண்டாகும். ருத்திராக்கலிங்கத்தைப் பூஜித்தால் பாவம் நீங்கும். புஷ்பமாலாலிங்கத்தைப் பூஜித்தால் உருத்திரசாரூப்பியபோகம் உண்டாகும். சர்க்கரைலிங்கத்தைப் பூஜித்தால் சந்தோஷமுண்டாகும். அப்புலிங்கத்தைப் பூஜித்தால் சாம்ராஜ்யமுண்டாகும். தளிர்லிங்கத்தைப் பூஜித்தால் நல்லகுணமுண்டாகும் என்க. இந்தலிங்கங்களைத்தவிர க்ஷணிகலிங்கம் இன்னும்பலவுண்டு. இவற்றுள், மணல்லிங்கம், அன்னலிங்கம், அரிசிலிங்கம், என்னும் மூன்றும் பிராமணசைவர்கள் பூசித்தற்கு உரியன. மண்லிங்கம்,

கோமயலிங்கம், வெண்ணெய்லிங்கம் என்னும் மூன்றும், க்ஷத்தி ரியசைவர்கள் பூஜித்தற்கு உரியன. பழலிங்கம், மாவுலிங்கம், சந்தனலிங்கமென்னும் மூன்றும் வைசியசைவர்கள் பூஜித்தற்கு உரியன. தெற்பைலிங்கம், புஷ்பமாலாலிங்கம், சர்க்கரைலிங்கமென்னும் மூன்றும் நான்காவது சைவரான வேளாளர்முதலியோர் பூஜித்தற்கு உரியன. ஏனையலிங்கங்கள் அனைவரும் பூசித்தற்கு உரியனவாதலின் பொது. இவ்வாறு அம்சுமான் ஆகமத்திலும், காரணாகமத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.(141-142-143.)

(அ—கை.) பாணலிங்க இலக்கணம் மூன்றுசுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||கச௪||

[illegible] ||கச௫||

[illegible] ||கச௬||

(144-145-146.) பாணலிங்கத்தின் உற்பத்திவருமாறு:— பாணாசுரனென்னும் அரசனானவன், பலசாஸ்த்திரங்களையும், புராணங்களையும் பெரியோர்கள் வாயிலாகக்கேட்டுவரும் பொழுது, ஒருதினம் சிவலிங்கத்தின் மகிமையைக்கேட்டான். கேட்ட

து முதல் வேறொன்றையும் கேளாமல் சிவபூஜைசெய்யவேண்டு மென்னும் அன்பின் மிகுதியால், சிவபெருமானை நோக்கி அநேக காலம் தவம்செய்தான். அந்தத்தவத்திற்குச் சிவபெருமான் இரங்கி அவனுக்கு வெளிப்பட்டுத்தோன்றி என்னவேண்டும் என்று அவனைக்கேட்டருள, அப்பொழுது அந்தப்பாணாசுரன், ஆயிரஞ்சிரசும், இரண்டாயிரங்கைகளும் இருப்பதினாலும், சிவபூஜை செய்ய வேண்டுமென்பதில் மிகுந்த விருப்பம் இருப்பதினாலும், பதினன்குலோகங்களையும் ஆளவேண்டுமென்னும் ஆசையினாலும், பதினன்குகோடி சிவலிங்கம் வேண்டுமென்று கேட்டான். அப்பொழுது, சிவபெருமான் இமயமலைக்குச் சமீபத்தில் உள்ள கங்கைக்கரையிலிருந்து தம்முடைய பிரமதகணங்களைக்கொண்டு, சிவலிங்கங்களை யெடுத்துவரச்செய்து, பாணாசுரனுக்குக்கொடுத்து, சிவபூசைசெய்யும்படி கட்டளையிட்டுக் கைலாசத்திற் கெழுந்தருளினார். பின்னர், பாணாசுரன் அவ்வாறே சிவபூஜைசெய்து, அந்த அரசபோகங்களையெல்லாம் அநேககோடி காலம் அனுபவித்து, அதன் பின்னர் சிவபெருமான் திருவுள்ளப்படி அந்தப் பதினன்குகோடி சிவலிங்கங்களையும் ஸ்ரீசைலத்திலும், கங்காநதியின் மத்தியிலும், நீலகண்ட நேபாளமுதல் முக்கிய தலங்களிலும், யமுனாநதியினுடைய மத்தியிலும், மற்றும் புண்ணிய நதியினுடைய மத்தியிலும், கன்னியாகுமரியிலும் வைத்தான். அந்தலிங்கங்களுள், இப்பொழுது காணப்படுவனபல. அவற்றுள், உத்தமமானலிங்கம் எனக்கொள்ளத்தக்கது எந்தலிங்கமெனில், ரேகையாகிய கீறலும், பிந்துவாகிய வட்டமும், களங்கமாகிய கருப்பும், மிகுந்தகனமும், பலவர்ணங்களாகிய சித்திரங்களும், உச்சிக்குழியும், பருக்கைக்கல்லும், பக்கத்தழும்பும், வெடிப்பும் என்னும் குற்றங்களில்லாமல், லிங்கத்திற்கமைந்த ஆவுடையாளுடன் நீர்க்குமிழிபோல வெங்கும் உருண்டையாகவும், கருநாவற்பழம் போல் கருப்பாகவும், பார்வைக்குப் பிரியமாகவும் உள்ளதாய் தன்னுடைய ஆசாரியர் கையினாலே தரப்பட்ட பாணலிங்கம் உத்தமோத்தமமென்று அறிந்துகொளக. இவ்வாறு காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. **(144-145-146)**

(அ-கை.) ரசலிங்கமகிமை மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௪௭||

[illegible]
[illegible]

[illegible]
[illegible] ||௧௪அ||

[illegible]
[illegible]

[illegible]
[illegible] ||௧௪௯||

147-148-149.) ரசத்தினால் செய்யப்பட்ட சிவலிங்கத்தின் பெருமையை வாதுளாகமத்திற் கூறியவாறுபோல் வேறெந்த ஆகமத்திலும் கூறவில்லை. அந்தப்பெருமை வருமாறு:–ரசலிங்கத்தைத்தரிசித்த அப்பொழுதே சகல பாபங்களும் நீங்கும். இந்த லிங்கத்தை இரண்டு அல்லது மூன்று நாள் பூஜைசெய்தமாத்திரத்தில் சகல ஐசுவரியங்களும் வரும். அந்தலிங்கத்தில் செய்த ஒருநாள் பூஜை நினைத்த இஷ்டகாமியசித்தியைக் கொடுக்கும். இன்னும் அந்தலிங்கத்தினுடைய ஒருநாள் பூஜையானது மூன்று லோகங்களிலும் எவ்வளவு சிவலிங்கம் உண்டோ அவ்வளவு சிவலிங்கங்களையும் பூசித்தால் எவ்வளவு பலன்களுண்டோ அவ்வளவு பலன்களையுந்தரும். ரசலிங்க பூஜையானது பிராமணக்கொலையாகிய தோஷத்தைப் போக்கும். அந்த லிங்கத்தைப் பார்த்த மாத்திரத்தில் பசுக்கொலைமுதலிய மகாபாவங்கள் நீங்கும். இவ்வாறு ரசலிங்கத்தின் பெருமை அறிந்துகொள்க. (147-148-149.)

(அ–கை.) சுயம்புலிங்கத்தின் பெருமையை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]

[illegible] ॥ ௧௫௦ ॥

[illegible] ॥ ௧௫௧ ॥

(150-151.) சுயம்புலிங்கம் மூன்று வகையாகும். அவற்றின் உற்பத்தி வருமாறு:—அனந்தருடைய அளவற்றசிரசுகள் அசைதலால் காலாக்கினி ருத்திரருடைய கோபாக்கினியில் நின்றும் மூன்று தீப்பொறிகள் உண்டாயின. அந்தத்தீப்பொறிகள் மூன்றும் நிர்மூலம், சமூலம் என்பது முதலியபெயரால் மூன்று லிங்கங்களாயின. அவற்றுள், நிர்மூலலிங்கம் ஜலத்துளிருப்பது. சமூலலிங்கம் பூமியில் மலையை ஆதாரமாகவுடையது. இந்தலிங்கம் ஆப்தவாக்கியங்களால் அறியப்படும். ஏனையலிங்கம் மண்முதலியவைகளினின்றும் உண்டாயிருப்பது. இவ்வாறு சுயம்புலிங்கம் மூன்றுவிதமாகும். இதன்மகிமை பலவாறாக இருக்கு மாதலின் எவ்வாறு வருணிக்கமுடியும். இவ்வாறு காமிகத்தில் கூறப்பட்டிருக்கின்றது. (150-151.)

(அ-கை.) தத்துவம், மூர்த்தி, பிரபாவம், என்னும் இவைகளைக் கூறுகின்றார்.

[illegible] ॥ ௧௫௨ ॥

(152.) வாதுளாகமத்தில் தத்துவமென்றும், மூர்த்தியென்றும், பிரபாவமென்றும் மூன்று வகையாகக்கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள், தத்துவம் நிஷ்களரூபமாய் இருப்பது. மூர்த்தி சகளமாய் இருப்பது. பிரபாவம் இவ்விரண்டின்சேர்க்கை. மூர்

த்தியானது இருபத்தைந்தாகிதமாய்ப் பரமசிவனுடைய சொரூபமாக இருக்கின்றது. (152)

(அ-கை.) வியக்தலிங்கம், அவ்வியக்தலிங்கம், வியக்தாவியக்தலிங்கம் என்னும் மூன்றுலிங்கங்களின் இலக்கணங் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௫௩||

(153). மகேசுவரரிடத்திலிருந்து தோன்றிய சந்திரசேகரர் முதலான இருபத்தைந்து விக்கிரகங்களும் வியக்தலிங்கமாகும். நிட்களலிங்கம் அவ்வியக்தமாகும். இது சிவன் என்னும் பெயருடையது. ஆவுடையாரும் லிங்கமுமாக விளங்குவது வியக்தாவியக்தலிங்கமாகும். இது சாதாக்யமெனப்படும். சில ஆகமங்களில் ஸ்தண்டில லிங்கத்தையும் வியக்தாவியக்தலிங்கமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்தண்டிலமென்பது—தரை. இவ்வாறு வாதுளாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. (153)

(அ-கை:) இருபத்தைந்து விக்கிரகங்கள் இவையென இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௫௪||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௫௫||

(154-155.) இருபத்தைந்து விக்கிரகங்களாவன:—சந்திரசேகரர், உமாசகாயர், இடபாரூடர், நிருத்தர், கல்யாணசுந்தரர், அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்த்திரங்கொடுத்தவர், பிச்சாடனர், காலனை உதைத்தவர், திரிபுரசங்காரர், சலந்தராசுரனைக் கொன்றவர், யானையைக் கொன்றவர், வீரபத்திரர், விஷ்ணுபாதியாகவுடையவர், உமைபாதியாகவுடையவர், வேடரூபர், கங்காளர், சண்டேசுரர், நீலகண்டர், மகாவிஷ்ணுவுக்குச் சக்கரங்கொடுத்தவர், விக்கினேஸ்வரனுக்கு அனுக்கிரகஞ்செய்தவர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, அக்கினிஸ்தம்பர் என்பன. சிவபெருமானுக்கு இன்னும் அநேக விக்கிரகபேதங்கள் உண்டு.

(அ-கை.) பஞ்சசாதாக்கியத்தைப் பற்றிக்கூறுகின்றார்.

ஸாதாக்யம் பஞ்சதா ப்ரோக்தம் தச்ச ஸம்ஸ்தி-
தம் வாதுலோத்தமே தத்ர சிவாக்யம் ததா-
மூர்த்தாக்யம் ச மூர்த்தகம் । கர்த்ராக்யம் ச
கர்மஸாதாக்யம் ததா ஸாதாக்யம் தேஷாம்
ஜந்மாதி ஞானக்ரியா சக்தி ஸம்பவம் ॥ ॥௧௫௫॥

(156.) ஐந்து சாதாக்கியமாவன:—சிவசாதாக்கியம், அமூர்த்தசாதாக்கியம், மூர்த்தசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கர்மசாதாக்கியம் என்பன. இவற்றிக்கு உற்பத்தியும், சிவம் முதலிய பெயர்களும், ஞானம் கிரியை என்னும் சத்திகளால் ஆயினவென்றும், இந்த ஐந்து சாதாக்கியங்களும் லிங்கமும் ஆவுடையாரும் கூடிய கூட்டமென்றும் வாதுளாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (156)

(அ-கை.) சிவபூஜையின் தாரதம்மியத்தைக் கூறுகின்றார்.

பூஜாயாமபி தாரதம்யமஸ்தி தத்ர
ஹ்ருத் பத்மே ...
... । ...
... ॥ ॥௧௫௭॥

(157.) தன்னுடைய இருதயகமலத்தில் அந்தரியாகமாகச் செய்யும் சிவபூஜையானது எல்லாப்பூஜைகளினும் மேலானது.

மண்டலபூஜை, அதினும் அதிகம். க்ஷணிகலிங்கபூஜை, மண்டலபூஜையினும் மேலானது. பழலிங்கபூஜை க்ஷணிகலிங்கபூஜையினும் மேலானது. ஆடையில் வரையப்பெற்ற சித்திரலிங்க பூஜை அதினும் அதிகம். சுவரில் வரையப்பெற்ற சித்திரலிங்க பூஜை அதினும் அதிகம். விம்பபூஜை அதினும் அதிகம். சிவலிங்கபூஜை அதினும் அதிகம். நிஷ்களபரசிவபூஜை அதினும் அதிகம். இவ்வாறு அம்சுமான் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (157

(அ-கை.) வீக்ஷணம் முதலிய நான்கு சமஸ்காரங்களின் பலனைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௫௮ ॥

(158) வீக்ஷணமாவது, சிவனுடைய பார்வை. இதனால் சூரியன் அக்கினி யென்னுமிவற்றின் உருவமான சிவனுடைய கண்களால், உலருதலும் தகனமும் ஏற்படுகின்றன. புரோக்ஷணமாவது, சந்திரவடிவாகிய சிவனுடையகண்ணால், அமிர்தப் பிரவாகம் பூரணமாக உண்டாதல். தாடனமாவது, அமிர்தத்தில் உள்ள ஜீவிப்பிக்கும் சக்தியை உண்டுபண்ணுதல். அப்யுக்ஷணமாவது ஈசுவரன் அங்கீகரிக்கும்பொழுது அங்கீகரிக்கப்படும் பொருளுக்குச் சுத்தத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாதல். இவ்வாறு வீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்யுக்ஷணம் என்னும் நான்கு சமஸ்காரங்களும் அவற்றின் பலன்களும் அறிந்துகொள்க. (158)

(அ-கை.) அங்கம் பிரத்தியங்கம் முதலியவை இவையெனக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] ॥கருகூ॥

(159) சிரசு, முகம், இருதயமென்னும் மூன்றும் அங்கமாகும். கழுத்து, மார்பு, தனங்கள், வயிறு, தோள்கள், இடுப்பு, தொப்புள், கண்கள், மூக்கு, காதுகள், கால்கள், கைகள் என்னும் இவை பிரத்தியங்கமாகும். இந்தப்பிரத்தியங்கங்களிலுள்ள ஆயுதங்கள் சாங்கமாகும். மாலை, பரிவட்டம், திருவாபரணம், திருவாசி, அலங்காரம், ஆராதனம் முதலியன உபாங்கமாகும். இவ்வாறு வாதுள சுத்தாக்கியை என்னும் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (159)

(அ-கை.) நித்தியாக்கினி காரியம் எட்டுச் சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥கசுo॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥கசுக॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥கசுஉ॥

[illegible]
[illegible]

[illegible] ॥௧௬௩॥

[illegible] ॥௧௬௪॥

[illegible] ॥௧௬௫॥

[illegible] ॥௧௬௬॥

[illegible] ॥௧௬௭॥

(160-167) சிவபூஜா சமயத்தில் சிவபெருமானுக்கு நைவேத்தியஞ்சமர்ப்பித்து தாம்பூலம் நிவேதித்து, தூபம், தீபம், ஆராத்திரிகம், கண்ணாடி, குடை, சாமரம், விசிறி, பனையோலை விசிறி, முதலியன பாதமுதல் சிரசு வரையும், சிரசுமுதல் பாதம் வரை

யும் மர்றிச்சமர்ப்பித்து, பின்னர் தோத்திரம், நமஸ்காரம், பிரதக்ஷிணங்கள் செய்து அதன்பின்னர் அக்கினி காரியம் செய்வதாக சிவனிடத்தில் விஞ்ஞாபனஞ்செய்து, அனுஞ்ஞை பெற்றுக்கொண்டு, அதன்பின்னர் சாமான்னியார்க்கிய பாத்திரத்தை வலதுகையில் வைத்துக்கொண்டு, ஓமக்த்ரானத்திற்கு அருகிற்சென்று வடக்குமுகமாக ஆசனத்திலிருந்து தனக்கு வலப்பக்கத்தில் சாமான்னியார்க்கிய பாத்திரத்தை வைத்துவிட்டு,குண்டமத்தியில் ஒரு தருப்பையினால் வடக்கு நுனியாக மூன்று ரேகையும்,கிழக்கு நுனியாக ஒரு ரேகையும் அஸ்திர மந்திரத்தால் கீறல் வேண்டும். பின்னர், அக்ஷபாடனார்த்தமாகத் தருப்பைகளை அஸ்திர மந்திரத்தால் நன்றாக விரித்து, பார்வதி பரமேஸ்வாருக்கு ஆசனமாகக் கூர்ச்சம் வைத்து, அதில் வாகீசுவரீ வாகீசுவரர்களை ஆவாகனஞ் செய்து பூஜித்து, அதன் பின்னர் அக்கினி திக்கில் அக்கினியை வைத்து இராக்ஷசாம்சமாக ஒரு அக்கினித்துண்டு யெடுத்து நிருதி திக்கில் போட்டுவிட்டு, நிரீக்ஷணம் முதலிய நான்கு சுத்திகள் செய்து, ஒரு புஷ்பத்தால் தாடனம் பண்ணி அக்கினி சைதன்னியத்தை வாங்கி, தன்னுடைய ஜாடராபைந்தவாக்கினியுடன் சேர்த்து, மீளபாத்திராக்கினியுடன் சேர்த்து சம்மிதா மந்திரங்களால் அர்ச்சித்து, ரக்ஷாவகுண்டன தேனுமுத்திரை கொடுத்து, ஹிருதய மந்திரத்தாலருச்சித்து, அக்கினியை இரண்டு கைகளினாலும் எடுத்து, குண்டத்தின்மேல் மூன்றுமுறை வலமாகச் சுற்றி, தனக்கெதிரில் உள்ள குண்டத்துக்குள்ளே யிட்டு, பாத்திரத்தைக் கவிழ்த்து வைக்கவேண்டும்.

பின்னர் வாகீசுவரர், வாகீசுவரிக்கு ஆடை தரித்ததாகப் பாவித்து, சௌசஆசமனத்தின் பொருட்டு அர்க்கிய ஜலத்தை ஹிருதய மந்திரத்தால் மூன்று முறை கொடுத்து, அஸ்திர மந்திரத்தால் விறகுகளைக்கொண்டு அக்கினியை மூடி, கவச மந்திரத்தால் சுவாலையுண்டாகச் செய்து. கர்ப்பாக்கினியை சத்தியோஜாத முதலாக பஞ்சப்பிரம மந்திரங்களால் பூஜிக்கவேண்டும்.

பின்னர் எள்ளைக்கொண்டு மூலமந்திரத்தால் சுவாகா என்பதை அந்தமாகவுடைய இந்த ஆகுதி செய்து, அதன் பின்னர் அக்கினி யுண்டானதாகப் பாவித்து பரிதியாகிய சமித்துக்களில் பிரமன் முதலியோர்களையும் ஆசனங்களில் இந்திரன்முதலியோர்களையும் பூஜித்து, அக்கினிகுமாரருக்கு இரக்ஷணங் கூறவேண்டும்.

பின்னர், அக்கினியை நோக்கி சிவாக்கினியாருக என்றுரைத்து, நாமகரணஞ்செய்து, பூர்ணாகுதி செய்து, பிதுர்க்களை உத்திபாபனஞ்செய்து, அக்கினியின் ஹிருதயகமலத்தில் ஆசனமூர்த்திமூலங்களால் சக்திமுதலாக சிவனை அர்ச்சித்து, மூலமந்திரத்தால் சுவாகாந்தமாக நூறாகுதிசெய்யவேண்டும்.

பின்னர், பிரமமந்திரம் அங்கமந்திரங்களினால், அம்மந்திரங்களின் அதிஷ்டான தேவதைகளுக்கு, தசாம்ச ஓமஞ்செய்க.

शतमर्धं वा विंशतिर्दशकं तु वा । तिल-
होमं तिलैर्वा संप्राप्तद्रव्यकेण वा ॥

(இதன் பொருள்) நூறு அல்லது ஐம்பது அல்லது இருபது அல்லது பத்து முறை இம்மந்திரங்களால், எள்ளு அல்லது கிடைக்கக்கூடிய திரவியங்களை வைத்துக்கொண்டாவது ஓமஞ்செய்ய வேண்டுமென்பதாம். இவ்வாறு காமிகாகமத்தில் கூறப்பட்டிருத்தல் காண்க. பின்னர் பூர்ணாகுதி செய்து, நைவேத்தியத்தின் பொருட்டு அன்னத்தைக்கொண்டு மூலமந்திரத்தால் மூன்றாகுதி செய்து, ஆசமனங்கொடுத்து, கந்த ஓமஞ்செய்து, தாம்பூல ஓமஞ்செய்து, ரக்ஷாபந்தனம் பண்ணி அஷ்ட புஷ்பஞ்சாத்துக. அதன் பின்னர் அக்கினியிலிருக்குஞ் சிவனை, சிவலிங்கத்தினிடத்தில் சேர்க்கவேண்டும்.

அதன் பின்னர் அக்கினியில் நான்கு மந்திரங்களால் நான்கு ஓமஞ்செய்து, பிரமாதிகளுக்கும், இந்திராதிகளுக்கும் பலியிட்டு, ஓமஞ்செய்யப்பெற்றதை உட்கொண்டு ஒழிவையடையும்படி, அக்கினிக்கு விக்ஞாபித்து, சிவாக்கினியை உத்தாபனஞ்செய்து, பிரமாதி இந்திராதிகளையும் உத்தாபனஞ்செய்து, ஆசனத்திலிருக்குந் தர்ப்பையின் முடிச்சை விடுவிக்க.

निष्ठुरेणाग्निमादाय लिङ्गमध्ये समर्पयेत् । विष्ट-
रं चासनादाय मुक्त्वा ग्रन्थिं विसर्जयेत् ॥

(இதன் பொருள்.) நிஷ்டுர முத்திரையால் அக்கினியை யெடுத்து லிங்கத்தில் சமர்ப்பிக்கவேண்டும். ஆசன தர்ப்பையை யெடுத்து முடிச்சை விடுவித்துக் கீழே போடவேண்டுமென்பதாம்: இவ்வாறு சூக்குமாகமத்தில் கூறப்பட்டிருத்தல் காண்க.

[illegible]

(இதன் பொருள்.) பரிஸ்தரணமாக போடப்பட்டிருக்கும் தர்ப்பையை யெடுத்து, நெய்யினால் நனைத்து, ஒரு தருப்பையை மாத்திரம் எடுத்து வைத்துக்கொண்டு, ஏனைய தருப்பைகளினைத்தையும், நுனியை முதலாகக்கொண்டு தகனஞ்செய்யவேண்டும். அந்த ஒரு தருப்பையையும் அக்கினியிலிட்டு, அந்தப் பஸ்மத்தை நெற்றியில் இலகமிடல் வேண்டும். அவ்வாறு தரித்தால், மனிதருக்கு ஆயுள், சம்பத்து, கீர்த்தி என்னுமிவைகள் விருத்தியடையும். வெற்றியுண்டாகும். வியாதி நீங்கும். எல்லா அபீஷ்டமுமுண்டாகும். நேத்திர மந்திரத்தால் அந்த பஸ்மத்தைத் தரிக்கவேண்டுமென்பதாம்.

இவ்வாறு அக்கினி காரியம் செய்து, பின்னரெழுந்திருந்து ஓமபலத்தை சிவனுடைய வலது கரத்தில் சமர்ப்பித்து, அதன் பின்னர் சிவபூஜா ஸ்தானத்திற்சென்று இருந்து சண்டேஸ்வர பூஜை முடிவாக மற்றக்கிரியைகளையெல்லாம் முடிக்க வேண்டும்.

[illegible]

[illegible]

(இதன் பொருள்.) ஒருமுறை புரோக்ஷித்த மாத்திரத்தில், மாலை நெய் இவைகளின் சம்ஸ்காரம் உண்டாகிறது. எல்லாச் சமஸ்காரங்களுடன் கூடினாற்றான் எல்லாக்கருமங்களையுஞ் செய்ய அதிகாரியாவனென்பதாம். இவ்வாறு காலோத்தர ஆகமத்தில் கூறப்பட்டிருத்தல் காண்க. (160-167)

(அடைக.) [illegible]

[illegible] ॥ ௧௬௮ ॥

[illegible] ॥

(168) ஆத்மார்த்த பூஜைக்கு பாகிய பலி வேண்டாம். அந்தர்ப்பலி வேண்டும். அது எவ்வாறெனின்? ஓமஞ்செய்த இடத்திற்குக் கிழக்கில் ஜலத்தினால் ஒரு சதுரச்ர மண்டலமிட்டு, அதில் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்குகளில் ஓம் ஹாம் ருத்ரேப்யோ நம: ஓம் ஹாம் மாத்ருப்யோ நம: ஓம் கணேப்யோ நம: ஓம் ஹாம் யக்ஷேப்யோ நம: என்றும், ஈசான அக்கினி நிருதி வாயு திக்குகளில், ஓம் கிருகேப்யோ நம: ஓம் அசுரேப்யோ நம: ஓம் ஹாம் ராக்ஷஸேப்யோ நம: ஓம் ஹாம் நாகேப்யோ நம: என்றும், மண்டல மத்தியத்தில் உள்ள ஈசான அக்கினி நிருதி வாயுதிக்குகளிலும், ஓம் ஹாம் நக்ஷத்ரேப்யோநம: ராசிப்யோநம: ஓம் ஹாம் விசுவேப்யோநம: என்றும் சோமதிக்கில் க்ஷேத்ர பாலாயநம: என்றும் இவ்வாறு பூசித்துப் பூசித்தவிடத்தில் அன்னங்கொண்டு பலியிட்டு ஒரு தால பிண்டத்தினால் ஹே ருத்ரா ருத்ரகர்மாணோ என்னும் மந்திர சுலோகங்களைப் படித்து, ஒரு பலியுமிட்டு, அந்த இடத்தில் பராங்முகார்க்கியங் கொடுத்து, உத்தாபனஞ் செய்யவேண்டும். இது பலிவிதான மென்றறிந்துகொள்க. (168)

(அ-கை.) அடுப்பு முதலியவற்றிற்குச் செய்யப்படும் பலியை மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible] ॥௧௭௦॥
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௧௭௧॥

(169–171.) *நித்யாக்கினி காரியம் செய்தபின்னரே பலி கொடுக்கவேண்டும். நித்யாக்கினி காரியமானது அடுப்பில் செய்யவேண்டும். இதற்குப்பிரமாணம், அந்தர்ப்பலி விதானனந்தரம் சுல்யாம் ஆகுதித்திரயம் குர்யாது என்றவாக்கியமாகும். (இதன் பொருள்) அந்தர்ப்பலிசெய்தபின்னர் அடுப்பில் மூன்று ஆகுதிகளைக் கொடுக்க வேண்டுமென்பதாம். அது எவ்வாறெனில், அடுப்பின் மத்தியில் அக்கினிதிக்குமுதல் கிழக்குத்திக்குவரை ஓங்காரத்துடன் இருதய பீஜத்தைச்சேர்த்து அக்கினயேநமஃ சோமாயநமஃ சூரியாயநமஃ பிரகஸ்பதயேநமஃ பிரசாபதயேநமஃ சர்வேப்யோ தேவேப்யோநமஃ சர்வேப்யோ விசுவேப்யோநமஃ ஓம்ஹாம் அக்நயேஸ்விஷ்டகிருதேநமஃ என்று அருச்சித்து, சுவாஹா சப்தத்தை இறுதியிலுடைய எட்டுமந்திரங்களாலும் அன்னாகுதிசெய்து பொறுத்துக்கொள்ளும் வண்ணம் பிரார்த்தித்துக்கொண்டு பின்னர் விசர்ஜநம் செய்தல்வேண்டும். அதன் பின்னர் அடுப்பின் வலது கையில் தர்மாயநமஃ பலிம்ததாமி யென்றும், இடது கையில் அதர்மாயநமஃ பலிம்ததாமி என்றும், காஞ்சிகைமுதலிய பாத்திரங்களில் சதன பரிவர்த்தநாயநமஃ பலிம்ததாமி என்றும்,* [illegible] *வருணையநமஃ பலிம்*

ரௌத்ர கோமுகாயநம: பலிம் ததாமியென்றும், உலக்கையில் பலபத்ரபிரியாயநம: பிரஹாரணாயநம: பலிம் ததாமியென்றும், அலகிடுங்கருவியில் (அஃதாவது, வாருகோலில்) மிருத்தியவே தேவசேநிதாயநம: பலிம் ததாமியென்றும், படுக்கையின் தலைப் பக்கத்தில் குசுமாயுதாயநம: பலிம் ததாமியென்றும், வீட்டின் மத்தியில் தூணிற்குக்கீழே ஸ்கந்தாயநம: கிருகாதிபதயேநம: பலிம் ததாமியென்றும் சொல்லிக்கொண்டு இவ்வாறு வாஸ்துபலி செய்யவேண்டும். பின்னர் அடுப்பைத்தியானஞ்செய்யும் முறை வருமாறு:—

தர்மாதர்ம ஶரீராஞ்ச த்விபுஜாம் பாககர்மிணீம் ।
வந்தநாஸ்யாம் சிதாகாராம் த்யாயே சுல்லீம் ததாந்தராம் ॥

(இதன்பொருள்.) தர்மாதர்மரூபமான சரீரத்தையும், இரண்டுகைகளையும், சமையற்றொழிலையும், வணங்கினமுகத்தையும், சிற்சொரூபத்தையும் உடைய சுல்லிதேவியைத் தியானிக்கின்றேன் என்பதாம். சுல்லி—அடுப்பு. இனி பூசிக்கப்படவேண்டியவை வருமாறு:—உப்புப்பாத்திரம், ஏனையபொருள்கள் வைக்கும் பாத்திரங்கள், உரல், வாருகோல், அம்மி, வறுக்கக்கூடிய சட்டிகளையும், அவ்வாறே வீட்டின் முக்கியமான வாயில்களில் கணபதி சரஸ்வதி என்னுமிவர்களையும், வாயிலின் கிளையில் இலக்குமியையும், வாயிலின் மத்தியில் பரமேஸ்வரரையும், வாயிலின் கீழிருக்கும் கட்டையில் ஆதாரசத்தியையும், வீட்டின் மத்தியில் கந்தரையும், வீட்டின்பின் வாஸ்துநாயகரையும், படுக்கையின் முனையில் மன்மதனையும், கத்தியில் அதற்கு அதிஷ்டான தேவதையையும், ஆசனம்வாகனமென்னுமிவைகளில் அதற்கு அதிட்டானதேவதையையும் பிரகாசிக்கக்கூடிய தீபத்தையும் கந்தம் புஷ்பம் அக்ஷதை ஜலம் தீபம் தூபம் அன்னம் என்னுமிவைகளைக்கொண்டு கிருகஸ்தன் அருச்சிக்கவேண்டும். இவ்வாறு அருச்சித்தால், எல்லாச்சம்பத்துக்களும் உண்டாகும். அல்லது எல்லாத்தேவர்க்கும் ஒன்றாகவே பலியைக்கொடுக்கலாம். எவ்வாறெனில், ஓம்ஹாம் சர்வஸ்மை கிரகோபஸ்கரணாயநம: பலிம்ததாமி, தததி பதிப்யச்சநம: பலிம் ததாமியென்று சொல்லிக்கொண்டு பலிகொடுக்கலாம். இவ்வாறு

கிரமோபஸ்கரண தேவதைகளின் பலிசெய்புமுறை அறிந்து கொள்க. இவ்வாறே காகங்களுக்கும் பலியிடவேண்டும். பலியிடும்பொழுது கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு வாயுதிக்கு இவைகளிலுள்ள ராக்ஷதசம்பந்தமான எல்லாக்காகங்களும் என்னால் கொடுக்கப்பெற்ற இந்தப்பிண்டத்தைக் கிரகித்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கவேண்டும். அதன்பின்னர் வெளி அங்கணத்தில் கருமை சித்திரம் ஆகியவர்ணங்கள் கொண்ட இரண்டு நாய்களுக்கும் பலியிடவேண்டும். அப்பொழுது என்னால் கொடுக்கப்பெற்ற இந்தப் பிண்டத்தைக் கிரகித்துக்கொண்டு என்பாபங்களைப் பக்ஷிக்கின்றவைகளாகப் பலிக்கட்டும் என்று தியானிக்கவேண்டும். (169-171)

(அ-கை.) சாங்கரியதோஷம் நான்குவிதமாக யிருக்குமென்று கூறுகின்றார்.

ஸாங்கய்யதோஷஸ்ஸு சதுர்விதஸ்ஸ்யாத்
ஆசார்யஸங்கராத் க்ரியாஸங்கரத: ।
ததைவ வாக்ஸங்கர மதஸாங்கர்யாத்
ப்ராஜ்ஞைஸ்ஸு ஸாங்கர்ய தோஷகாரீ ॥ ॥கஎஉ॥

(172.) சாங்கரியதோஷம் என்பது கலப்பினாலுண்டான தோஷமாகும். அதுநான்கு வகைப்படும். எவ்வாறெனில், ஏக சந்தானமன்றி அன்னிய சந்தானமாயிருக்கிற ஆசாரியக்கலப்பினாலே வருகிறதோஷம் ஒன்று. கிரியாக்கலப்புத்தோஷம் ஒன்று. வசனக்கலப்புத் தோஷமொன்று. மதக்கலப்புத் தோஷமொன்று. ஆக நான்குவகையுங் கண்டுகொள்க. நித்தியம் நைமித்தியம் காமியங்களினும், ஆத்மார்த்த பரார்த்த விஷயங்களினும், இந்த நான்கு தோஷங்களும் வாராமல் பரிகரித்துச் செய்யவேண்டும். சாங்கரியதோஷம் வந்தால் அத்தோஷமுடையவனைப் பெரியோர்கள் நீக்கிவிடுவார்கள். அத்தோஷமுடையவன் பதிதனென்றறிந்து கொள்க. (172)

(அ-கை.) ஆசாரிய பரம்பரையைப் பற்றிக் கூறுகின்றார்.

ஶைவாசார்யபரம்பரா ச கிரணவ்யாக்²யா

யாமாயாம் தத꞉ ஶைவாக³மஸந்ததியோ ஸ்வாமி ஸமந்

க்ருத்ராவலி தாந்த்ரிக ச ।

(172.) ஆசாரிய பரம்பரையைப் பற்றிக்கிரணாகம வியாக்கியானத்தில் அகோரசிவாசாரியர் நன்றாகக் கூறியிருக்கின்றார். அதனையேயிங்குக் கூறுகின்றேன்.

கிரணாகம வியாக்கியானத்தில்

அத² வக்ஷ்யே பரம் ஶைவஶாஸ்த்ரே கு³ருபரம்பரம் ।
கைலாஸாதா³க³த꞉ ஶ்ரீமான் மந்த்ரநாயக꞉ ॥
நந்தி³கேஶ்வரஶிஷ்யோ(அ)யம் தத்த்வாநாம் ஸோ(அ)ர்த²ஸங்க்³ரஹீ ।
ஸுராணாமஶேஷாணாம் ஶிவஜ்ஞாநமுபாதி³ஶத் ॥
ஸர்வதத்த்வவிஶேஷஜ்ஞ꞉ ஸர்வதத்த்வார்த²கோவித³꞉ ।
ஶக்திஶம்பு⁴த்³வயீபக்ஷமந்த்ரேஶாதி⁴ஷ்டி²தசித்தக꞉ ॥
அணிமாத்³யஷ்டஸித்³தீ⁴நாமீஶாதீந்த்³ரபராத்³ப⁴வ꞉ ।
பரகாயப்ரவேஶாதி³ஸம்பூர்ணஶ்ரேயவிநாயகஸ் ॥
தே³வஸித்³த⁴ப்ராபிதஸ்வாயம் த³க்ஷிணாஶாம்ப⁴வாம்ஶகஸ் ।
தத்ப்ரோத்³ப⁴வதா²நாம் ஶிவஜ்ஞாநமுபாதி³ஶத் ॥
ஸத்யாஸந்த்³யஶிஷ்யா ஶிவஶாஸ்த்ரப்ரவிசாரகா꞉ ।
உக்³ரஜ்யோதிரிதி க்²யாதஸ்ஸத்³யோஜ்யோதி꞉ ப்³ருஹஸ்பதி꞉ ॥
நீலகண்ட²ஸ்ஸ்வவைத்யஶ்ஶிவஜ்ஞாநப்ரவர்தக꞉ ।
உக்³ரஜ்யோதிர்கு³ரோஸ்தஸ்ய ஶிஷ்யா꞉ ஷட் ஸமுத்த²ரா꞉ ॥
ஸௌம்ய வைராக்³ய ஶ்ரீகண்ட² நாராயணாதி³ ஸம்ப⁴வா꞉ ।

(இவற்றின்பொருள்.) சைவசாத்திரத்திலுள்ள மேலான குருபாரம்பரையைக் கூறுகின்றேன். அஃதாவது, கைலாசத்திலிருந்து நந்திகேசுவரரின் சிஷ்யரான மந்திரநாயகரென்பவர் எல்லாத்தேவர்களுக்கும் சிவஞானத்தைப் போதித்தார். அந்த மந்திரநாயகர் எல்லாத் தத்துவங்களின் விசேடங்களையும், எல்லாத்தத்துவங்களின் பொருள்களையும் அறிந்தவர். சத்திபக்கஞ் சம்புபக்கமாகிய இருபக்கங்களிலுள்ள மந்திரேசுவரர்களால் அதிட்டிக்கப்பட்ட மனதையுடையவர். அணிமாமுதலிய எட்டுச் சித்தி

களையும் அடைந்தவர். பரகாயப் பிரவேசமுதலிய எல்லா அற்புதங்களையுஞ்செய்பவர். இத்துணைப் பெருமையோடு கூடிய இவரை எல்லாத்தேவரிஷிகளும் பிரார்த்தித்துத் தென்றிசைக்கு அழைத்துக்கொண்டு சென்றனர். ஆங்குச்சென்று எல்லாயோகிகளுக்குஞ் சிவஞானத்தை உபதேசித்தருளினர். இவருக்கு உக்கிரஜோதி, சத்தியோஜோதி, நீலகண்டர் என்னு மூவர்கள் சீடர். இம்மூவருள், உக்கிரஜோதி என்பவருக்கு ஐந்து சீடர்களுண்டு. இந்த ஐந்துசீடர்களும் கௌடம், சௌராஷ்டிரம், காச்மீரம், மகாராஷ்டிரம் என்னு மிந்தத் தேசங்களில் உள்ளவரென்பதாம். (172)

(அ—கை.) எந்த எந்தச்சாதிக்கு எந்தவிதமான தீக்ஷைகள் செய்யவேண்டுமென்பதை அறிந்து அவ்வாறு செய்வது உத்தமமென்றும், எல்லாச்சாதியாருக்கும் ஒரே விதமான தீக்ஷைசெய்தல் கூடாதென்றும் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ॥௧௭௩॥

[illegible] ॥௧௭௪॥

(173-174) பிராமண குருவானவர் சூத்திரரான அணவருக்குஞ் சிவதீக்ஷையும் உபதேசமுஞ் செய்யுங்காலத்து, சிஷ்யனுடைய செவியிலே மந்திரோபதேசஞ் செய்யவேண்டும். வாகீசுவரனுடைய கர்ப்பக்கோளகத்தினின்றும் இந்தச் சிஷ்யன் பிறந்

தாகப் பாவிக்கவேண்டும். அதன் பின்னர் சூத்திரத்தன்மை நீங்கி இருபிறப்பாளனாகின்றானென்றும், புத்திரனாகின்றானென்றும், ருத்ராம்சமாகின்றானென்றுஞ், சிஷ்யனுக்குந் தனக்கும் நாடி ஒன்றாகப் பாவிக்கவேண்டும். பின்னர் ஸ்தாலியென்னும் பாத்திரத்தில் சமைத்த அன்னத்தை மூன்று கூறுசெய்து அவற்றுள் ஒரு கூறு மண்டலேஸ்வராதிகளுக்கும், ஒரு கூறு சூரியன் முதலான மண்டலதேவதைகளுக்கும் நிவேதித்து மற்றொரு கூறாகிய அமுதை சிவதீக்ஷை நிறைவேறிய பின்னர் ஒரு பந்தியிலே சிஷ்யனுடனே இருந்து உண்ணவேண்டும். இவ்வாறு பிராமண குருவானவர் செய்யவேண்டும். இதுவே உத்தமம். பிராமணஜாதிக்குச் சொல்லியிருக்கிற விதியின்படி சூத்திர ஜாதியாருக்குச் செய்யக்கூடாது. ஜாதிக்குத் தக்கவாறு நூல்களை ஆராய்ந்து செய்யவேண்டும். இந்தத் தீக்ஷை செய்வதற்கு உரிமையில்லாத சிஷ்யனுக்கு நயனதீக்ஷை, சிவபெருமானை தன் கரத்தில் பாவித்து அக் கரத்தை சிஷ்யனுடைய சிரசில் வைத்தலாகிய பரிசதீக்ஷை, உபதேசஞ் செய்தலாகிய வாசிகதீக்ஷை, சிஷ்யனைச் சிவனாகப்பாவித்தலாகிய பாவனாதீக்ஷை, நூல்களையுபதேசிக்கும் சாஸ்திரதீக்ஷை, யோகத்தை உபதேசித்தலாகிய யோகதீக்ஷை யென்னும் இந்த அறுவகைத் தீக்ஷைகளே செய்யத்தக்கன. ஓமத்தினாற்செய்யும் ஔத்திரி தீக்ஷையானது மேலே சொல்லியவாறு ஜாதிக்குத் தக்கவாறு செய்யவேண்டும். புத்தளிகாதேகத்தில் அந்தியிஷ்டிக்கிரியை சூத்திரர்களுக்குப் பிராமணகுரு செய்தல் கூடாது. பெரியோர்களுக்கும் இதுவே சம்மதம். பரம்பரையான ஆசிரியர்கள் சாதாரணமாக சூத்திர விஷயமான அந்தியிஷ்டிக்கிரியையினை உலக அபவாத பயத்தினால் செய்தல்கூடாது. பொருளுக்கு ஆசைப்பட்டு செய்தல் கூடாது. ஒவ்வொரு ஜாதியாரும் தன் குலத்திலேயே தோன்றிய ஆசிரியனைக்கொண்டே அந்தியிஷ்டிக்கிரியையினைச் செய்துகொள்ளல் வேண்டும். போதாயன சூத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரம், சிவாகமங்களாகிய இருபத்தெட்டு ஆகமங்கள் என்னு மிவைகளிலே சிவதீக்ஷையுடையவனுக்கு அந்தியிஷ்டிக்கிரியை செய்யலாமென்று கூறப்பட்டிருக்கின்றது. இதுவரையுங் கூறியவற்றிற்குப் பிரமாணம்.

(1) ஶிவத்விஜாஶ்ச விப்ராஶ்ச நாந்யோ ந்யம் ஶிவதீக்ஷிதா: ।
வைதிகாஸ் ஸ்ம்ருத்யா ஹோலௌகிகம் ஸமுத்ஸ்ருஜத: ॥

[illegible]
[illegible]

(2) [illegible] —
[illegible]

(3) [illegible] —
[illegible]

(1) (இவற்றின் பொருள்) சிவத்துவிஜர்களும் வைதிக வேதியரும் ஒருவருக்கொருவர் சிவதீக்ஷைசெய்துகொள்ளல் கூடாது. சூத்திரரால் பாகஞ் செய்துள்ள போஜனம் பிராமணரால் கலியில் எவ்வாறு விலக்கப்படுகின்றதோ, அவ்வாறே மேற் கூறப்பட்ட இருவரும் ஒருவருக்கொருவர் தீக்ஷை செய்தல் கூடாது. இவ்விடத்தில் வைதிகப் பிரமாணத்தினும் லௌகிகப் பிரமாணத்திற்கே வலிமையுண்டு என்பதாம்.

(2) வருணாச்சிரமத்தை அனுசரித்துச் சிவதருமத்தைக் காக்கவேண்டும்.

(3) பிறிதோரிடத்தில் வருணாச்சிரமத்தை அனுசரித்து சிவதீக்ஷையைச் செய்யவேண்டும் என்பதாம். (173 174)

(அ-கை.) சைவசாத்திரத்தில் கூறப்பட்ட உத்தமமான தேசிகர்களின் இலக்கண மிதுவென இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௧௭௫||

[illegible] ||௧௭௬||

(175-176) சாத்திரங்களை அன்புடனெடுத்துப் பார்வையிடுதல், மந்திரோபதேசஞ் செய்தல், மனனஞ்செய்தல், யோகாப்பியாசத்தால் வாக்குச்சித்தி யடைதல், பாசங்களை விலக்குதல், அபிஷேகஞ்செய்தல், சாத்திரங்களைப் போதித்தல், ஆகிய இவை யனைத்துஞ் செய்து எல்லா வுயிர்களுக்கும் போக மோக்ஷங்களை யளிக்கக்கூடிய அனுக்கிரகத்தை எவர்கள் செய்கின்றார்களோ அவர்களே உபதேசிக்கத் தகுந்த ஆசாரியராவர்.

சைவசாத்திரத்திலுள்ள மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்னும் இந்த ஆறு அத்துவாக்களின் பிரமாணம், எண், எழுத்துக்கள் என்னும் இவைகளையறிந்து ஆறு அத்துவாக்களின் சுத்தியையும் எவன் செய்கின்றானோ அவனே ஆசாரியன். இந்த அத்துவசுத்தியானது விருப்பத்தை நிறைவேற்றத்தக்கது. (175-176.)

(அ-கை.) எல்லாச் சாத்திரங்களுள்ளும் மேலானது சிவாகமங்களென்றும் இதில் சிறிதுஞ் சந்தேகமில்லையென்றுங் கூறுகின்றார்.

ஸ்வதந்த்ர ஶாஸ்தா ஹர ஏவ நாந்ய
ஸ்ஸ ஏவ நித்யோ ந பரோஸ்தி தேவ: ।
தேநோக்தமேவ ப்ரமிதம் ப்ரதீத்யா
ஶாஸ்த்ரேஷு ஶாஸ்த்ரம் ஶிவஶாஸ்த்ரமேவ ॥ ॥௧௭௭॥

(177.) பிராகிருதபுவனம், அசுத்தமாயாபுவனம், சுத்தமாயாபுவனமாகிய சகல புவனங்களுக்கும் சிவதீக்ஷைசெய்யுந் தேவன் அரன் என்னும் மகாதேவராவர். அவரல்லது எவரையும் அடக்கி ஆளுபவர் வேறொருவருமில்லை. அந்த மகாதேவரே நித்தியராவர். ஏனையதேவர்கள் நித்தியரல்லர். இத்துணைப் பெருமைவாய்ந்த மகாதேவராலே சொல்லப்பட்டதாதலாலும், அவரையே சொல்லுவதாலும், உலகத்துள் வழங்குஞ் சாத்திரங்களுக்கெல்லாம் மேலானது சிவசாத்திரமாகிய சிவாகமங்களே யென்றறிந்துகொள்க. (177)

(அ-கை.) நிருவாணதீக்ஷையில் சிஷ்யனுக்கு சயனத்திலுண்டாகும் கனவின்பலனை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஶிஷ்யாதிவாஸஶயநஸ்வப்நே ஶுபம் ஸ்யாத்
ச்சத்ரத்வஜாம்பரவ்ருஷஹஸ்திதுரங்கமாணாம் ।
க்ஷீரேக்ஷூணாம் ச ததிமத்யமதூதகாநாம்
ஸந்தர்ஶநம் விததஸாகரதீர்த்தஸௌதமாநாம் ॥௧௭௮॥

த்விஜஸ்ய ராஜா நரேஷு முக்யா
ஶுகஸ்ய ஹம்ஸஸ்ய ககேஷு முக்யா ।
ம்ருகேஷு ஹஸ்தீ ஹரிணஸ்ய ஸிம்ஹ:
வ்ருஷஸ்ய தேநாஸ்ய விதஸ்ய ஹோதீ ॥ ॥௧௭௯॥

(178-179.) சிஷ்யனுடைய அதிவாசசயனத்தில் கனவில் நல்லதாயிருக்கிற பலன் வருமாறு:—வெண்குடை, கொடி, ஆடை, தாமரைப்பூ, இடபம், பசுக்கள், யானை, குதிரை, மான், பால், தயிர், பச்சைக்கரும்பு, இறைச்சி, கள்ளு, தேன், நல்லதண்ணீருடைத்தான குளங்கள், ஓடைகள், நதிகள், சமுத்திரம், வெள்ளைப் பூமாலை என்னுமிவைகளைக்காணின் நல்லனவாகும். மனுடருக்குள்ளே நல்ல பிராமணர்களும், அரசனும், பறவைகளுக்குள்ளே கிளியும், அன்னமும், மிருகங்களுக்குள்ளே யானையும், மானும், சிங்கமும், எருதும், பசுவும், ஊர்ந்துநகருஞ் செந்துக்களுக்குள்ளே வெள்ளைப்பாம்பும் நல்லனவென்றறிந்து கொள்க. (178-179)

(அ-கை.) எழுவித தீக்ஷையைப்பற்றி மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

உத்தீர்ய த்ருஷ்டி ஶுபாஶுபவேஷம்
ஸந்நித்ய ஶிஷ்யம் த்வயயேக்ஷதே தேஶ ।
தத்ஷ்டி வ த்ருஷ்டம் மணிபா கவேயவம்
தீக்ஷா க்ரியா யா வஶாக்ஷாக்ஷீ ஸா ॥ ॥௧௮௦॥

த்ருக்ஷ்வஸ்தஸம் ஶிவஹஸ்தஸம்பந்ஸ்யா
ஸம்பந்த்ய ஹஸ்தேந க்ருதேந ஶிஷ்யம் ।
தந்யாதி ஸம்ஸ்பர்ஶதி தேஶிகேந்த்ர
வாதாதுவக ஸ்பர்ஶநநாதீக்ஷா ॥ ॥௧௮௧॥

வொஹம்ஹாவநயா ஶாக்தஶிவதத்த்வேவ ஸா
வாசிகீ தீக்ஷா வேதி வ ரத்வாவகவவொவந்தக்தா
கோவகே ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ॥கஅஉ॥

(180 - 181 - 182.) *நயனதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசிகதீக்ஷை, பாவனாதீக்ஷை, சாஸ்திரதீக்ஷை, யோகதீக்ஷை, ஔத்திரிதீக்ஷையெனச் சிவதீக்ஷை ஏழுவகைப்படும். அவற்றுள், நயனதீக்ஷையாவது, ஆசிரியன் சிவோகம் பாவனைசெய்துகொண்டு தன்னுடைய கண்களைச் சிறிது திறந்து மாந்திரீகனாயிருக்கிறவன் கருடபாவனையினால் சர்ப்பத்தால் தீண்டப்பட்டவனை விஷம் நீங்குமாறு பார்ப்பதுபோல் சிஷ்யனை சிவபாவனையினால் பார்த்துப் பாசநீக்கஞ் செய்வதாகும்.*

பரிசதீக்ஷையாவது:— ஆசிரியன் தன்னுடைய வலது கரத்தை சிவனுடைய கரமாகப்பாவித்து அவ்வாறே அர்ச்சித்து பின்னர் சிஷ்யனுடைய சிரமுதலாக எல்லா அங்கங்களையும் அந்தக் கையால் பரிசிப்பதாகும்.

வாசிகதீக்ஷையாவது:—ஆசிரியன் சிவோகம் பாவனைசெய்துகொண்டு, சிஷ்யனை சிவனுடைய திருநாமங்களை ஜபிக்கும்படிக்கும் மனனம் பண்ணும்படிக்கும் செய்வதாகும். எதுபோலுமெனின், மாணிக்கவாசகர் சிவபெருமானுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொடுத்து இராஜகுமாரத்தியின் ஊமையைப்போக்குவித்தல் போலுமென்க.

பாவனாதீக்ஷையாவது:—ஆமையானது தன்னுடைய முட்டையை நினைத்துப் பிள்ளையை வெளிப்படுத்துவதுபோல ஆசிரியன் தன்னுடைய சிவோகம பாவனையாகிற மனோவியாபாரத்தால் சிஷ்யனை நினைத்துப் பாசநீக்கஞ் செய்வதாகும்.

சாத்திரதீக்ஷையாவது :—சைவசாத்திரங்களைப் பிழையறச் சிஷ்யனுக்குச் சொல்லிவைப்பதாகும்.

யோகதீக்ஷையாவது:— ஆசிரியன் நாலிதழ்த்தாமரையான மூலாதாரம், ஆறிதழ்த்தாமரையான சுவாதிட்டானம், பத்திதழ்த்தாமரையான மணிபூரகம், பன்னிரண்டிதழ்த்தாமரையான அநாகதம், பதினாறிதழ்த்தாமரையான விசுத்தி, இரண்டிதழ்த்தாம

னையான ஆக்ஞையென்னும் அநுக்ரகங்களையுஞ் சிஷ்யனுக்கு வருணானுகுணமாகத் தரிசிப்பித்தலாகும்.

ஔத்திரிதீக்ஷையாவது:—குண்டமண்டல வேதிகைகளுடனே கூடினதாகும்.

இவ்வாறு ஏழுவகையான தீக்ஷையின் முறைமையினை அறிந்துகொள்க. (180-181-182)

(அ-கை.) ஔத்திரிதீக்ஷையை மூன்று சுலோகங்களால் விரித்துக் கூறுகின்றார்.

[illegible] ॥௧௮௩॥

[illegible] ॥௧௮௪॥

[illegible] ॥௧௮௫॥

(183-184-185.) ஔத்திரிதீக்ஷையாவது, மண்டபம், ஓமகுண்டம், மண்டலவேதிகைகள், வர்த்தனிகும்ப வேதிகை, இஷ்டலிங்க வேதிகை, பஞ்செளஷத வேதிகை, பஞ்சகும்ப வேதிகை, பரிவாரதேவகலச வேதிகை என்னுமிவற்றுடனே நல்ல ஆசாரியனுடைய கையின் கிரியையினையுடையதாய் சமயம் விசே

டம் நிர்வாணம் ஆறு அத்துவாக்களின் சுத்தியுடன் கூடிய அபிஷேகம் என்னும் தீக்ஷாபேதங்களையு முடையதாயுள்ள தென்றறிந்துகொள்க.

ஆறத்து வாக்களாவன.—மந்திராத்வா, பதாத்வா, வர்ணாத்வா, புவனாத்வா, தத்துவாத்வா, கலாத்வா என்பனவாம். அவற்றுள், மந்திரங்கள் பதினொன்று, பதங்கள் எண்பத்தொன்று, வர்ணங்கள் ஐம்பத்தொன்று, புவனங்கள் இருநூற்றிருபத்துநான்கு, தத்துவங்கள் முப்பத்தாறு, கலை ஐந்து, என்றறிந்துகொள்க.

அந்த ஔத்திரிதீக்ஷையானது, சற்குருவினால் கலாசோதனையுடன்செய்யப்பட்டு சஞ்சிதவினைகளை எல்லாம்போக்கும். சௌபாக்கியத்தைக்கொடுக்கும்அணிமாமுதலிய எட்டுசித்திகளையுந் தரும். உலகத்திலுள்ள புண்ணியங்களுக்கெல்லாம் மேலானது. சர்வஞ்ஞத்துவமுதலிய ஆறுகுணங்களையுங் கொடுக்கும். மோக்ஷத்தையுங்கொடுக்கும். இதற்கு ஒப்பாக ஒன்றுங்கிடையாது. இதன்பெருமை காமிகாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுவருமாறு! வைத்தியனானவன் கண்ணினிடத்துள்ள படலமுதலியநோய்களை ஆயுதப்பிரயோகஞ்செய்தல் மருந்துகொடுத்தல் முதலான கிரியைகளைச் செய்யாது தன்னுடைய தியானத்தினாலும் வாக்கினாலும் போக்குவானாயின் இந்த ஔத்திரிதீக்ஷையின்றி முத்தியடைதல் கூடுமென்றும், செம்பினிடத்துள்ள களிம்பைப் புளியைப்பூசி தன்னுடையகையினால் விளக்காமல் தன்னுடைய தியானத்தினால் அந்தக்களிம்பை ஒருவன் போக்குவானாயின் ஔத்திரி தீக்ஷையின்றி முத்தியடைதல் கூடுமென்றும் இவ்வாறு சொல்லப்படிருத்தல்காண்க. ஆதலால் சற்குருவானவர் ஔத்திரிதீக்ஷையினால் ஆணவமுதலிய பாசங்களைவிலக்கி முத்தியைத் தருவரென்றறிந்துகொள்க. (183-184-185)

(அ - கை.) ஔத்திரியல்லாத ஏனையதீக்ஷைகளெல்லாம் ஔத்திரிதீக்ஷையிலடங்குமென்று கூறுகின்றார்.

ஹௌத்ரீ ச தீக்ஷா து ஶ்ரேயஸாமக்ர்யா
வீக்ஷாதி தீக்ஷா ஸர்வா ஷட்விபாகா: ।
ஹௌத்ர்யா ஜ்ஞாநவதீ தஸ்யா விஶேஷா
தீக்ஷாணாமேவ ஸர்வாஸாம் உச்யதே ॥ ॥௧அ௬॥

(186.) நயனதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசிகதீக்ஷை, பாவனு தீக்ஷை, சாஸ்திரதீக்ஷை, யோகதீக்ஷை என்னும் ஆறுதீக்ஷைக ளும் ஔத்திரிதீக்ஷைக்கு அங்கமாய் அதனுளடங்கும். ஆதலா ல் ஔத்திரிதீக்ஷையே மேலானதாகும். ஏனையதீக்ஷைகளாலும் பாவம் நீங்கும். இவ்வாறு எழுவகைத் தீக்ஷைகளுங் கண்டு கொள்க. (186)

(அ-கை.) சைவமுத்திரா தீக்ஷையை இரண்டு சுலோகங்க ளாற் கூறுகின்றார்.

ஸ்ரீ வெஷ்டநாஶோ ஸமயே தத்ரெயா
தாஶ்ச ராக்ஷஸமிஶா ஶிவதஆவஸதிஶம் ।
ருத்ராக்ஷயொ வெதி ஸம்ஶுத்ராக்ஷா
ஶாத்ராவ ஊர்டிம் வ யுஶ்ரக்ஷி தீக்ஷா ॥ ॥கஅஎ॥

ஸுவர்ணாதிநாநி திபுதஶக்ஷயாக்ஷம்
ஷட்கூண்ணாஸம் ஸுந்தரவெஷ்டநாஶோ ।
ஸத்ராயவா ஸ்வெஷ்டக்ருதி விபுஶெஷெ
வஶ்யம் வ தெயா ஶாராணெயஶாத்ரா ॥ ॥கஅஅ॥

(187-188.) செம்புமுதலியவற்றோடு செய்யப்பட்ட உருத் திராக்கங்களால் ஆக்கிய திருவேடமாகிய சிவமுத்திரையை சமய தீக்ஷையிலாவது அதற்கு முன்னாவது சிஷ்யனுடைய காதுகளி லே மந்திரசகிதமாகத் தரிக்கவேண்டும். இதுவேமுதலாவதான சிவமுத்திராதீக்ஷை யெனப்படும். சுவர்ணமுதலியவற்றோடு செய்யப்பட்ட உருத்திராக்கங்களுடன் கூடிய சட்குண்டலமென் னும் சுந்தரவேடமாகிய சிவமுத்திரையை விசேடதீக்ஷையில் தரி க்கவேண்டும். இவ்வாறன்றி அன்பர்களுடைய அன்பிற்குத்தக் கவாறு சிவனது அடிமையென்பதைத் தெரிவிக்கும் முத்திரை யைத் தரித்தலும் சைவமுத்திராதீக்ஷை யென்றறிந்து கொள்க. (187-188)

(அ-கை.) சாதார நிராதார தீக்ஷைகளைப்பற்றிக்கூறுகின்றார்.

தெயா வ தீக்ஷிதி ஶிவாஶஶோக்தா ஸாயாரஸா யா
ரவியொஶஹெஆகா । ஆவாயபூஶாதிதத்ரா ஸகலா
யத்நாஅத்ரா காயபூா அபெயஸத்ராஅவரா ஶிவெந ॥கஅகூ॥

(189.) தீக்ஷையானது சாதாரதீக்ஷை நிராதாரதீக்ஷையென இரண்டுவகைப்படும். சகலவர்க்கத்து ஆன்மாக்களுக்கு ஆசிரியர்செய்வது சாதாரதீக்ஷையாகும். பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்னும் இருவகை ஆன்மாக்களுக்கும் ஸ்ரீமகாதேவர் தாமே செய்வது நிராதாரதீக்ஷையென்றறிந்து கொள்க. (189)

(அ-கை.) சாதார நிராதாரதீக்ஷை இரண்டனுள் சாதாரதீக்ஷையானது சபீஜமென்றும் நிர்ப்பீஜமென்றும் இருவகைப்படுமெனக் கூறுகின்றார்.

ஸபீஜா யா து ஸா தீக்ஷா ஸமயாசாரஸம்யுதா
நிர்பீஜா ஸமயாசாரசுத்திமாத்ரா து யா க்ருதா
ஸா தீக்ஷா ஸர்வதா மோக்ஷதாயினீ ததா ॥ ||கசூ0||

(190.) சபீஜதீக்ஷையென்றும் நிர்ப்பீஜதீக்ஷையென்றும் சாதாரதீக்ஷை இருவகைப்படும். அவற்றுள் சபீஜதீக்ஷையாவது சமயாசாரங்களுடனே செய்யப்படுவது நிர்ப்பீசதீக்ஷையாவது சமயாசார சுத்தியுடனேசெய்யப்படுவது. இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்பட்டிருத்தல்காண்க. இந்தத்தீக்ஷையே முத்தியைத்தரும்.

பூஜைக்கு உபயோகிக்கும் பாத்திரங்களைப்பற்றி ஆகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. அதனையும் இவ்விடத்துக் கூறுகிறோம்.

தாம்ரஜம் காம்ஸ்ய பாத்ரம் வா யாவஜ்ஜீவம் தயோர்த்தமம் । ம்ருத்பாத்ரம் புத்தம் க்ராஹ்யம் த்ரயவாஸராதிகம் ததா । அயஸாதி பாத்ரம் வர்ஜ்யம் பைசாசாதௌ து யோஜயேத் ॥

(இதன்பொருள்.) செம்புப்பானை வெங்கலப்பானைகளில் உடைந்துபோகுமட்டும் சமையல்செய்வது உத்தமம். மண்பானை புதிதாய்வாங்கி அதில் சமையல்செய்வது உத்தமம். அல்லது மூன்றுநாள்வரை மண்பானை உபயோகிக்கலாம். அதற்குமேல் உபயோகிக்கக்கூடாது. இரும்புப்பானை முதலியன பூஜைக்கு எப்பொழுதும் ஆகாது. பிசாசகாரியங்களுக்கு ஆகுமென்பதாம். ()

(அ-கை.) நிர்வாண தீக்ஷையின் பேதத்தைக் கூறுகின்றார்.

நிர்வாண தீக்ஷா து ஸத்யோநிர்வாணா ஸத்யோ
ஜாதம் தாஸ்ய ஸத்யோ முக்தி । அஸத்யோமுக்தி லோகாந்தரே

வியாபி யோஜயதி ஸ்ருசா ஸ்ருக் ஶிவயதி
ணீதி ॥ ||கசுக||

(191.) நிர்வாணதீக்ஷையானது நான்கு வகைப்படும். எவ்வாறெனில், சத்தியோநிர்வாணம், அசத்தியோநிர்வாணம், உலோகதர்மிணி, சிவதர்மிணியென அவ்வவர் பரிபாகத்துக்குத்தக்கவாறு பேதப்படுமென்க. இதற்குப் பிரமாணம்:—

ஜ்ஞாநரத்நாவல்யாம் | ஶயித்வா து ஸம்ஸாரபந்தம் வ்யாபிநாம்
யோஜயதிர்ணீ | யதிர் யதிர் ஶிவஸம்ஸாரபந்த ஶிவமோக்ஷாஶ்ரிவ
யதிர்ணீ ॥

(இதன்பொருள்.) க்ஞானரத்துவளியில் பாபகர்மம் எவ்வளவு உண்டோ அவை அனைத்தையுஞ் சோதித்து புண்ணியகர்மங்களைச் சோதியாமல் இல்வாழ்வானுக்குச் செய்யப்படுவது உலோகதர்மிணிதீக்ஷையாகும். புண்ணிய பாவங்களிரண்டையும் நன்றாகச்சோதித்து மோக்ஷத்தில் விருப்பமுடைய் துறவிக்குச் செய்யப்படுவது சிவதர்மிணியாகுமென்பதாம்.

சத்தியோ நிர்வாணதீக்ஷையாவது சற்குருவானவர் சடத்துவசோதனைசெய்து சிகாச்சேத ஓமமுஞ்செய்து சிவபதத்தில் ஆன்மாவைச் சேர்த்தமாத்திரத்தில் தேகநீக்கமுண்டாவது. அவ்வாறன்றி, பிராரத்தகர்ம அனுபவத்தின் முடிவில் சிவபதத்தில் ஆன்மாவைச்சேர்ப்பது அசத்தியோநிர்வாணதீக்ஷையாகும்.(191)

(அ-கை.) சிவதீக்ஷா மண்டபசொரூபலக்ஷணம் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஸ்ருக் ஸ்ருவஹஸ்தாத்த ஹி ஸப்தஹஸ்தம் ஸமந்தாத்
காரோரம்பம் கரார வல்வ | தாத்ரா க்ஷுரப்ராந்தம்
வலந்தம் வகாரோ வேத்ரோத்தி வாஹம் மத்ர
வோ த்கோரம் || ||கசுஉ||

வாஜே வஜ்ராயா வஜ்ரதோஜஸோ வணாராயநம் ஸந்த
ஸ்ருதிவபுத்யஷ | ஶ்ருவேத்ர்யஷ தவாயநேத்ர
ஸஞ்ஜே யோகாயநம் த்வாரி கவாயநம் ஸ்ருக் ||கசுங||

(192-193.) சிவதீக்ஷாமண்டபம் பஞ்சபூதசொரூபமாகவிருக்கும். எவ்வாறெனில், மகாரம் பூமி, ணகாரம் அப்பு, டகாரம் அக்கினி, பகாரம வாயு, மகாரம் ஆகாசம். இவ்வாறு மண்டபமென்பதற்கு பொருள கண்டுகொள்க. இதுவன்றி மண்டபமெங்கும் சாந்தியதீதகலாசொரூபம், பந்தற்கால்கள் பதாத்வா, மண்டபத்தின்நடு வர்ணாத்வா, கும்பங்கள் மந்த்ராத்வா, ஓமத்திரவியங்கள் தத்துவாத்வா, மண்டபமமைத்திருக்குமிடம் புவனாத்வா, மண்டபத்திலுள்ள நான்கு வாயில்களும் நிவிர்த்திமுதல் சாந்திவரையுள்ள கலாத்வா. இவ்வாறாகலின் மண்டபம் ஆறத்துவாவின் சொரூபமென்றறிந்து கொள்க.

(.சு-கை.) சிவதீக்ஷாமண்டபத்தின் அளவு கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௧௯௪||

(194.) சிவதீக்ஷாமண்டபத்தினளவு அம்சுமானாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:—ஐந்துமுழமுதல் பதின்மூன்று முழம்வரை நான்கு கோணமாகக் கொள்ளலாம். அவற்றுள் ஐந்துமுழம், ஆறுமுழம், ஏழுமுழங்கள் முறையே, அதமத்தில் அதமம் மத்தியம் உத்தமமாகும். எட்டுமுழம், ஒன்பதுமுழம், பத்துமுழங்கள் முறையே மத்தியமத்தில் அதமம் மத்தியமம் உத்தமமாகும். பதினொருமுழம் பன்னிரண்டுமுழம் பதின்மூன்றுமுழங்கள் முறையே உத்தமத்தில் அதமம் மத்தியமம் உத்தமமாகும். இவற்றுள் எது அமையுமோ அதனையமைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறன்றி இன்னுமொருமுறை அந்த ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:— ஐந்து முழம் ஏழு முழம் ஒன்பது முழங்கள் முறையே அதமத்தில் அதமம் மத்தியமம் உத்தமமாகும். பதினொருமுழம் பதின்மூன்று முழம் பதினைந்து முழங்கள் முறையே மத்தியமத்தில் அதமம் மத்தியமம் உத்தமமாகும். பதினேழுமுழம் பத்தொன்பது முழம் இருபத்தொருமுழங்கள் முறையே உத்தமத்தில் அத

மம் மத்தியமம் உத்தமமாகும். இவ்வாறு சொல்லப்படும் மண்டப பேதங்களை அறிந்து எந்தக்காலத்தில் எந்தச்சாதிக்கு எது பொருத்தமோ அதைத்தெரிந்து மண்டபம் அமைத்துக்கொள்ளல் வேண்டும். (194)

(அ-கை.) நிருவாணதீக்ஷா மண்டப இலக்கணம் பதினொரு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௧௯௫||

[illegible] ||௧௯௬||

[illegible] ||௧௯௭||

[illegible] ||௧௯௮||

[illegible] ||௧௯௯||

[illegible] ॥௨௦௦॥

[illegible] ॥

[illegible] ॥௨௦௨॥

[illegible] ॥௨௦௩॥

[illegible] ॥௨௦௪॥

[illegible]

[illegible] ॥ ௨௦௫ ॥

(195–205.) *திருவாணதீக்ஷைக்குப் பதின்மூன்றுமுழ நீளத்தில் உள்ள மண்டபமே உத்தமம். ஆதலால் பதின்மூன்றுமுழ நீளமும் பதின்மூன்றுமுழ அகலமுமாக மண்டபம் அமைத்து நான்கு வாயில்களும் அமைத்து, வாயில்களல்லாத ஏனைய இடங்களெல்லாம் மறைத்து மண்டபம்போலாவது கூடாரம்போலாவது சதுரச்ரமாக அமைத்துக்கொள்க. இந்த மண்டபம் அமைத்திருக்குமிடம் நிலத்தைவிடப் பன்னிரண்டங்குலம் உயரமாயிருக்கவேண்டும். கால்கள் பதினாறாவது, பன்னிரண்டாவது, எட்டாவது, நான்காவது இருக்கவேண்டும். அந்த மண்டப இடத்தைச் சமதலமாக்கி மணியாசுப் பலகையால் விளக்கஞ்செய்து அதன்மேல் மனுசங்கியையாக மாவிலே தோய்த்த பதினான்குநூலினால் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்காகக்கீறி பதின்மூன்றுக்கு பதின்மூன்று பதமாக்க நூற்றறுபத்தொன்பது பதங்களாகும். இவற்றுள் நடுவிலுள்ள ஒன்பது பதத்தில் மண்டலேஸ்வர வேதிகை அமைக்கவேண்டும். அந்த வேதிகை கைமுழத்தில் மூன்றுமுழ அகலம் மூன்றுமுழ நீளம் மூன்றுமுழ உயரமாக மண்முதலியவற்றால் அமைத்துக்கொள்ளல் வேண்டும். அல்லது அந்த அளவில் பாதி கொள்ளல்வேண்டும். அந்தவேதிகையின் உயரத்திற்குக்கீழ் அந்த வேதிகையைச்சுற்றி நாலங்குல அகலம் இரண்டங்குல உயரத்தில் சதுரச்ரமாக உபவேதிகை அமைத்துக் கொள்ளல்வேண்டும். மண்டலேஸ்வர வேதிகை ஒரு பதமும் எட்டுப்பதமுமா யிருக்கவேண்டும். அதனுடைய உயரமானது அகலத்திற் பாதியாக வேனும் அகலத்திற்கு ஒத்ததாகவேனும் இருத்தல்வேண்டும். இவ்வாறு மண்டலேஸ்வர வேதிகை அறிந்துகொள்க.*

அந்த மண்டலேஸ்வர வேதிகைக்கு மேற்கே ஒன்பது கோஷ்டநடுவில் இஷ்டலிங்க பூஜார்த்தமாக ஒருமுழ அகலம் ஒருமுழ நீளம் ஆறங்குல உயரத்திலாவது நாலங்குல அகலம் இரண்டங்குல உயரத்திலாவது ஒரு வேதிகை அமைக்கவேண்டும்.

இந்த இஷ்டலிங்க வேதிகைக்கு வடக்கே ஒன்பது கோஷ்ட நடுவில் பஞ்சௌஷதி, பஞ்சமிருத்திகை, பஞ்சபத்திரம், பஞ்சபட்டை, பஞ்சோதகம் என்னும் இவற்றின் ஸ்தாபனார்த்தமாக ஒரு வேதிகை இஷ்டலிங்க வேதிகைபோல் அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

அந்த வேதிகைக்குக் கிழக்கே ஒன்பது கோஷ்டத்தின் நடுவே பஞ்சகும்பங்களை ஸ்தாபிக்கும்பொருட்டு ஒரு வேதிகை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

அதற்குக் கிழக்கே கும்பவர்த்தனி பூஜைக்காக முன் சொன்னபடி ஒருவேதிகை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

அதற்குத் தெற்கே ஒன்பது கோஷ்டத்தில் ஒரு ஓமகுண்டம் அமைக்கவேண்டும். அந்தக் குண்ட இலக்கணம் வருமாறு:— ஒருமுழ அகலம் ஒருமுழ நீளம் சதுரமாய் மூன்று மேகலைகளுடைய உயரத்துடனே ஒருமுழ ஆழம் உடையதாய் உள்ளே ஒரு அங்குல அகலம் கண்டத்தை யுடையதாயிருக்கவேண்டும். மூன்று மேகலைகளின் இலக்கணம் வருமாறு:—இரண்டங்குல உயர அகலத்தில் கீழ்மேகலையும், மூன்றங்குல அகல உயரத்தில் நடுமேகலையும், நாலங்குல உயர அகலத்தில் மேல் மேகலையுமாக இவ்வாறு மூன்று மேகலையின் இலக்கணம் அறிந்துகொள்க. குண்டத்தின் நடுவில் நான்கு இதழில் ஒருநாபிக்கமலமும் குண்டத்தின்மேலே தெற்குத்திக்கில் மேல் மேகலையின் நடுவில் எட்டங்குல அகலம் பாதி அங்குல உயரத்தில் அரசிலைபோற் குண்டயோனியும் அந்தக் குண்ட யோனிக்கு அரசிலையின் காம்புபோல நீளமும் அமைத்துக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு ஓமகுண்ட இலக்கணம் அறிந்து கொள்க.

இந்தப் பதின்மூன்றுமுழ மண்டபத்தினுள்ளே ராக்ஷத பதமான வெளிவீதியில் நாற்பத்தெட்டுப் பதங்களில் இருபத்தேழு கலசங்களுக்கு வேதிகை அமைக்கவேண்டும். அந்த வேதிகை ஒருசாண் அகலம் ஒருசாண் நீளம் ஆறங்குல உயரத்தில் சதுரமாக இருக்கவேண்டும். நாற்பத்தெட்டுப் பதங்களில் இருபத்தேழு கலசங்களுக்கு வேதிகை அமைக்கு முறை வருமாறு:—

கீழவாசலில் மூன்று பதங்களைவிட்டு வடபக்கத்தில் இரண்டு

பதத்தில் இரண்டு வேதிகையும், அந்த வாசலுக்குத் தென்பக்கத்தில் மூன்று பதத்தில் மூன்று வேதிகையும், அப்பால் ஒருபதம் விட்டு அடுத்த மூலையில் ஒருபதத்தில் ஒருவேதிகையும், அதற்கு மேற்கே இரண்டு பதம்விட்டு இரண்டுபதத்தில் இரண்டுவேதிகையும், அப்பால் வாசல் உள்பட மூன்று பதங்கள்விட்டு மேற்கே இரண்டுபதத்தில் இரண்டுவேதிகையும், அப்பால் ஒருபதம்விட்டு மேற்கே ஒருபதமும் மூலையில் ஒருபதமும் அதற்கே வடக்கே ஒருபதமுமாக மூன்றுபதங்களில் மூன்றுவேதிகையும், அப்பால் ஒருபதம் விட்டு இரண்டுபதத்தில் இரண்டுவேதிகையும்; அப்பால் வடக்கே மூன்றுபதமும் வாசலும் விட்டு மூன்றுபதத்தில் மூன்று வேதிகையும், அப்பால் ஒருபதம்விட்டு மூலையிலுள்ள பதம் ஒன்று அதற்குக் கிழக்கே உள்ள பதம் ஒன்று ஆக இரண்டுபதத்திலும் இரண்டுவேதிகையும், அதற்குக் கிழக்கே ஒருபதம் விட்டு அப்பாலுள்ள இரண்டுபதத்தில் இரண்டுவேதிகையும், அதற்குக் கிழக்கே மூன்றுபதமும் வடக்கு வாசலும்விட்டு அதற்குக் கிழக்கே மூன்றுபதத்தில் மூன்றுவேதிகையும், அதற்கப்பால் ஒருபதம்விட்டு ஈசானமூலையிலுள்ள பதம் ஒன்று அதற்குத் தெற்கே பதம் ஒன்று ஆக இரண்டுபதத்தில் இரண்டுவேதிகையும், அமைத்து, அதற்குத் தெற்கே உள்ள ஒருபதத்தை விட்டு விடவேண்டும். இவ்வாறு இருபத்தேழு பதங்களிலும் இருபத்தேழு கலசவேதிகை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று அம்சுமான் ஆகமத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. பதின்மூன்று முழத்தில் சதுரமாக அமைக்கும் மண்டப இலக்கணம் இவ்வாறு அறிந்து கொள்க.

இனி ஒன்பதுமுழ நீளம் ஒன்பதுமுழ அகலத்தில் எண்பத்தொருபதத்தில் அமைக்கும் மண்டப இலக்கணம் வருமாறு:—

ஒருமுழங்கொண்ட நடுவிலுள்ள மத்தியபதம் ஒன்றும் சுற்றியுள்ள எட்டுப்பதமும் ஆக ஒன்பதுபதத்தில் மண்டலேஸ்வரவேதிகை. அதற்குமேற்கே ஒன்பதுபதத்தின் நடுவில் இஷ்டலிங்க வேதிகை. அதற்கு வடக்கில் பஞ்சௌஷதவேதிகை. அதற்குக் கிழக்கில் பஞ்சகும்பவேதிகை. அதற்குக் கிழக்கில் கும்பவர்த்தனி வேதிகை. இவ்வாறு ஐந்துவேதிகையும், அதற்குத் தெற்கே ஒன்

பது பதத்தில் சதுரமாக ஓமகுண்டம் ஒன்றும், இராக்ஷதபதம் முப்பத்திரண்டில் கிழக்குமுதல் நான்கு வாசலுக்கும் நான்குபதமும் அக்கினி மூலைக்குமேல் பதம் ஒன்றும் ஆக ஐந்து பதங்கள் நீங்க ஏனைய இருபத்தேழுபதங்களில் முன்சொன்னவாறு இருபத்தேழு கலசவேதிகைகளும் அமைத்துக்கொள்க. இவ்வாறு ஒன்பது முழ மண்டப இலக்கணமும் அம்சுமான் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. சிவதீக்ஷா மண்டப இலக்கணத்தைக் குருமுகமாக அறிந்து தீக்ஷைசெய்தல் குருவுக்கும் சிஷ்யனுக்கும் மங்களத்தைத் தருவதாகும். குருமுகமாகத்தெரியாது செய்யின் அமங்களத்தைத் தருமாதலின் குருமுகமாக அறிந்தே செய்யவேண்டும். (195–205)

(அ–கை.) மண்டபத்தின் எண்பத்தொரு பதங்களின் பெயரைக் கூறுகின்றார்.

ஏகாஶீதிபதாநி ஸ்யுர்மத்யே ப்ராஹ்மமிஷ்யதே
தம் தைவிகம் பஹிரஷ்டௌ த்வ்யஷ்டௌ மாநுஷம் வெ
ஷம் தைவிகம் । மாநுஷ்யம் ஷோடஶ பைஶா
ஶகம் சதுர்விம்ஶ பைஶாசகம் த்ராத்ரிம்ஶச்ச பதாநி
ராக்ஷஸஞ்சேதி ப்ரோக்தா பதாவ்யாஸதே ॥ ॥௨௦௬॥

(206.) மண்டபம் சமசதுரமாக எத்துணை முழத்திற் கொண்டாலும் அந்த இடத்தை கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் நூலினாலே ஒன்பதுக்கொன்பதாகக் கீறி எண்பத்தொரு பதமாக்குக. அவற்றுள் நடுப்பதம் பிரமபதம், அதைச் சுற்றியுள்ள எட்டுப்பதம் தைவிகபதம், அதைச்சுற்றியுள்ள பதினாறு பதம் மானுடபதம், அதைச்சுற்றியுள்ள இருபத்து நான்குபதம் பைசாசபதம், அதைச்சுற்றியுள்ள முப்பத்திரண்டுபதம் இராக்ஷசபதம், இவ்வாறு எண்பத்தொரு பதங்களினுடைய பெயர் அறிந்துகொள்க. (206)

(அ–கை.) மண்டபத்தின் நூற்று அறுபத்தொன்பது பதங்களின் பெயரைக் கூறுகின்றார்.

ஸ்யாதே த்ரயோதஶ தேரோர்த்வ்யஸ்ரகமேஶ க்ஷேத்ரே பதா
வ்யா கயம் ப்ராஹ்மம் தைவகமேஷா ஷட்த்ராஷ்டகமிதா
வ்யாதே மாநுஷிகம் தத்பஹி: । மாநுஷ்யம் ஷோடஶ வீதி

காத்ரிம்சத்வாஸ் ஆஹ்ரூம் பாதா ஸவ்ருதி: பைசா
சம் பரிதோஷ்டசத்வாரிம்சோ ஷ்டாசத்வாரிம்சகம் ராக்ஷ
ஸம் ॥ ॥௨0௭॥

(207.) மண்டபத்தைப் பதின்மூன்றுக்குப் பதின்மூன்றாகக்கீறி நூற்றறுபத்தொன்பது பதமாக்குக அவற்றுள் நடுவில் உள்ள ஒருபதம் பிரமபதம், அதனைச் சுற்றியுள்ள எட்டுப்பதம் தைவிகபதம், அதனைச்சுற்றி மூன்று வீதியிலுமுள்ள எழுபத்திரண்டுபதம் மானுடபதம், அதனைச்சுற்றியுள்ள நாற்பதுபதம் பைசாசபதம், அதனைச்சுற்றியுள்ள நாற்பத்தெட்டுப்பதம் இராக்ஷஸபதம். இவ்வாறு அம்சுமானாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (207)

(அ-கை.) பதப்பிரயோசனங் கூறுகின்றார்

ப்ராஹ்மே து மண்டபேசஸ்ய வேதிகா ஸ்தாபயேத் காயேஷு
வேதீஸமா மாநுஷ்யாவ்யபதே து குண்டவேதனம்
வேத்யஸ்ரதவேஸ்யாவ்யத: । பைசாசம் பரிசாரகா
யுக்தஸ்ரீஸஞ்சாரயோக்யம் பதம் ராக்ஷஸாவ்ரு
திதேவகும்பவிஷ்டம் ப்ரோக்தம் ஹி தத்ராக்ஷஸம் ॥௨0௮॥

(208.) பிரமபதத்தில் மண்டலேஸ்வரவேதிகை. தைவிகபதத்தில் உபவேதிகை. மானுஷ்யபதத்தில் ஓமகுண்டமும் நான்கு வேதிகைகளும். பைசாசபதத்தில் பரிசாரகர்முதலியவரின் சஞ்சாரம். ராக்ஷசபதத்தில் ஆவரண தேவர்களுக்குரிய கலசஸ்தாபனம். இவ்வாறு சிவதீக்ஷா மண்டபப் பிரயோசன மறிந்து ஆசிரியர் சிவதீக்ஷை செய்விக்கவேண்டும். (208)

(அ-கை.) எண்பத்தொருபதங்கள் கொண்ட சிவதீக்ஷா மண்டப இலக்கணங் கூறுகின்றார்.

ஆரப்ய ஸூத்ரஸங்க்யா தத்ர மண்டபே
பாதார்த்தவிஷபாஸ நவா நவபதம் ஸ்யாத் ।
மத்யே நவகேஷ்வேகதத்வபதமத்யே
குண்டநவகேஷு சிவகுண்டவியாநம் ॥ ॥௨0௯॥

(209.) ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, ஐந்து என்னும் இந்த எண்களுள் யாதானும் ஓர் எண்ணுள்ள கைமுழத்தையுடைய இடத்தில் பன்னிரண்டு அல்லது பதினாறுகால்கள் அமைத்து எண்பத்தொரு பதங்களாகச் செய்யவேண்டும். நடுவில் மும்மூன்று பதமாக ஒன்பது பதங்களிருக்கவேண்டும். அந்தப் பதங்களில் வேதிகைகளை அமைத்து பக்கங்களில் இருக்கும் மூன்றுபதங்களின் மத்தியில் ஒன்பது அல்லது ஐந்து குண்டங்களை யுடையதாய் அம்மண்டப மிருக்கவேண்டும். (209)

(அ-கை) மண்டப குண்டசுத்தி இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

வீக்ஷாப்ரோக்ஷண தாடநாப்யுக்ஷண கநநோத்தாரணா
பூரணைஸ்ஸமீக்ருதம் ஸேசநகுட்டநஸம்மார்ஜநலேப
நைஸ்ஸாஸ்த்ரோக்தம் | ஸம்பூஜ்ய ஸூத்ரவேஷ்டநம் ஸா
ர்ச்சநம் ரேகாசதுஷ்டயம் வஜ்ரீகரணம் லாஜாவிகிரணம்
ஸம்ஸ்க்ருதம் மண்டபம் ஸ்யாத் || ||௨௧௦||

வீக்ஷாப்ரோக்ஷண தாடநாப்யுக்ஷண கநநோத்தாரணம்
பூரணம் ஸமீகரணம் ஸேசநகுட்டநஸம்மார்ஜநலேப
நைஸ்ஸாஸ்த்ரோக்தம் | ஸம்பூஜ்ய ஸூத்ரவேஷ்டநம் ஸார்ச்ச
நம் ரேகாசதுஷ்டயம் வஜ்ரீகரணம் ஸம்ஸ்க்ருதம்
சதுஷ்பதார்ப்பணைஸ் ஸம்ஸ்க்ருதம் குண்டம் ஸ்யாத் || ||௨௧௧||

(210—211.) மண்டபசுத்தி பதினெட்டு வகைப்படும். அவை வருமாறு:—நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்பியுக்ஷணம், கனனம், உத்தாரணம், பூரணம், சமீகரணம், சேசனம், குட்டனம், சம்மார்ஜனம், சமாலேபனம், நிவிர்த்திமுதலிய கலைகளை அருச்சித்தல், சூத்திரவேஷ்டனம், அர்ச்சனம், ரேகாசதுஷ்டயகரணம், வச்சிரீகரணம், பொரிமுதலிய திரவியங்களை இறைத்தல் என இவ்வாறு மண்டபசுத்தி பதினெட்டுவகையுங் கண்டுகொள்க. பொரிமுதலியவற்றை இறைத்தலைநீக்கி சதுஷ்பதார்ப்பணஞ் சேர்த்து குண்டசுத்தி பதினெட்டு வகைப்படும்.

(210—211)

(அ-கை) இருபத்தேழு கலசதேவதைகளின் பெயரை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[Grantha verse 212, illegible] ॥உகஉ॥

[Grantha verse 213, illegible] ॥உகங॥

(212 - 213.) இருபத்தேழு கலசங்களில் பூசிக்கப்படும் தேவதைகள இருபத்தேழு பெயர் ஆகும். அவை வருமாறு :— நந்தி, சாந்திகலை, மகாகாளம், இந்திரன், சூரியன், அக்கினி, பிருங்கி, வித்தியாகலை, விநாயகர், யமன், வாஸ்துபிரமன், நிருதி, விட்டுணு, ரிஷபம், நிவிருத்திகலை, ஸ்கந்தர், வருணன், மகாலெக்ஷ்மி, வாயு, விநாயகன், தேவி, பிரதிட்டாகலை, சண்டேசுரன், குபேரன், சப்தகுரு, ஈசானன், பிரமன் ஆக இவ்வாறு கிழக்குமுதல் பிரதக்ஷிணமாக இருபத்தேழு கலசங்களில் பூசிக்கப்படும் இருபத்தேழு தேவதைகளும் அறிந்துகொள்க. (212 - 213)

(அ-கை) சிவதீக்ஷா மண்டபத்தில் செய்யப்படும் பூஜாக்கிரமங் கூறுகின்றார்.

[Grantha verse 214, illegible] ॥உகச॥

(214) சூரியபூஜை, தோரணபூஜை, துவாரபூஜை, எட்டுக் கொடிகளின் பூஜை, எட்டு யானையின் பூஜை, அஷ்டமங்கல பூஜை

வேதிகையின் சமீபத்தில் இருத்தல். தனது கையை சிவனது கையாகச் செய்துகொள்ளல், பஞ்சகவ்வியஞ் செய்தல், மண்டப சுத்தி செய்தல், வாஸ்த்துபிரமபூஜை, மகாலெக்ஷ்மி பூஜை, திக்குப்பாலர்களின் பூஜை, தசாயுதபூஜை, ஸ்திராசனம், கும்பவர்த்தனிபூஜை, கணேஸ்வரபூஜை, சப்தகுருபூஜை, இஷ்டலிங்கபூஜை; மண்டலேஸ்வரபூஜை, அக்கினிகாரியாரம்பம் என இவ்வாறு முறையே ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்வது மண்டபபூஜாக்கிரமமென்றறிந்து கொள்க. (214)

(அ-கை.) தோரண இலக்கணங் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||உகரு||

(215.) சிவதீக்ஷா மண்டபத்திற்குத் தோரணங்கள்நான்கு. அவைவருமாறு:—கிழக்குவாசலுக்கு ஆலந்தோரணம். தெற்குவாசலுக்கு அத்தித்தோரணம். மேற்குவாசலுக்கு அரசதோரணம். வடக்குவாசலுக்கு இச்சில்தோரணம். இவ்வாறு நான்கு தோரணமுங் கண்டுகொள்க. இந்தத்தோரணங்களுக்கு அகலமும் நீளமும் அந்தந்த வாசலின் அகல நீளங்களை யொத்திருக்க வேண்டும். தோரணத்தின்மேல் செய்யப்படும் ஒன்பது சூலத்தின் நீளமும் கனமும் வருமாறு:—ஏழங்குல நீளமும் பெருவிரல் கனமுமாயும் மூன்றுபலகைகளாற் செய்யப்பட்டதாயும் குறுக்கே கனமாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு அம்சுமான் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (215)

(அ-கை.) அஷ்டமங்கலப் பலகைகளின் இலக்கணம் நான்கு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||உகசு||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௧௭||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௧௮||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௧௯||

(216-219.) தீக்ஷாமண்டபத்திற்கு அஷ்டமங்கலப்பலகை சுவர்ணத்தினாலும், வெள்ளியினாலும், செம்பினாலும் செய்யலாம் அல்லது மரத்தினாற் செய்யலாம். அந்தப் பலகையினுடைய நீளம் பதினாறங்குல மிருக்கவேண்டும். பலகையினுடைய அகலம் எட்டங்குலமும், கனம் இரண்டு அங்குலமுமாக இருத்தல் வேண்டும். இந்த அளவில் எட்டுப்பலகை செய்துகொள்ளல்வேண்டும். இவ்வாறு காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவன்றிப் பதினொரு அங்குலமுதல் பத்தொன்பது அங்குலம்வரை நீளமும் நீளத்திற் பாதி அகலமும் இரண்டு பெருவிரல் அளவான கனமுமாக இருக்கலாமென்று காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. பலகையின் நீளத்தை மூன்று பங்காக்கி, கீழாயுள்ள ஒரு பங்கில் எட்டுப்பலகைகளிலும் பீடம் எழுதவேண்டும். மற்றைப் பங்குகளில் ஒரு பலகையில் கண்ணாடியும், ஒரு பலகையில் பூரணகும்பமும், ஒரு பலகையில் இடபமும், ஒரு பலகையில் இரண்டு சாமரமும், ஒரு பலகையில் ஸ்ரீவத்ஸமாகிய இலக்குமியும், ஒரு பலகையில் சுவஸ்திகமும், ஒரு பலகையில் சங்கும், ஒரு பலகையில் தீபமுமாக எட்டுப் பலகைகளில் எட்டு மங்கலங்களை

யும் எழுதவேண்டும். இந்த மங்கலங்களை ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை, சுமுகி, சுந்தரி, காமினி, காமவர்த்தனி யென்னும் எண்மர்கள் தரித்திருப்பதாகவும், கண்ணாடியில் கந்தரையும், பூரணகும்பத்தில் விநாயகரையும், இடபத்தில் வீரபத்திரரையும், சாமரத்தில் கங்கையையும், ஸ்ரீவத்ஸத்தில் மகாலெக்ஷ்மியையும், சுவஸ்திகத்தில் ருத்திரனையும், சங்கத்தில் சந்திரனையும், தீபத்தில் அம்பிகையையும் பூஜிக்கவேண்டும். (216–219)

(அ-கை.) தசாயுதப் பலகைகளின் இலக்கணம் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

கர்த்தவ்யா ஹி தஶாயுதாநாம் பலகாஸ் தாம்ராதிநா
தாம்ராதிநாவா தீர்க்கே வ்ருக்ஷாஜ்ஞேயோ ஷ த தா
பெத்வா நம் த்ரம் மாத்ரம் । ஐத்ர்யம் வஸ்த்ர கா
ரணேத் தாவாந் வஸ்த்ரக்ஷணா ணவம் ஆரோஹா
யதாயுஃகாயுஃகலம் தே யேதி வக்ஷாஹாரம் ॥ ॥௨௨௦॥

கிஹாந்த்ருங்கிரணாமபோகத்தி யத்ஞக்ஷ்ருதே லக்ஷ
ணம் வஜ்ரம் கேதாம்பத்ராஜ்யவக்ரதி யஷ்டொஹதம்
வஹ்நிகம் । ஷோடஹாயாஸ்யவஹ்நிகஹ விஹிதம் ஹ
ஸ்தாயுபாநதத்ராகாரம் ஜேவநவே காயுபேயவா
ஹிதம் த்ரியாஹ்யாயம் ॥ ॥௨௨௧॥

(220 - 221.) தசாயுதப்பலகை செம்பு முதலிய உலோகங்களினாற் செய்யலாம். அல்லது மா முதலிய யக்ஞ விருக்ஷத்தினாலும் செய்யலாம். அந்தப் பலகை பதினாறங்குல நீளமும் ஆறங்குல அகலமும் மூன்று அங்குல கனமுமாய் இருத்தல்வேண்டும். அல்லது யாகசாலையின் வாசல் அளவாகவாவது அதிற் பாதியாகவாவது நீளமும் நீளத்திற்பாதி அகலமும் கொள்ளலாம். இவ்வாறு காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறன்றி வச்சிராயுதம் துவஜாயுதம் கதாயுதம் பத்மாயுதம் சக்ராயுதம் என்னும் இந்த ஐந்தும் அளவுகோலினால் ஒருமுழ நீளங் கொள்ளலாமென்றும், ஏனையசக்தி ஆயுதம் தண்டாயுதம் கத்தி ஆயுதம் பாசாயுதம் திரிசூலாயுதம் என்னும் ஐந்தும் இதிலே பாதியளவு கொள்ளலாமென்றும் கிரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (220–221)

(அ-கை.) சுருக்குசுருவ இலக்கணம் மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

வக்ஷ்யே ஸ்ருக்ஸ்ருவலக்ஷணம் ஸர்வாகமோதிதம்
ஷட்த்ரிம்ஶதங்குலாயாமம் விம்ஶத்யா து த
ண்டஷட்குலோச்ரிதம் தண்டஸ்ய நாஹோ ரஸவ: ।
தந்மூலே சதுரங்குலே கமலம் ஸார்த்தமுத்ர
க்ருதி: கும்பே ஸ்ருதிர்ஜ்ஞிகாது விதிநா கா
ர்யாக்ஷதாவாதக: ॥ ||௨௨௨||

வஸ்வஷ்டாங்குலவிஸ்த்ருதா ஸமவதா ஷோணா ர
ஸோங்குதா தந்நிம்நதா ஸ்ருவதாம் ஸமதா து ஸ
வேணிம் ஸம்ஜ்ஞதாவிஸ்த்ருதம் । ஸ்ரீவேதேந ஸ்ரு
தாயநம் ஸமவந்நோஸ்யா வஸ்ர்யாஸ்தே ஸ்ருதம்
ஸோதேந து ஸோஷ்டம்பாஜக்ருதி: ஸ்ருக்ஷா
ஸ்யேத்தோஷவத் ॥ ||௨௨௩||

ஷட்விம்ஶாங்குலஸம்ஸ்யா ஸ்ருவமதம் தத்யா
ஷ்டகம் தத்ரோர்த்வகுஹூமநகம் ஸஜஸிரஸ்தீய
க்ஷிகாம் ஸோமம் । வ்ருஷ்டம் தஜ்ஞாரம் ஸமம் கதஞ்
விந்யஸ்தே ஸ்வாதாவம் ஷடம்ஸ்ருத்யங்குலோஸ்யு
மதகமஸ்ரஷ்விவ்ருதா ஸ்ரீகா ॥ ||௨௨௪||

(222 - 223 - 224.) சுருக்கு இலக்கணம் வருமாறு:— நீளம் முப்பத்தாறு அங்குலம். அவற்றுள் இருபதங்குல நீளம் தண்டம். அந்தத் தண்டத்தின் கனம் ஆறங்குலம். அந்தத் தண்டத்தினடியில் கீழ்நோக்கித் தாமரைமுகுளம்போல நாலங்குலத்தில் ஒரு கலசம். அந்தத் தண்டத்தின் நுனியில் நாலங்குலத்தில் ஒரு கெண்டி. அதற்கப்பால் எட்டங்குலத்தில் சதுரமாக ஒரு வேதிகை. அந்த வேதிகையினுயரம் ஆறங்குலம். அந்த வேதிகையின் நடுவில் நாலங்குல அகலம் மூன்றங்குல ஆழத்தில் வட்டமாக ஒரு பள்ளம். அந்தக் குழியைச்சுற்றி எட்டு இதழ். அதற்குமேல் மூன்றங்குல அகலம் ஒரு அங்குல நீளத்தில் ஒரு கழுத்து. அதற்குமேல் ஏழங்குல நீளம் நுனியில் மூன்றங்குல அகலத்தில் யானை உதடுபோல் அமைத்து, வேதிகையினுடைய

நடுவிலுள்ள பள்ளத்தில் ஓரங்குல அகலம் நெய் ஒழுகும் வழியாகவும், வேதிகையின்மேல் சித்திரவேலைகள் உள்ளதாயும் இருத்தல்வேண்டும்.

இனி சுருவ இலக்கணம் வருமாறு:— நீளம் இருபத்துநாலங்குலம். நுனியில் நாலங்குல நீளத்தில் வட்டமாக இரண்டு பள்ளம். அதன் புறத்தில் இரண்டங்குலப் பிரமாணத்தில் யானை மத்தகத்திலுள்ள இரண்டு கும்பங்கள் போன்ற பிருஷ்டம். அதன் நடு, சேற்றினிடத்தில் வைத்த மான்குளம்படி போன்றிருத்தல்வேண்டும். மூன்றங்குலப் பிரமாணத்தில் தண்டமுங் கலசமும். இரண்டங்குலப் பிரமாணத்தில் கெண்டி. இவ்வாறு சுருவ இலக்கணம் அறிந்துகொள்க. சுருக்குசுருவ இலக்கணம் இந்த விதமாகக் காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ( )

(அ-கை.) பரிதி, விஷ்டரம், தலைப்பாகை. உத்தரீயம், ஞானகட்கம், கும்பம், வர்த்தனி, கலசமென்னும் இவற்றின் இலக்கணமுங் கும்பசொரூபமும் ஐந்து சுலோகங்களாற் கூறுகின்றார்.

பாஹ்யாம்ஶ: பரிதி: கார்யஸ்தேஷாம் ஸோமம் ததா ஜ்ஞா
ஷ்டேஷ்டா ஸாஹஸ்ராஹ்வ யாஸ்தாஸ்து பாஶ்சாத்யா ஜஸ்ரா
ஸே ஸஜா நிர்வ்ருணா । த்ரிம்ஶதங்குல தைர்க்ய
விஷ்டரஸ்தேஷாம் ஸோமம் பரித்யக்தவச் ச்ருஷ்டிம்பூம்
ஸாவதிர்த்தாஜ்ஞீதி தஸ்ய ஸ்த்ர ஸோமம் ஸாஸம் ॥௨௨௫॥

உஷ்ணீஷம் விதவாஸ உத்தரீயம் ஸமுக்தம் ஶ்ருங்கஸ்ய
க்ஷணம் ஸௌவர்ணஷட்கரம் ஸாணகேஷி தஸ்ய
ஸௌஜகவிஸ்தாரிதம் । ஸௌவர்ண வஸ்துவிஷயே க்ரு
தே ஸதி தஸ்கேநாயவா விஸ்த்ருதம் வோஷ்ணீஷா
யகஸ்த்ரீயஸ்யவா தீவ்தாகஸோஹீதம் ॥ ॥௨௨௬॥

காயாஸ் ஜ்ஞாநகட்காணஸ்யிதம் ஷட்த்ரிம்
ஶதா வேணிகாகாரஶாஸ்த்ர ஸஞ்ஜ்ஞீயாத
யாதுஜ்ஞாநோம ரஷிக: । தத்தைர்க்யம் பார
ஹஸ்தாநஸ்யவா ஸூத்ராயதம் காரணே போக்தம்
ஸ்ரீதாஸம்யாதம் விஸ்தாரோஜ்ஞ தாம்ரக
வா ॥ ॥௨௨௭॥

ज्ञानखड्गाकारमेव स्तेन साध्यं
[illegible] स्यात् ।
[illegible] स्तेन साध्यं
श्रीकालिकोक्तं कल्पसूत्राणां ॥ ॥உஉஅ॥

[illegible]
[illegible]
[illegible] ।
[illegible] जीवितं [illegible]
[illegible] ॥ ॥உஉகூ॥

(225-229.) பரிதியாவது பலாசங்கொம்பு அல்லது மாங் கொம்பில் இரண்டுமுழ நீளமும் பெருவிரல் கனமும் உள்ளதாய் பசுமையாய் கணுவில்லாததாய் உடைசலில்லாததாய் வளைதலில் லாததாய் துனியுடனே கூடியதாய் இருத்தல் வேண்டும்.

விஷ்டரமாவது முப்பது தருப்பையினுல் முடியப்பட்டதா யும் பரிதியையொத்த நீளமுடையதாயும் இரண்டங்குலம முடிச் சும் நாலங்குல நுனியும் உடையதாயும் இருத்தல் வேண்டும்.

தலைப்பாகையென்பது தலையில் சுற்றுகிற ஆடை. அது எட்டுமுழ நீளமும் நான்கு பக்கத்திலும் சிவப்புக்கரையும் இருத் தலோடு மிருதுவாயும் உண்டை பாவு அதாவது குறுக்குநூலும் நெடில்நூலும் ஒத்ததாயும் வெண்மையாயும் இந்த நீளத்தில் ஐந் தில் ஒருபங்கு அகலமுடையதாயும் இருத்தல் வேண்டும்.

உத்தரீயமாவது, தலைப்பாகை வேட்டி நீளத்தில் பாதி நீள மாயும் அந்த வேட்டி அகலத்திற்பாதி அகலமாயும் அல்லது நீள த்தில் ஏழில் ஒருபங்கு அகலமுடையதாயும் மூன்றில் ஒருபங்கில் தோகையுடையதாயும் இருத்தல் வேண்டும். இவ்வாறு தீப்தாக மத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஞானவாளாவது முதிர்ந்ததாயும் பசுமையாயுமுள்ள முப்ப த்தொரு தருப்பையினுல் மயிர்ப்பின்னலைப் போலப் பின்னி, வா ளின் பிடிபோல அடியும், நுனி நாலங்குல நீளமும் முடிச்சு இர ண்டங்குல நீளமுமாகப் பவித்திர முடிச்சுப்போல் வலமாக முடிய வேண்டும். இந்த ஞானவாளுக்கு அடிமுதல் நுனிவரை நீளம்

குருவினுடைய கையினால் ஒருமுழமாவது அல்லது பதினெட்டங் குலமாவது பதினாறங்குலமாவது பன்னிரண்டங்குலமாவது கொள்ளல் வேண்டும்.

கும்ப இலக்கணமாவது, நான்கு மரக்கால் நீர் பிடிக்கக்கூடியதாயும், வாய் நாலங்குலம் அல்லது ஆறங்குல அகலமுடையதாயும், விளிம்பு இரண்டங்குல முடையதாயும் இருக்கவேண்டும்.

வர்த்தனி இலக்கணமாவது, இரண்டுமரக்கால் நீர் பிடிக்கக் கூடியதாயும், வாய் நாலங்குலம் அல்லது மூன்றங்குல அகலமுடையதாயும் இருக்கவேண்டும்.

கலச இலக்கணமாவது, ஒருமரக்கால் நீர் பிடிக்கக்கூடியதாயும், வாய் நாலங்குலம் அல்லது மூன்றங்குல அகலம் உடையதாயும் இருக்கவேண்டும். இவ்வாறு கும்பம் வர்த்தனி கலசம் என்னுமிவைகளைக் கெடுதலின்றி நன்றாக வெந்து களங்கமில்லாத கும்பத்தில் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

கும்பத்தின் சொரூபமாவது கும்பத்தில் அருச்சிக்கப்படும் தேவனுக்கு கும்பத்திலுள்ள மண் அனைத்தும் மாமிசமாகும். கும்பத்தின்மேலே பூசியிருக்கும் மண் இரத்தமாகும். கும்பத்தின் உள்ளிருக்கும் தண்ணீர் மேதஸ் ஆகும். சுற்றியிருக்கும் நூல் எழுபத்தீராயிரம் நரம்புநாடியாகும். கும்பத்தின் உள்ளே இடும் இரத்தினம் சுக்கிலமாகும். கூர்ச்சம் எலும்பு அல்லது நாக்காகும். வக்திரம் முகமாகும். சாத்துகிற பரிவட்டம் தோலாகும். மாந்தழை தலைமயிர் அல்லது ஜடையாகும். மட்டையுடனே கும்பத்தின் மேலே வைக்கப்படும் தேங்காய் தலையாகும். அடியில் பரப்புகிற ஏழுதானியங்களும் ஆசனமாகும். மந்திரம் பிராணனாகும். இவ்வாறு கும்பசொரூபங் காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (225–229)

(அ-கை.) தீக்ஷை யாகம் என்னும் இவற்றிற்கு உரிய மரங்களைக் கூறுகின்றார்.

யஜ்ஞார்ஹா: ப்லக்ஷாஶ்வத்தவிஹாஷ க்ஷீரிணோ வா ஸாலவ
ஹேமே ஶம்யோ ரக்தா பில்வவடா ஶமீ ச வஜ்ரவ்ருக்ஷ
தஶ்ச வைகங்கத: । ஹோமே க்ஷீரவ்ருக்ஷாஸ்ஸமாக்யாதா

ஸ்தாநே ப்ரோக்தாநி ச தாவந்தி ஸுப்ரபேத த்விஷட்கம்
வ காரணே ஸமாக்யாதம் ॥ ॥உ௩0॥

(230.) யாக விருக்ஷங்கள் எட்டென்று கிரணாகமத்தி லும் பத்தென்று சுப்பிரபேதாகமத்திலும் பன்னிரண்டென்று காரணாகமத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன, வில்வமரம், ஆலமரம், வன்னிமரம், கருங்காலிமரம், மாமரம், நறுமுருக்கைமரம், அத்திமரம், பலாசமரம், சந்தனமரம், வேங்கை மரம், அரசமரம், வாகைமரம் எனப் பன்னிரண்டுங் கண்டு கொள்க. (230)

(அ—கை.) ஆண்மரம் பெண்மரம் அலிமரங்களின் இலக்க ணங் கூறுகின்றார்.

அந்தஸ்ஸாரா பவேத்யஸ்து வ்ருக்ஷா
ஸ்த்ரீஜாதயோ ஹ்யஸ்ஸாரவ்ருக்ஷா: ॥
ஸாரஹீநாஸ்ஸாரவ: பாரம்பர:
ஷண்டாஸ்ஸர்வே துஷ்டவிதா இதி ॥ ॥உ௩௧॥

(231.) உள்ளே வயிரமாயிருக்கிற மரமனைத்தும் ஆண்மர மாகும். மேலுள்ள பட்டையில் வயிரமாயிருக்கிற மரமனைத்தும் பெண்மரமாகும். இந்த இரண்டுவகையுமல்லாத மரமனைத்தும் அலிமரமாகும். இவ்வாறு மரங்களனைத்தும் மூன்று வகையா யிருக்குமென்றறிந்துகொள்க. (231)

(அ—கை.) சமித்து விறகு இரைக்கப்படுந்திரவியம் என்னு மிவற்றினிலக்கணங் கூறுகின்றார்.

பாலாஸஸ்ஸமிதோ விதஸ்திவிஹிதா: ஸம்பூர்ணா
காஷ்டாநி ஸ்யாத் தத் த்வேஷ்டமேகம் ச ததா
ஹீநாநி ஸாத்ராணி ஸாஸ்த்ரோக்தானி । ஹீக்ஷாயாம் ஸஹிதாநி
ஸர்வவிகிரத்ரவ்யாணி ராஜாஸ்திராஸ்திஸாபஸோகூத
ஸஹஸ்ரஸம்கீர்ணாநி வர்ஜிதாநி காவேரந்த்ர ॥ ॥உ௩உ॥

(232.) சமித்தாவது ஒருசாண் நீளத்தில் நுனியுடனே கூடினதாய், சுண்டுவிரல் கனமுள்ளதாய், பலாசமரம், மாமரமுதலியவற்றில் உள்ளதாய் ஐந்து வகைப்படும். விறகாவது பலாசமரம், மாமரமென்னும் இரண்டு முதலிய மரங்களிலுள்ளதாய், பதினாறங்குல நீளமுள்ளதாய் பதினாறுவகைப்படும். இரைக்குந்திரவியங்களாவன பொரி, எள்ளு, கடுகு, அக்ஷதை, பஸ்மம், புஷ்பம், தருப்பை ஆகிய ஏழுமாம். இவ்வாறு காலோத்தர ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. (232)

(அ-கை.) ஏழுவகைத் தானியங்களிவையெனக் கூறுகின்றார்.

யாந்யாநி ஸர்வத்ர ஸந்தி ஸர்வதோ
வ்ரீஹய꞉ கங்குயுக்தாஸ்திலமாஷஶிம்பிகா꞉ ।
ஸிதாயுக்தாஶ்சைவ ஸர்ஷபாஶ்ச
ஹோமே து ஸர்வகர்மஸு ச யாந்யவஶ்ய꞉ ॥ ( )

(233) ஏழுவகைத் தானியங்களாவன, நெல்லு, கொள்ளு, எள்ளு, உளுந்து, அவரை, கடுகு, பயறு என்னும் ஏழுமாம். இவை கும்பபூஜைக்கு ஆகும். ஓமத்துக்கும் ஆகும். இவையல்லாத சகலதானிய வர்க்கங்களும் ஓமத்துக்கு மாத்திரம் ஆகும். (233)

(அ-கை.) பஞ்சௌஷதம், பஞ்சயவம், பஞ்சமிருத்து, ரசர்தி, பஞ்சதுவக்கு, பஞ்சபல்லவம் என்னு மிவைகளைப்பற்றி மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

பஞ்சௌஷதயோ ஸஹதேவீ ச வ்யாக்ர
ஹ்ரீவேரம் சைவ ... ।
க்ராந்திஶ்ச ஶாலியவகோ வ்ரீஹிஶ்ச
நீவாரமேவ ச யவாஶ்ச பஞ்ச ॥ ॥உ௩௪॥

வ்ருஷஶ்ச பஞ்சாத் ஸஞ்ஜி ...
ஸிம்ஹிகா ... வ்ருஷஸ்ய ஶ்ருங்கமே ।

[illegible] ॥௨௩௫॥

[illegible] ॥௨௩௬॥

(234–236.) பஞ்சௌஷதங்களாவன, சீதேவியார் செங்கழுநீர், குமிழ், நறுமுருக்கை, ஓரிலைத்தாமரை, விஷ்ணுக்கிராந்தி என்னுமைந்துமாம்.

பஞ்சயவங்களாவன. சம்பாநெல்லு, வால்நெல்லு, வரகு, குழைச் செந்நெல் நெல்லு மூங்கிலரிசி என்னும் ஐந்துமாம்.

பஞ்சமண்ணாவன, மலையிலுள்ளமண், கடலிலுள்ளமண், குளத்திலுள்ளமண், ரிஷபத்தின் கொம்பிலுள்ளமண், சிவாலயத்திலுள்ளமண் என்னுமைந்துமாம். இந்த ஐந்துடனே நண்டுவளையிலுள்ளமண், ஆனையடிமண், புத்துள்ள நதியின்மண் சேர்த்து மண் எட்டென்று கொள்ளுதலும் உண்டு. இவை ஆசாரியர் கைக்ழுவுதல் முதலியவற்றிற்கு உபயோகப்படும்.

ரசாதியாவன, ரசம், நெல்லிக்காய்க்கந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், சிலாசித்து என்பனவாம்.

பஞ்சபட்டையாவன, நாவல்மரம், அத்திமரம், மாமரம், அரசமரம், ஆலமரம் என்னும் ஐந்துமரங்களின் பட்டைகளாம்.

பஞ்சதளிர்களாவன, மேலே சொல்லப்பட்ட ஐந்து மரங்களின் தளிர்களாம். இவ்வாறு காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இவை அனைத்தும் சாதகாபிஷேகம், தீக்ஷை, பிரதிட்டைகளில் உபயோகிக்கப்படும். (234–236)

(அ–கை.) கூர்ச்ச இலக்கணங் கூறுகின்றார்.

[illegible]

[illegible] ||உ௩எ||

(237.) கூர்ச்ச இலக்கணம் எவ்வாறெனில், முப்பத்தாறு தருப்பையாவது, இருபத்தைந்து தருப்பையாவது, பதினைந்து தருப்பையாவது, ஒன்பது தருப்பையாவது, ஏழு தருப்பையாவது, ஐந்து தருப்பையாவது, மூன்று தருப்பையாவது கொண்டு கூர்ச்சம் முடியலாம். நுனி நாலங்குலம். முடிச்சு இரண்டங்குலம். நீளம் பதினெட்டங்குலம். அடியிலுள்ள நாளம் பன்னிரண்டங்குலம். இவ்வாறு கூர்ச்ச இலக்கணம் அறிந்துகொள்க. ஒரு தருப்பையாகில் முடிச்சு வேண்டாம். (237)

(அ-கை.) வாஸ்து சாந்திவிதி ஐந்து சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||உ௩அ||

[illegible] ||உ௩௯||

[illegible] ||உ௪0||

ஐத்ர்யேஷு ச பதாநா தா வஸ்து வியுதா ஸம்
ஹ்ருத்ய ஷட்க ஸ்தலே தேதேவாஸ்தண்டிலாவ்ருதே
ச கல்பிதா ஆத்ரிம்சத்தீசாதய: । பர்ஜந்ய ஸ்தண்டில
ஷட்கேஷ்வபி பாத்யாதேர்க்யாப்யஸ்தம் ஸத்யா பக்ஷாதேராய
ஷயா ந நாதிபவதிவிம்சகாக்நாப்ஸு பத்ந்யா: ॥ ௨௪௧ ॥

பஞ்சாசத்யர்ச்சிதா தண்டயா ஸ்தேஷா ஸ்த
ஹஸ்தேந ச ஸகலாநலிபத்ஜயேந்த்ரா ய
ஜேதீசேஷோ பரோ கோணத: । ஸாவிதாம் ச
ஸ ஜோதீசே ஸகலம் கோணபாத்ய ஸ்யேந ப
த்யஸ்தாபஞ்சகே ஜ்யவைஸ்தி: பஞ்சிகாயாம்
கோணே: ॥ ॥௨௪௨॥

(238–242.) *தீக்ஷாங்கமும் பிரதிட்டாங்கமுமான வாஸ்து சாந்திசெய்யுமிடத்தில், தீக்ஷாமண்டபத்திற்குள் அக்கினி திக்கில் நெல்லு அல்லது அரிசியினாலாவது ஒருமுழ அகலம் ஒருமுழ நீளம் மூன்றங்குல உயரத்தில் ஒருமண்டலமிட்டு மண்ணினால் வேதிகைசெய்து, முதலாவது விக்நேஸ்வரபூஜையும், பின்னர் கும்பபூஜை வர்த்தனிபூஜையுஞ்செய்து, அந்த வேதிகையில் மண்டூக பதக்கிரமமாக அறுபத்துநான்கு பதங்கீறி, அதில் கர்ணசூத்திரமிட்டு, நடுவிலுள்ள நான்குபதத்தில் வாஸ்து பிரமாவைப் பூஜிக்கவேண்டும். அவருடைய தியானம் வருமாறு:—நான்கு முகமும் நான்குகையும் ஒருகையில் ஜபமாலையும் ஒருகையில் கெண்டியும் ஒருகை முழந்தாளிலும் ஒருகைபூமியில் ஊன்றியும் இருப்பதாகவும், சொர்ணநிறமாகவும், பத்மாசனத்திலிருப்பதாகவும், பூமிசயனத்தில் விருப்பமுள்ளவராயும், அப்பொழுதுதான் நினைப்புடனே எழுந்தவராயும் தியானிக்கவேண்டும்.*

அவருக்குக் கிழக்காக ஆறுபதத்தில் மரீசி என்கிற தேவனையும், தெற்கே ஆறுபதத்தில் விவஸ்வானையும், மேற்கே ஆறுபதத்தில் மித்திரனையும், வடக்கே ஆறுபதத்தில் தாராதரரையும் அர்ச்சிக்கவேண்டும். அக்கினிகோணமுதல் நான்கு கோணங்களிலும் ஒவ்வொரு கோணத்துக்கு இருவராக சவிதா, சாவித்திரன், இந்திரன், இந்திரஜயன், ருத்திரன், ருத்திரஜயன், ஆபன், ஆபவத்சன் என்னும் எண்மர்களையும் பூஜிக்கவேண்டும். சுற்றி

யுள்ள முப்பத்திரண்டு பதத்தில் ஈசானர் முதலாக முப்பத்திரண்டு தேவதைகளை அருச்சிக்கவேண்டும். அவர்களைச் சுற்றிக் கிழக்கு முதலாக நான்குதிக்கிலும் சரகீ, விதாரீ, பூதநா, பாபராக்ஷஸீ என்னும் நால்வர்களையும், அக்கினிகோணமுதல் நான்குகோணங்களிலும் ஸ்கந்தர், அரியமா, ஜ்ரும்பா, பலிபிஞ்சா என்னும் நால்வர்களையும் பூஜிக்கவேண்டும். ஆகவே, வாஸ்து பிரமாவுடன் மரீசி முதலான நால்வர், சவிதா முதலிய எண்மர், ஈசானர் முதலிய முப்பத்திரண்டுபெயர். சரகீ முதலிய நால்வர், ஸ்கந்தர் முதலிய நால்வர்களையுஞ்சேர்த்து ஐம்பத்துமூன்று தேவதைகளை அருச்சிக்கவேண்டுமென்க. அருச்சித்த இடத்திற்குக் கிழக்கில் தரையில் சுவாகாந்தமாக ஓமஞ்செய்யவேண்டும். அதன்பின் பலிசமர்ப்பித்தல் ஈறுகவுள்ள கிரியைகளையுஞ்செய்து மண்டபத்திற்கு வெளியில் பரியக்கினி காரியமுஞ்செய்யவேண்டும். ()

(அ-கை.) அங்குரார்ப்பணவிதி ஆறுசுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ॥உசகூ॥

[illegible] ( )

[illegible] ॥[illegible]॥

[illegible] ( )

[illegible] ॥உ௪எ॥

[illegible] ॥உ௪அ॥

(243 - 248) சிவதீக்ஷை செய்யுங்காலத்து முதலாவது அங்குரார்பணஞ்செய்து அதன் பின்னர் சிவதீக்ஷை செய்யவேண்டுமென்று காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்குரார்ப்பணஞ் செய்யு முறை வருமாறு:— தீக்ஷைசெய்கிற தினத்திற்கு முன்னர் ஒன்பது நாளிலாவது ஐந்துநாளிலாவது மூன்றுநாளிலாவது முதநாளிலாவது அல்லது அந்தநாளிலாவது அங்குரார்ப்பணஞ் செய்யவேண்டும். செய்யுமிடம் தீக்ஷாமண்டபத்துள் நிருதிதிக்கு அல்லது ஈசான்திக்காக இருத்தல்வேண்டும். அந்த இடத்தில் கலம் அரிசி முதற்கொண்டு எவ்வளவு கூடுமோ அவ்வளவு அரிசியாலாவது தானியங்களாலாவது ஆசிரியர் கைமுழத்தில் சதுரச்ரமாக ஒரு மண்டலமிட்டு அதில் தாமரைபோல் கீறி, அதனைப் பதினாறு கோஷ்டமாக்கி, அவற்றுள் நடுவிலுள்ள நான்கு கோஷ்டத்தை ஒன்றாக்கி, அதில் குமுதாசனங்கற்பித்து, அந்த ஆசனத்தில் சந்திரகும்பத்தையும், ஏனைய பன்னிரண்டு பதங்களிலும் பன்னிர[illegible] பாலிகைகளை, தருப்பையினாலே மூட

ப்பட்டது வாரங்களையுடையதாயும் மூன்றிழையினாலாவது ஐந்திழையினாலாவது ஏழிழையினாலாவது சுத்திவரக் கட்டப்பட்ட அரசிலை வாகையிலை வில்வபத்திரம் அருகு பசுமஞ்சள் தருப்பைப் பில்லு என்னும் இவைகளையுடையதாயும், எருமுட்டைப்பொடி சேர்த்து மணலை இதனோடுகூட்டி முன் விதிப்படி கொண்டுவரப்பட்ட மண்ணினால் நிறைத்து வலமாகவைத்து, அந்தக் கும்பத்திலுள்ள ஜலத்தில் பாவிக்கத்தகுந்த மலர்ந்த தாமரையில் சந்திரனை பூரணமான அங்கத்தையுடையவராகவும், ஒருமுகமும் ஆம்பற் புஷ்பங்களாற் பிரகாசிக்கின்ற இருகைகளையும் உடையராகவும், இரண்டுநேத்திரங்களையுடையராகவும், வெளுப்பாயும், ரோகிணி கிர்த்திகாதேவி என்னுமிவர்களுடன் கூடினவராகவும், உலகஞ் சந்தோஷிப்பதற்குக் காரணமாக யிருக்கிறவராகவும் பாவித்து, கும்பத்தில் அவரையும், பன்னிரண்டு பாலிகைகளில் பன்னிரண்டு சூரியர்களையும், ஆசனமூர்த்தி மூலமந்திரங்களால் ஆதாரசத்தியையும் பூசிக்கவேண்டும். பின்னர் ஒருசருவத்திலாவது ஒருசட்டியிலாவது ஒருபாத்திரத்திலாவது இருநாழி ஜலம் நிரப்பி சாலிநெல் விட்டு, எள்ளு, அவரைக்கொட்டை, துவரை, கடலை, கடுகு, பயறு, உளுந்து, கொள்ளு என்னும் எட்டுத்திரவியங்களாவது, அல்லது ஏழு அல்லது ஐந்துதிரவியங்களாவது, அந்த நெல்லுடனே கூட்டிக்கலந்து, பாலினால் மந்திரத்துடன் மூன்று முறைகழுவி, இருதயமந்திரத்தாலருச்சித்து, ஏழுமுறை மந்திரித்து, மங்கலவாத்தியங்களுடன் இந்தப் பாலிகைகளுள் இந்த வித்துக்களை யிடவேண்டும். இட்டபின் சந்திரகும்பத்திலுள்ள நீரினால் நனைக்கவேண்டும். சிவதீக்ஷை முடிந்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது நாளுக்குப்பின் அந்த அங்குரார்ப்பணங்களைப்பார்த்து சுபாசுப மறிந்து ஓமம் பண்ணவேண்டும். ஓமஞ் செய்தபின்னர் அங்குரங்களை நீரில் இடல்வேண்டும். இது சிவதீக்ஷா மங்களாங்குர விதியாகும். (243–248)

(அ-கை.) இரக்ஷா பந்தனவிதி கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible] ॥ ( )

(249.) *சிவதீக்ஷை செய்யுங்காலத்து ஆசிரியர் சிஷ்யனுக்கு இரக்ஷாபந்தனம் செய்யுமுறை வருமாறு:–ஆசிரியர் வடக்குமுகமாக இருந்துகொண்டு, சிஷ்யனைக் கிழக்குமுகமாக நிற்கச்சொல்லி, வெண்கலமுதலான பாத்திரத்தில் நாலு நாழி அரிசியும் ஒருபாக்கும் மூன்று வெள்ளைவெற்றிலையும் ஒரு தேங்காயும், ஒரு பாத்திரத்தில் விபூதியும்வைத்து, பொன்னாற்செய்த காப்பாவது அல்லது மூன்றிழை ஐந்திழை முதலாக ஒற்றைபடும் இழையினால் முறுக்கப்பட்ட பொன்னிறமான பருத்திநூலாற்செய்த காப்பாவது, அந்தப் பாத்திரத்தில்வைத்து அபிமந்திரித்து, பின்னர் அந்தக் காப்புநூலையெடுத்து குருவானவர் வலது பெருவிரல் நீங்க ஏனைய விரல்களினால் அஸ்த்திரமந்திரத்தால் மும்முறை உருவி, சிஷ்யனுடைய வலதுகையில் சிவமந்திரத்தால் தரித்தல் வேண்டும்.* (249)

(அ - கை.) *சிவதீக்ஷையில் செய்யப்படுஞ் சைவாக்கினி காரியம் பதினைந்து சுலோகங்களாற் கூறுகின்றார்.*

[illegible]
[illegible] ॥ ॥௨௫௦॥

[illegible]
[illegible] ॥ ॥௨௫௧॥

[illegible]

[illegible] ॥௨௫௨॥

[illegible] ॥௨௫௩॥

[illegible] ॥௨௫௪॥

[illegible] ( )

[illegible] ॥௨௫௫॥

[illegible]

[illegible] ॥௨௫௭॥

[illegible] ( )

[illegible] ( )

[illegible] ॥௨௬0॥

[illegible] ॥௨௬௧॥

[illegible] ॥௨௬௨॥

[illegible] ( )

[illegible] ( )

(250–264.) தீக்ஷாக்னியை உம்பட் என்றுசொல்லி சுவாலை செய்தபின்னர் கர்ப்பாக்னியைப் பூசிக்கவேண்டும். இருதய மந்திரத்தால் தேவியின் இடதுகையில் தர்ப்பையால் செய்யப்பெற்ற கங்கணங் கொடுக்கவேண்டும். எள்ளால் சத்யோஜாத மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு மூன்று ஓமம் பண்ணி இருதய மந்திரத்தால் மூன்றுமுறை பூசிக்கவேண்டும். இது கர்ப்பாதானம் எனப்படும். இங்ஙனமே வாமதேவத்தாலும் சிரசாலும் ஓமம் செய்வது பும்சவனம். அகோரத்தாலும் சிகையாலும் மூன்று ஓமங்கள் செய்வது சீமந்தம். தற்புருடத்தாலும் கவசத்தாலும் ஓமம் செய்வது சாதகன்மம். இந்தக்காரியங்களை நடத்திய பின்னர் கர்ப்பமலங்கள் நீங்கும்பொருட்டு கவசத்தால் சுவாலைசெய்து அருக்கிய ஜலங்கொண்டு அஸ்திரத்தால் புரோச்சணஞ்செய்து மறுபடியும் கவசத்தால் சுவாலைசெய்து தர்ப்பத்தால் செய்யப்பெற்ற கங்கணத்தை எடுத்து சுவர்ணகங்கணங் கொடுக்கவேண்டும். பின் இருதயத்தால் பூசைசெய்து சூதகம் நிவிருத்தியாகும்பொருட்டு அருக்கியங்கொண்டு சிவாஸ்த்திரத்தால் புரோக்ஷணஞ் செய்யவேண்டும். பின் அஸ்த்திரமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு தர்ப்பத்தால் தாடனஞ்செய்து வௌஷடுடன் கூடின கவசத்தால் அப்யுக்ஷணஞ்செய்து மேகலையில் தர்ப்பைகளால் கிரந்தி செய்து முடிந்து ஒருமுழ நீளமுள்ள விஷ்டரத்தைப்பரப்பி குண்டத்தின்கீழ் மேகலையில் பெருவிரல் பருமனும் ஒருமுழநீளமுங்கொண்ட பலாசங் கொம்பாலாகிய பரிதியையுந் தா

பிக்கவேண்டும். அக்னியினுடைய பல் நா கோடைவாய் ஜலம் இவைகளைச் சுத்திசெய்யும்பொருட்டு ஐந்து சமித்துக்களை அடியையும் முடியையும் நெய்யில் தோய்த்து இருதயத்தால் ஓமம் பண்ணவேண்டும். பரிதியில் பிரமன் சங்கரன் விட்டுணு அனந்தர் இவர்களையும், கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு ஆகிய திக்குக்களில் உள்ள விஷ்டரங்களில் இந்திராதி பதின்மரையும் பூசிக்கவும். அதன்பின் இவர்களிடம் அக்னி குழந்தையை காக்கும் பொருட்டுச் சொல்லவேண்டிய வார்த்தையைக் கூறவேண்டும்.

பின்னர் ஸ்ருக் ஸ்ருவம் இவைகளின் சுத்தி கூறப்படுகின்றது. நிரீக்கணம் முதலிய நான்கு சுத்திகளைச்செய்து ஸ்ருக்கை மேல்நோக்கின முகமாகவும் ஸ்ருவத்தைக் கீழ்நோக்கிய முகமாகவும் அவைகளைத் தர்ப்பைகளுடன் யெடுத்து உயர்ந்த தாபபங்களைவைத்து நூலாற்கட்டி அடியையும் நடுவையும் தலையையும் தொட்டுப்பிடித்து அஸ்த்திரமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அருக்கிய சலத்தாற் புரோக்ஷித்து அப்யுக்ஷணமும் கவசத்தால் அவகுண்டனமும்செய்து காஷ்டத்தைத் தியாகஞ்செய்யும்பொருட்டு இருதயத்தால் இவைகளை அக்னியிற் காய்ச்சவேண்டும். பிறகு அக்னியை மூன்றுமுறை சுற்றி நுனி நடுவு அடி இவைகளில் பிரமன் விட்டுணு ருத்திரனென்னும் இவர்களைப் பூசித்து, சுருக்கில் சக்தியையும் ஸ்ருவத்தில் சிவனையும் நியாசஞ்செய்து பின் பிரமன் விட்டுணு ருத்திரனுகப் பாவித்து, கவசத்தால் திரிசூத்திரங்கொண்டு ஸ்ருக் ஸ்ருவம் இவைகளின் கண்டத்தில்சுற்றி தனக்கு வலப்பக்கத்தில் தர்ப்பைமேல் மூலத்தால் தாபித்து இருதயத்தால் அருச்சிக்கவும்.

பிறகு நெய்யின் சுத்தி கூறப்படுகின்றது. ஈக்கணம் முதலியவற்றால் சுத்திசெய்யப்பெற்ற நெய்யை மூன்றுமுறை அக்கினியைச்சுற்றி அக்னிகோணத்தில் வைக்கவேண்டும். பிறகு தன்னைப் பிரமனுகத் தியானித்து, குண்டத்தின்மேல் மூன்றுமுறை அக்னியிற் காய்ச்சி அக்னிதிக்கில் தாபித்து தற்பைமுனையால் நெய் பிந்துவை ஓம் ஹாம் பிரமணே சுவாகா என்று சொல்லிக்கொண்டு ஓமம் செய்வதாகிய ஸ்தாபனமும், அதன்பின் விஷ்ணு சொரூபமாகத் தன்னுடைய தேகத்தைத் தியானித்து ஈசானதிக்கில் நெய்யைவைத்துத் தர்ப்பை முனையால் நெய் பிந்துவை ஓம்

ஹ்ரீம் விஷ்ணவே சுவாகா என்று சொல்லிக்கொண்டு ஓமம் செய்வதாகிய அதிச்ரயணமும், அதன் பின்னர் தன் தேகத்தை உருத்திர சொரூபமாகத் தியானித்து குண்ட நாபியில் நெய்யைவைத்து ஓம் ஹ்ரூம் ருத்ராய சுவாகா என்று சொல்லிக்கொண்டு நெய் பிந்துவை தெர்ப்பை நுனியால் ஓமம் செய்வதாகிய உத்வாசனமும் செய்து, ஒட்டையளவுள்ள இரண்டு தர்ப்பைகளினால் செய்யப்பெற்ற பவித்திரத்தைக் கட்டைவிரல் அணிவிரல்களால் எடுத்து அஸ்திரத்தால் நெய்யை அக்னிக்கு எதிர்முகமாக மூன்று முறை உத்ப்லாவனஞ் செய்க. அவ்விதமே தனக்கு எதிர்முகமாக இருதய மந்திரத்தால் சம்பிலவனஞ்செய்து, அந்தப் பவித்திர முடிச்சை அவிழ்த்து இருதய மந்திரத்தால் அபிமந்திரித்து தர்ப்பையைக்கொழுத்தி நெய்யிற்றேய்த்து அஸ்திரத்தால் அக்னியிற்போடவேண்டும். அவ்விதமே பிறிதொரு தர்ப்பையை எடுத்து நெருப்பிலேகொழுத்தி கவசத்தால் நெய்யை வலமாகச்சுற்றி மீளவும் நெருப்பிலே போடுவதான நீராசனமும் செய்யவேண்டும். பின்பு சாண் நீளத்து இரண்டு தர்ப்பைகளை நடுவில் கிரந்தியாகமுடிந்து பிரணவத்தை யுச்சரித்து நெய் மத்தியில் வடக்கு நுனியாகப்போட்டு வலதுபக்கம் இடதுபக்கம் இரண்டினையும் முறையே சுக்கிலபக்கம் கிருஷ்ணபக்கங்களாகவும், வலதுபக்கம் இடதுபக்கம் நடுப்பக்கங்களை முறையே பிங்களை இடை சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளாகக் கற்பித்து சுருவத்தினால் வலப்பக்கமாக நெய்யை எடுத்து ஓம் ஹாம் அக்னயே சுவாஹா என்று வெண்மையான அக்னியினுடைய வலது கண்ணிலும், இடப்பக்கமாக நெய்யை எடுத்து ஓம் ஹாம் சோமாய சுவாகாவென்று அக்னியினுடைய இடது கண்ணிலும், நடுவே நெய்யை எடுத்து ஓம் ஹாம் அக்னீ ஷோமாப்யாம் சுவாகா என்று அக்னியினுடைய நடுக்கண்ணிலும், ஓம் ஹாம் அக்னயே ஸ்விஷ்டகிருதே ஸ்வாகா வென்று அக்னியின் வாயிலும் சிறிது ஓமம்செய்து மீதமானதை அந்த அந்த நெய்யின் பாகங்களில் அஸ்த்ரமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு விடவேண்டும். இது சம்பாத ஓமம் எனப்படும். ஈண்டு ஒரு விசேஷம். அதாவது சுக்கிலபக்ஷமாயின் அப்போது முதலில் வலதுகண்ணில் அதற்குரிய மந்திரத்தை யுச்சரித்துக் கொண்டு ஓமம் செய்யவேண்டும். அச்சமயம் கிருஷ்ணபக்ஷமாய் இருந்தால் முதலாவது இடது கண்ணிற்கு அதற்குரிய மந்திரத்

த்தை யுச்சரித்து ஓமஞ்செய்து அதன்பின்னர் வலது கண்ணிற்கு ஓமம் செய்தல்வேண்டும். அதாவது ஓம் ஹாம் சோமாய ஸ்வாஹா ஓம் ஹாம் அக்னயே ஸ்வாகா ஓம் ஹாம் சோமாக்னிப்யாம் ஸ்வாகா ஓம் ஹாம் அக்னயே ஸ்விஷ்டகிருதே ஸ்வாகாவென்று அக்னியினுடைய இடம் வலம் நடு ஆகிய கண்களிலும் வாயிலும் முன்போல் ஓமஞ்செய்து, நெய்யை சம்ஹிதையால் அபிமந்திரணஞ்செய்து, ரக்ஷை அவகுண்டனம் இவைகளைச்செய்து, தேனு முத்திரை செய்துகொண்டு மூலமந்திரத்தால் அமிருதீகரித்து, மூலமந்திரத்தால் பூசைசெய்து, இருதயமந்திரத்தால் நெய் பிந்துவை அக்னியிலே விடவேண்டும்.

பின்னர் ஓம் ஹாம் சத்யோ ஜாதாய ஸ்வாஹா ஓம் ஹீம் வாமதேவாய ஸ்வாஹா ஓம் ஹூம் அகோராய ஸ்வாஹா ஓம் ஹேம் தத்புருஷாய ஸ்வாகா ஓம் ஹோம் ஈசானாய ஸ்வாகா என்று இவ்விதம் ஒவ்வொரு நெய்யின் ஆகுதியையும் அக்கினியின் முகங்களில் சமர்ப்பிக்கவேண்டும், அதன்பின் வக்திரானு சந்தானுகுதிக்கு வேண்டிய மந்திரங்களனைத்தையும் உச்சரித்து வக்திரானு சந்தானுகுதியையும் செய்யவேண்டும். அதன்பின் ஓம் ஹாம் ஹீம் ஹூம் ஹேம் ஹோம் சத்யோஜாத வாமதேவ அகோர தத்புருஷ ஈசானப்யாம் சுவாகாவென்று அக்கினி திக்குமுதல் வாயுதிக்கு ஈறுகவும், நிருருதி திக்குமுதல் ஈசானதிக்கு முடிவாகவும் நெய்யை ஓமம் செய்வதான வக்திரைகீகரண ஆகுதியையும் செய்யவேண்டும். இதன்பின்னர் அவைகளை அனுசந்தானஞ்செய்து கொண்டு ஏகீபாவஞ்செய்து நாமகரணத்திற்காக ஈசானத்தால் அருச்சித்து அஸ்திரத்தால் மூன்று அல்லது ஐந்து ஆகுதிகள்செய்து "சிவாக்னிஸ்த்வம் ஹூதாசன" என்று மூலத்தால் அக்கினிக்கு நாமகரணஞ்செய்து, இருதயத்தால் வாகீ சுவர வாகீசுவரர்களை அருச்சித்து, தனியே மூன்று ஆகுதிகள்செய்து அருச்சித்து, அவர்களை உத்வாசனஞ் செய்யவேண்டும். பின்பு குண்டத்தின் அளவாக அக்கினியின்வாயை யுண்டுபண்ணி நடுநாக்கில் சௌளம் முடிவாகவுள்ள சம்ஸ்காரங்களனைத்தையுஞ் செய்து, அவை பூர்த்தியடையும்பொருட்டு வௌஷடை இறுதியில் உடைய மூலமந்திரத்தால் பூரணுகுதி செய்யவேண்டும். பிறகு உபநிஷ்கிராமம் முதலிய கன்மாக்களும் செய்யவேண்டும்.

அதன்பின் உட்கார்ந்துகொண்டு ஹவிசுக்கு அக்கினி எடுத்து அப்புறம்வைத்து அக்கினிபகவான் சந்தோஷமுள்ளவராகவும் புஷ்டியுள்ளவராகவும் பவிக்கும் பொருட்டுப் பதினறு அங்குலம் நீளமுள்ள பதினறு பலாச சமித்துக்களை ஓமம் செய்யவேண்டும். பின்னர் சிவாக்கினியை 120-வது சுலோகத்திற் கூறியபடி தியானஞ்செய்து சிவாக்னியின் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ்செய்து அருச்சிக்க. பின்பு சிவமுகத்திற்கும் அக்கினியின் முகத்திற்கும் ஐக்கியத்தைப் பாவித்து நாடீ சந்தானஞ் செய்துகொள்ளவும். இவ்வாறு அக்கினி, யாகசாலையின் ஸ்தண்டிலம், கும்பம், ஆசாரியரான தனது இருதயம் ஆகிய இந்நான்கு இடங்களிலும் சிவன் இருப்பதாகப் பாவிக்கவேண்டும். பின்பு சாமான்ய விசேஷதர்ப்பணார்த்தமாக மூலத்தால் சதத்வய ஓமம் (இருநூறு) பண்ணி தசாம்ச ஓமஞ்செய்து பூர்ணாகுதியையும் செய்யவேண்டும். தீக்ஷாதர்சமென்னும் நூலில் எந்த எந்த விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றனவோ அவையனைத்தையும் செய்யவேண்டும். தீக்ஷாதர்சமென்னும் நூலின் ஆசிரியரால் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் எனக்குச் சம்மதமே. (250-264)

(அ-கை.) சமயதீக்ஷையின் முறை மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ||௨௬௫||

[illegible] ||௨௬௬||

ஃ-ுரா ஶ ஶ ஹ ணெந ஶிஷ்யகாரதஸஂவாதஷோ
ஃ: காரயிதெ ஃ-ுரஶதஹாதிஶ தஷெயா
ஷெயா உஶாஂஶாஹாதி: । வ-ுணாபா நிஷ்க்யதயெ
தா ஃ-ுரஶதகஷாஷோத்ரஂ வ-ுணாபயா ஷா
யாஂ ஷெவஶஸஂஹிதாவாபுணஂயஂ ஸாலோக்யதீக்ஷா
க்ஷஃ: ॥ ॥௨௬௭॥

(265 - 267) பூரணாகுதிசெய்து அதன் பின்னர் நல்ல காலம் நல்ல இடம் நல்ல நிமித்தம் உண்டாவதன் பொருட்டும், தீய நிமித்தம் போவதன் பொருட்டும், மூலமந்திரத்தால் நானூறு ஆகுதி செய்து, அதன் பின்னர் சிகை முதலிய மந்திரங்களால் சுவாகாந்தமாக ஒவ்வொரு ஆகுதி கொடுப்பதாகிய தர்ப்பணாகுதியும், நெய்யினால் ஹூம் படந்தமாக மும்மூன்று ஆகுதி செய்வதாகிய தீபனாகுதியும், ஸ்தாலிபாகஞ்செய்து பக்குவமாயிருக்கிறதென்று மண்டலேஸ்வரனுக்கு விஞ்ஞாபனமும், சூரியன் முதல் சப்தகுருக்களீறுயுள்ளவருக்கு ஸ்தாலிபாக நைவேத்தியமுஞ்செய்து, ஜபமீறுகப் பூசித்து, பிராயச்சித்தத்தின் பொருட்டு அஸ்திர மந்திரத்தால் பத்து ஓமஞ்செய்து பூரணாகுதி செய்க. பின்னர் இன்னாருக்குத் தீக்ஷை செய்துவைக்கிறேனென்று மண்டலேஸ்வரனுக்கு விக்ஞாபித்து, சிஷ்யனை அழைத்து மண்டலப்பிரவேசமும் மண்டலேஸ்வரனுக்கு நமஸ்காரமுஞ் செய்வித்து, அவனுக்கு உரியதான தீக்ஷாநாமஞ் செய்து மூலமந்திரத்தை உபதேசஞ் செய்க. பின்னர் சிஷ்யனுக்கும் தனக்கும் சம்பந்தத்தையுடைய தருப்பையின் வழியாய் எதிரிடையாகக் குருவானவர் சிஷ்யனுக்குந் தனக்கும் கும்பத்திலிருக்கும் மண்டலேஸ்வரனுக்கும் அக்கினியிலிருக்குஞ் சிவனுக்கும் நாடி சந்தானஞ் செய்து அதன் பின்னர் சிஷ்யனுடைய தலையில் சங்கிதா மந்திரங்களால் சம்பாத ஓமஞ்செய்து, சிவனுடைய கையாகப் பாவித்த பாவனை நிலைத்தற் பொருட்டு மூலமந்திரத்தால் நூறாகுதி செய்து, அதன் பின்னர் தசாம்ச ஓமஞ்செய்து, பிராயச்சித்தத்தின் பொருட்டு நூற்றெட்டுப் பூர்ணாகுதியுஞ் செய்து, சம்கிதா மந்திரங்களை மட்டும் உபதேசித்து, சிவனையுந் தன்னையும் நமஸ்கரிக்கச்செய்து சிஷ்யனுக்கு ஆசீர்வாதஞ்செய்க. இது சமயதீக்ஷா முறையாகிய சாலோக்கியதீக்ஷா முறையாகும். (265-267)

(அ - கை.) பாபத்தை நீக்கும் அகோரமூர்த்தியின் தியானங் கூறுகின்றார்.

[illegible] ॥௨௬௮॥

(268) பாபத்தை அபகரிக்கிறவருடைய தியானம் வருமாறு:—ஒரு திருமுகமண்டலமும், மூன்று திருக்கண்களும், நான்கு திருக்கரங்களும், கருமலைபோன்ற திருமேனியும், சிவந்த பரிவட்ட வுடையும், இமை ஆடாது இடைவிசாலமான கண்களும், ஆவென்றகன்ற வாயும், சிவந்து விரிந்து தாழ்ந்த சடையும், நாக்கு நுனியால் நனைபட்ட இரண்டு கடைவாயும், அபயம் வரதம் சூலம் வாள் என்னும் இந்த நான்கும் உடையவராய் எவராலும் எதிர்க்க முடியாதவராய்த் தியானிக்கவேண்டும். பாபபக்ஷண தேவரென்னும் பெயரையுடைய அகோரமூர்த்தியின் தியானம் இவ்வாறறிந்துகொள்க. (268)

(அ - கை.) பதினாறு சமஸ்காரங்களைக் கூறுகின்றார்.

[illegible] ॥௨௬௯॥

(269) பதினாறு சமஸ்காரங்களாவன:— ருதுசங்கமனம், கருப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், ஜாதகர்மம், உத்தாபனம், நாமகரணம், உபநிஷ்கிராமணம், அன்னப்பிராசனம், பிண்டவர்த்தனம், சௌளம், உபநயனம், காண்டோபகரணம், காண்டமோசனம், சமாவர்த்தனம், விவாகம் என்பனவாம்.

1. ருதுசங்கமனம். அஃதாவது, புருடன் தன்னைச் சிவரூபமாகவும் மனைவியைச் சத்திரூபமாகவும் பாவித்து, சங்கமத்திற்குரிய ருதுகாலத்தில் மனைவியைச் சேர்தல்.

2. கருப்பாதானம். அஃதாவது, கருப்பத்தை நிலைக்கச் செய்தல். அஃதெவ்வாறெனின், முதல் மாதத்தில் கருப்ப இலக்கணத்தை அறிந்து, விதிப்படி கிரியைகளைச் செய்து, கோதுமை உளுந்து சேகரித்து அவற்றுடன் பால் நெய் தயிர் கலந்து ஈசான மந்திரத்தால் மூன்றுமுறை மனைவியைப் பருகச்செய்து, தற்புருஷமந்திரத்தால் மனைவியின் வயிற்றைப் பரிசித்தல் முதலியன செய்தல்.

3. பும்ஸவனம். அஃதாவது, புருடக்குழந்தையாகப் பிறப்பதற்குப் பிழிதல். அஃதெவ்வாறெனில், விதிப்படி கிரியைகளைச் செய்து, ஆல் அரசு பொரசு அத்தி என்னும் இவற்றின் மொட்டுக்களை நெய்கலந்த பாலில் சேர்த்தரைத்து அக்கினியின் மேற்குப்பாகத்தில் மனைவியை யிருக்கச்செய்து, புது வஸ்திரத்தால் மூக்குத்துவாரத்தில் வாமதேவ மந்திரத்தால் சிவனைத் தியானித்துப் பிழிதல். இந்தச் சமஸ்காரம் கருத்தரித்த இரண்டு அல்லது நான்காவது மாதத்தில் நல்லதினத்திற் செய்யவேண்டும்.

4. சீமந்தம். இந்தச் சொல்லுக்குப் பொருள் மகுடு என்பது. அஃதாவது தலைமயிரை வகிர்தல். அஃதெவ்வாறெனில், நான்கு, அல்லது ஆறு, அல்லது எட்டாவது மாதங்களில் மந்திரத்தை முன்னிட்டுச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து, முள்ளம்பன்றியின் முட்களால் மயிரை வகிர்தல்.

5. சாதகர்மம். அஃதாவது புத்திரன் பிறந்ததும் விதிப்படி பார்த்தல், நாபிக்கொடி அறுத்தல், ஸ்நானஞ் செய்வித்தல் முதலியன செய்தல்.

6. உத்தாபனம். அஃதாவது வெளியே வரச்செய்தல். இது பத்துப் பன்னிரண்டு முப்பது முப்பத்திரண்டுக்குமேற்பட்ட தினங்களிற் செய்தல்வேண்டும். அஃதெவ்வாறெனில், மேலே சொல்லப்பட்ட தினங்களின் இரவில் சகல திரவியங்களையும் பாண்டங்களையும் போக்கி, வெண்கல முதலியவற்றை மண்ணாலும் வஸ்திரத்தை வண்ணானாலும் மற்றவைகளை அவற்றிற்குத் தக்கவாறு உசிதமானவைகளாலும் சுத்திசெய்து புருஷன் சௌளகர்மஞ் செய்துகொள்ளல்வேண்டும். பெண்கள் ஸ்நானஞ்செய்தபின் அக்கினி

காரியஞ்செய்து பாத்திரத்தைச் சுத்திசெய்து பஞ்சகவ்யம் உட்கொள்ளுதல் பூரணாகுதி என்னு மிவைகளைச் செய்து சிவனை உத்தாபனஞ் செய்யவேண்டும்.

7- நாமகரணம். அஃதாவது பெயரிடுதல். அஃதெவ்வாறெனில், பத்து அல்லது பனிரண்டாவது தினங்களில் மந்திரத்தை முன்னிட்டுக் கிரியைகளைச் செய்து, ஆணாயின் சிவநாமங்களிலொன்றையும், பெண்ணாயின் அம்பிகைநாமங்களிலொன்றையும் இடல் வேண்டும்.

8. உபநிஷ்கிராமணம். அஃதாவது குழந்தையை வெளியே கொண்டுவருதல். அஃதெவ்வாறெனில், நான்காவது மாதத்தில் அக்கினிவளர்த்து ஓமஞ்செய்து வெளியில் கோமயத்தால் மெழுகி மணலால் மேடைசெய்து அரசைவைத்து சூரியனை யர்ச்சித்துத் தாயுடன் குழந்தையை வெளியே கொண்டுவந்து பெரியோர்களாலாசீர்வாதஞ் செய்யப்பெறுதல்.

9. அன்னப்பிராசனம். அஃதாவது சோறு ஊட்டுதல். இது ஆறு அல்லது எட்டாவது மாதங்களில் செய்யவேண்டும்; அஃதெவ்வாறெனில், நாந்தி யென்னும் சிரார்த்தத்தை முன்னிட்டு பிராமணருக்கு போஜனஞ்செய்வித்து நல்ல முகூர்த்தத்தில் குழந்தைக்குப் பாயசத்தைப் புசிப்பித்தல்.

10. பிண்டவர்த்தனம். அஃதாவது தேகத்தை விருத்திசெய்தல். அஃதெவ்வாறெனில், விதிப்படி அக்கினியைப் பூஜித்து, புத்திரனுடைய வலது பெருவிரல் முதல் ஈசான முதலிய மந்திரங்களையும், கண்களில் வியோம வியாபித சாக்ஷரீ மந்திரங்களையும் ஜபித்து, தேன்பால் முதலியன கலந்த மதுவர்க்கங் கொடுத்தல்.

11. சௌளகர்மம். அஃதாவது தலைமயிரைக்கழித்தல், அஃதெவ்வாறெனில், விதிப்படி கிரியைகளைச்செய்து மந்திரத்தை உச்சரித்து தலைமயிரை நனைத்துத் தருப்பையால் புரோக்ஷித்து முதலாவது ஆசிரியரும் பின்னர் நாவிதனும் தலைமயிரைக் கழித்தல்.

12. உபநயனம், அஃதாவது வேதத்திற்கு அதிகாரியாக்குதல். இது பிறந்த ஐந்து ஆறு ஏழு ஒன்பது பதினாறு வருடங்

களுக்குள் செய்யவேண்டும். பிராமணர்களுக்கு எட்டு வயதிலும் அரசர்களுக்குப் பதினொருவயதிலும் வைசியர் களுக்குப் பன்னிரண்டுவயதிலும் உபநயனஞ் செய்யத் தக்கது. இதில் பூணுநூல் மான்றோல் முதலிய வற்றைத் தரிக்கும்படி செய்வதுண்டு.

13. காண்டோபகரணம். அஃதாவது காண்டரிஷியைத் திருப்திசெய்தல். அஃதெவ்வாறெனில், காண்டரிஷியின் பொருட்டு அஸ்த்திரமந்திரத்தால் ஓமமுதலியனசெய்து, சுவர்ணமுதலியவற்றால் செய்யப்பெற்ற பிக்ஷா பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு, பவதி பிக்ஷாந்தேகி யென்று கூறிப் பிக்ஷையெடுத்தல் முதலிய கிரியைகளைச் செய்தல்.

14, காண்டமோசனம். அஃதாவது காண்டரிஷியின் விரதத்தை நீக்கல். அஃதெவ்வாறெனில், விதிப்படி கிரியைகளைச்செய்து, அக்கினியை ஜலத்தால்வளைத்து, வியோமவியாபி மந்திரத்தால் நூறுகுதிகள்செய்து, பிரஜாபதயே காண்டரிஷியே சுவாஹா என்று எட்டாகுதியால் காண்டமோசனஞ்செய்தல்.

15. சமாவர்த்தனம். அஃதாவது பிரமசாரி விரதத்தைப்பூர்த்திசெய்தல். அஃதெவ்வாறெனில், உத்தராயணத்தில் குரு சுக்கிர உதயங்களில் மாசிமாதமுதல் ஐந்துமாதங்களுள் சித்திரைமாதம் நீங்க ஏனையமாதங்களில் விதிப்படி கிரியைகளைச்செய்து, பிரமசரிய விரதத்தை நீக்கி, சர்வாங்கமுஞ் சௌளஞ்செய்து, குண்டல முதலியவற்றால் அலங்கரித்து, கண்ணாடி முதலியவற்றைப் பார்த்து வடக்கு முகமாகச் செல்லுங்காலத்து, பந்துக்களால் இல்லறத்தை வகிக்கும்பொருட்டுப் பிரார்த்தித்தல்.

16. விவாகம். அஃதெவ்வாறெனில், உத்தமகுலத்துதித்த நற்குணமுடையபெண்ணைக் கோத்திரத்தைச் சொல்லிக் கொண்டு தாரைவார்த்துத் தாரபெறுதல்.

இந்தப் பதினாறு சமஸ்காரங்களின் விரிவை அகோரசிவாசாரியரியற்றிய கிரியாக்கிரமத்யோதிகையின் மூன்றும் பாகமான சைவசோடசப் பிரகாசிகை என்னும் நூலிற்காண்க.

இந்தப் பதினாறு கிரியைகள் தவிர, இஷ்டிகம், தார்விகம் பௌதிகம், சௌமிகம் என்னும் தேவவிரதங்கள் நான்கும், அஷ்டகா, பார்வம், மாஸசிரார்த்தம், சிராவணி, ஆக்ரயணி, சைத்திரி, ஆசுவயுஜீ என்னும் வாஜ யக்ஞங்கள் ஏழும், அக்கினியாதானம், அக்கினி கோத்திரம், தர்ச பௌர்ணமாசம், ஆக்ரயணம், சாதுர் மாஸ்யம், பசுபந்தம், சௌத்ராமணி என்னும் ஹவிர் யக்ஞங்கள் ஏழும், அக்னிஷ்டோமம், அத்தியக்கினிஷ்டோமம், உத்யம், ஷோடசிகம், வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்னும் சோமயக்ஞங்கள் ஏழும், மேதாஜனனம், வானப்ரஸ்தம், பாரிவ்ராஜ்யம் அஃதாவது சன்னியாசம், அந்தியிஷ்டி என்னும் வைதிக சமஸ்காரங்கள் நான்கும் செய்யத்தக்கன வென்றறிந்து கொள்க, (269)

(அ-கை.) இருபத்தெட்டுத் திவ்யாகமங்களின் பெயரும் வரலாறும் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஶ்ரீகௌ காமிகயோகஜாவய தயா விஞ்ஞானமாக்ஞ காரணம் தத்ஸ்வாஜித தீப்த ஸூக்ஷ்ம இதி வா ஸஹஸ்ராக்ஷஸம்
ஜ்ஞானம் ஸம்ஸ்தாநு। ஶ்ரீவக்த்ர தஃ கிம ஸுப்ரபேதவி
ஜயௌ நிஸ்வாஸதஞ்ச ஸ்வாயம்புவ தஃ வீரகவீர
ரௌரவ ஸமாவிர்ஸ்தா ஸர்வகோத்ரா வெமாஃ ॥ ॥உஎ0॥

வஹ்நிஜ்ஞாநயோஸ்விம்ப இதி ப்ரோத்தம் தயா
மாஷிதோ நாரா ஸிம் இதீரிதஸ்வ தஸ்யோ ஸ
ஞாநஸ்வேத்ரகௌ। தத்ஸ்வாதிம் வாரஸேஸ்கிர
ணௌ ஜௌ வாதுலஸம்வ்யா ஷாவிம்ஸதி
ராமாஸ உஸ தெ ஸெஸ்வாஸ்ரௌ ஸ்வாஃ வரே ॥ ( )

(270 - 271) ஸ்ரீமத் சதாசிவஸ்வாமியானவர், ஈசான முகம் தற்புருஷமுகம் அகோரமுகம் வாமதேவமுகம் சத்தியோஜாத முகம் ஆகிய ஐந்து திருமுகங்களினாலும் திருவாய் மலர்ந்தருளிய திவ்யாகமங்கள் இருபத்தெட்டு. அவையாவன— காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகஸ்ரம் அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞானம், முக

பிம்பம், புரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்னும் இருபத்தெட்டுமாம். இவற்றுள் சைவம் பத்தும், ரௌத்ரம் பதினெட்டுமாகும். பிரணவர் முதலிய சிவனுக்கு உபதேசிக்கப்பெற்றமை பற்றிச் சைவமென்றும், உருத்திரர்களுக்கு உபதேசிக்கப்பெற்றமைபற்றி ரௌத்ரமென்றும் இருவகைப்பட்டன. (270-271)

(அ-கை.) இருபத்தெட்டுத் திவ்யாகமங்களும் சிவபெருமானுக்குத் திருமேனியாயிருக்கும் முறைமை மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௭௨||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௨௭௩||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ( )

(272-273-274) சிவபெருமானுக்கு, காமிகம் இரண்டு திருவடிகள். யோகஜம் இரண்டு கணைக்கால்கள். சிந்தியம் திருவடிகளின் விரல்கள். காரணம் இரண்டு தண்டைக்கால்கள். அஜிதம் இரண்டு முழந்தாள்கள். தீப்தம் இரண்டு தொடைகள். சூக்குமம் குய்யம். சகஸ்ரம் இடுப்பு. அம்சுமான் முதுகு. சுப்ரபேதம் தொப்புள். விஜயம் வயிறு. நிசுவாசம் மூக்கு. சுவாயம்புவம்

இரண்டு தனங்கள். ஆக்நேயம் இரண்டு திருக்கண்கள். வீரம் கழுத்து. ரௌரவம் இரண்டு திருச்செவிகள். மகுடம் திருமுடி விமலம் நான்கு திருக்கரங்கள். சந்த்ரஞானம் மார்பு. முகபிம்பம் திருமுகம். புரோத்கீதம் நாக்கு. லளிதம் இரண்டு கன்னங்கள். சித்தம் நெற்றி, சந்தானம் காதணிகளான குண்டலங்கள். சர்வோக்தம் யக்ஞோபவீதம். பாரமேஸ்வரம் முத்துமாலை. கிரணம் திருவாபரணம். வாதுளம் திருப்பரிவட்டம். இவ்வாறு இந்த இருபத்தெட்டு ஆகமங்கள் தவிர உபாகமங்களுள் காலோத்தரம் திருமேனிப் பூச்சு. ஏனைய உபாகமங்கள் பரிமள திரவியங்களும் புஷ்பங்களுமாகும். எல்லா ஆகமங்களின் ஞானபாதமாகிய சைவ சித்தாந்தம் நைவேத்தியமாகிய அமுது. இவ்வாறு காமிகமுதலிய திவ்யாகமங்கள் இருபதெட்டும் காலோத்தர முதலிய உபாகமங்கள் இருநூற்றேழும் தாண்டவேசுவர சுவாமியாகிய சிதம்பரேசுவரஸ்வாமிக்குச் சகல அவயவங்களுடனே கூடியிருக்குமென்று மகுடாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. (272-274)

(அ - கை.) உபாகமங்களின் தொகையைக் கூறுகின்றார்.

ஸ்ராத்ரிம்ஶதி வஸு ஷஷ்ட்ய தாவஸ்வத்ரிம்ஶதேகவ
த்ரயஸ்ஸப்தஶாஷ்டஸஹஸ்ரஷ்டிச த்விரஷ்டௌ ஸ்ரேத்ரத்வத்ரய
ஷஷ்டிரஷ்டௌ தத்வேஷ ஷட்ரூபா த்ரயம் । த்ரிவஸாரஷ்டய
த்ரிவேதஷ்டயோ த்விராஷ்யஷ்டாஶா த்ராப்யஷ்டாநாரங்கா
ஸ்ருதிய த்விரஷ்டம் ஸஷஷ்டிர்த்ரயேஷு ஷஷ்ட்யேஶ்வதி
த்ரேரஷ்டவா ॥ ||உஎரு||

(275) மூலாகமத்தின் பேதங்கள் உபாகமங்களாகும். அவை வருமாறு :—

1. காமிகத்தின் பேதம்— நாரசிம்மம், வக்திராரம், பைரவோத்ரமென் மூன்று.
2. யோகஜத்தின் பேதம்— வீணசிகோத்தரம், தாரம், சந்தம், சந்ததி, ஆன்மயோகம் என ஐந்து.
3. சிந்தியத்தின் பேதம்— சுசிந்தியம், சுபகம், வாமம், பாவநாசம், பரோத்பவம், அமிர்தம் என ஆறு.
4. காரணத்தின் பேதம்— காரணம், பாவநம், தௌர்க்கம், மாகேந்த்ரம், வீமம், மாரணம், துவேஷ்டம் என ஏழு.

5. அஜிதத்தின் பேதம்— பிரபூதம், பரோத்பூதம், பார்வதி சம்கிதை, பத்மசம்கிதை என நான்கு.

6. தீப்தத்தின் பேதம்— அமேயம், சப்தம், ஆச்சாத்யம், அசங்கியம், அமிதௌசசம், ஆனந்தம், மாதவோத்பூதம், அத்புதம், அச்சதம் என ஒன்பது.

7. சூக்குமத்தின் பேதம்— சூக்குமம் ஒன்று.

8. சகஸ்ரத்தின்பேதம்— அதீதம், மங்களம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், பிரபுத்தம், விபுதம், அஸ்த்தம், அலங்காரம், சுபோதகம் எனப்பத்து.

9. அம்சுமானின்பேதம்— வித்தியாபுராணதந்த்ரம், வாசவம், நீலலோகிதம், பிரகாரணம், பூததந்த்ரம், ஆத்மாலங்காரம், காசியபம், கௌதமம், அயிந்த்ரம், பிராம்யம், வாசிஷ்டம், ஈசானம் எனப்பன்னிரண்டு.

10. சுப்ரபேதத்தின்பேதம்—சுப்ரபேதமென ஒன்று.

11. விஜயத்தின்பேதம்— விஜயம், உத்பவம், சௌமியம், அகோரம், ம்ருத்யுநாசனம், குபேரம், மகாகோரம், விமலம் எனஎட்டு.

12. நிசுவாசத்தின்பேதம்— நிசுவாசம், உத்தர நிசுவாசம், நிசுவாச முகோதயம், நிசுவாச நயனம், நிசுவாச காரிகை, கோரசம்ஞ்யம், யமாக்யம், குய்யம் எனஎட்டு.

13. சுவாயம்புவத்தின்பேதம்—பிரஜாபதிமதம், பத்மம், சுவாயம்புவம் என மூன்று.

14. ஆக்நேயத்தின்பேதம்—ஆக்நேயம் ஒன்று.

15. வீரத்தின்பேதம்—பிரஸ்தாரம், புல்லமல்லம், பிரபோதம், போதம், போதகம், அமோகம், மோகசமயம், ஹாடகம், சாகடாதிகம், ஹலம், விலேகனம், பத்ரம், வீரம் எனப் பதின்மூன்று.

16. ரௌரவத்தின்பேதம்—காலக்நம், கலாதீதம், ரௌரவம், ரௌரவோத்தரம், மகாகாளமதம், ஐயிந்திரம் எனஆறு.

17. மகுடத்தின்பேதம்— மகுடம், மகுடோத்தரம் என இரண்டு.

18. விமலத்தின்பேதம்—அனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷபிங்கம், வ்ருஷோத்தரம், வ்ருஷாத்புதம், சுதந்தம், ரௌத்ரம், பத்ரவிதம், அரேவதம், அதிக்கிராந்தம், அட்டகாசம், அலங்கிருதம், அருச்சிதம், தாரணம், தந்திரம் எனப் பதினாறு.

19. சந்த்ரஞானத்தின்பேதம்—ஸ்திரம், ஸ்தாணு, மகாந்தம், வாருணம், நந்திகேசுவரம், ஏகபாதபுராணம், சங்கரம், நீலருத்ரகம், சிவபத்ரம், கல்பபேதம், ஸ்ரீமுகம், சிவசாசனம், சிவசேகரம், தேவிமதம் எனப்பதினான்கு.

20. முகபிம்பத்தின்பேதம்—சதுர்முகம், மலயம், அயோகம், சமஸ்தோபம், ப்ரதிவிம்பகம், ஆத்மாலங்காரம், வாயவ்யம், தௌடிகம், துடிநீரகம், கலாத்யயம், துலாயோகம், குட்டிமம், பட்டசேகரம், மகாவித்தை, மகாசௌரம் எனப்பதினைந்து.

21. புரோத்கீதத்தின்பேதம்— கவசம், வாராகம், பிங்களமதம், பாசபந்தம், தண்டதரம், அங்குசம், தனுர்தரம், சிவஞானம், விக்ஞானம், ஸ்ரீகாலஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்ப்பதம் ஷ்ட்ர விபேதனம், கீதம், பாதம், ஆதோத்யம் எனப்பதினாறு.

22. லளிதத்தின்பேதம்—லளிதம், லளிதோத்தரம், கௌமாரம் எனமூன்று.

23. சித்தத்தின்பேதம்—சாரோத்தரம், ஒளசனோத்தரம், சாலாபேதம், சசிகண்டம் என நான்கு.

24. சந்தானத்தின்பேதம்—லிங்காத்யக்ஷம், சுராத்யக்ஷம், சங்கரம், அமலேஸ்வரம், அசங்கியம், அனிலம், துவந்துவம் என ஏழு.

25. சர்வோக்தத்தின்பேதம்—சிவதருமோத்தரம், வாயுப்ரோக்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத்கீதம் என ஐந்து.

26. பாரமேசுவரத்தின்பேதம்— மதங்கம், யக்ஷிணீ பத்மம், பாரமேசுவரம், பௌஷ்கரம், சுப்ரயோகம், ஹம்சம், சாமான்யமென ஏழு.

27. கிரணத்தின்பேதம்—காருடம், நைருதம், நீலம், ரூக்ஷம், பானுகம், தேனுகம், பிரபுத்தம், புத்தம், காலம் என ஒன்பது.

28. வாதுளத்தின்பேதம்—வாதுளம், உத்தரவாதுளம், கால க்ஞானம், ப்ரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேஷ்டம், நித்யம், சுத்தம், மகாநனம், விசுவம், விசுவாத்மகம் என ப்பன்னிரண்டு. (275)

(அ—கை.) ஒவ்வொரு ஆகமங்களின் சுலோக எண் இவ்வளவென்று ஐந்து சுலோகங்களாற் கூறுகின்றார்.

காமிகம் பரார்த்தம் ப்ரோக்தம் த்ரிலக்ஷம்
லக்ஷம் பரம் காரணேப்யோ கோடி: ।
அநந்த்யாயுதம் ஸ்யாந்நியுதம் தத் தீப்தம்
ஸூக்ஷ்மம் து பத்மம் ஸஹஸ்ரஸம்க்யம் ॥ ௨௭௬ ॥

ஸ்யாதம்ஶு லக்ஷா ரவிதந்த்ரம் ஶதக்நம்
ஸுப்ரபேதஸ்த்ரிகோடிர் விஜயஸ்த்ரிகோடி: ।
நிஶ்வாஸஸ்து கோடிஸ் ஸார்தஸ் ஸ்வாயம்புவ
ஸாயுதா கோடிஸ்த்வநலம் ஸ்யாத் ॥ ॥ ௨௭௭ ॥

லக்ஷாணி வீரே த்வய ரௌரவே து
கோட்யஷ்டகம் ஸ்யாந் மகுடஸ்து லக்ஷ: ।
ஶ்ரோத்ரே லக்ஷை: விமலஸ்து ஸ்யாத்
ஸ்யாச்சந்த்ரஜ்ஞானே த்ரயஸ்து த்ரிகோடி: ॥ ௨௭௮ ॥

பிம்பம் த்விலக்ஷம் ப்ரோத்கீதகம் ச
லக்ஷம் த்ரியா லலிதம் ஸஹஸ்ரமஷ்டௌ ।
ஸித்தேஷு கோடிஸ் ஸந்தானம் ஷட்ஸஹஸ்ரம்
ஸர்வோக்தம் த்விலக்ஷம் ஷட்ஸஹஸ்ரம் ॥ ௨௭௯ ॥

ஸார்த்தம் த்விலக்ஷம் பரமேஶ்வரம் லக்ஷ
ஸ்யாத் பஞ்சகோடி: கிரணாகமஸ்ஸ்யாத் ।
லக்ஷம் ததா வாதுலதந்த்ரநாம
ஸ்யாதாகமஸம்க்யா கோடிர்ஹி தேஷாம் ॥ ௨௮௦ ॥

(276-280.) காமிகம் பரார்த்தக்கிரந்தம். யோகஜம் இரண் லக்ஷங்கிரந்தம், சிந்தியம் லக்ஷங்கிரந்தம், காரணம் நாலுகோ டிகிரந்தம், அஜிதம் பதினாயிரங்கிரந்தம், தீப்தம் நியுதக்கிரந்தம், சூக்குமம் பத்மக்கிரந்தம், பத்மமாவது நூறுகோடி. சகஸ்ரம் சங் கக்கிரந்தம், அம்சுமான் ஐந்து லெக்ஷங்கிரந்தம், சுப்ரபேதம் மூ ன்றுகோடிகிரந்தம், விஜயம் மூன்றுகோடிகிரந்தம், நிசுவாசம் ஒருகோடிகிரந்தம், சுவாயம்புவம் மூன்றரைக்கோடிகிரந்தம், ஆக் கிநேயம் முப்பதினாயிரங்கிரந்தம், வீரம் பத்துலக்ஷங்கிரந்தம், ரௌரவம் எட்டுகோடிகிரந்தம், மகுடம் லக்ஷங்கிரந்தம், விமலம் மூன்றுலக்ஷங் கிரந்தம், சந்த்ரஞானம் மூன்றுகோடி கிரந்தம், முகபிம்பம் மகாபத்மக்கிரந்தம், புரோத்கீதம் மூன்றுலக்ஷங் கிரந்தம், லளிதம் எண்ணாயிரங்கிரந்தம், சித்தம் ஒன்றரைக்கோடி கிரந்தம், சந்தானம் ஆறாயிரங்கிரந்தம், சர்வோக்தம் இரண்டு லக்ஷங்கிரந்தம், பாரமேஸ்வரம் பன்னிரண்டுலக்ஷங் கிரந்தம், கிரணம் ஐந்துகோடி கிரந்தம், வாதுளம் லக்ஷங்கிரந்தம், இவ் வாறு இருபத்தெட்டு ஆகமங்களுக்குந் தனித்தனி கிரந்தஎண் அறிந்துகொள்க. (276-280)

(அ-கை) இருபத்தெட்டு ஆகமங்களின் கிரந்தஎண் இவ் வளவென்று தொகுத்துக்கூறுகின்றார்.

ஏகாதி⁴கம் பரார்த்⁴தா³ச்ச த³ஶலக்ஷகோடி
ஶ்சைகலக்ஷககோடிஸ்ஸத்ரிம்ஶத்கோடி꞉ ।
பஞ்சாஶல்லக்ஷம் பஞ்சாஶத் ஸஹஸ்ரம்
சதுராக³மாநாமிதி ஸங்க்²யா ॥ ॥௨௮௧॥

(281.) இருபத்தெட்டு ஆகமங்களுக்கும் ஒருசேரக்கிரந்த எண் கூறுமிடத்து, பரார்த்தத்தின்மேல் பதினொரு லெக்ஷங்கோ டியே முப்பதுகோடி ஐம்பத்தொருலக்ஷத்து ஐம்பத்து நாலாயி ரங் கிரந்தமென்றறிந்துகொள்க. (281)

(அ-கை.) சிவாகமசம்பந்தம் ஆறுவிதமென்று கூறுகின் றார்.

ஸம்ப³ந்தோ⁴(அ)பி ச ஷட்³வித⁴ஸ்ஸ்யாத் பரஸ்ஸம்ஸ்ரோ
தோ மஹாந்தீயோவாந்தராதிவ்யாஹ இதி ச

[illegible] ॥உ௮உ॥

(282) சிவாகம சம்பந்தம் எவ்வாறெனில், சதாசிவ சுவாமிக்கும் அனந்தேசுவரருக்கும் பரசம்பந்தம். அநந்தேசுவரருக்கும் ஸ்ரீகண்டருக்கும் மகத்சம்பந்தம். ஸ்ரீகண்டருக்கும் தேவேந்திரனுக்கும் அந்தராள சம்பந்தம். தேவேந்திரனுக்கும் ரிஷிகளுக்கும் திவ்யசம்பந்தம். ரிஷிகளுக்கும் மனிதர்களுக்கும் திவ்யாதிவ்யசம்பந்தம். மனிதருக்கும் மனிதருக்கும் அதிவ்யசம்பந்தம். இவ்வாறு சிவாகமங்கள் வருமுறையினுள்ள சம்பந்தம் ஆறுவகையாயிருக்குமென்றறிந்துகொள்க. (282)

(அ-கை.) பதினெண் புராணங்களின்பெயரும் கிரந்த எண்ணும் ஒன்றரைச் சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ॥உ௮௩॥

[illegible] ॥உ௮௩½॥

(283-283½) பிரமபுராணம், பத்மபுராணம், வைஷ்ணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிஷ்யத்புராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், லிங்கபுராணம், வராகபுராணம், ஸ்காந்தபுராணம், வாமனபுராணம், கூர்மபுராணம், மச்சபுராணம், கருடபுராணம், பிரமாண்டபுராணமெனப் புராணம் பதினெட்டாகும். இவற்றுள் சைவபுராணம் ஒருலக்ஷங்கிரந்தம், ஸ்காந்தபுராணம், ஒருலக்ஷங்கிரந்தம், ஏனைய பதினாறுபுராணங்களும் இரண்டுலக்ஷங்கிரந்தம், இவ்வாறு பதினெண்புராணங்களும் நாலுலக்ஷங் கிரந்தமென்றறிந்துகொள்க. (283-283½)

(அ-கை.) பதினெட்டு ஸ்மிருதிகர்த்தாக்களின் பெயரைக் கூறுகின்றார்.

மநுரத்ரிர் விஷ்ணுஹாரீதயாஜ்ஞவல்க்யா
ஶுக்ரோங்கிரஸ்ததாங்கிரா யம ஆபஸ்தம்ப
ஸம்வர்த்தகௌ ॥ ॥௨௮௪॥

*காத்யாயநோ ப்ருஹஸ்பதிஸ் ததோ வ்யாஸஸ்
ததா: பராஶ: வ்யாஸஶங்க லிகிதஸ்ச ஸ்ம்ருதிகா
தக்ஷஸ்ததா கௌதம: ॥ ॥௨௮௪½॥

(284½.) பதினெட்டு ஸ்மிருதிகர்த்தாக்கள் பெயர் வருமாறு:—மனு, அத்திரி, விஷ்ணு, ஹாரிதர், யாக்ஞவல்க்யர், சுக்கிரன், அங்கிரஸ், யமன், ஆபஸ்தம்பர், சம்வர்த்தகர், காத்தியாயனர், பிரகஸ்பதி, பராசரர், வியாசர், சங்கர், லிகிதர், தக்ஷர், கௌதமர் எனப்பதினெண்மர். இவர்களே ஸ்மிருதிசொன்னவர்களென அறிந்துகொள்க. (284½)

(அ-கை.) ஆத்மார்த்தமூர்த்தியின் அஷ்டபந்தனவிதி இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஶ்ருத்தாரேண ஷட்த்ரிம்ஶந்மந்த்ரை: தை: விதிநோக்தமஹேஶ
த்ர்யக்ஷரம் ஹோமபந்திகாலே நாஷ்டகமஷ்டாஸ்ய
வ்யா யதா விஜ்ஞயே । ॥௨௮௫॥

ஸிம்ஹாஸநேஷு யதாக்ரமம் ஶிவஶிவாவித்யேஶ்வராக்ய
பத்மம் க்ருத்வா யோஜயேத்பந்தநம் ஜலஜை: வாத்யாதி
ஷேகே தத: ॥ ॥௨௮௬॥

ஶ்வ்யாதிந்யஸ்தநமோ க்ஷம்ஹக்ரகாத்யாவாஹநாதிகீர்யாம்
நிவ்ருத்யாய வ ஹுத்வீம்ஸயே தஸ்ஸ்ம்ஹம் ஸஸோரோ
வ்ய வ ॥ ॥௨௮௭॥

நைவேத்யாதி ஸமே வ்ருத்தி ஸாத்ரஸயோரோவோரேண
ஸதே ண தஸ்யாயஶ்சித்தஸயோத்ரு ஹோமஸயேவா கா
யத்ராக ஸஹஸ்ரம் ஶதம் ॥ ॥௨௮௮॥

---

* காத்யாயந இத்யத்ர காத்யாய இதி வாபாடம்

(285½–286½.) ஆத்மார்த்தமூர்த்தியின் அஷ்டபந்தனவிதி தீப்தாகமத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அதுவருமாறு:— நெல்லினால் சதுரச்ரமாக மண்டலமிட்டு, அதின்மத்தியில் அலங்காரத்துடனும் ஜலத்துடனும் கும்பமும் வர்த்தனியும் இவற்றைச்சூழ அஷ்டகலசமும் ஸ்தாபித்து, ஆசனாதிகளால்பூஜித்து, லிங்கத்தினின்றும் முறையே கும்பத்திற்சிவனையும் வர்த்தனியில் சத்தியையும் எட்டுக்கலசங்களில் எட்டு வித்தியேஸ்வரர்களையும் அஞ்சலியினால் எடுத்து ஸ்தாபித்துப்பூஜித்து நிரோதார்க்கியங்கொடுத்துப் பின்னர் லிங்கத்திற்கு அஷ்டபந்தனமாவது பஞ்சபந்தனமாவது திரிபந்தனமாவது மருந்துகூட்டிச்சாத்தி, பஞ்சகவ்யாதிகள் அபிஷேகஞ்செய்து, கும்பம் வர்த்தனிகலசங்களினாலும் அபிஷேகஞ்செய்து, அர்க்கியாபிஷேகஞ்செய்து, பத்திரபீடத்தின்மேலெழுந்தருளப்பண்ணி நைவேத்தியாந்தமாகப் பூஜித்துப் பிராயச்சித்த நிமித்தமாக அகோரமந்திரத்தால் ஆயிரத்தெட்டு அல்லது நூற்றெட்டு ஓமஞ்செய்யவேண்டும். இவ்வாறு ஆன்மார்த்த சிவபூஜையில் அஷ்டபந்தனவிதி அறிந்துகொள்க. (285½–286½)

(அ–கை.) முப்பத்திரண்டு இலக்கணம் ஒன்றரைச்சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] ॥உஅஎ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥உஅஅ॥

(287-288.) உத்தமமானவர்களுக்குரிய உத்தம இலக்கணம் முப்பத்திரண்டு. அவை வருமாறு:—கைகள், கண்கள், மூக்கு, தனமத்தியம், முழங்கால்கள் என்னுமிந்த ஐந்தும் தீர்க்கமாயிருக்கவேண்டும். கழுத்து கணுக்கால், முதுகு, குறியென்னு

மிந்த நான்குங் குறுகியிருக்கவேண்டும். நகம், தோல், கூந்தல், பற்கள், விரல்களின் கணுவென்னுமிவை ஐந்தும் மிருதுவாயிருக்கவேண்டும். வயிறு, பிடரி, தோள்கள், மூக்கு, மார்பு, நெற்றி என்னுமிந்த ஆறும் உயர்ந்திருக்கவேண்டும். கண்கள், உதடு, மோவாய்க்கட்டை, உள்ளங்கால், உள்ளங்கை, நகம், பீஜம் என்னுமிந்த ஏழும் சிவந்திருக்கவேண்டும். முஷ்டி, மணிக்கட்டு, மார்பு என்னும் மூன்றும் வலிமையுடையதாயிருக்கவேண்டும். நெற்றி, மார்பு என்னுமிரண்டும் விசாலமாயிருக்கவேண்டும். இவ்வாறு முப்பத்திரண்டு இலக்கணமு மறிந்துகொள்க. (287-288)

(அ-கை.) சிவபக்தர்களுக்குரிய அடையாளங்களிவையென நான்கு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௨௮௯॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௨௯௦॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௨௯௧॥

[illegible]
[illegible]
[illegible]

𑌂 𑌵𑌾𑌸𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌸𑍇𑌵𑌾 𑌚 𑌶𑌿𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌂
𑌸𑌤𑍍𑌸𑌂𑌗𑌸𑍇𑌵𑌨𑌾 ॥ ॥௨௯௨॥

(289-292.) சாம்பமூர்த்தியாகிய பரமசிவனது பத்தர்களினுடைய அடையாளங்கள் வருமாறு :— விபூதி தரித்தல், திரிபுண்டரந்தரித்தல், உருத்திராக்கத்தை ஆபரணமாகத் தரித்தல், ஜடை முதலியன வளர்த்தல், எல்லாவற்றிற்குஞ் சிவபெருமானே கருத்தா என்னும் சிவகதையின் மான்மியத்தைக் கூறுதல். சிவபெருமானைத் துதிக்குந் தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு நடனஞ்செய்தல், திருவைந்தெழுத்தை உச்சரித்தல், காவியாடை வெண்மையான ஆடைதரித்தல், சிகாச்சேதஞ்செய்தல், முன்னர்க்கூறியவாறு சிவமுத்திரைகளைத்தரித்தல், ஆகமமுதலிய சிவசாத்திரங்களைப்படித்தல், தேவாரபாராயணஞ்செய்தல், தினந்தோறுஞ் சிவாலயவழிபாடுசெய்தல், சிவபணிவிடைகளிலன்புவைத்தல், சிவபெருமான் ஆளுபவன் நான் அவருக்கு அடிமையென்றெண்ணுதல், சிவனடியார்களை வணங்குதல், அவர்களை அருச்சித்தல், சிவபெருமானைப் பூசித்தல், எல்லா உயிர்களுக்கும் உபகாரஞ்செய்தல், எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதுங் கருணையுடனிருத்தல், எவரிடத்தும் முகமலர்ச்சியுடன்பேசுதல், எப்பொழுதுஞ் சிவபெருமானுக்குட்பட்டு அடங்கியிருத்தல், ஒட்டியாணத்தினுமேம்பட்ட யோகபட்டந்தரித்தல், கட்வாங்கரூபமான மாத்திரைக்கோலுடையராதல், குருமொழியில் நம்பிக்கை, சாத்திரத்திற் கூறியவாறனுட்டித்தல், கையில் பிக்ஷாபாத்திரம் ஜபவஸ்திரமென்னுமிவைகளைத்தரித்தல், பிக்ஷையெடுத்துண்ணுதல், தன்னைரக்ஷித்தல், தன்னோடு பிரிப்பின்றி விளங்கும் பரமான்ம சொரூபத்தையறிதல், சிவபெருமான், சூரியன், விநாயகர் ஆகிய இவர்களைப் பூஜித்தல், சுப்பிரமணியரைப் பூஜித்தல், பார்வதியை யருச்சித்தல், அக்கினிகாரியமுதலியன செய்தல், எப்பொழுதுஞ் சிவனடியாரோடு கூடியிருத்தல், இவையனைத்துஞ் சிவனடியாருக்குரிய அடையாளங்களென அறிந்துகொள்க. (289-292)

(அ - கை.) சிவபக்தர்களாவார் தனியடியார் அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பதின்மரென எழுபத்திரண்டு பெயரென்றும், அவர்களுடைய பெயர்களிவையென்றும் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ॥ ॥௨௯௩॥

[illegible] ॥௨௯௪॥

(293–294.) தனியடியார் அறுபத்து மூவராவர். அவருள், சிவப்பிராமணர் நால்வர். மகாப்பிராமணர் பன்னிருவர். மருத்துவப்பிராமணர் ஒருவர். ஆகப்பிராமணரில் பதினேழுபெயர். முடிமன்னராறுவர். குறுநில மன்னரைவர். வணிகர் ஐவர். வேளாளர் பதின்மூவர். இடையரிருவர், குயவர், பரதவர், சாலியர், மறவர், பாடுவோர், சாணார், வண்ணார், வாணியர், கடையர் என்னுமிவர்களில் ஒவ்வொருவர். மரபறியாதவர் அறுவர். ஆக அறுபத்துமூவர் தொகை இவ்வாறு கண்டுகொள்க. இவர்களின் பெயர் வருமாறு :—சுந்தரமூர்த்திநாயனார், சடையனார், இசைஞானியார், புகழ்த்துணையாரென சிவப்பிராமணர் நால்வர். குங்கிலியக்கலயநாயனார், முருகநாயனார், உருத்திரபசுபதியார், சண்டேஸ்வரர், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், திருஞானசம்பந்தப்பெருமான், சோமாசிமாறர், சிறப்புலியார், கணநாதர், பூசலாரென மகாப்பிராமணர் பன்னிருவர். மருத்துவப்பிராமணர் சிறுத்தொண்டரொருவர். சேரமான்பெருமாள், புகழ்ச்சோழர், இடங்கழியார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசி

யார், கோச்செங்கட்சோழர் என முடிமன்னாறுவர். மெய்ப்பொருணாயனார், கூற்றுவனார், நரசிங்கமுனையர், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கழற்சிங்கநாயனாரெனக் குறுநிலமன்னரைவர், காரைக்காலம்மையார், மூர்த்திநாயனார், கலிக்கம்பர், அமர்நீதியார், இயற்பகையாரென வணிகரைவர். இளையான்றன்குடிமாறர், விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், திருநாவுக்கரசர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்க்கனார், சாக்கியர், சத்தியார், வாயிலார், முனையடுவார், சிறுத்தொண்டயார், கோட்புலியாரென வேளாளர் பதின்மூவர். ஆனாயர், திருமூலரென இடையரிலிருவர், குயவரில் திருநீலகண்டரொருவர், பரதவராகிய வலையரில் அதிபத்தரொருவர். சாலியரில் சிவநேசரொருவர். மறவரில் கண்ணப்பரொருவர். பாடுவோரில் யாழ்ப்பாணரொருவர். சாணாரில் ஏனாதியரொருவர். வண்ணாரில் திருக்குறிப்புத்தொண்டரொருவர். வாணியரில் கலியரொருவர். கடையரில் திருநாளைப்போவாரொருவர். எறிபத்தர், குலச்சிறையார், பெருமிழலைக்குறும்பர், தண்டியடிகள், கணம்புல்லர், காரியாரென மரபறியாதவராறுவர். இவ்வாறு அறுபத்துமூவர் திருநாமங் கண்டுகொள்க.

தொகையடியார் ஒன்பதின்மரெவரெனில், தில்லைவாழந்தணர் மூவாயிரவர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப்பணிவார், பரமனையேபாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்போதுந் திருமேனிதீண்டுவார், முழுநீறுபூசியமுனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார், இவ்வாறு தொகையடியார் ஒன்பதின்மரென்க. இவருள், தில்லைவாழந்தணரும், பொய்யடிமையில்லாத புலவரும், முப்போதுந் திருமேனிதீண்டுவோருமாகிய மூவரும் மரபறிந்தவர், ஏனைய அறுவரும் மரபறியாதவர்கள். இவ்வாறு சிவபக்தர்களாகிய தனியடியார் தொகையடியார்களின் தொகையும் பெயருங் கண்டுகொள்க, (293-294)

(அ-கை.) சூரனுத்சவவிதி பதின்மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்,

[illegible] ॥ ()

[illegible] ॥ ॥௨௯௬॥

[illegible] ॥ ॥௨௯௭॥

[illegible] ॥ ॥௨௯௮॥

[illegible] ॥ ॥௨௯௯॥

[illegible] ॥௧௦௦॥

[illegible] ॥௧௦௧॥

[illegible] ॥௧௦௨॥

[illegible] ॥௧௦௩॥

[illegible] ॥௧௦௪॥

[illegible]

க்ஷேத்ரேண மந்த்ரேண ஸமாச்ரிதஸ்ய வா
ஶரீரஶுத்திம் ஸம்ப்ரதி காரயாமி ॥ ॥௩௦௫॥

ஜாதேஷ்வராணாதிஷு ப்ராம்பவாநா
ஜாதாநஸம்பாத்ய ஶுசீக்ருதேஷாம் ।
ஜாதா: ஸர்வேந்த்ர ஸ்ருதிதேவதாநாம்
ஶரீரஶுத்திம் ஸம்ப்ரதி காரயாமி ॥ ॥௩௦௬॥

ஸம்ஸ்ருத்யைகஸம்ஸாரவிபாகஸ்ய தோஷா
தேஷு ப்ரதஸ்ய ஸம்யகமஸாதாத்ரம் ।
ப்ராயச்சித்தம் ஸர்வாந் போஷாந்
ஶரீரஶுத்திம் ஸம்ப்ரதி காரயாமி ॥ ॥௩௦௭॥

(295-307.) ஆலயங்களில் திருவிழாமுடிந்து சுவாமி தீர்த்தங்கொடுக்குந்தினத்திலும், சிவதீக்ஷையுடையவன் மரணமடைந்தபின்னர் அவனுக்கும் சூர்ணோத்சவஞ்செய்ய வேண்டும். மங்களத்திற்காகவே இந்தக் கிரியை செய்யப்படவேண்டுமென்று சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. கிரியாவிதி வருமாறு:— சிவதீக்ஷையுடையவன் மரண மடைந்தபின் பிரேதஞ்சுத்தியடையும்பொருட்டுக் கிரியை செய்யுங் கருத்தா கழுத்திற்குமேல் சௌளஞ் செய்துகொள்ளல்வேண்டும். இவ்வாறு வாதுளாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. பின்னர் ஸ்நாநஞ்செய்தவர்களால் புதிதாகக் கொண்டுவரப்பட்ட ஜலம் தயில முதலியவற்றால் பிரேதத்தை ஸ்நானஞ்செய்துவைத்து கட்டில் அல்லது பாயில் தெற்கேதலையாகப் படுக்கவைத்து விபூதிதரிக்கவேண்டும். அதன்பின் பிரேதத்திற்குக் கிழக்கில் ஒரு முழத்தில் வேதிகையும், அந்த வேதிகைக்குக் கிழக்கில் இரண்டு முழத்தில் எட்டுத்துரோணங்கள் கொண்டதானியங்களால் வேதிகையும், அதற்குக் கிழக்கில் நெல்லின்பாதியில் பாதியுள்ள அரிசி எள்ளு இவைகளால் ஒருமண்டலமுமிடவேண்டும். (துரோணமென்பது இரண்டுமரக்கால்.) பின்னர் கும்பம் உரல் பேரி யென்னுமிவைகளை அம்மூன்றிலும் முறையே பரிஜனங்களைக்கொண்டு ஸ்தாபிக்கச் செய்யவேண்டும். மேற்குத் திக்கிலுள்ள மண்டலத்தில் ரேகையினால் பத்மங்கீறி அதன்மத்தியில் கும்பத்தை ஸ்தாபிக்கவேண்டும். இந்தக் கும்பத்தினுடைய நான்கு பக்கங்களிலும் கிழக்கு முதற்கொண்டு மு

றையே அப்பிரதக்ஷணமாக விபூதி கௌபீனம் தாம்பூலம் தைலம் இவைகளை ஸ்தாபிக்கவேண்டும். கும்பத்தில் பாசுபதாஸ்திரதே வரை ஸ்தாபிக்கவேண்டும். இந்த முறையின்றிச் செய்யின் ப லன்தராது. இவ்வாறு செய்தற்குக் காரணம் காரணாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. கும்பத்திலிருக்கும் அஸ்திரதேவரைத் தியானஞ்செய்யுமுறை வருமாறு:—பயங்கரமான வேஷத்துடன் மூன்று கண்களையுடையவராயும் பொன்னிறமாயும் மேல்நோக்கி விளங்குகிறதாயுமுள்ள ஜடையை யுடையவராயும், கட்கம் அக்ஷ சூத்ரம் கதை கேடம் இவைகளை நான்குகைகளிலும் தரித்துக் கொண்டிருக்கிறவராயும், சிவந்த திருமேனியையுடையவராயும் தியானிக்கவேண்டும். பின்னர் விபூதி முதலியவற்றில் இந்திரன் குபேரன் வருணன் யமன் என்னுமிவர்களைத் தியானிக்கவேண் டும். பின்னர் நைவேத்திய முதலியன சமர்ப்பித்துத் தூபம் தீபம் நீராதார்க்கியங் கொடுத்து தேவரீர் இங்கே சிறிதுநேர மிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்து அதன்பின்னெழுந்திரு ந்து அர்க்கிய பாத்திரத்தைக் கையில்வைத்துக்கொண்டு குருவா னவர் பேரிகையைப் பூசிக்கவேண்டும். அந்தப் பேரிகை இடை யே ஆடையால் சுற்றப்பட்டதாயிருக்கவேண்டும். அதனை உசி தம்போல் வைத்துக்கொண்டு அதன்மத்தியிலும் இருபக்கங்களி லும் உருத்திரர் பிரமன் விஷ்ணு இவர்களையும், ஏழுவார்க்கட்டு களில் சப்தமாதர்களையும், வலதுபக்கம் இடதுபக்கமான இரண்டு வட்டங்களில் சந்திர சூரியர்களையும், கயிற்றில் நாகங்களையும், மூலையில் ஸ்கந்தரையும் பூஜிக்கவேண்டும். பேரிதேவதையின் தியானஞ் சித்தாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அது வரு மாறு:—

சுத்தராயும், மூன்று முகமுள்ளவராயும், உயர்ந்தவராயும், ஆறுகைகளை யுடையவராயும், மூன்று கால்களையுடையவராயும், செவ்வரத்தம் பூவிற்குச் சமானமான நிறத்தையுடையவராயும், சங்கம் சக்கரம் கதை ஜபமாலை சூலம் பாசு இவைகளைத் தரித்தி ருப்பவராயும், தாமரையில் வீற்றிருப்பவராயும், தன்னுடைய நா தமாகிய கிரீடத்தை யுடையவராயுந் தியானிக்கவேண்டும். இவ் வாறு தியானித்து அஸ்திர மந்திரத்தால் பேரி தாடனம் பண்ண வேண்டும். பின்னர் ஊராலுக்குப் பூசை செய்யவேண்டும். ஊர

வின் கீழ்ப்பாகத்தில் ஆதாரசத்தியைப் பூஜிக்கவேண்டும். நடுப் பாகத்தில் பிரமாவையும், மேற்பாகத்தில் விஷ்ணுவையும், உரவின் குழியில் பூமிதேவியையும், உலக்கையில் மேருவையும், மஞ்சட்பொடியில் பிருதிவி தத்துவத்தையும் பூஜித்து உரலின் மத்தியில் மஞ்சட்பொடியைவைத்துச் சிவதீக்ஷையுடைய தாசி ஜனங்களுடன் ஆசாரியர் அந்த உலக்கையைப் பிடித்துக்கொண்டு பதமந்திரத்தை உச்சரித்து மூன்றுமுறை பொடிசெய்யவேண்டும். அதன்பின் தமிழ்மறையை ஓதி உத்தாபனஞ்செய்து கும்பஜலத்தால் பிரேதத்திற்குப் புரோக்ஷணஞ்செய்தல் தைலம் மஞ்சட்பொடி இவைகளையிடுதல் முதலியன செய்யவேண்டும். இவையனைத்துஞ் சூர்ணோத்சவமாகும். இதுவன்றி,பேரிகையை அடிக்கும்பொழுது கீழ் வருமாறு சொல்லிக்கொண்டு ஆசிரியன் அடிக்கவேண்டும், அஃதாவது சிவதீக்ஷிதனாயிருக்கிற இவன் இறந்ததினிமித்தமாகச் செய்யப்படும் இந்த சூர்ணோத்சவத்தில் சமஸ்தமான பிசாசுகளும் பறந்தோடும்பொருட்டு ஆசாரியரான யான் அஸ்திர மந்திரத்தால் மூன்றுமுறை இப்பொழுது தாடனஞ்செய்கின்றேன். ஈசுவரசம்பந்தமான அடியார்களும் மற்றவர்களும் வருதற்பொருட்டும், வீட்டிலிருக்கும் அந்தந்தத் தேவதைகளின் துக்கம் நீங்குதற்பொருட்டும் நான் இப்பொழுது பேரீ தாடனஞ் செய்கின்றேன். சிவதீக்ஷிதனாகிய இவன் பூவுலகசஞ்சாரத்தை நீக்கிப் பாரமார்த்திகமான சுகத்தை அனுபவிக்கும் பொருட்டுச் சிவலோகயாத்திரை சென்றுவிட்டான்; இது ஒரு புதிதான மங்கலம் ஆதலால் இப்பொழுது பேரி தாடனஞ்செய்கின்றேன். இவ்வாறு சொல்லிக்கொண்டு மூன்றுமுறை பேரி தாடனஞ் செய்யவேண்டுமென்க. (295-307)

(அ-கை.) சூர்ணோத்சவ முறையைச் சுருக்கி ஒரு சுலோகத்தாற் கூறுகின்றார்.

[illegible] ॥ ௩௦அ ॥

(308) இறந்தவனுக்குச் சூரணோத்ஸவக்கிரியை செய்யு முறை வருமாறு:—முதலாவது கும்பபூஜைசெய்தல். பின்னர்க் கிழக்குமுதல் அப்பிரதக்ஷிணமாகக் கிழக்கு வடக்கு மேற்கு தெற்கு என்னும் நான்கு திக்குக்களினும் திருநீறு, கௌபீனம், வெற்றிலை பாக்கு, நல்லெண்ணெய் என்னுமிவைகளைப் பாத்திரங்களில்வைத்துப் பூசித்தல், அந்தவிபூதி முதலியவற்றில் அந்த அந்தத் திக்குப்பாலகர்களைப் பூசித்தல், பின்னர்ப் பேரிதாடனஞ் செய்தல், பின்னர் சூரணம் இடித்தல், பின்னர்ப் பிரேதத்திற்குக் கும்பஜல முதலியவற்றால் அபிஷேகஞ்செய்தல். இவ்வாறு சூரணோத்ஸவக்கிரியையின் முறை அறிந்துகொள்க. (308)

(அ-கை.) அந்தியேஷ்டிக்குரிய மண்டப இலக்கணமுங் கிரியையின் முறையும் எட்டுச் சுலோகங்களாற் கூறுகின்றார்.

[illegible] ॥௱௯॥

[illegible] ॥௱௰॥

[illegible] ॥௱௰௧॥

[illegible]

[illegible] ॥௩௧௨॥

[illegible] ॥௩௧௩॥

[illegible] ॥௩௧௪॥

[illegible] ॥௩௧௫॥

[illegible] ॥௩௧௬॥

(309 – 316.) அந்தியேஷ்டி மண்டப இலக்கணம் வருமாறு :—கிழக்கு மேற்கு தெற்கு வடக்காக ஒன்பது முழத்தில் சதுரச்ரமாக மண்டபம் அமைக்கவேண்டும். மண்டபத்தின் நடுவில் ஒருமுழ அகலம் ஒருமுழ நீளத்தில் குண்டம் அமைக்கவேண்டும். அக்குண்டத்திற்கு உயரம் ஆறங்குலமும் அகலம் ஆறங்குலமுமான ஒருமேகலை அளவாகும். மற்ற இலக்கணம் அனை

த்தும் தீக்ஷா மண்டபம்போலிருக்கவேண்டும். மண்டபத்தின் வாயுதிக்கில் ஒருமுழ அகலம் ஒருமுழ நீளம் ஆறங்குல உயரத்தில் மண்ணினால் ஒருவேதிகை அமைக்கவேண்டும். அக்கினி திக்கில் தெற்கு வடக்காக நாலுமுழ நீளத்திலும் கிழக்கு மேற்காக இரண்டுமுழ அகலத்திலும் ஆறங்குல ஆழத்தில் சிதாஸ்தாபனஞ் செய்யவேண்டும். சிதை—மயான விறகு. தோண்டின அந்த மண்ணினால் ஈசானதிக்கில் வாயுதிக்கிலுள்ள வேதிகை போல் ஒருவேதிகை அமைக்கவேண்டும். கிழக்குமுதல் பத்துத் திக்குக்களிலும் ஒருசாண் அகலம் ஒருசாண் நீளம் ஆறங்குல உயரத்தில் வேதிகை அமைக்கவேண்டும். மண்டபத்தின் கால்கள் பதினாறு பன்னிரண்டு எட்டு நான்கு என்னுமிவற்றுள் அவரவர் சக்திக்குத்தக்கவாறு ஒருவகை கொள்ளலாம். அந்தியேஷ்டிக்குத் தெற்குவாயிலே பிரதானமாகும். சிதாஸ்தானத்தை இருபத்தைந்து கோஷ்டஞ்செய்து அவற்றுள் மத்தியகோஷ்டம் ஐந்தையும் பொன்மையான பொடியிட்டு ஒன்றாக ஆக்கி அதில் பிருதிவிதத்துவத்தையும் பிரமனையும் அருச்சிக்கவேண்டும். அக்கினிதிக்கிலுள்ள நாலுகோஷ்டத்தையும் செம்மையான பொடியிட்டு ஒன்றாக்கி அதில் அக்கினிதத்துவத்தையும் அதற்கு அதிபதியான ருத்திரரையும் அருச்சிக்கவேண்டும். நிருதிதிக்கிலுள்ள நாலு கோஷ்டத்தையும் வெண்மையான பொடியிட்டு ஒன்றாக்கி அதில் அப்புதத்துவத்தையும் அதற்கு அதிபதியான விஷ்ணுவையும் அருச்சிக்கவேண்டும். வாயுதிக்கிலுள்ள நாலுகோஷ்டத்தையும் கருமையான பொடியிட்டு ஒன்றாக்கி அதில் வாயுதத்துவத்தையும் அதற்கு அதிபதியான மகேசுரரையும் அருச்சிக்கவேண்டும். ஈசானத்திக்கிலுள்ள நான்கு கோஷ்டத்தையும் பசுமையான பொடியிட்டு ஒன்றாக்கி அதில் ஆகாசதத்துவத்தையும் அதற்கதிபதியான சதாசிவரையும் அருச்சிக்கவேண்டும். வடக்கு மேற்கு தெற்கு கிழக்கு என்னும் இந்தநாலு கோஷ்டங்களிலும் செம்மை வெண்மை கருமை பொன்மை என்னும் பொடிகளையிட்டு அவற்றில் முறையே குபேரன் வருணன் யமன் இந்திரனென்னுமிவர்களைப் பூஜிக்கவேண்டும். அந்தியேஷ்டி மண்டபபூஜாமுறை எவ்வாறெனில், குருவானவர் ஸ்நானஞ்செய்து நூலை இடமாக அணிந்து நியமமுடித்து தன்னுடைய தோளின் மேல் வைக்கப்பட்ட வர்த்தனியின் நாசிகையினின்று விழுகின்ற

ஜலத்துடனேகூட மண்டபத்தை ஒருமுறை அப்பிரதக்ஷிணமாக வந்து, தெற்கு வாயிலின் வழியாக உள்ளே புகுந்து, அங்கு அப்பிரதக்ஷிணமாக வாயுகோணத்திலுள்ள வேதிகையின் சமீபத்தில் வந்து இருந்துகொண்டு, அதற்குக் கிழக்காக தருப்பாசனத்தில் வர்த்தனியைவைத்து, தருப்பையால் செய்யப்பட்ட ஆசனத்தில் விநாயகரைப் பூஜித்துப் பிரார்த்தித்து, அவ்விடத்திற்கு உசிதமான சங்கல்பஞ்செய்து, சங்காரக்கிரமமாக நியாசஞ் செய்துகொண்டு, பூதங்களை அருச்சிக்குமிடத்தில் விசேஷார்க்கியங்கொடுத்து, பதார்த்தசுத்தி ஆன்மசுத்தி மந்த்ரசுத்தி இவைகளைச்செய்து, சங்காரக்கிரமமாகச் சிவஹஸ்தம் கற்பித்து, பஞ்சகவ்யம் ஸ்தாபித்து, அவ்விடத்திலேயே நின்றுகொண்டு சாமான்னிய அருக்கியத்தால் பஞ்சகவ்வியத்திற்குப் புரோக்ஷணஞ்செய்து, பதினெட்டு சமஸ்காரங்களையும் மனதினாலேசெய்து, இரைக்கிற திரவியங்களை இரைத்தல் மார்ஜனஞ்செய்தல் இவைகளைச் செய்வித்து, வர்த்தனிக்கு ஆசனங்கற்பித்து, பின்னர் சிதாவாஸ்துபூஜைசெய்து, வர்த்தனிபூஜைசெய்து, தசாயுதபூஜையுஞ்செய்து, கும்பத்தை அருச்சித்து, ஓமத்தைத்தொடங்கி, தர்ப்பணம் தீபனம் இவைகளை மனனமாகச்செய்து, பூரணாகுதி நைவேத்தியஞ்செய்து, சருவினாலே மூன்று ஆகுதிபண்ணி, சிதாஸ்தானத்தில் நாற்கோணமாவது முக்கோணமாவது இட்டு, அதில் இந்திராதியர்களைப்பூஜித்து, சங்கு தாடனம்பண்ணி, அதன்பின்னர் சவப்பிரவேசஞ்செய்வித்து. சவம் புத்தளிகாமயமாகில் மிருதகதீக்ஷைசெய்து முடித்து, பின்னர் மகாஜாலப்பிரயோகத்தினால் ஆத்மாவை ஸ்நானஞ்செய்வித்து பூசித்து நாடி சந்தானஞ்செய்து, சமயாசாரலோபப் பிராயச்சித்த நிமித்தமாக நூறாகுதி செய்யவேண்டும். இவ்வாறு அனைவருஞ் செய்யவேண்டும். பின்னர் வாகீசுவரி வாகீசுரருக்கு அருச்சனை முதலிய கிரியை அனைத்துஞ்செய்து சிஷ்யனை ஸ்நானஞ்செய்யும்படி செய்து கிரகப்பிரவேசஞ் செய்யவேண்டும். இவ்வாறு அந்தியேஷ்டிக்கிரியையின் முறையைச் சுருக்கமாக அறிந்துகொள்க. (309 - 316)

(அ-கை) புத்தளிகா இலக்கணங் கூறுகின்றார்,

தபெ௯ஃ வா-தஷிகா ஹிவெகஃ கா-ஸஊ-ெஸஃ கெ
ஸாஷா- வெஜ-ாஂம-ெெஸஃ ஜிரு௰ஜீதி ஸிராஷிஹி

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௩௧௭||

(317) புத்தளிகை முப்பத்தாறு தருப்பையினால் செய்ய வேண்டும். செய்யுமிடத்து கேசம் நாலங்குலம். முடிச்சு இரண்டங்குலம். அது சிரசு. அதற்குக்கீழ் கழுத்து மூன்றங்குலம். அதற்குக்கீழ் தனித்தனி ஐந்து தருப்பைகளினால் இரண்டு கைகள். அந்தக்கைகளின் நீளம் தனித்தனி பதினெட்டங்குலம். மணிக்கட்டின் கீழ் விரலின் நீளம் ஆறங்குலம். நடுவில் இருபத்தாறு தருப்பையினால் மார்பு, வயிறு, இடுப்பு, தொட்புள், இவைகள் பதினைந்தங்குல நீளம் அந்தத் தருப்பைகளை இரண்டு பாகமாகச் செய்து, பதின்மூன்று தருப்பைகளால் தொடை, முழந்தாள், கணுக்கால் இவைகள் எட்டங்குல நீளம். கணுக்காலுக்குக் கீழ்க் குதிப்புறங்கால் விரல் உள்பட ஆறங்குல நீளம். இவ்வாறு அமைத்துக்கொள்ளல் வேண்டும். (317)

(அ-கை,) பாஷாணஸ்தாபன விதி எட்டுச் சுலோகங்களாற் கூறுகின்றார்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௩௧௮||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ( )

||௯௨௦||

||௯௨௧||

||௯௨௨||

||௯௨௩||

||௯௨௪||

[illegible]
[illegible] ॥ ॥௩௨௫॥

(318—325) இறந்தவனுடைய வீட்டிலாவது நதிக்கரையிலாவது பாஷாணஸ்தாபன மண்டபம் அமைக்க வேண்டும். அந்த மண்டபம் நான்கு கால்கள் மேற்கட்டு என்னுமிவைகளால் அலங்கரிக்கப்பட வேண்டும். கிழக்கு மேற்கு தெற்கு வாயில்களை மறைத்து, வடக்கு வாயிலைத் தோரணம் வாழை பாக்கு தென்னை மொட்டு என்னுமிவைகளாலும் பூமாலைகளாலும் அழகாக அலங்கரித்து, அதனடுவில் ஒரு கைமுழ நீளமும் இரண்டுமுழ உயரமும் நான்குமுழ அகலமும் மேகலைகளுமுடைய சதுரச்ரமான வேதிகையைக் கற்பித்து, அதன் வடக்கில் வட்டமாகப் பள்ளந் தோண்டல் வேண்டும். வேதிகையினடுவில் கும்பத்தை வைத்து அந்த கும்பத்தில் அழகுடையவராயும் மகாதேவதையாயும் சிவந்த காந்தியுடையவருமாயுமிருக்கிற உருத்திரனை சாங்கமாகப் போகாங்க பூசை செய்ய வேண்டும். பின்னர் வடக்கு முதற்கொண்டு அப்பிரதக்ஷிணமாக ஆவரண தேவதைகளைப் பூஜித்து எட்டு முத்திரைகளாற் பூசித்து பாஷாணத்தை கிரகிக்கவேண்டும். சிவாச்ரமியானவனுக்கு பாஷாணக்கிரகணம் ஒன்றுதான். அதுவே உத்தமம். அது கல்லாகவே யிருக்கவேண்டும். அதைப் புருஷ வடிவமாகச் செய்து கிரகிக்க வேண்டும். அல்லது செங்கல்லையாவது கிரகித்துக்கொள்ளலாம். இவ்வாறு கூறப்பட்ட கல்லு செங்கல்லு என்னுமிரண்டனுள் உசிதமான ஒன்றைக்கிரகித்து, தோண்டப்பட்ட பள்ளத்தில் ஸ்தாபிக்க வேண்டும். அக்கல்லுக்கு அபிஷேகஞ் செய்யவேண்டிய முறை எவ்வாறெனில், ஸ்நானத்தால் நனைந்த ஒரே வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு கிழக்கு முகமாக இருந்து பூமியில் இடது முழந்தாளை வைத்துக்கொண்டு இடது தோளில் வஸ்திரத்தைத் தரித்து தைலம் நெல்லிக்கனி இவற்றால் அந்தக்கல்லை அபிஷேகஞ் செய்யவேண்டுமென்க, இவ்வாறு அபிஷேகஞ்செய்து எடுத்து கும்பத்தினருகில் வடக்கு முகமாக ஸ்தாபிக்கவேண்டும். இறந்தவன் முதலிரண்டு தினைகூ

பெற்றவனுயின் கந்தர் சண்டர் கணநாதர் என்னுமிவர்களை இறந்த வனுடைய தீக்ஷா நாமத்தால் அந்தக்கல்லில் ஆவாஹனஞ்செய்ய வேண்டும். நிருவாண தீக்ஷை பெற்றவனுயின் ஈசர் சாந்தர் சதா சிவர் என்னுமிவர்களை ஆவாஹனஞ்செய்தற்பொருட்டு கந்தமுத லியன பூசி வாசனையுடைய புஷ்பங்களால் அலங்கரித்து மணி யடித்தலின்றி ஆசாரியர் தூபம் அருக்கியம் முதலியன சமர்ப்பிக் கவேண்டும். அதன்பின் உசிதமாயும் காய்கனிகளுடன் கூடியதா யுமுள்ள பிரபூதபலியைத் தீக்ஷாநாமத்தை உச்சரித்துக்கொண்டு சமர்ப்பித்து வாஸோதக திலோதகங்களையும் கொடுக்கவேண்டும். வாஸோதகம் — வஸ்திர ஜலம். திலோதகம் — எள்ளு ஜலம். இறந்தவன் பொருட்டு முதல் நாளில் மூன்று வாஸோதகங் கொ டுக்கவேண்டும். சூதகத்தினுல் பத்து நாள்கள் அசுத்தியேற்ப டின் ஒவ்வொரு நாளும் மும்மூன்றுக முப்பது வாஸோதகம் ஏற் படும். திலோதகமோ எனில், முதல் நாளில் மூன்று, இரண்டா நாளில் நான்கு, இவ்வாறே பத்தாவது நாளில் பன்னிரண்டு தி லோதகங்கொடுக்கவேண்டும். ஆகவே எல்லாவற்றையுஞ் சேர்த்து பத்து நாட்களுக்கும் எழுபத்தைந்து திலோதகமாகும். பின்னர் மூன்று பிண்டங்கள் கொடுக்கவேண்டும். காலையில் பிண்டமும் மாலையில் பலியுமாக ஒவ்வொன்றிலும் பத்துப்பத்தாகக் கொடுத் து கிரியைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். மற்றொரு பாஷாண ஸ்தாபன மண்டபத்திலும் இவ்வாறு வேதிகைகள், கும்பஸ்தாப னம், பாஷாண அபிஷேகம், ஸ்தாபனம், பூசை, பிரபூதபலி, வாஸோதகம், திலோதகம், மூன்று பிண்டங்கள், பத்துப்பிண்டங் கள், பத்துப்பலிகள் செய்யவேண்டும். அதன்பின் எல்லாவற் றையும் உத்தியாபனஞ்செய்து ஸ்நானஞ்செய்ய வேண்டும். இது பாஷாணஸ்தாபன விதியென்றறிந்துகொள்க. (318—325.)

(அகை.) பாஷாண உத்தியாபன முறை கூறுகின்றார்,

உத்தாப்ய விஷ்ணும் பாஷாணௌ தாய கும்பம்

பாஷாணயோ தசேஹ தோயவயோ !

ஏக்ஷா ரகெ்வஸாய-ூமெஷ்ர தீ ஷீஷ்ர
வாஷாணமேகம் வாநரா த்ிவெசு ஸம் ॥ ॥கூஉகூ॥

(326.) பாஷாண உத்தியாபனம் எவ்வாறெனில், முன்னர்ப் பிண்டத்தை ஒருவரும் அவர்பின் கும்பத்தை ஒருவரும் அவருக்குப்பின் பாஷாணத்தை ஒருவருமாக இவ்வாறு மூன்று பேர்கள் அந்த மூன்றையும் எடுத்துக்கொண்டு சங்கத்தொனி சங்கீத்மேளங்களுடனே கூட நதி முதலான ஜலக்கரைக்குச்சென்று வடக்குமுகமாகவிருந்து இந்த மூன்றையும் மார்பளவுள்ள ஜலத்தில் இடவேண்டும். மூன்றனுள் பிண்டத்தை முன்னரும் கும்பத்தை அதன்பின்னரும் பாஷாணத்தை அதன்பின்னருமாக ஜலத்திலிட்டு ஸ்நானஞ் செய்யவேண்டும். (326)

(அ—கை.) நவசிரார்த்தவிதி கூறுகின்றார்.

கூயபூாஙவஸ்ாஙமோ ஹ ஜெஹு
ஜெஸ்வஸ தீயபூ் வாமோஜோ-ஷிவம் !
வ்க்காஷஸாஷாஙுிநெஷ ஷடகம்
ஜோஷாய வாஜெ ஷ மூகம் வ தீதம் ॥ ॥கூஉஎ॥

(327.) சிவதீக்ஷையுடையவன் இறந்தால் அவனுக்கு இறந்ததினமுதல் பதினொருதினத்திற்குள் நவசிரார்த்தஞ் செய்யவேண்டும். எவ்வாறு செய்யவேண்டுமெனில், முதல்நாளில் ஒன்று, மூன்றாநாளில் ஒன்று, ஐந்தாவதுநாளில் ஒன்று, ஏழவதுநாளில் ஒன்று, ஒன்பதாவதுநாளில் ஒன்று, பதினோராவதுநாளில் ஒன்று. இவ்வாறு இந்த ஆறு நாட்களிலும் பச்சை அரிசியினால் நவசிராரத்தஞ் செய்யவேண்டும். பிராமணருக்கு அன்னமிடவேண்டும். இது நவசிரார்த்தவிதி யென்றறிந்துகொள்க. (327)

(அ—கை.) எழுபத்தைந்து பெயருக்குப் போசனஞ் செய்வித்தல், சோதகும்பதானவிதி, இடபதானம், சூத்திரர் செய்யவேண்டிய அந்தியேஷ்டி முதலிய கிரியைகள் ஆகிய இவற்றை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஞுஷள ஹொஜநமேகஷ்ி மூதமஷிஜெஸுகவ ஜுஸு்ா
உஸாஷஜெஷுவுத்ா தீ வஹஷுதிரிமோஜெநுகா்
உஸாஜெஷ யவா ! கூயபூாசு ஜொஷககூஹஷாநீ

[illegible] ॥௩௨௮॥

[illegible] ॥௩௨௯॥

(328-329.) சிவதீக்ஷையுடையவன் இறந்தால் முதல்நாள் ஒருபிராமணருக்கும், அதற்குமேலுள்ள நாள்களில் ஒவ்வொருவரதிகமாக பத்தாவதுநாளில் எல்லாஞ்சேர்த்து எழுபத்தைந்து பிராமணருக்குப் போசனஞ்செய்து வைக்கவேண்டும். அல்லது பதிஞோராவதுநாளில் சேர்த்துப்பண்ணல் வேண்டும். அன்றளிலேயே சிவபெருமானுக்கு வெண்மையான விருஷபத்தை தானஞ் செய்யவேண்டும். அது அகப்படாவிடில் கருமையான விருஷபத்தையாவது தானஞ் செய்தல்வேண்டும். முந்நூற்று அறுபது தினங்களிலும் சோதகும்பதானஞ் செய்யவேண்டும். சூத்திரர்கள் மரணமடைந்தால் சைவாக்கினியினால் அப்பொழுதே மௌனமாக தகனஞ்செய்து சூதகத்தின்முடிவில் முப்பத்திரண்டாவது நாளிலாவது இருபத்தைந்தாவது நாளிலாவது பதினாறாவது நாளிலாவது அந்தியேஷ்டிக்கிரியையை புத்தளிகையிற் செய்து தமக்குரிய நக்ன சிரார்த்தம் சஞ்சயன முதலியவற்றை முறையே அந்த நாளிற்செய்யவேண்டும். (328-329)

(அ-கை,) துர்மரணம் அடைந்தவர்களுக்குப் பரலோகசம்பந்தமான அந்தியேஷ்டிவிதி கூறுகின்றார்.

[illegible] ॥௩௩௦॥

(330.) மாடுபாய்ந்தாவது, பாம்புகடித்தாவது, நீரில்விழுந்தாவது, நெருப்பிலகப்பட்டாவது, பெருங்காற்றிலகப்பட்டாவது, இடிவிழுந்தாவது, யுத்தத்தினலாவது, ஆயுதத்தினலாவது, புலிமுதலிய துஷ்டமிருகங்களினலாவது, மரம் விழுந்தாவது, கயிறு பூட்டிக்கொண்டாவது, வசூரியினலாவது, நஞ்சுதின்றாவது, திருடனலாவது, பொல்லாதவியாதியினலாவது, கல்விழுந்தாவது, அரசனுடைய ஆணையினலாவது, தன்னலாவது மரணம் ஏற்பட்டால் துர்மரணமாகும். இவ்வாறு மரணமடைந்தவருக்குக் கைகால் முதலிய அங்கமனைத்துஞ் சிறிதுங் குறையாமலிருந்தால் ஆறுமாதத்திற்குமேல் அந்தியேஷ்டிக்கிரியை செய்யவேண்டும். அங்கங்களிற் குறையிருந்தால் ஒருவருடங் கழிந்தபின் அந்தியேஷ்டிக்கிரியை செய்தல்வேண்டும். இதற்குப் பிரமாணம்.

ஸவ்யாஜாமரி வாயுவஹ்னிபி: ஶஸ்த்ரவ்ருக்ஷ விஷதோய ஸம்பவை: । வத்ஸராதி தஷண்மாஸவத்ஸ யோ ஸம்ஸ்ருதேந விதி ரூபு ஸம்பவத்ஸ: ॥

(இதன் பொருள்.) பாம்பு, கயிறு, மலை, காற்று, நெருப்பு, ஆயுதம், மரம், விஷங்கலந்தநீர், யானை இவைகளால் மரணமடைந்தவர்களுக்கு ஒருவருடம் அல்லது ஆறுமாதங்கழிந்தபின், மரணமடைந்ததிதியில் விதிப்படி உருத்திரபலியுடன் அந்தியேஷ்டிக்கிரியை செய்யவேண்டு மென்பதாம். (330)

(அ—கை.) ஆவசியக சௌளவிதி கூறுகின்றார்.

மாமாஸ்ய தத்தீர்த்தஸேவநஜாஷாம் க்ஷௌரம் தூாவஶ்யகம் ஸதேவா ஊஷதநே வ வாண்யவதீ வ ஸ்ரீஷாஸ்ராஜ ஸம்யை । ஸத்யம் ரீ த்யஜ்ய தள தயா வித்யஜ்ய தாவாவாய ஜ்யத்யாஜவீ க்ஷௌரம் ஹ்ராஜ்ய தாவவீதி விஹிதம் யாமே விவாஹே ஶுபே ॥ ௩௩௧

(331.) கங்கைமுதலான தீர்த்தங்களில் நீராடுதற்குச் சென்றபொழுதும், இராமேஸ்வரமுதலான புண்யக்ஷேத்திரமாகிய சிவக்ஷேத்திரங்களில் சுவாமி தெரிசனத்திற்குச் சென்றபொழுதும், சிவதீக்ஷை பெற்றுக் கொள்ளும் பொழுதும், விவாஹஞ் செய்துக் கொள்ளும் பொழுதும், தன்னுடைய குரு தாய் தந்தை எஜமான் இவர்கள் மரண மடைந்தபொழுதும், பொல்லாத ஜந்

னுக்கள் தன்மேல் விழுந்தபொழுதும், அப்பொழுதே சௌளஞ்செய்து கொள்ளல் வேண்டும். இதற்கு ஸ்மிருதி வசனம் வருமாறு:—

மாதா பித்ரு பித்ருவ்யாணாம் மாதுலாசார்யயோ: ச்வசு-
ரயோ: । ஸ்வஸ்ராதயோ: ஏதேஷாம் பத்ந்யாஸ்வபி பித்ருஷ்வ-
ஸு: । மாத்ருஷ்வஸு: ஸஹோதர்யா: ஸஹவாஸிஷு ஏவ ச ।
மாதுலம் பிதரம் ஜ்யேஷ்டமாசார்யம் ச்வசுரம் விநா । க்ஷத்ரியாத்
யம் கர்ப்ப தீக்ஷிதஸ்ய ப்ரஹ்மஹா ஸ்யாத் ॥

(இதன் பொருள்,) தாயார் தந்தையார் பெரிய தந்தையார் சிறிய தந்தையார் தாயாருடன் பிறந்த மாமனார் ஆசாரியர் பெண் தந்தமாமனார் ஆகிய இவர்களுக்கும், இவர்களுடைய மனைவிகளுக்கும், மூத்தசகோதரர், தாயுடன்பிறந்த சிறியதாயார், தந்தையாரோடுபிறந்த அத்தை, தமக்கையார் ஆகிய இவர்களுக்கும் மரணம் வந்தபொழுது தீக்ஷையுடையவனாயினும் சௌளஞ்செய்து கொள்ளல் வேண்டும். மாதா பிதா மூத்ததமையன் தன் குரு பெண்தந்தமாமன் ஆகிய இவர்கள் தவிர மற்றவர்களுக்குக் கர்ப்ப தீக்ஷைகொண்டவன் சௌளம் பண்ணிக்கொண்டால் பிரமக்கொலைக்குச் சமமாகுமென்பதாம். (331)

(அ-கை.) பிராமணரல்லாத மற்றவர்களுக்கு ஆசௌச தினத்தைக் கூறுகின்றார்.

சைவாநாம் ச ஸதீக்ஷாணாம் க்ஷத்ரியாணாம் விசேஷத
ஏஷாம் ஸதா ஸம்ஸ்காரவிஹீநாநாம் ஸதாசிவைகபக்தாநாம்
மாம்ஸாத்யபக்ஷாவதாம் । ஆசௌசம் த்ரயோதசாஹம்
வ்ருத்தே ஸ்ரீ ஏகாதசிகே தத்ரைவ ஸம்வேஷ்டித்வா
ஸ்வகுலாசார விஹிதா: பக்ஷாந்வா தாத்ருசா: ॥௩௩௨॥

(332.) சிவதீக்ஷையுடையவருக்குச் சைவரென்றபெயருண்டு. சிவதீக்ஷையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று சாதியிலுள்ளார், விபூதி உருத்திராக்கம் அணிந்து சிவபூஜையுடன் அந்தக்கரணசுத்தியுள்ளவராயும் இல்லற முடையவராயும் நிலைத்த நியமத்தையுடையவராயும் புலால் முதலியவைகளை உண்ணாதவராயும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினாறுநாளும், பதினைந்து

நாளுமாகும். இவ்வாறு இரண்டு விதமாகக் காமிகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. (332)

(அ-கை.) ஆயுளின் அளவு கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||௩௩௩||

(333.) பெண்கள் புருஷர்கள் யானை மரங்கள் இவைகளுக்கு வயது நூறு. குதிரைக்கு வயது முப்பத்திரண்டு. ஒட்டகைக்கு வயது அறுபது. கழுதைக்கு வயது இருபத்து நான்கு. ஆட்டுக்கு வயது பதினாறு. நாய்க்கு வயது பன்னிரண்டு. பறவைகளுக்கு வயது முப்பது. பறவைகளுள் காகங் கழுகு இரண்டிற்கும் வயது ஆயிரம். பாம்பிற்கு வயது இரண்டாயிரம். நரிக்கு வயது நாலாயிரம். இவ்வாறு சாத்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. ()

(அ-கை.) ஐந்து தொழில்களில் உயிர்க்கொலை உண்டென் கூறுகின்றார்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] || ( )

(334.) அலகிடுதல், அஃதாவது (பெருக்குதல்) மெழுகுதல், பாகஞ்செய்தல், அரிவாள் முனையினால் அரிதல், அரைத்தல் என்னும் இந்த ஐந்து தொழில்களினால் நாள்தோறும் உயிர்க்கொலை யுண்டாகுமென்றறிந்துகொள்க. (334)

(அ-கை.) சிவநிர்மாலியவிதி கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] । [illegible]

ஜலாநலாநவஸ்ரம் ஸ்நாநம் க்ஷீரம் காமிகே ப்ரோக்தம் நாஜ
ஹயாதி ஸர்வேஷம் நிர்மால்யதோஷவர்ஜிதம் ॥ ॥௩௩௫॥

(335.) ஸ்ரீ மகாதேவருக்குச் சமர்ப்பித்த தாம்பூலம், சாத்தினவிபூதி, சாத்தின புஷ்பங்கள், புஷ்பமாலைகள், சந்தனம், நைவேத்தியமாகச் சமர்ப்பித்தபால், அன்னம், பணியாரம், நெய், இளநீர், தேங்காய், வாழைப்பழம், மாம்பழம், அபிஷேகஞ்செய்த திருமஞ்சனம் ஆகிய இவையனைத்துஞ் சிவதீக்ஷையுடைய மகான்கள் உட்கொள்ளலாம். உட்கொண்டால் இவர்களுக்கு நிர்மாலிய தோஷங்கிடையாது. இவ்வாறு காமிகாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. (335)

(அ—கை.) முப்பத்தெட்டுக் கலாநியாசஞ் செய்யுந் தானங்கள் இவையெனக் கூறுகின்றார்.

மூர்த்யஸ்யவஸ்யா நவ ஹ்ருதஸ்வம்
நாபிர் ப்ருஷ்டம் ஜடர்ஞ் வக்ஷ: ।
கேசாதிவாஸபார்ஸ்வநாஸிகாம்தம்ஸீ
வாணீ ச நாஸாகண்டஜ்ஞயாதி ॥ ॥௩௩௬॥

(336.) மூர்த்தாக்கள் ஐந்து, முகம் நான்கு, இருதயம் ஒன்று, கழுத்து ஒன்று, தோள் இரண்டு, தொப்புள் ஒன்று, வயிறு ஒன்று, பிருஷ்டம் ஒன்று, மார்பு ஒன்று, ஆண்குறி ஒன்று, குய்யம் ஒன்று, தொடை இரண்டு, முழந்தாள் இரண்டு, கணுக்கால் இரண்டு, இடுப்புக்கு மேலுள்ளபக்கம் இரண்டு, இடுப்பு ஒன்று, பக்கங்கள் இரண்டு, கால் இரண்டு, கை இரண்டு, மூக்கு ஒன்று, சிரசு ஒன்று, புயம் இரண்டு, இந்த முப்பத்தெட்டும் கலா நியாசஞ்செய்யுந் தானமெனவறிந்துகொள்க. இதற்குப் பிரமாணம் சித்தாந்தசாராவளியிலுள்ளது. அதுவருமாறு:—

மூர்த்நி: பஞ்சவக்த்ரேஷு ஹ்ருதயகண்டஸ்கந்தநாபிஜடர க்ஷேத்ர: ப்ருஷ்டோரோமேட்ரபாயூரு ஜாநுஜங்காபாதேஷு । ஷிஷிக்ஸாலவாஸீவாரண கரயோ: ஸ்ரோத்ரகண்டத்வம் ப்ராணநாஸிகயோ: கலாநாம் பஞ்சதந்மாத்ரை ஷட்த்ரிம்சத்காஸ்தாநம் ॥

(இதன் பொருள்.) மேலே கூறியவாறு. (336)

(அ—கை.) உயிரெழுத்து மெய்யெழுத்தென்னும் முதலெழுத்துக்களின் நியாசஸ்தானங் கூறுகின்றார்.

[illegible] ॥௩௩௭॥

(337.) அகரம் உச்சியிலும், ஆகாரம் நெற்றியிலும், இகரம் வலக்கண்ணிலும், ஈகாரம் இடக்கண்ணிலும், உகரம் வலது செவியிலும், ஊகாரம் இடது செவியிலும், ருகரம் வலது மூக்குத்துவாரத்திலும், ரூகாரம் இடது மூக்குத்துவாரத்திலும், லுகரம் வலது கன்னத்திலும், லூகாரம் இடது கன்னத்திலும், ஏகாரம் மேலுதட்டிலும், ஐகாரம் கீழுதட்டிலும, ஓகாரம் மேல்வாய்ப்பல்லிலும், ஔகாரம் கீழ்வாய்ப்பல்லிலும், அம் அடிநாக்கிலும், அஃ நடுநாக்கிலும், இவ்வாறு பதினாறு உயிரெழுத்துக்களையும், பதினாறு தானங்களிலும், கவருக்கம் ஐந்தையும் வலதுகையிலும், சவருக்கம் ஐந்தையும் இடதுகையிலும், டவருக்கம் ஐந்தையும் வலதுகாலிலும், தவருக்கம் ஐந்தையும் இடதுகாலிலும், பகாரம் வலது பக்கத்திலும், ஃபகாரம் இடது பக்கத்திலும், பகாரம் பின்பக்கத்திலும், பகாரம் இடுப்பிலும், மகாரம் தொப்புளோடு கூடிய வயிற்றிலும், யகாரம் நரம்பிலும், ரகாரமாகிய ரேபம் இரத்தத்திலும், லகாரம் தோலிலும், வகாரம் இறைச்சியிலும், ஶகாரம் எலும்பிலும், ஷகாரம் மூளையிலும், ஸகாரம் சுக்கிலத்திலும், இவ்வாறு யகாரமுதல் ஸகாரம் வரையுள்ள ஏழு அக்ஷரங்களையும், ஏழு தாதுக்களிலும், ஹகாரத்தை இருதயத்திலும், ளகாரத்தை குதத்திலும், க்ஷகாரத்தைக் குறியிலும் இவ்வாறு மாதிருகாக்ஷரமாகிய ஐம்பத்தொரு முதலெழுத்துக்களை திவ்யமுத்திரையினால் நியாசஞ் செய்யவேண்டும். (337)

(அ—கை.) மாதம் நான்கு விதமென்று கூறுகின்றார்.

சாந்த்ரஸ்ததா ச ஸாவநஸ்ச
ஸௌரஸ்ச நாக்ஷத்ரஸ்ச ததா பரஸ்ச ।
ப்ரோக்தா மாஸாஸ்சதுர்விதா
ஸ்வபுத்த்யா கல்ப்யமாநஸ்ஸாவநஸ்ததா ஸ்ம்ருத: ॥ ॥௩௩௮॥

(338.) சாவன்மாசமென்றும், சௌரமாசமென்றும், சாந்திரமாசமென்றும், நக்ஷத்ரமாசமென்றும் மாசம் நான்கு வகைப்படும். தன்னுடைய புத்தியினால் இவ்வளவு நாளென்று கற்பித்துக்கொள்வது சாவன்மாசம். இப்பொழுது உலகில் வழங்கிவருவது சௌரமாசம். அஃதாவது சூரியன் இருக்கும் ராசியைக்கொண்டு வழங்குவது. அமாவாசைகழித்து பிரதமைமுதல் மறு அமாவாசைவரை சாந்திரமாசம். இருபத்தேழு நக்ஷத்திரங்கள் கொண்டது நக்ஷத்ரமாசம். இவ்வாறு நான்கு மாதங்களும் அறிந்துகொள்க. (338)

(அ-கை.) பதினான்கு மனுக்கள் இவரென் றொன்றரைச் சுலோகங்களாற் கூறுகின்றார்.

ப்ரஹ்மணோதிகாரிணோ ஹி மநவஸ் ஸ்வாயம்புவா
ஸ்வாரோசிஷஸ்ச உத்தமஸ்தாமஸோ ரைவதஸ்ததா
சாக்ஷுஷ வைவஸ்வதஸ்சைவ ஸூர்யஸாவர்ணிஸ்ததா
தக்ஷஸாவர்ணிர் ப்ரஹ்மஸாவர்ணிர் தர்மஸாவர்ணிஸ்ததா
ருத்ரஸாவர்ணிர் தேவஸாவர்ணிர் ப்ரஹ்மணோ தினே ॥௩௩௯॥

ரௌச்யஸ்ச பௌத்யோ திவஸே ப்ரஹ்மண: க்ரமாத்
சதுர்தஸைதே மநவ: ப்ரோக்தா: ஸர்வே
யுகாதிபா: ஸ்ம்ருதா: ॥ ॥௩௩௯½॥

(339-339½.) பிரமாவினுடைய வாயிவில்செய்யும் பாரபத்தியத்தில் அஃதாவது அதிகாரத்தில் ஒருவர்பின் ஒருவராக உள்ளவர் பதினான்கு மனுக்களாவார். அவர்களுள் முதலாவது சுவாயம்புவ மனு. இரண்டாவது சுவாரோசிஷமனு. மூன்றாவது உத்தமமனு. நான்காவது தாமசமனு. ஐந்தாவது ரைவதகமனு. ஆறாவது சாக்ஷுசமனு. ஏழாவது வைவசுதமனு. எட்டாவது சூரி

யமனு, ஒன்பதாவது தக்ஷமனு, பத்தாவது பிரமதர்மமனு, பதி னோராவது ருத்திரமனு, பன்னிரண்டாவது சௌவர்ணமனு, ப தின்மூன்ருவது ரௌச்சியமனு, பதிஞன்காவது பிருத்தியமனு. இவ்வாறு பதிஞன்குமனுக்களும் பிரமாவினுடைய ஒருபகலாகிய முப்பது நாழிகைக்குள் தனித்தனி ஒவ்வொருவரும் நூறுவயது வரை இருந்து வாயிலதிகாரத்தைச் செய்வரென்றறிக, சர்வார்த் தங்களையும் அறிந்தவரான வித்தியாரண்யசுவாமிகள் இவ்வாறு சொல்லியிருக்கின்றனர். (339-339½)

(அ-கை.) பிரமாவினுடைய தினத்தைப்பற்றி இரண்டு சு லோகங்களாற் கூறுகின்ருர்.

ஷஷ்ட்யுத்தரத்ரிஶதாப்தைர்யை
திவ்யோப்தஸ் ஸ கில ஸ்தாநேஷு ।
தேஷாம் ஸஹஸ்ரத்விதயேந ஸம்க்யா
தைகம் யுகம் தைவதமாமநந்தி ॥ ॥௩௪0॥

தஸ்மாத் ஸஹஸ்ரத்வயஸம்ஹாரகம்
ப்ராஹ்மம் தினம் தத்வந்நிஶாப்யுதாஹ்ருதா ।
உதாஹ்ருதாநாம் ஸஹஸ்ரயுகம்
தைவே யுகே தைவ ஸஹஸ்ரயுகம் ॥ ॥௩௪௧॥

(340-341.) பிரமாவுக்குப் பகல் நாழிகை முப்பது, இரவு நாழிகை முப்பது, ஆக அறுபது நாழிகைக்கொண்டது ஒருநாள். பிரமாவினுடைய அந்த ஒருநாளுக்குக் கணக்குவருமாறு:—மனி தருடைய முந்நூற்றறுபது வருடங்கொண்டது தேவர்களுக்கு ஒரு வருடமாகும். இது திவ்யவருடமெனப் பெயர்பெறும். இந் தத் திவ்யவருடம் பன்னீராயிரங்கொண்டது ஒரு தேவயுகமாகும். அந்தத்தேவயுகம் இரண்டாயிரங்கொண்டது பிரமாவுக்கு ஒருநா ளென்றறிந்து கொள்க. அஃதாவது மனிதர்களுடைய இரண் டாயிரஞ் சதுர்யுகங்கொண்ட தேவர்களுடைய இரண்டாயிரயுகம் பிரமாவுக்கு ஒருநாளென்ற வாறும். இதற்குப் பிரமாணம்.—

சதுர்யுகஸஹஸ்ராணி ப்ரஹ்மணோ தினமுச்யதே ராத்ரி
ஸ்தாவதீ ஜ்ஞேயா ஸ்யாத் ராத்ரிஃ ஸ ஸம்யோநிருணாம் ||

(இதன்பொருள்.)—ஆயிரம் சதுர்யுகங்கள் கொண்டது பிரமாவுக்கு ஒருபகல், இரவும் அவ்வாறேயாம். அந்த இரவே மனிதர்களுக்குப் பிரளய மென்பதாம். (340-341)

(அ-கை.) பிரசித்தமான சைவாசாரியர்களுடைய பெயரை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

உக்ரஜ்யோதிஸ்ஸத்யோஜ்யோதிஸ் ஸ ஸத்ய
ஶ்ரீராமகண்டோபி ச வித்யாகண்டஃ |
நாராயணஸ்சாபி விபூதிகண்ட
ஶ்ரீநீலகண்டாவபி ஸோமஶம்புஃ || ||௩௪௨||

ஶம்பா நஶம்பூ ஹ்ருதயாதிநா ஸ்யாச்
விரிஞ்சிவைராக்ய யுதஸ்ததேஶ |
ஜ்ஞாநஶிவேத்ர வருணேஶ்வரௌ தா
வித்யாதயேஶ்ச ஸ்யாதகோரஶம்புஃ ||௩௪௩||

(342-343.) உக்ரஜோதி சிவாசாரியர், சத்தியோ ஜோதி சிவாசாரியர், இராமகண்ட சிவாசாரியர், வித்தியாகண்ட சிவாசாரியர், நாராயணகண்ட சிவாசாரியர், பூதிகண்ட சிவாசாரியர், ஸ்ரீகண்ட சிவாசாரியர், நீலகண்ட சிவாசாரியர், சோமசம்பு சிவாசாரியர், பிரமசம்பு சிவாசாரியர், ஞானசம்பு சிவாசாரியர், ஈசான சிவாசாரியர், இருதய சிவாசாரியர், வைராக்கிய சிவாசாரியர், திரிலோசன சிவாசாரியர், வருண சிவாசாரியர், ஈச்வர சிவாசாரியர், அகோர சிவாசாரியராகிய யிப்பதினெண்மரும் சைவமதப்பிரவிர்த்தர்களான ஆசாரியர்களாவர். இன்னும் வியோம சிவாசாரியர், வியாபக சிவாசாரியர், சர்வேசபண்டித சிவாசாரியர், உத்துங்க சிவாசாரியர், சர்வாத்ம சிவாசாரியரெனச் சில சிவாசாரியர்களும் உண்டு. (342-343)

(அ-கை.) ஓரே ஸ்நானத்தால் ஆசௌசம் நீங்குவது இன்னின்ன பேர்களுக்கென்று இரண்டு சுலோகங்களாற கூறுகின்றார்.

ஸதா ஶௌசவ்ரதோக்ஷம் ஸத்ர ஸத்ய ஸங்க
ஸ்நாதகீஷாந்த ஹவிஸ் ஸவேஷாஸ் ।
ஸக்தஶ்யோகீவ்ரதீதாத்ரு ஶம்பு
ஶ்ரத்தாவதாம் ப்ரஹ்மவிதஸ்துகாத்யா: ॥ ॥௩௪௪॥

ருத்விக் ச வர்ணீ ச விவாஹயாத்ரா
ஸத்ரதீக்ஷாநியமோஸ்தி தாபே ।
தாஸாஶ்ச தாஸ்யோ ரஜகாஶ்ச ஸைவா
வைத்யாஶ்ச தக்ஷா கவி நாபிதாஶ்ச ॥ ॥௩௪௫॥

(344-345.) எப்பொழுதும் நல்லொழுக்கத்தை அனுட்டிக்கிறவர்கள், யோகிகள், விரதங்களை அனுட்டிக்கிறவர்கள், பிரமஞானத்தை யுடையவர்கள், எப்பொழுதும் இல்லையென்னாது கொடுக்கிறவர்கள், சிவனடியார்கள், ரித்துவிக்குக்கள், பிரமசாரிகள், சிறுபிள்ளைகள், வழிச்செல்வோர்கள், ஆபத்திலகப்பட்டவர்கள், யுத்தத்திற்கு செல்பவர்கள், மகாநியமத்தையுடையவர்கள், வேலைபார்க்கும் புருடர்கள், வேலைபார்க்கும் பெண்கள், வண்ணான், அரசன், வைத்தியன், தச்சன் முதலான தொழிலாளிகள், அம்பட்டன், ஆகிய இவர்களுக்கு ஓரே ஸ்னான மாத்திரத்தில் ஆசௌசம் நீங்குமென்றறிக. (344-345)

(அ-கை) சாயா புருடதரிசனமுறை கூறுகின்றார்.

சாயாம் ஸ்வஸ்ய ஸமீக்ஷ்ய ஸம்புரந்தரோவா த்வஷ்டா த
வே வாதவேபத்யாமோகி வதேத் தச ஸ்ருதிநிய
மேஶ் வீக்ஷாகா ஸம்வத்ஸரம் । தீவயாயஸ்யவஸ:
கரோதி கமலம் ரக்தாஸிதஸ்வாபம் ஶம்புநந்த்
வாணிவஷே த்ருக்ஸ்யதத: காலாவஶேஷாயுஷ
நாக ॥ ॥௩௪௬॥

(346) சற்குருமுகமாக அறிந்து நிலவு அல்லது வெயிலில் தன்னுடைய நிழலைப் பார்த்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தால் அப்பொழுது ஆகாயத்தில் இவனுடைய உருவம் போல் ஒரு உருவந்தோன்றும். அவ்வுருவம் பொன்னிறமாயின் சம்பத்தையும், வெண்மையான நிறமாயின் நீண்ட ஆயுளையும், செம்மையான நிறமாயின் கலகத்தையும், கருமையான நிறமாயின் நோயையும், கை கால் சூன்யமாயின் மரணத்தையும், ஒரு அயனத்துள் தரும். வெறுக்கத்தக்க தோற்றமாயின் பாதி அயனத்துள் அதாவது மூன்று மாதத்திற்குள் மரணத்தைத்தரும். (346)

(அ—கை.) தொண்ணூற்றாறு தத்துவங்களிவையெனக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] விம்ஶதி: । [illegible]
[illegible]
[illegible] ॥ ॥௩௪௭॥

(347.) முப்பத்தாறு தத்துவங்களுள் சித்தத்தைக் கழித்து ஏனைய தத்துவங்கள் முப்பத்தைந்து. சாத்விகம், இராசதம், தாமசம் என்னுங்குணங்கள் மூன்று, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையென்னும் ஈஷணைகள் மூன்று. பிருதிவியின் குணம் ஐந்து, அப்புவின் குணம் நான்கு, தேயுவின் குணம் மூன்று, வாயுவின் குணம் இரண்டு, ஆகாயத்தின் குணம் ஒன்று, நாடிகள் பத்து, வாயுக்கள் பத்து, வாக்குக்கள் நான்கு, ஞானேந்திரிய விடயங்கள் ஐந்து, கன்மேந்திரியத்தின் தொழில்கள் ஐந்து, காமக்குரோத முதலிய குணங்கள் ஆறு. இவ்வாறு தொண்ணூற்றாறு தத்துவங்களும் அறிந்து கொள்க. (347)

(அ—கை.) முப்பத்தாறு தத்துவங்களிவையெனக் கூறுகின்றார்.

[illegible] ||௩௪௮||

(348) சைவசமயத்திற்குத் தத்துவங்கள் முப்பத்தாறாகும். அவை வருமாறு:—பூதங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அகங்காரம் புத்தி மனமென்னும் அந்தக்கரணங்கள் மூன்று, குணதத்துவம் ஒன்று, வித்தியாதத்துவம் ஏழு, சிவதத்துவம் ஐந்து. இவ்வாறு தத்துவங்கள் முப்பத்தாறென்று சிவாகமப்பொருள்களை அறிந்தவர்கள் கூறுவர். (348)

(அ-கை.) பதினாறு கணபதியின் நாமத்தைக் கூறுகின்றார்.

[illegible] ||௩௪௯||

(349.) பதினாறு கணபதியின் நாமதேயம் வருமாறு:—பாலகணபதி, தருணகணபதி, பக்தகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, விதிகணபதி, பிங்களகணபதி, உச்சிட்டகணபதி, இரக்தகணபதி, க்ஷிப்ரகணபதி, ஏரம்பகணபதி, இலக்குமிகணபதி, மகாகணபதி, விஜயகணபதி, நிருத்தகணபதி, ஊர்த்துவகணபதி என இவ்வாறு பதினாறு கணபதியின் நாமதேயங் கண்டுகொள்க.

(அ-கை.) மிகப் பிரசித்தமான பதினெட்டுச் சிவஸ்தலங்களிவையென இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஶ்ரீபர்வத꞉ காலஹஸ்தீ ச பஞ்சநத்யம்
பத்மாலயோ வேதவனம் கஜாரண்யகம் ।
ஶ்ரீகும்பகோணஶ்வேதகாநநாக்யம்
மாயூரமத்யார்ஜுநசித்ஸபேஶா꞉ ॥ ||௩௫௦||

ஹாலாஸ்ய வைத்யாலயபந்தநால்லூரம்
ஶ்ரீகாஞ்சீவ்ருத்தாசலகோபர்வதம் ।
ஶ்ரீ தாலகேஶாலயமேதேஷ்டா
ப்ரஸித்தாநி ஶிவஸ்தலாநி ஹ்ருதம் ॥ ||௩௫௧||

(350–351.) பிரசித்தமான சிவஸ்தலங்களாவன:—ஸ்ரீபர்வதம், அஃதாவது மல்லிகார்ச்சுனம், காளஹஸ்தி, திருவையாறு, திருவாரூர், வேதாரணியம், திருவானைக்கா, திருக்குடந்தை, அஃதாவது கும்பகோணம், திருவெண்காடு, திருமயிலாடுதுறை, அஃதாவது மயூரம், திருவிடைமருதூர், சிதம்பரம், மதுரை, வைத்தீச்வரன்கோவில், பந்தணைநல்லூர், ஸ்ரீகாஞ்சியம், விருத்தாசலம், கோபர்வதம், திருப்பனந்தாள் என்னும் இந்தப் பதினெட்டுத் தலங்களும் பிரசித்தமான சிவஸ்தலங்களென அறிந்து கொள்க. இதற்குப் பிரமாணம்.

ஸேதும் அனந்தஶயனம் த்வாரகாம் பதரீவனம்
விந்த்யம் கஜாரண்யம் ஸ்மரதாம் ஸாஹ்வம் ப்ரதக்ஷிணம் ।
காஶீம் வேதவனம் ஸ்மரதாம் பாஸ்கரம்
ஶ்ரீஶைலம் வேதவனம் ஸ்மரதாம் ஸாஹ்வம் ப்ரதக்ஷிணம் ।
ப்ரதக்ஷிணத்ரயம் புண்யம் ப்ராப்யம் கோடிஸ்நாநத꞉
க்ஷேத்ரமேதம் புண்யமஸ்தி ஸந்தேஹ꞉ ॥

(இதன் பொருள்.) சேது, அனந்தசயனம், துவாரகை, பதரிகாரணியம், திருவானைக்கா, பாஸ்கரக்ஷேத்ரம், ஸ்ரீசைலம், காசி, வேதாரணியம் என்னுமிவைகளை நினைப்பவர்க்குப் பூப்பிரதக்ஷிணஞ் செய்தபலன் கிடைக்கும். இந்தத் தலங்களில் திருக்

காயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பத்மநாபர் கணேசர் முதலிய தெய்வங்களை நாள்தோறும் விடியுங்காலையில் மூன்று பிரதக்ஷிணத்துடன் உபாசனை செய்கின்றவன் குற்றமற்றவனாய் அசுவமேதபலனை யடைவனென்பதாம். (350—351)

(அ-கை.) சிவபெருமானுக்குரிய முக்கிய ஸ்தலங்களிவையெனவும் இத்தலங்கள் உடனே முத்தியைக் கொடுக்குமெனவுங் கூறுகின்றார்.

ஸேதுர்வ்யாக்ரபுரீ ஶ்ரீசிதம்பரஸபா கோகர்ண-
பம்பாபுரீ ஶ்வேதாரண்ய வடாடவீ ஶ்ருதிவனீ
ஶோணாத்ரிர்வ்ருத்தாசலம் । காஞ்சீ ஶ்ரீகிரிகாலஹஸ்தி
கிரய꞉ கேதாரவாராணஸீகைலாஸா இதி ஶங்க
ரஸ்ய ப்ரியா꞉ வ்யக்தா ஸ்யுர் முக்திப்ரதா꞉ ॥ ॥௩௫௨॥

(352.) சேது, சிதம்பரம், கோகர்ணம், பம்பாநகர், திருவெண்காடு, திருவாலங்காடு, வேதாரணியம், திருவண்ணாமலை, விருத்தாசலம், காஞ்சி, ஸ்ரீசைலம், காளஹஸ்தி, கேதாரம், காசி, கைலாயம் என்னும் இவைகள் சிவபெருமானுக்கு முக்கிய வாசஸ்தானங்களாகும். இத்தலங்களில் வசிப்பவர்க்கு முத்தியை யுடனே கொடுக்கும். (352)

(அ-கை.) நூல்செய்த காலமுதலியன மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

வஸுஷட்யஶகாப்தே து
ஶ்ரீ ஸுந்தராக்ஷரயோகினா ।
ஶதாயுக்தி ஶதஶ்லோகை
ஸஜ்ஜிதம் ஶைவஸூத்ரணம் ॥ ॥௩௫௩॥

ஸதத்ஸஹஸ்ரபஞ்சாஶத்ஸ்யாத் து ஸூத்ரிஷ-
ணம் । தஸ்யாபி ஸூத்ரிஷணம் ஸப்தத்ஸாஷ்டஷஷ்ட்யா
ஸூத்ரிஷணம் ॥ ॥௩௫௪॥

ஶைவபூ⁴ஷணநிர்தி³ஷ்ட
ஶாஸ்த்ரம் ஶ்ரோத்ரரஸாயநம் ।
யாவச்சாப்⁴யஸ்யதே கஶ்சித்
பரமாநந்த³காரணம் ॥ ॥௩௫௫॥

ஸம்பூர்ணம்
ஶைவபூ⁴ஷணம் ॥

(353–354–355) சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து ஐநூற்று அறுபதாவது வருடமாகிய விரோதிகிருது வருடத்தில் முந்நூற்றைம்பது சுலோகங்களால் இந்தச் சைவபூஷணம் பஞ்சாக்கரயோகியால் செய்யப்பட்டதென்றறிக. எவனொருவன் இந்தநூலை நன்றாகப்படிக்கின்றானோ அவனே இந்த நூலுக்குப் பூஷணமாவன். அவனுக்கு இந்தநூல் பூஷணமாகும். இவ்வாறு அன்னியோன்னிய பூஷணமாமுறைமை அறிந்துகொள்க. இந்தநூல் செவிக்கு அமிர்தமாய் பரமானந்த காரணமாயிருக்குமாதலால் இந்தச் சைவபூஷணத்தைப் பூசிக்கத்தகுந்த பெரியோர்கள் சதாகாலமும் செவியிலே தரிக்கக்கடவர்கள். (353–354–355.)

சைவபூஷணமும் தமிழ் வியாக்கியானமும்

முற்றுப்பெற்றன.

சிவபெருமான்றிருவடி வாழ்க.



|| ஶ்ரீ: ||

அகாராதிஶ்லோகஸூசீ ||

ஶ்லோக:	ப்ருஷ்டம்	ஶ்லோக:	ப்ருஷ்டம்
அஶூஞ்க	௭௮	இத்யுக்த்வா	௧௪௭
அஹ்நிம் வேஷிக	௭௧	இத்யஷ்டாவ	௧௪௧
அநேந்த்ராந்த்யபா	௧	இத்யுத்யத்யவ	௧௪௩
அஶ்வகாலே	௭௮	ஸம்ஸாரவஸ்கலோ	௯௫
அம்போஜஜந்மப்ரப	௮௩	ஸம்ஸாரஸம்ஸ	௧௯௪
அஸ்த்ரப்ராப்தி	௪௨	ஸம்ஸம்ஸோரோ	௯௪
அப்ரயுக்தாநேத்ர	௩௯	ஸம்ஸாராதி	௯௩
அஹம் ஹி ராஜாதிகம்	௮௨	உஜ்ஜந்தா	௧௩௫
அப்ரமேய	௧௮௨	உபாப்யவிஷ்ணும்	௧௮௪
அசேத்யதி	௧௭௭	உத்க்ருஷ்டம்	௧௩௪
ஆதளவோர	௧௯௭	உச்ஜிதாஸந	௮௭
ஆதளேஶந	௧௮௫	உதம்த்வா	௯௨
ஆயாஸஸ்ய	௧௭௩	உந்நத்யப்ரபீ	௧௧௩
ஆதளஸ்ய	௧௯௫	ஊர்த்வப்ராபித	௧௨௨
ஆத்யம் பராயும்	௧௯௩	ஊர்த்வம் பராயும்பாச	௧௯௮
ஆதாநாதப	௧௫௪	ஐகீக பீபலஙீய	௧௯௫
ஆதளகாஶிக	௧௫௮	ஏககாலப்ய	௧௮௨
ஆக்ராந்தையூபலீ	௧௦௪	ஏசமஜாலே	௧௯௯
ஆதாவிம்யந	௮௪	ஏவேதிகேகலி	௧௭௦
ஆக்ராந்தைபீஷ	௭௧	ஏவவம்ஸாவ	௮௪௯
ஆஶீநாஸ்ய	௭௩	ஏவம் சாலூ	௧௨௨
ஆலிதித்தேச	௭௮	ஏவம் ஸங்கீர்த்ய	௧௪௯
ஆக்ராந்தைர	௯௯	ஏககாஶீதி	௧௨௯
ஆமோகபூதித்ர	௧௨௧	ஏவம்க்ருச்	௪௩
ஆசேபாலதிசாக்ஷம்	௧௧௫	ஏககாஶிபேஜம்	௧௧



ஶ்ரீ:

ஶைவஸம்ப்ரதாயஸ்ய ஶுத்தாஶுத்தாநாம்

ஶுத்திபத்ரிகா ॥

அஶுத்தம்	ஶுத்தம்	ப்ருஷ்டம்	பங்க்தி:
ஸதாநம்	ஸதாநநம்	௧	௯
வைஶ்யாந	வைஶேஶ்யாந	௪	௧௪
தத்யஸ்வ்யாஸ்	தத்யஸ்யாஸ்	,,	௧௫
ஸஷாம்	யேஷாம்	௭	௮
வ்யாக்த	ஹ்யாக்த	௧௨	௧௨
ஷவரம்	வரம்	,,	௧௫
ஶ்ருஷு	ஶ்ரு	௧௩	௨
ஸ்தஷெளு	ஸ்தஷெக்ஷ	௧௬	௨௮
ரோவாஷ்யெத	ரோதந்வெத	௨௦	௨௦
ராசெத்ருள	ராசெத்ரு	௩௬	௨௧
ஜெத்ராஹிசெதஶம்	ஜெத்ராஹிதாஶஶம்	௨௧	௩
திகி	தியி	௨௪	௫
ஸ்ப்ருதம்	ஸ்ப்ருதம்	௨௯	௧௮
யநாயும்	யநாயீயு	௩௩	௨௩
வாத்ஸாந	வாத்ஸாந	௩௪	௨௬
கரணாஸ்	கரணம்	௩௫	௪
ஸாஹதி:	ஸாஹதீ	,,	,,
தந்வம்	தந்ம்	௩௬	௨௧
ஸ்த்ருணெ	ஸ்ப்ருணெ	௩௮	௨௭
ஸக்த	ஸக்ஷ	௩௯	௨௬
ஸாக்ஷிகம்	ஸாக்ஷிகம்	௪௦	௭
இஷம்	இஇம்	௪௦	௭
ஹ்ருதாம்ஜலி	ஹ்ருதம்ஜலி	௬௦	௪
ஶிஷ்ய	ஶிஷ்ய	௬௨	௧௩
பராஷ்ட்ர	பராஷ்ட்ர	௪௫	௫

[illegible]	[illegible]	௫௮	௮
[illegible]	[illegible]	௬௩	௨௨
[illegible]	[illegible]	௬௬	௨௪
[illegible]	[illegible]	௬௬	௮
[illegible]	[illegible]	௬௭	௧௭
[illegible]	[illegible]	௮௦	௧
[illegible]	[illegible]	௭௯	௩௦
[illegible]	[illegible]	௮௧	௨௯
[illegible]	[illegible]	௮௪	௪
[illegible]	[illegible]	௮௫	௨௧
[illegible]	[illegible]	௯௪	௧
[illegible]	[illegible]	௯௫	௨
[illegible]	[illegible]	௧௦௩	௨௫
[illegible]	[illegible]	௧௦௮	௧௫
[illegible]	[illegible]	௧௧௧	௧
[illegible]	[illegible]	௧௧௩	௨௯
[illegible]	[illegible]	௧௧௮	௨௧
[illegible]	[illegible]	௧௩௦	௧௩
[illegible]	[illegible]	௧௩௪	௧௮
[illegible]	[illegible]	௧௩௭	௨
[illegible]	[illegible]	௧௪௦	௧
[illegible]	[illegible]	௧௫௨	௨௬
[illegible]	[illegible]	௧௫௯	௨௨
[illegible]	[illegible]	௧௭௩	௨௬
[illegible]	[illegible]	௧௭௭	௧௮
[illegible]	[illegible]	௧௮௫	௩௦
[illegible]	[illegible]	௧௮௮	௨௪
[illegible]	[illegible]	௧௯௨	௪
[illegible]	[illegible]	௧௯௮	௧௮

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
1	10	மொக்ஷத்தை	மோக்ஷத்தை
2	14	இந்றாலின்	இந்நூலின்
2	27	ஞாஞதர்ச	ஞானதர்ச
3	14	இத்ற்கு	இதற்கு
4	8	அனைவரும்	அனைவருக்கும்
4	18	ஏன	என
5	1	சிவாகமங்கனிற்	சிவாகமங்களிற்
5	3	சைவ இலக்கணம்	சைவர் இலக்கணம்
5	11	பராமுக	பராங்முக
5	21	வருணங்கனின்	வருணங்களின்
6	14	தக்ஷணை	தக்ஷிணை
6	30	அதிகாாத்தை	அதிகாரத்தை
7	11	ராதர்குரிய	ராதற்குரிய
7	15	சமஸ்கார	சம்ஸ்கார
8	23	முன்ணுள்ள	முன்னுள்ள
9	14	அனைருக்கும்	அனைவருக்கும்
9	5	அவ்வாறன்றி	அவ்வாறன்றியும்
9	17	பேர்	பெயர்
11	17	அனுஷ்டிப்பு	அனுஷ்டுப்பு
11	22	சூத்திரனிடத்தும்	சூத்திரப்பெண்ணிடத்தும்
14	17	காலோத்திர	காலோத்தர
19	3	வறுமாறு	வருமாறு
21	10	வறுமாறு	வருமாறு
23	10	விருத	விரத
23	21	ஏழுந்து	எழுந்து
27	28	பிர்ம்ம, ராக்ஷ	பிர்ம்மராக்ஷ
27	29	நார்ப்பத்து	நாற்பத்து
29	11	இனனின்ன	இன்னின்ன
29	23	றறித்தலால்	றரித்தலால்

30	16	புபங்களிற்	புயங்களிற்
31	26	பண் ணூபவன்	பண் ணுபவன்
31	24	காலும், திருநடன	காலும், வரமும் அப யமும், திருநடன
35	16	முகமாவேனும்	முகமாகவேனும்
35	17	ஸ்னுநாநம்	ஸ்நாநம்
37	25	கருமை	பொன்மை
39	12	யோலேனால்	யோலேயினால்
40	14	சூரியபூஜை	சூரியபூஜை
41	9	யுடைவராயும்	யுடையவராயும்
46	24	மந்திரற்தால்	மந்திரத்தால்
47	20	தரல்	தால்
49	14	மரக	மாக
,,	23	வர்ணமாண	வர்ணமான
50	6	தரல்	தால்
,,	14	பாவகஞ்	பாவனஞ்
,,	,,	வரவாவாகுக	வரவாகுக
,,	27	கையரல்	கையால்
51	5	ஞர்க்கியம	ஞர்க்கியம்
,,	31	இருதி	இறுதி
52	7	மூதலாக	முதலாக
,,	21	பலன	பலன்
,,	31	பின்ர்ன	பின்னர்
54	28	எனனி	என்னி
,,	29	உமமு	உம்மு
55	6	சிவனே சிவனே	சிவனே
,,	17	மரன	மான
,,	21	பீடதி	பீடத்தி
,,	30	பிரதக்ஷணம்	பிரதக்ஷிணம்
56	26	மானறு	மானது
57	23	யானநு	யானது
,,	26	பாவி	பவி
58	16	செய்துக்கொண்டு	செய்துகொண்டு

58	20	தனனு	தன்னு
59	18	சாமரம	சாமரம்
61	11	கான்யாசம்	கர்ன்யாசம்
68	12	சகஸ்தர	சகஸ்ர
68	21	அபிஷேஞ்செ	அபிஷேகஞ்செ
74	10	செய்த	செய்த
,,	5	என்ளுஞல்	என்னிஞல்
75	16	சாத்ஙிக	சாத்விக
,,	15	காரம்	காரம்
,,	20	புதிய	பசிய
,,	22	முண்டாகும	முண்டாகும்
76	22	ஆயிரத்திலும்	பதிஞயிரத்திலும்
79	21	பூஜைக்	பூஜைக்கு
86	27	வைகக	வைக்க
87	12	ஏன	என
88	,,	பராமுக	பராங்முக
89	12	பன்னிரெண்டு	பன்னிரண்டு
90	14	துத்தநாக	பித்தளை
,,	16	பித்தளை	துத்தநாக
95	9	அவற்	அவற்றி
102	12	கொண	கொண்
104	19	நிருதிவாயு	நிருதி [திக்கில்
104	20	சோமதிக்கில்	வருணதிக்கிற்கு சோம
107	23	நைமித்தியம்	நைமித்திகம்
114	25	சிவோகம	சிவோகம்
116	7	ஐம்பத்தெந்ன்று	ஐம்பத்தொன்று
1·9	5	தர்மினி	தர்மினீ
120	3	பகாரம	பகாரம்
120	4	பொருள	பொருள்
129	29	துவாரபூஜை, எட்டு	துவாரபூஜை, துவாரபாலபூஜை எட்டு
133	22	கனம்	அகலம்
135	28	முப்பத்தொரு	முப்பத்தாறு

135	15	குலம	குலம்
144	4	பில்லு	புல்லு
149	29	தற்பை	தர்ப்பை
,,	12	தாப்ப	தர்ப்ப
153	27	ஊடைப	ஊடைய
160	13	றாற்றேழும்	நூற்றேழும்
,,	26	வைபரவோத்ரம்	வைபரவோத்தரம்
162	15	வாராகம்	வராகம்
164	1	இரண்	இரண்டு
170	2	பெயசென்றும்	பேரென்றும்
,,	24	துணை	ஆணை
181	7	மூன்ர	மூன்ற
185	24	சிரார்த்த	சிராத்த
,,	20	வழவது	வழாவது
,,	25	பெயருக்கு	பேருக்கு
188	1	விழுந்த	விழுந்து
195	18	பெண்கன்	பெண்கள்
,,	19	வைத்திபன்	வைத்தியன்
196	10	தொத்ணூற்று	தொண்ணூற்று



உ

சிவமயம்.

தேவகோட்டை
சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தில்
அச்சிட்டிருக்கும் புத்தகங்களின்
விளம்பரம்.

சிவார்ச்சனா சந்திரிகை:— இது ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரால் ஆக்கப்பெற்றது. ஆத்மார்த்த பரார்த்த பூஜாவிதிகள் அடங்கியது.

இதன் விலை ... ரூ. 1—0—0

தத்துவப்பிரகாசிகை
தத்துவ சங்கிரகம்
தத்துவத்திரயநிர்ணயம் } ஆக மூன்றும் விலை ... ரூ. 1—0—0

இவற்றில் தத்துவங்களின் விபரங்களும், அவை தோன்றியொடுங்கும் முறைகளும், உயிர்களின் பேதங்களும், சிவபெருமானுடைய சொரூப தடத்த பேதங்களும் இனிது விளங்கும்.

மதங்க பாரமேசுவரம்;—இது மூலாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று. இதன் வித்யாபாதமட்டும் அச்சிட்டிருக்கின்றது. இதில் சித்தாந்தசாத்திரப்பொருள் அனைத்தும் இனிது விளங்கும்.

இதன் விலை ரூ. 1—0—0

இவை அனைத்தும் நாகர லிபியில் அச்சாகியிருக்கின்றன.

தத்துவப்பிரகாசிகை
தத்துவசங்கிரகம்
தத்துவத்திரயநிர்ணயம் } இம்மூன்றும் தமிழில் விலை ரூ. 1—0—0

இரத்தினத்திரயம்
போககாரிகை
நாதகாரிகை
மோக்ஷகாரிகை
பரமோக்ஷநிராசகாரிகை } இந்த ஐந்தும் நாகரத்தில் விலை ரூ. 2—0—0

சம்பு பூஜா விதி (கிரந்தம்) அணா 0—6—0

சைவபூஷணம். (கிரந்தமூலமும் தமிழ்வியாக்கியானமும்.) 1—0—0

குறிப்பு:—நாகரத்திலுள்ள எட்டுப்பிரகரணங்களும் தொகுதியாய் வாங்குவோர்க்கு விலை ரூ. 2—8—0